செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–6

உடன்போக்கு, ஏறு தழுவுதல்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி 6

உடன்போக்கு, ஏறு தழுவுதல்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'

25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,

சென்னை - 600 014.

தொலைபேசி : 044-28132863 / 43408000

e-mail: sales@palaniappabrothers.com

கிளைகள்

திருச்சி - 620 002 சேலம் - 636 001

கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001

ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-773-3 (Vol-6)

தனிப்பிரதி விலை ரூ. 500/-
(தொகுதி–6)

மொத்த விலை ரூ. 7200/-
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xiii

மதிப்புரை xviii

பதிப்புரை xix

அகத்திணை xxi

உடன்போக்கு

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 7	முலைமுகம்	கயமனார்	209
அகநானூறு 15	எம்வெங்	மாமூலனார்	236
அகநானூறு 17	வளம்கெழு	கயமனார்	130
அகநானூறு 35	ஈன்று	அம்மூவனார்	245
அகநானூறு 49	கிளியும்	வண்ணப்புறக் கந்தரத்தனார்	220
அகநானூறு 55	காய்ந்துசெலற்	மாமூலனார்	251
அகநானூறு 63	கேளாய்	கருவூர்க் கண்ணம்புல்லனார்	223
அகநானூறு 65	உன்னம்	மாமூலனார்	23
அகநானூறு 89	தெறுகதிர்	மதுரைக் காஞ்சிப்புலவர்	124
அகநானூறு 95	பைப்பயப்	ஒரோடகத்துக் கந்தரத்தனார்	43
அகநானூறு 99	வாள்வரி	பாலை பாடிய பெருங்கடுங்கோ	188
அகநானூறு 105	அகல்அறை	தாயங்கண்ணனார்	84

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 107	நீசெலவு	காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்	38
அகநானூறு 117	மௌவலொடு	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	136
அகநானூறு 145	வேர்முழுது	கயமனார்	144
அகநானூறு 153	நோகோ	சேரமான் இளங்குட்டுவன்	133
அகநானூறு 165	கயந்தலை	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	162
அகநானூறு 189	பசும்பழுப்	கயமனார்	218
அகநானூறு 195	அருஞ்சுரம்	கயமனார்	239
அகநானூறு 203	உவக்குநள்	கபிலர்	226
அகநானூறு 207	அணங்குடை	மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதனார்	90
அகநானூறு 219	சீர்கெழு	கயமனார்	87
அகநானூறு 221	நனைவிளை	கயமனார்	28
அகநானூறு 257	வேனில்	உறையூர் மருத்துவன் தாமோதரனார்	184
அகநானூறு 259	வேலும்	கயமனார்	33
அகநானூறு 261	கானப்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	281
அகநானூறு 263	தயங்குதிரைப்	கருவூர்க் கண்ணம்பாளனார்	230
அகநானூறு 275	ஓங்குநிலைத்	கயமனார்	96

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 283	நல்நெடுங்	மதுரை மருதனிளநாகனார்	47
அகநானூறு 285	ஒழியச்	காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்	31
அகநானூறு 315	கூழையும்	குடவாயிற்கீரத்தனார்	257
அகநானூறு 321	பசித்த	கயமனார்	139
அகநானூறு 369	கண்டிசின்	நக்கீரர்	260
அகநானூறு 383	தன்புரந்து	கயமனார்	100
அகநானூறு 385	தன்ஒ	குடவாயிற்கீரத்தனார்	264
அகநானூறு 397	என்மகள்	கயமனார்	115
ஐங்குறுநூறு 200	இலங்குவீங்கு	அம்மூவனார்	56
ஐங்குறுநூறு 203	அன்னாய்	கபிலர்	280
ஐங்குறுநூறு 235	கையற	கபிலர்	57
ஐங்குறுநூறு 254	குன்றக்	கபிலர்	16
ஐங்குறுநூறு 280	கருவிரல்	கபிலர்	275
ஐங்குறுநூறு 312	அறம்சா	ஓதலாந்தையார்	278
ஐங்குறுநூறு 313	தெறுவது	ஓதலாந்தையார்	107
ஐங்குறுநூறு 361	உயர்கரைக்	ஓதலாந்தையார்	181
ஐங்குறுநூறு 363	சிலைவில்	ஓதலாந்தையார்	183
ஐங்குறுநூறு 364	முளவுமா	ஓதலாந்தையார்	21
ஐங்குறுநூறு 371	மள்ளர்	ஓதலாந்தையார்	233
ஐங்குறுநூறு 372	என்னும்	ஓதலாந்தையார்	105

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 373	நினைத்தொறும்	ஓதலாந்தையார்	109
ஐங்குறுநூறு 374	பல்ஊழ்	ஓதலாந்தையார்	114
ஐங்குறுநூறு 375	இதுவென்	ஓதலாந்தையார்	99
ஐங்குறுநூறு 376	நாடொறும்	ஓதலாந்தையார்	113
ஐங்குறுநூறு 377	நீர்நசைக்கு	ஓதலாந்தையார்	82
ஐங்குறுநூறு 378	செல்லிய	ஓதலாந்தையார்	108
ஐங்குறுநூறு 379	தன்அமர்	ஓதலாந்தையார்	229
ஐங்குறுநூறு 380	அத்த	ஓதலாந்தையார்	142
ஐங்குறுநூறு 381	பைங்காய்	ஓதலாந்தையார்	153
ஐங்குறுநூறு 382	புள்ஒலிக்கு	ஓதலாந்தையார்	159
ஐங்குறுநூறு 383	கோள்சுரும்பு	ஓதலாந்தையார்	166
ஐங்குறுநூறு 384	சேட்புலம்	ஓதலாந்தையார்	161
ஐங்குறுநூறு 385	கடும்கண்	ஓதலாந்தையார்	190
ஐங்குறுநூறு 386	புன்கண்	ஓதலாந்தையார்	165
ஐங்குறுநூறு 387	அறம்புரி	ஓதலாந்தையார்	212
ஐங்குறுநூறு 388	நெருப்புஅவிர்	ஓதலாந்தையார்	203
ஐங்குறுநூறு 389	செய்வினைப்	ஓதலாந்தையார்	198
ஐங்குறுநூறு 390	நல்லோர்	ஓதலாந்தையார்	199
ஐங்குறுநூறு 391	மறுவில்	ஓதலாந்தையார்	244
ஐங்குறுநூறு 392	வேய்வனப்பு	ஓதலாந்தையார்	277
ஐங்குறுநூறு 393	துறந்ததற்	ஓதலாந்தையார்	271

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 394	மாண்புஇல்	ஓதலாந்தையார்	272
ஐங்குறுநூறு 395	முளிவயிர்ப்	ஓதலாந்தையார்	192
ஐங்குறுநூறு 396	புலிப்பொறி	ஓதலாந்தையார்	193
ஐங்குறுநூறு 397	கவிழ்மயிர்	ஓதலாந்தையார்	268
ஐங்குறுநூறு 398	புள்ளும்	ஓதலாந்தையார்	274
ஐங்குறுநூறு 399	நும்மனைச்	ஓதலாந்தையார்	267
ஐங்குறுநூறு 400	மள்ளர்	ஓதலாந்தையார்	270
ஐந்திணை எழுபது 42	ஒல்லோம்	மூவாதியார்	74
ஐந்திணை ஐம்பது 33	பாவையும்	மாறன்பொறையனார்	69
ஐந்திணை ஐம்பது 37	தோழியர்	மாறன்பொறையனார்	71
கலித்தொகை 9	எறித்தரு	பாலை பாடிய பெருங்கடுங்கோ	214
குறுந்தொகை 7	வில்லோன்	பெரும்பதுமனார்	150
குறுந்தொகை 15	பறைபட	ஔவையார்	65
குறுந்தொகை 44	காலே	வெள்ளி வீதியார்	206
குறுந்தொகை 56	வேட்டச்	சிறைக்குடி ஆந்தையார்	7
குறுந்தொகை 84	பெயர்த்தனென்	மோசிகீரனார்	118
குறுந்தொகை 115	பெருநன்று	கபிலர்	60
குறுந்தொகை 124	உமணர்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	5
குறுந்தொகை 144	கழிய	மதுரை ஆசிரியர் கோடன்கொற்றனார்	120

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 149	அளிதோ	வெள்ளிவீதியார்	42
குறுந்தொகை 217	தினைகிளி	தங்கால் முடக்கொல்லனார்	10
குறுந்தொகை 229	இவன்இவள்	மோதாசானார்	152
குறுந்தொகை 262	ஊஉர்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	20
குறுந்தொகை 297	அவ்விளிம்பு	காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்	15
குறுந்தொகை 343	நினையாய்	ஈழத்துப் பூதன் தேவனார்	12
குறுந்தொகை 356	நிழல்ஆன்று	கயமனார்	121
குறுந்தொகை 369	அத்த	குடவாயிற் கீரத்தனார்	14
குறுந்தொகை 378	ஞாயிறு	கயமனார்	234
குறுந்தொகை 383	நீஉடம்	படுமரத்து மோசிகீரனார்	54
குறுந்தொகை 388	நீர்கால்	ஔவையார்	8
குறுந்தொகை 390	எல்லும்	உறையூர் முதுகொற்றனார்	158
குறுந்தொகை 396	பாலும்	கயமனார்	128
திணைமாலை நூற்றைம்பது 65	தான்தாயாக்	கணிமேதாவியார்	207
திணைமாலை நூற்றைம்பது 69	அத்தம்	கணிமேதாவியார்	157

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 70	நின்நோக்கம்	கணிமேதாவியார்	169
திணைமாலை நூற்றைம்பது 71	அம்சுடர்நீள்	கணிமேதாவியார்	200
திணைமாலை நூற்றைம்பது 72	முகந்தா	கணிமேதாவியார்	202
திணைமாலை நூற்றைம்பது 73	செவ்வாய்	கணிமேதாவியார்	50
திணைமாலை நூற்றைம்பது 75	எரிந்து	கணிமேதாவியார்	77
திணைமாலை நூற்றைம்பது 87	ஒன்றானும்	கணிமேதாவியார்	46
திணைமாலை நூற்றைம்பது 88	அல்லாத	கணிமேதாவியார்	63
திணைமாலை நூற்றைம்பது 89	நண்ணிநீர்	கணிமேதாவியார்	205
திணைமாலை நூற்றைம்பது 90	வேறாக	கணிமேதாவியார்	242
திணைமொழி ஐம்பது 16	கருங்கால்	கண்ணஞ்சேந்தனார்	167
திணைமொழி ஐம்பது 20	ஏற்றிய	கண்ணன்சேந்தனார்	76
திருக்குறள் 1110	அறிதோறு	திருவள்ளுவர்	178
திருக்குறள் 1120	அனிச்சமும்	திருவள்ளுவர்	4

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1150	தாம்வேண்டின்	திருவள்ளுவர்	3
திருக்குறள் 1279	தொடிநோக்கி	திருவள்ளுவர்	36
நற்றிணை 2	அழுந்துபட	பெரும்பதுமனார்	148
நற்றிணை 9	அழிவில	பாலை பாடிய பெருங்கடுங்கோ	170
நற்றிணை 10	அண்ணாந்து	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	61
நற்றிணை 12	விளம்பழம்	கயமனார்	52
நற்றிணை 29	நின்ற	பூதனார்	72
நற்றிணை 66	மிளகுபெய்து	இனிசந்த நாகனார்	78
நற்றிணை 76	வருமழை	அம்மூவனார்	176
நற்றிணை 143	ஐதே	கண்ணகாரன் கொற்றனார்	67
நற்றிணை 149	சிலரும்	உலோச்சனார்	18
நற்றிணை 179	இல்எழு	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	81
நற்றிணை 184	ஒருமகள்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	103
நற்றிணை 198	சேயின்	கயமனார்	196
நற்றிணை 202	புலிபொரச்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	172
நற்றிணை 264	பாம்புஅளைச்	ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்	194

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 271	இரும்புனிற்று	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	93
நற்றிணை 279	வேம்பின்	கயமனார்	254
நற்றிணை 293	மணிக்குரல்	கயமனார்	111
நற்றிணை 305	வரிஅணி	கயமனார்	249
நற்றிணை 324	அந்தோ	கயமனார்	155
நற்றிணை 362	வினைஅமை	மதுரை மருதனிளநாகனார்	174
நற்றிணை 384	வெண்புறப்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	179
நாலடியார் 396	அரக்காம்பல்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	123
நாலடியார் 397	ஓலைக்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	26
நாலடியார் 398	கடக்(க)அருங்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	59
நாலடியார் 399	முலைக்கண்ணும்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	70

ஏறு தழுவுதல்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 101	தளிபெறு	நல்லுருத்திரனார்	287
கலித்தொகை 102	கண்அகல்	நல்லுருத்திரனார்	296
கலித்தொகை 103	மெல்லிணர்க்	நல்லுருத்திரனார்	302
கலித்தொகை 104	மலிதிரை	நல்லுருத்திரனார்	313
கலித்தொகை 105	அரைசுபடக்	நல்லுருத்திரனார்	324
கலித்தொகை 106	கழுவொடு	நல்லுருத்திரனார்	336
கலித்தொகை 107	எல்லா	நல்லுருத்திரனார்	343

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராகு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்



மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, ''பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று'' மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத்துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லுவதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்துகளையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
        பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
        தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
        தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
        கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
        சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
        பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
        காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
        செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
        ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
        குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
        எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
        எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
        நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது ‘குறையிரத்தல்’ எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல் களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத் தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித் திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறியாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ்விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலி யிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்'' என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

உடன்போக்கு

பக். 2 - 283

ஏறு தழுவுதல்

பக். 284 - 348

உடன்போக்கு

இளமங்கை பிறந்த வீட்டைத் துறந்து பெற்றோரை மறந்து தன் காதற்கொழுநனை நம்பிக் கரடுமுரடான வழியில் அவனைப் பின்தொடர்ந்து அவனூர்க்குச் செல்லுதல் உடன்போக்கு எனப்படும்.

உடன்போக்கு எப்பொழுது நிகழும்? அறத்தொடு நின்ற பின்னும் எண்ணிய காதலனுக்குப் பெற்றோர் மணம் முடிக்க மறுத்தராயின் இவ்வழிச் செலவு நிகழும் என்று கொள்ளலாமா? கூடாது. அறநிற்பிற்குப் பின் பெற்றோர் மறுக்கார்; மகள் கற்பிழுக்குப்பட நடவார்; உரியவனுக்கே மணஞ்செய்வர்; ஆதலின் உடன்போக்குக்கு இடமில்லை.

இற்செறிப்பு, ஊரலர், வெறியாட்டு, நொதுமலர் வரைவு என்ற இன்னாச் சூழ்நிலைகளைக் கடத்தற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று அறத்தொடு நிற்கை; ஏனையது உடன்போகுகை. இவற்றுள் ஒன்று நிகழின் மற்றொன்று நிகழாது. அறத்தொடு நின்றபின் உடன்போகார். உடன்போய பின் அறத்தொடு நிற்பதாற் பயனில்லை. இரண்டில் ஒன்றே களவு நாடகத்தின் இறுதிக் காட்சியாகும் என்று தெளிக.

மூதறிஞர் வ.சு.ப. மாணிக்கம் – தமிழ்க் காதல்

தோழி கூற்று

திருக்குறள் 1150 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலர் அறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவி களவொழுக்கம் வெளிப்பட்டு ஊரெல்லாம் அலர் பரவியது. அதை அறியும் தோழி சிறைப்புறத்தானாக நிற்கும் தலைவனிடம் தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்ல வேண்டும் எனத் தன் விருப்பத்தைச் சொல்லியது.

தாம்வேண்டின் நல்குவர் காதலர்;யாம் வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர்.

தெளிவுரை

உடன்போக்கின் பொருட்டு நாம் விரும்பும் அலரை இவ் வூரார் கூறுகின்றனர். நாம் உடன்போக்கை விரும்புவதாயின், காதலரும் ஒப்புக்கொள்வார்.

கருத்து

தலைவ! ஊரலர் நீங்கத் தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்.

விளக்கம்

பழிச்சொல்லைப் பொறுத்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. தலைவியே! தலைவனோடு வெளிப்போதற்கு நீ துணிய வேண்டும். காதலரும் நாம் விரும்புவதை ஒப்புவார்.

குறிப்பு

உடன்போக்கிற்கு அலர் காரணமாய் அமைகிறது.

சொற்பொருள்

1-2.யாம் வேண்டும் கௌவை - (உடன்போக்கின் பொருட்டு) யாம் விரும்புகின்ற அலரை; இவ்வூர் எடுக்கும் - இவ்வூர் எடுத்துரைக் கின்றது.

1. காதலர் தாம் - (இனிக்) காதலர் தாமும்; வேண்டின் நல்குவர் - உடன்போக்கினை விரும்பினால் விரும்பியவாறு செய்துதவுவார்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1120 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

உடன்போக்குரைத்த தோழிக்கு அதனருமை கூறி மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்லுமாறு தோழி தலைவனிடம் கூறினாள். தலைவியின் மென்மையான அடியினால் காட்டில் நடந்துவர இயலாது என்று கூறித் தோழி சொல்லியதைத் தலைவன் மறுத்துரைத்தது.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

தெளிவுரை

அனிச்சப்பூவும், அன்னப்பறவையின் சிறகுக்குள் இருக்கும் மெல்லிய மயிர்த்தொகுதி (தூவி)யும் இப்பெண்ணின் காலடியில் பட்டால் முற்றிய நெருஞ்சி முள்போல வருத்தம் தரும்.

கருத்து

அனிச்சப்பூவும் அன்னத்தின் தூவியும் இப்பெண்ணின் (தலைவியின்) அடிகளுக்கு நெருஞ்சி முள்ளைப் போல வருத்தம் கொடுக்கும்.

விளக்கம்

களவொழுக்கத்தில் பிரிவு நேர்கிறது. ஆதலால், தலைவியை உடன்போக்கில் அழைத்துச் சென்று, மணம் புரிந்து, என்றும் பிரியாது மகிழ்வுடனிருக்குமாறு தலைவனிடம் தோழி கூறினாள். தலைவன் செல்ல வேண்டிய வழியோ கல்லும்

முள்ளும் நிறைந்தது. தன் மென்மையான அடிகளால் தலைவியால் அவ்வழியில் நடக்க இயலாதாதலின் தோழியின் சொற்படி தலைவியை அழைத்துச் செல்ல இயலாத நிலை இருப்பதாய்த் தலைவன் கூறுகிறான்.

குறிப்பு

உலகில் மிகமிக மென்மையானவை என்று கூறப்படுவன அனிச்ச மலரும் அன்னத்தின் தூவியும் ஆம். இவ்விரண்டைக் காட்டிலும் தலைவி யின் காலடிகளின் சிறப்பைத் தலைவன் எடுத்துரைக்கிறான்.

நெருஞ்சியின் இளைய முள் காலை உறுத்தாது; நன்கு முற்றிய முள்ளோ சுருக்கெனத் தைக்கும். முற்றிய நெருஞ்சி முள்ளை, 'நெருஞ்சிப்பழம்' என்று கூறியிருப்பது அருமையான சொல்லாட்சி.

சொற்பொருள்

1. அனிச்சமும் - அனிச்சப்பூவும்; அன்னத்தின் தூவியும் - அன்னப் பறவையின் இறகின் அடியிலிருக்கும் மெல்லிய மயிர்த்தொகுதியும் (தூவியும்); மாதர் - இப்பெண் (தலைவி).
2. அடிக்கு - அடிகள் (மிதிக்க); நெருஞ்சிப்பழம் - முற்றிய நெருஞ்சி முள்போல வருத்தும்.

தோழி கூற்று

குறுந்தொகை 124 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போக்கினைத் தலைமகள் ஒழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

மணந்துகொள்ளாமல் காலங்கடத்திய தலைவனிடம் தோழி, தலைவியை உடன் அழைத்துக்கொண்டு போகும்படி வலியுறுத்திக் கூறினாள். அவன், வழியது கொடுமையை உரைத்து, அதற்கு இசையானாய்த் தான் மட்டுமே செல்லத் தொடங்குகின்றான். அவனிடம் தோழி சொல்லியது.

உமணர் சேர்ந்துகழிந்த மருங்கின், அகன்தலை,
ஊர்பாழ்த் தன்ன ஓமைஅம் பெருங்காடு
இன்னா என்றிர் ஆயின்,
இனியவோ பெரும! தமியோர்க்கு மனையே?

தெளிவுரை

"பெரும! உப்பு வாணிகர் கூட்டமாய்த் தங்கியிருந்து, பிறகு அங்கிருந்து நீங்கிச்சென்ற அகன்ற இடம், மக்கள் குடியிருந்த ஊர், பாழ்பட்டுப்போனதுபோல் தோன்றும்; ஓமை மரங்கள் அடர்ந்த பெருங்காடு சூழ்ந்த அவ்வழி தீங்குடையது என்று சொல்கின்றீர்; அவ்வாறாயின், தலைவனைப் பிரிந்து தனித்திருப் போர்க்கு அவரிருக்கும் வீடுகள் இனியன ஆகுமோ?" என்று தோழி தலைவனிடம் கேட்கிறாள்.

கருத்து

தலைவியைத் தனியே விட்டுச் செல்லாது, அவளையும் உடனழைத்துச் செல்ல வேண்டும்.

விளக்கம்

"களவொழுக்கத்தில் ஈடுபட்டுள்ள தலைவி, உம் பிரிவைத் தாங்க இயலாது மிகவும் துன்புறுகின்றாள். அவளை உம்முடன் அழைத்துச் சென்று திருமணம் செய்துகொள்க" என்று தோழி தலைவனிடம் கூறினாள். தலைவனும் தோழி சொல்வது ஏற்பு டையது எனக் கருதினானாயினும், வறண்ட பாலை நிலத்தில் தலைவியால் நடந்துவர இயலாது என்றான். உடனே தோழி, "உம்மைப் பிரிந்து தனித்துறையும் தலைவிக்கு வீடு இன்பம் தரும் என்றா கருதுகின்றீர்? உம்முடன் இருப்பதே அவளுக்கு இன்ப மாகும்" என்று கூறி உடனழைத்துச் செல்லுமாறு கூறுகிறாள்.

சொற்பொருள்

1. உமணர் - உப்பு வாணிகர்; சேர்ந்து - பெருங்கூட்டமாய்ச் சேர்ந்து தங்கியிருந்து; கழிந்த - கடந்து சென்ற, நீங்கிச் சென்ற; அகன் தலை - அகன்ற இடம்.
2. பாழ்த்து - பாழ்பட்டது; அன்ன - என்று தோன்றுமாறு; ஓமை - ஓமை மரம்.

3. இன்னா - துன்பம் தருவது; என்றிர் - என்று சொல்கின்றீர்; ஆயின் - அவ்வாறாயின்.
4. தமியோர்க்கு - தனித்திருப்போர்க்கு; மனை - வீடு.

தலைவன் கூற்று

குறுந்தொகை 56 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் கொண்டுதலைப் பிரிதலை மறுத்துத் தானே போகின்ற வழி, இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியது. (கொண்டுதலைப் பிரிதல் - தலைமகளையும் உடனழைத்துச் செல்லுதல்.)

கூற்று விளக்கம்

தலைவியும் தன்னோடு வருவேனென்றதை மறுத்துரைத்துத் தான் மட்டும் தனியனாய்ப் பாலை வழியே செல்லும் தலைவன், பாலை நிலத்தின் கொடுமையைக் கண்டு, தன் நெஞ்சத்திடம் கூறியது.

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகல் சில்நீர்
வளையுடைக் கையள், எம்மொடு உணீஇயர்
வருகதில் அம்ம, தானே;
அளியளோ அளியள்;என் நெஞ்சுஅமர்ந் தோளே!

தெளிவுரை

வேட்டை ஆடித் திரியும் செந்நாய்கள் தரையைத் தோண்டிய தால் ஊறிய நீரை உண்டு எஞ்சியதை அப்படியே விட்டுப் போயின. அக்குழிநீரில் காட்டுமல்லிகையின் வாடிய பூக்கள் விழுந்து, நீர் அழுகலானது. சிறிதளவே கிட்டும் அந்நீரினை, வளையலணிந்த கைகளைக் கொண்ட என் தலைவி என்னோடு உண்ணுதற்கு வரவேண்டுமென்பதுதான், என் விருப்பம். அங்ஙனம் வந்திருப்பாளாயின், என் நெஞ்சில் விரும்பி அமர்ந் திருக்கும் அவள் மிகவும் இரங்கத்தக்கவளாயிருப்பாள்.

கருத்து

தலைவி என்னோடு வரவேண்டுமென்பதுதான், என் விருப்பம்; என்றாலும், வறட்சியான இவ்வழியில் அவள் வாராதிருத்தலே நன்று.

விளக்கம்

என் காதலி என் அருகே இருக்க அவளையும் இந்நீரை உண்ணும்படி அழைத்தால் அவள் உள்ளம் எவ்வளவு வேதனை யடையும்? இதை அறியாமல்தானே அவள் என்னுடன் வர விரும் பினாள். அவள் வந்திருந்தால் அவள் நிலை இரங்கத்தக்க தாயிருக்கும்.

சொற்பொருள்

1. வேட்டம் - வேட்டையாட வந்த; கிளைத்து - தோண்டி; ஊண் மிச்சில் - உண்டு எஞ்சியது.
2. குளவி - காட்டுமல்லிகை; அழுகல் சில் நீர் - அழுகலான சிறிதளவு நீர்.
3. வளை - கை வளையல்; உணீஇயர் - உண்ணுதற்கு.
4. வருக - வருக (என்று அழைத்தால்); தானே - அத்தலைவி.
5. அளியளோ அளியள் - மிகவும் இரங்கத்தக்கவள்; நெஞ்சு அமர்ந் தோள் - என் நெஞ்சத்தில் வீற்றிருப்பவள்.

தோழி கூற்று

குறுந்தொகை 388 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை உணர்ந்த தலைமகன் சுரத்து வெம்மையும் தலைமகள் மென்மையும் குறித்து, செலவு அழுங்கலுறு வானைத் தோழி அழுங்காமற் கூறியது. (அழுங்கல் - தவிர்க்க எண்ணுதல்.)

கூற்று விளக்கம்

தலைவனுடன் சென்றுவிடத் துணிந்தாள், தலைவி. அதனைத் தோழி சொல்லக்கேட்டதும் தலைவன், பாலைவழியின் வெம்மையையும்

தலைவியின் மென்மையையும் கருதி அதற்கு உடன்பட மறுக்கிறான். அவனிடம் தோழி சொல்லியது.

நீர்கால் யாத்த நிரைஇதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடா தாகும்;
கவணை அன்ன பூட்டுப்பொருது, அசாஅ
உமண்எருத்து ஒழுகைத் தோடுநிரைத் தன்ன
முளிசினை பிளக்கும் முன்புஇன் மையின்,
யானை கைம்மடித்து உயவும்
கானமும் இனியஆம், நும்மொடு வரினே.

தெளிவுரை

தேங்கியிருக்கும் நீரில் உள்ள நிரல்பட்ட இதழ்களைக் கொண்ட குவளை மலர், தன் மீது கோடைக்காற்று மோதிய போதிலும் வாடாமல் இருக்கும். எருதுகள் பூட்டப்பெற்ற உமணர்களின் வண்டித்தொகுதிகளை வரிசையாய் நிறுத்தியது போன்ற உலர்ந்த மரக்கிளைகளைப் பிளப்பதற்குரிய வலிமை இல்லாமையாலே, யானை தன் துதிக்கையை மடித்தபடி வருந்தி நின்று கொண்டிருக்கும். இத்தகைய பாலை நிலங்களுங்கூடத் தலைவிக்கு உம்மோடு வருவதனால் இனியனவாகவே இருக்கும்.

கருத்து

தலைவ! உன்னொடு வரின் தலைவிக்குப் பாலை வழியும் இனிதாம்.

விளக்கம்

கோடைக்காற்று வீசுவதும் பசித்த யானைகள் வருத்தத்தோடு உலவுவதுமான பாலை வழியில் தலைவியை உடன்கொண்டு செல்லுதலைத் தலைவன் தவிர்த்தபோது, தோழி, 'உம்மொடு வரின் இவை தலைவிக்கு இனியவேயாம்' என்று கூறி உடன் கொண்டு செல்லுமாறு வற்புறுத்துகிறாள்.

குறிப்பு

வெப்பமுடைய காற்று வீசியபோதும் நீரில் நிற்கின்ற குவளை வாடாது என்பது, கொடுமை நிறைந்த பாலை வழியும் தலைவனோடு செல்லும்போது தலைவிக்கு இனியதே ஆகும் என்பதாம்.

'உன்னோடு வரின் கானமும் இனியவாம்' என்றது, உன்னைப் பிரிந்திருப்பின் இல்லமும் இன்னாததாம் என்பதாயிற்று.

சொற்பொருள்

1. நீர்கால் யாத்த - தேங்கியிருக்கும் நீரில் உள்ள; நிரைஇதழ் - நிரல்பட்ட இதழ்.
2. கோடை - கோடைக்காற்று; ஒற்றினும் - மோதினாலும்; வாடாது ஆகும் - வாடாமல் இருக்கும்.
3. கவணை - கல் எறியப் பயன்படும் கருவி; பூட்டு - பூட்டுங்கயிறு; பொருது - பொருதமையாலே; அசாஅ - வருந்தும்.
4. உமண் - உப்பு வாணிகர்; எருத்து - எருது; ஒழுகை - வண்டி வரிசை; தோடு நிரைத்தன்ன - தொகுதியாய் நிறுத்தியதுபோல.
5. முளி - உலர்ந்த, சினை - கிளை; பிளக்கும் - பிளப்பதற்கு; முன்பு - வலிமை.
6. கைம் மடித்து - கையை வளைத்து; உயவும் - வருந்தும்.

தோழி கூற்று

குறுந்தொகை 217 **தங்கால் முடக்கொல்லனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

உடன்போக்கு நயப்பத் தோழி தலைமகட்குக் கூறியது.

கூற்று விளக்கம்

பகற்போதிலும் இரவுப்போதிலும் சந்தித்துக் கூடுதல் இயலாததாகவே, தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துப் போதலை விரும்புகின்றான். 'அதுதான் நன்று' எனத் தோழி கூறித் தலைவியும் உடன் போக்கை விரும்புமாறு கூறியது.

'தினைகிளி கடிகெனில் பகலும் ஒல்லும்;
இரவுநீ வருதலின் ஊறும் அஞ்சுவல்,
யாங்குச்செய் வாம்,எம் இடும்பை நோய்க்கு?'என
ஆங்குயான் கூறிய அனைத்திற்குப் பிறிதுசெத்து,

ஓங்குமலை நாடன் உயிர்த்தோன் மன்ற;
ஐதே காமம் யானே;
கழிமுதுக் குறைமையும் பழியும்என் றிசினே.

தெளிவுரை

"தாய், 'தினைப்புனத்திற்குச் சென்று கிளிகளை ஓட்டுக' எனச் சொன்னால், பகலிலும் சந்திக்க முடியும். ஆனால், அவள் அவ்வாறு சொல்லவில்லை. 'இரவு நேரத்திலே நீ வந்து சந்திப்ப தாயின் வழியிலுள்ள இடையூறுகளுக்காக அஞ்சுகின்றோம். எனவே, எமது இக்கடுந்துயரக் காமநோய் தீர என்ன செய்ய லாம்?' எனத் தலைவனிடம் நான் வினவினேன். நான் கூறிய அனைத்திற்கும் விடையாய், உயர்ந்த மலைநாடன், பிறிதொன்றை மனத்தில் நினைத்துப் பெருமூச்சுவிட்டான். 'நிச்சயமாய் இக்காமம் மிக நுட்பமானது. நான் அந்நுட்பத்தை உய்த் துணர்ந்து நீ கருதிய செயல் அறிவுடைமைக்கும் அதே சமயம் ஊரார் பழிப்புக்கும் உரியது' என்றேன். தலைவன் உன்னை உடன்போக்கில் அழைத்துச் செல்ல எண்ணியுள்ளான். எனக்கும் அதுவே வழி என்று தோன்றுகின்றது" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் உன்னைத் தன்னூர்க்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றான்.

விளக்கம்

" 'தலைவ! உன்னைப் பகலிலும் இரவிலும் சந்திக்க இயலாத தாகிவிட்டது. உன்னைப் போலவே நாங்களும் காமநோயால் வருந்துகின்றோம். இத்துன்பத்தை நீக்க என்னதான் செய்வோம்' என்றேன். நான் கூறிய எல்லாவற்றையும் கேட்ட தலைவன் வேறொன்றை நினைத்துப் பெருமூச்சு விட்டான். உன்னைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போய் விடலாம் என்று எண்ணியே அதை வாயால் சொல்லாமல் பெருமூச்சு விட்டான். காமநோய் மிக நுண்மையானது என்பதை அறிந்தேன். உடனே நான், 'நீ நினைத்தது அறிவுள்ள செய்கைதான்; அஃது அறமுள்ள செயலுமாகும்; ஆனால், உண்மை தெரியாத ஊரார்

பழிப்பர்' என்று தலைவனிடம் நான் சொன்னேன்" என்று கூறிய தோழி, தலைவன் எண்ணப்படி உடன்போக்காய்ச் செல்வது நல்லதுதான் என்பதையும் குறிப்பாய்த் தெரிவித்தாள்.

சொற்பொருள்

1. கிளி கடிக எனில் - கிளிகளை ஓட்டுக என்று சொன்னால்; பகலும் ஒல்லும் - பகல் காலத்தில் சந்திக்க இயலும்.
2. ஊறு - வழியிலுள்ள இடையூறுகள்.
3. யாங்குச் செய்வாம்? - என்னதான் செய்வோம்; இடும்பை நோய்க்கு - துன்பமாகிய நோய்க்கு.
4. பிறிது செத்து - வேறு ஒன்றைக் கருதி.
5. உயிர்த்தோன் - பெருமூச்சு விட்டான்.
6. காமம் ஐது - காமம் மிகவும் நுண்மையானது.
7. கழி - (நீ எண்ணியது) மிகவும்; முதுக்குறைமை - மிகுந்த அறிவுடைமை; பழியும் - சிறிது பழிக்கும் இடனாகும்; என்றிசின் - என்று கூறினேன்.

தோழி கூற்று

குறுந்தொகை 343 **ஈழத்துப் பூதன் தேவனார்**

திணை : பாலை

கூற்று

தோழி கிழத்தியை உடன்போக்கு நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் தலைவி உடன்போக்கில் செல்ல வேண்டும் என்னும் விருப்பத்தைத் தோழி கூறியது.

நினையாய் வாழி தோழி! நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇய, விடர்முகைக்
கோடை ஒற்றிய கருங்கோல் வேங்கை
வாடுபூஞ் சினையின் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயரு மாறே.

தெளிவுரை

தலைவியே! வாழி! மிகுந்த வலிமையும் பிளந்த வாயும் கொண்ட பெரிய ஆண்புலி ஒன்று, மதநீரால் நனைந்த கன்னத்தைக் கொண்ட தலைமைத் தன்மை வாய்ந்த ஆண் யானைமீது பாய்ந்து, அதன் கொம்புகளால் குத்துண்டு இறந்து வீழ்ந்தது; புலியின் குருதிபட்டதால் யானையின் வெண் கொம்பில் சிவப்புக்கறை படிந்தது. மலைப்பிளவிலுள்ள குகை யில் மேல்காற்றுத் தாக்கியதால் வீழ்ந்த கரிய அடிமரத்தையும் வாடிய மலர்களையும் கொண்ட வேங்கைமரத்தின் கிளைபோல இறந்து வீழ்ந்த புலி தோற்றமளித்தது. அத்தகைய உயர்ந்த மலைநாட்டுக்கு உரிய தலைவனோடு உடன்போக்கில் செல்லு வதை எண்ணிப் பார்!

கருத்து

தோழி, தலைவியிடம், 'நீ இப்பொழுது நம் உறவினர் அறியாதவாறு தலைவனோடு செல்லுதலே நன்மையாம்! இதுபற்றி நீ கருதிப் பார்' என்கிறாள்.

சிறப்புக் குறிப்பு

யானை முகத்தில் பாய்ந்து புலி இறந்து கிடக்கும் மலைநாடன் என்றது, 'நீ உடன்போகும்பொழுது, எதிர்ப்பார் உளராயின் அவர் தோற்கும்படி செய்யும் ஆற்றலுடையவன், தலைவன்' என்னும் குறிப்பை உடையது.

சொற்பொருள்

1. நினையாய் - எண்ணிப் பார்; நனை கவுள் - மதநீரால் நனைந்த கன்னம்.
2. அண்ணல் - தலைமை; அணிமுகம் - அழகிய முகம்.
3. மிகுவலி - மிகுந்த வலிமை; இரும்புலி - பெரிய புலி; பகுவாய் - பிளந்த வாய்; ஏற்றை - ஏறு - ஆண்.
4. வெண்கோடு - வெண்மையான தந்தம்; செம்மறு - சிவந்த கறை; கொளீஇய - கொள்ளுமாறு; விடர் - மலைப்பிளவு; முகை - குகை.
5. கோடை - மேல்காற்று; ஒற்றிய - மோதிய; கருங்கோல் - கரிய அடி மரத்தையுடைய; வேங்கை - வேங்கை மரம்.
6. சினை - கிளை.
7. வரை - மலை; பெயரும் - செல்லும்; ஆறு - வழி.

தோழி கூற்று

குறுந்தொகை 369 **குடவாயிற் கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது.

கூற்று விளக்கம்

'இனி, தலைவனுடன் சென்றுவிடுதலே நன்று' என்று தோழி, தலைவிக்கு உணர்த்தியது.

அத்த வாகை அமலை வால்நெற்று,
அரிஆர் சிலம்பின், அரிசி ஆர்ப்பக்
கோடை தூக்கும் கானம்
செல்வாம் தோழி! நல்கினர் நமரே.

தெளிவுரை

தலைவி! நம் தலைவர் உன்னை உடன் அழைத்துச் செல்ல இசைந்தனர். ஆதலின், வாகை மரத்தின் விதைகளடங்கிய வெண்மையான நெற்றுகள், மேல்காற்று வீசுவதால் பரல்கள் கொண்ட சிலம்பு ஒலிப்பதைப் போல ஒலியெழுப்புகின்ற பாலை நில வழியில் நாமும் அவருடன் செல்வோம்.

கருத்து

தலைவன் உடன்போக்குக்கு இசைந்துள்ளான். நாம் தலைவனோடு செல்வோம்.

சொற்பொருள்

1. அத்தம் - வழி; வாகை - வாகை மரம்; அமலை - ஒலி(யையுடைய); வால் - வெள்ளிய; நெற்று - முற்றிய காய்.
2. அரிஆர் - பரல்கள் நிறைந்த; அரிசி - உள்விதை; ஆர்ப்ப - ஒலிப்ப.
3. கோடை - மேல்காற்று; தூக்கும் - வீசி ஆட்டும்.
4. செல்வாம் - செல்வோம்; நல்கினர் - அருள் புரிந்துள்ளார், இசைந்துள்ளார்; நமர் - நம் தலைவர்.

தோழி கூற்று

குறுந்தொகை 297 **காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி வரைவு மலிந்தது. (மலிந்தது - மணந்துகொள்ளத் தூண்டியது.)

கூற்று விளக்கம்

'தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்று, அவனூரிலே அவனை மணந்துகொண்டு இல்லறம் நடத்துதலே செய்யத்தக்கது' எனத் தோழி, தலைவியிடம் கூறியது.

அவ்விளிம்பு உரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவார் வாளி விறல்பகை பேணார்,
மாறுநின்று இறந்த ஆறுசெல் வம்பலர்
உவல்இடு பதுக்கை ஊரின் தோன்றும்
கல்உயர் நனந்தலை, நல்ல கூறிப்
புணர்ந்துஉடன் போதல் பொருள்என
உணர்ந்தேன் மன்ற,அவர் உணரா ஊங்கே.

தெளிவுரை

"ஆறலை கள்வராய மறவர்கள் அழகிய விளிம்பை இழுத்துக் கட்டிய (நாண் பூட்டிய) வளைந்த வில்லினையுடையவர். அவர்களது பகையைப்பற்றிக் கவலைப்படாமல் எதிர்த்து நின்று போராடிய வழிப்போக்கர் இறந்தனர். இறந்த அவர்கள் உடல்களின்மீது, அம்மறவர்கள் தழையிட்டு மூடிவைத்தனர். அவ்வாறு மூடி வைக்கப்பட்ட குவியல்கள், ஊரைப் போலத் தோன்றும், உயர்ந்த குன்றுகளைக் கொண்ட அகன்ற அப்பாலை வழியில், நல்ல சொற்களைச் சொல்லித் தலைவனுடன் சேர்ந்து போதலே செய்யத்தக்க செயல் என்று தலைவன் உணர்வதற்கு முன்னரே நான் உணர்ந்தேன்" என்று தோழி தலைவியை நோக்கிக் கூறினாள்.

(தலைவனுடன் உடன்போக்கில் சென்று அவனை மணந்து கொள்.)

கருத்து

தலைவனுடன் நீ உடன்போக்கில் செல்லலே நன்று.

விளக்கம்

தலைவியைத் தலைவனுடன் கூட்டுவதற்குத் தலைவிக்குரிய சுற்றத்தார் இசையமாட்டார் எனத் தோழி தெளிவாய் அறிந்த தாலேயே இவ்வாறு கூறினாள். தலைவன் கருத்தும் அதுவே என்பதனையும் தோழி முன்பே அறிந்திருந்தாள்.

சொற்பொருள்

1. அவ்விளிம்பு - அழகிய விளிம்பு, மேற்பகுதி; உரீஇய - இழுத்துக் கட்டிய; கொடுஞ்சிலை - வளைந்த வில்; மறவர் - ஆறலை கள்வர்.
2. வை - கூர்மை; வார் - நீண்ட; வாளி - அம்பு; விறல் - வலிய; பேணார் - பாதுகாவாதவராகி, கவலைப்படாமல்.
3. மாறு நின்று - எதிரே நின்று; ஆறு - வழி; வம்பலர் - புதியவர், வழிப்போக்கர்.
4. உவல் - தழை; பதுக்கை - (இட்டு மூடிய) குவியல்.
5. கல் உயர் - மலைகள் ஓங்கியுயர்ந்த; நனந்தலை - அகன்ற இடம்; நல்ல கூறி - நல்ல சொற்களைப் பேசி.
6. புணர்ந்து - சேர்ந்து; பொருள் - செய்யத்தக்க காரியம்.
7. மன்ற - உறுதியாய்; உணரா ஆங்கே - அவன் உணர்வதற்கு முன்னர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 254 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

உடன்போக்கு உடன்படவேண்டிய தோழி, தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவனொடு அவன் நாட்டுக்கு அனுப்பிவைக்க விரும்பிய தோழி, அதற்குத் தலைவியை உடன்படுமாறு சொல்லியது.

குன்றக் குறவன் ஆரம் அறுத்தென,
நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும்
வண்டுஇமிர் சுடர்நுதல் குறுமகள்!
கொண்டனர் செல்வர்,தம் குன்றுகெழு நாட்டே.

தெளிவுரை

ஒளி வீசும் நெற்றியுடன் இளமைத்தன்மை கொண்டுள்ள என் தலைவியே! மலைவாழ் குறவன் சந்தன மரத்தை வெட்டிச் சுடுவதால் எழுந்த புகை, காந்தள் மலர் மணத்தோடு விரவிக் கமழும் குன்றுகள் பொருந்திய தன் நாட்டிற்குத் தலைவன் உன்னைக் கொண்டு செல்வான். (எனவே, கவலை ஒழி.)

கருத்து

தலைவியே! தலைவன் உன்னைத் தன் நாட்டுக்குக் கொண்டுசெல்வான். (நீயும் நாணாது உடன்பட்டு எழு.)

குறிப்பு

குறவன் சந்தன மரத்தை அறுத்துச் சுடுவதால் எழுந்த நறும்புகை காந்தள் மணத்தோடு விரவிக் கமழ, வண்டுகள் ஆரவாரிக்கும் என்னும் தொடர் மூலம், தலைவியைத் தலைவன் உடன்கொண்டு சென்று, தன் வீட்டில் மணம் புரியும் சிறப்பைச் சுற்றத்தார் கேட்டு மகிழ்வர் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சந்தனப்புகையும் காந்தள் மணமும் விரவிக் கலப்பது தலைவன் தலைவியர் திருமணத்தைக் குறிக்கும். வண்டுகள் ஆரவாரிப்பது பெற்றோரின் (சுற்றத்தாரின்) மகிழ்ச்சியைக் குறிக்கும்.

சொற்பொருள்

1. ஆரம் - சந்தனம்; அறுத்தென - அறுத்துச் சுட்டனனாக.
2. காந்தள் - ஒரு வகை மலர்; நாறும் - மணம் வீசும்.
3. இமிர் - ஒலிக்கின்ற; சுடர் நுதல் - ஒளி வீசும் நெற்றி; குறுமகள் - இளைய மகள்.
4. கொண்டனர் செல்வர் - கொண்டு செல்வார்; கெழு - பொருந்திய.

தோழி கூற்று

நற்றிணை 149 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகளை உடன்போக்கு வலித்தது. (வலித்தல் - உடன்படுத்துதல்.)

கூற்று விளக்கம்

தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிடுமாறு தலைவியிடம் தோழி வற்புறுத்திக் கூறியது.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி,
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி,
மறுகின் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப,
அலந்தனென் வாழி தோழி! கானல்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ,
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவுஅயர்ந் திசினால், யானே;
அலர்சுமந்து ஒழிகஇவ் அழுங்கல் ஊரே!

தெளிவுரை

தலைவியே! நீ வாழ்க! நம்மூர்த் தெருக்களிலே பெண்கள் சிலரும் பலருமாய்க் கூடிநின்று, கடைக்கண்ணால் பார்த்து, மூக்கின்மேல் சுட்டுவிரலை வைத்தவராய்ப் பழிதூற்றித் திரிகின்றனர். அப்பழியுரைகளைக் கேட்ட நம் அன்னையும் சிறுகோல் ஒன்றைச் சுழற்றியபடியே என்னை அடிக்கலானாள். இவற்றால் நான் மிகவும் துயருற்றேன். இத்துன்பமெல்லாம் தீரும்படி ஒன்றைச் செய்வோம்.

கழியருகே உள்ள சோலையின் புதுமலர்களில் படிந்ததனால் மலர் மணம் வீசுகின்ற நல்ல நிறம் பொருந்திய பிடரி மயிர் கொண்டனவாய் விரைந்தோடும் குதிரைகள், அழகிய தேரில்

பூட்டப்பட்டுள்ளன. அத்தேரினை விரையச் செலுத்தியபடி இரவின் நடுயாமப் போதிலே நம் தலைவனாகிய கொண்கனோடு நீயும் சென்றுவிடுதற்கு நான் உடன்பட்டுள்ளேன். அங்ஙனம் அவனுடன் நீ உடன்போக்கில் சென்றுவிட்டாயானால் அதன் பிறகு ஆரவாரித்துத் திரியும் இந்த ஊர் என்ன செய்யும்? பழிச்சொற்களைச் சொல்லிக்கொண்டே இவ்வூர் அழிந்து போகட்டும்.

கருத்து

ஊர்ப்பழியினின்றும் விடுபடுவதற்குத் தலைவனுடன் நீ உடன்போக்கில் சென்றுவிடுதலே நன்று.

சொற்பொருள்

1. கடைக்கண் நோக்கி - கடைக்கண்ணால் பார்த்து.
2. உச்சி - நுனி.
3. மறுகில் - தெருவில்; அம்பல் - பழிச்சொல் (கூறி).
4. சிறுகோல் - சிறிய குச்சி; வலந்தனள் - சுழற்றினள்; அலைப்ப - அடிக்க.
5. அலந்தனென் - வருந்தினேன்.
6. தீண்டிய - படிந்து வருதலால்; பூநாறு - (அப்பூவின்) நறுமணம் கமழும்; குரூஉ - நல்ல நிறம் பொருந்திய; சுவல் - பிடரி மயிர்.
7. கடுமா - விரைந்து செல்லும் குதிரை; கடைஇ - செலுத்தி.
8. நடுநாள் - நடு யாமம்; இயல்தேர் - இயங்குகின்ற தேர்; கொண்கன் - தலைவன்.
9. செலவு அயர்ந்திசின் - (தலைவனோடு) நீ சென்றுவிட உடன்பட்டேன்.
10. அலர் - பழிச்சொல்; அழுங்கல் - ஆரவாரம்.

தோழி கூற்று

குறுந்தொகை 262 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கு நேர்ந்த தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது.

கூற்று விளக்கம்

'தலைவனுடன் நீ செல்வதற்கு நான் தலைவனிடம் இசைவு தந்துள்ளேன்' என்று தோழி தலைவியிடம் கூறியது.

ஊஉர் அலர்எழச் சேரி கல்லென,
ஆனாது அலைக்கும் அறன்இல் அன்னை
தானே இருக்க, தன்மனை; யானே,
நெல்லி தின்ற முள்எயிறு தயங்க,
உணல்ஆய்ந் திசினால், அவரொடு சேய்நாட்டு,
விண்தொட நிவந்த விலங்குமலைக் கவாஅன்,
கரும்புநடு பாத்தி அன்ன,
பெருங்களிற்று அடிவழி நிலைஇய நீரே.

தெளிவுரை

ஊரில் பழிச்சொல் உண்டாகவும், தெருவிலுள்ளார் ஆரவாரிக்கவும், நம்மை (இற்செறித்தும் கடுஞ்சொல் கூறியும்) இடையறாது துன்புறுத்தும் தாய் தன் மனையில் தானே தனியளாய் இருக்கட்டும். நெடுந்தொலைவிலுள்ள தலைவன் நாட்டில் மலை வானளாவ உயர்ந்தும் குறுக்கே வளர்ந்தும் அமைந்துள்ளது. அம்மலை அடிவாரத்தில் பெரிய யானையின் காலடிகள் அழுந்தப் பதிந்ததால் உண்டான பள்ளங்கள், கரும்பு நடுவதற்காக உண்டாக்கப்பட்ட பாத்திகள்போலத் தோன்றும்; அப்பள்ளங்களில் தேங்கியிருக்கும் நீரை நெல்லிக்காயைத் தின்ற உன் கூரிய பற்கள் தோன்றும்படியாய்ப் பருக வேண்டும் என நான் முடிவு செய்துள்ளேன்.

கருத்து

'நீ தலைவனுடன் உடன்போதலை நான் திட்டமிட்டுள்ளேன்' எனத் தோழி, தலைவியிடம் கூறினாள்.

விளக்கம்

நம்மை இடைவிடாது வருத்துகின்ற தாய் தான் மட்டும் தனியே வீட்டில் இருக்கட்டும். நீ, தலைவனோடு அவன் நாட்டு மலைச்சாரலில் யானைகளின் காலடிகள் பதிந்ததால் உண்டான பள்ளங்களில் தேங்கியிருக்கும் நீரைப் பருகியவளாய் அவனுடன் செல்ல வேண்டும் என நான் முடிவு செய்துள்ளேன்.

சொற்பொருள்

1. ஊஉர் - ஊர்; அலர் - பழிச்சொல்; சேரி - தெரு; கல் என - 'கல்' என்னும் ஒலியுடன், ஆரவாரத்துடன்.
2. ஆனாது - இடைவிடாது; அலைக்கும் - துன்புறுத்தும்; அறன்இல் - அற உணர்வு இல்லாத.
3. தன்மனை - தன் வீடு.
4. நெல்லி - நெல்லிக்காய்; முள் எயிறு - கூரிய பல்; தயங்க - வெளிப்பட, தோன்றும்படி,
5. உணல் - உண்பதற்கு; ஆய்ந்திசின் - சிந்தித்து முடிவு செய்துள்ளேன்; அவரொடு - தலைவரொடு; சேய் நாடு - நெடுந் தொலைவில் உள்ள நாடு.
6. நிவந்த - உயர்ந்த; விலங்கு மலை - குறுக்கிட்டு இருக்கும் மலை; கவாஅன் - பக்க மலை, மலை அடிவாரம்.
8. பெருங்களிறு - பெரிய யானை; அடிவழி - அடிச்சுவடு, அடி பதிந்ததால் தோன்றிய பள்ளம்; நிலைஇய - தங்கியுள்ள.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 364 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கு நயந்த தலைமகன் அதனைத் தோழிக்கு உணர்த்த அவள் முடிப்பாளாய்ச் சொல்லியது. (நயத்தல் - விரும்புதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துப்போக விரும்புகிறான். ‘விரையாதே, பொறுத்திரு; வேண்டுவன செய்து முடிப்பேன்’ எனத் தலைவனிடம் தோழி சொல்லியது.

முளவுமா வல்சி எயினர் தங்கை
இளமா எயிற்றிக்கு, நின்நிலை அறியச்
சொல்லினென் இரக்கும் அளவை –
வெள்வேல் விடலை! விரையா தீமே!

தெளிவுரை

“வெற்றிதரும் வேலை ஏந்திய தலைவனே! முள்ளம்பன்றியின் இறைச்சியை உணவாய்க் கொள்ளுகின்ற வேடுவரின் தங்கையும், இளமையும் மாமை நிறமும் கொண்டவளுமான என் தலைவி யிடத்தில் உன் விருப்பத்தைக் கூறி, அவள் இசைவினைப் பெறும் வரை நீ பொறுத்திரு” என்கிறாள், தோழி.

கருத்து

தலைவ! உடன்போக்கில் செல்ல விரும்பும் உன் நிலையைத் தலைவி யிடம் சொல்லி, அவள் இசைவு பெற்று வரும்வரை பொறுத்திரு!

குறிப்பு

தலைவியின் குறிப்பின்றியே உடன்போக்கு நயந்து அவனிடம் உணர்த்தினனாகலின், தலைவியின் குறிப்பறிந்து சொல்லும்வரை பொறுத் திருக்குமாறு தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. முளவு மா - முள்ளம் பன்றி; வல்சி - உணவு; எயினர் - வேட்டுவர்.
2. இளமா - இளமையும் அழகும் கொண்ட; எயிற்றி - எயினர் குடிப்பெண்.
3. சொல்லினென் - சொல்லி; இரக்கும் அளவை - வேண்டி இசைவைப் பெற்று வரும்வரை.
4. வெள்வேல் - வெள்ளிய வேல்; விடலை - பாலைநிலத் தலைவன்; விரையாதீம் - விரையாதே, பொறுத்திரு.

தோழி கூற்று

அகநானூறு 65 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

வேறுபட்ட தலைமகட்குத் தலைமகன் உடன்போக்கு வலித்தமை தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவில் தலைவன் பிரிவு கண்டு மனம் வேறுபட்டு வருந்திய தலைவியிடம், தலைவன் அவளை உடன்போக்கில் கொண்டுசெல்ல இசைந்துள்ளதைத் தோழி தெரிவித்தது.

உன்னம் கொள்கையொடு உளம்கரந்து உறையும்
அன்னை சொல்லும் உய்கம்; என்னதூஉம்
ஈரம் சேரா இயல்பின் பொய்ம்மொழிச்
சேரிஅம் பெண்டிர் கௌவையும் ஒழிகம்;
நாடுகண் அகற்றிய உதியஞ் சேரல்
பாடிச் சென்ற பரிசிலர் போல,
உவஇனி– வாழி, தோழி! அவரே,
பொம்மல் ஓதி! நம்மொடு ஓராங்குச்
செலவுஅயர்ந் தனரால் இன்றே– மலைதொறும்
மால்கழை பிசைந்த கால்வாய் கூர்எரி,
மீன்கொள் பரதவர் கொடுந்திமில் நளிசுடர்
வான்தோய் புணரி மிசைக்கண் டாங்கு,
மேவரத் தோன்றும் யாஅஉயர் நனந்தலை
உயவல் யானை வெரிநுச்சென் றன்ன
கல்ஊர்பு இழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறும் கோடுஏந்து ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் அருஞ்சுரம், 'பணைத்தோள்,
நாறுஐங் கூந்தல், கொம்மை வரிமுலை,
நிரைஇதழ் உண்கண், மகளிர்க்கு,
அரிய வால்'என அழுங்கிய செலவே!

தெளிவுரை

பொலிவுற்ற கூந்தலைப் பெற்றுள்ளவளே! வாழி!

மலைதோறும் பெரிய மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய் வதால் எழுந்த தீச்சுடர்கள், காற்று வீசுதலால் எங்கும் மிகுதியாய் எரி பரக்கச்செய்யும். இத்தோற்றம், மீன் பிடிக்கும் பரதவருடைய வளைந்த படகில் ஏற்றி வைத்திருக்கும் விளக்குகளின் சுடர்கள் வானளாவிய கடலலையின்மீது தோன்றுவதை ஒத்திருக்கும்.

யாமரங்கள் உயர்ந்து வளர்ந்துள்ள அகன்ற இடத்தில் மூங்கில் மரங்கள் சாய்ந்து கிடக்கும்; அங்குள்ள சிறு வழியில் பாறைகளில் ஏறியும் இறங்கியும் செல்வது, பட்டினியால் மெலிந்து வருந்திய யானையின் முதுகிலே நடந்து செல்வது போலத் தோன்றும். அக்காடு உயர்த்திக் கூறப்படுவதற்குக் காரணமான நிமிர்ந்த கொம்புகளைக் கொண்ட யானைகள் வழியெல்லாம் காவல் செய்திருக்கும். இத்தகைய கடத்தற்கரிய காட்டுவழியை மூங்கில்போலும் தோளினையும், ஐவகையாய்ப் பகுக்கப்பட்ட மணம்நாறும் கூந்தலினையும், திரண்ட தேமல் பொருந்திய முலையினையும், பூப்போலும் மையுண்ட கண்களையும் கொண்ட மகளிர் கடந்து செல்லுதல் அரிது என்று கருதியே நம் தலைவர் இதுவரை உன்னை உடன்போக்கில் அழைத்துச் செல்லாது காலம் தாழ்த்தினார். இப்போது அவரே உன்னை அழைத்துச் செல்ல விரும்புகிறார்.

நம் கருத்தினைக் குறிப்பாய் அறிந்திருந்தும், தான் அறிந்ததைச் சொல்லாது மறைத்து வாழ்கின்ற அன்னையின் கொடுஞ்சொல்லிலிருந்து இனித் தப்புவோம். சிறிதும் அன்பற்றவராய்ப் பொய்ம்மொழி கூறும் சேரிப்பெண்டிர்களின் பழிச் சொற்களையும் விட்டு நீங்குவோம்!

பிற நாடுகளை வென்று தன் நாட்டினை விரிவாக்கிக் கொண்ட உதியஞ்சேரலாதன் என்பானைப் பாடிச்செல்லும் புலவர்கள் பெரும்பொருள் பெற்று மகிழ்வதுபோல, தலைவியே! நீயும் மகிழ்ச்சி அடைவாய்!

கருத்து

தலைவியே! தலைவன் உன்னை அழைத்துச் செல்ல விரும்புகிறான். நீயும் அவனுடன் செல்.

விளக்கம்

மகளிர் செல்லுதற்கரிய காட்டுவழியில் தலைவன் உன்னை அழைத்துச் செல்ல விரும்பினான். நீயும் புறப்படு! அதனால் அன்னையின் கொடுஞ்சொல்லிலிருந்து தப்புவோம்; சேரிப் பெண்களின் அலர் தூற்றுதலினின்றும் நீங்குவோம்; உதியஞ் சேரலாதனைப் பாடிப் பெரும் பரிசினைப் பெற்ற புலவர்போல நீயும் மகிழ்வாய்.

குறிப்பு

உதியஞ்சேரல் - இவன் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் எனப்படுவான். பாண்டவர் ஐவர்க்கும், துரியோதனன் முதலாகிய நூற்றுவர்க்கும் இடையே நடைபெற்ற போரில் இரு படையினர்க்கும் இவன் பெருஞ்சோறு வழங்கியதனால் பெருஞ்சோற்றுதியன் எனப் பெயர் பெற்றுச் சிறப்புற்றான்.

சொற்பொருள்

1. உன்னம் கொள்கையொடு - நம் மனக்கருத்தை உணர்ந்துகொண்ட அறிவுடன் (உன்னம் - கருத்து); உளம் கரந்து உறையும் - தான் அறிந்ததைச் சொல்லாது மறைத்து வாழ்கின்ற.
2. உய்கம் - தப்புவோம்; என்னதூஉம் - சிறிதும்.
3. ஈரம் சேரா இயல்பின் - அன்பு பொருந்தாத இயல்பினைக் கொண்ட.
4. கௌவை - பழிச்சொல்; ஒழிகம் - நீங்குவோம்.
5. நாடுகண் அகற்றிய - பிற நாடுகளை வென்று தன் நாட்டினை விரிவாக்கிக்கொண்ட; உதியஞ்சேரல் - உதியஞ்சேரலாதன், சேர மன்னருள் ஒருவன், பெருவள்ளல்.
7. உவ - மகிழ்வாய்; அவர் - நம் தலைவர்.
8. பொம்மல் ஓதி - பொலிவு பெற்ற கூந்தலைக் கொண்ட; ஓராங்கு - ஒரு சேர.
9. செலவு அயர்ந்தனர் - உடன் செல்ல விரும்பினர்; இன்றே - இப்பொழுதே, இன்றைக்கே.
10. மால்கழை - பெரிய மூங்கில்கள்; பிசைந்த - உரசிக்கொள்வதால் (உண்டாகிய); கால் வாய் - காற்று வீசுவதால்; கூர் எரி - மிக்க சுடர்.

11. கொடுந்திமில் - வளைந்த படகுகள்; நளிசுடர் - மிக்க தீச்சுடர்.
12. புணரிமிசை - கடல் அலையின்மீது; கண்டாங்கு - காணப்படுவது போல.
13. மேவரத் தோன்றும் - ஒத்துத் தோன்றும்; யாஅ உயர் - யா மரங்கள் உயரமாய் வளர்ந்துள்ள; நனந்தலை - அகன்ற இடத்தில்.
14. உயவல் யானை - பசியால் வருந்திய யானையின்; வெறிநுச் சென்றன்ன - முதுகில் நடந்துசெல்வதுபோல (வெரிந் - முதுகு).
15. கல் ஊர்பு இழிதரும் - பாறையில் ஏறியும் இறங்கியும் செல்லும்; புல் சாய் - மூங்கில்கள் சாய்ந்த.
16. காடு மீக்கூறும் - காட்டினை உயர்த்திக் கூறுவதற்கு; கோடு ஏந்து - தந்தங்கள் நிமிர்ந்த; ஒருத்தல் - ஆண்யானை.
17. ஆறு - வழியினை; கடி கொள்ளும் - காவல் பூண்டிருக்கும்; பணைத்தோள் - மூங்கில்போலும் தோள்.
18. நாறு ஐங்கூந்தல் - ஐந்து வகையாய்ப் பகுத்துப் பின்னப்பட்ட மணம் வீசும் கூந்தல்; கொம்மை வரிமுலை - திரண்ட தேமல் பொருந்திய முலை (கொம்மை - திரண்ட).
19. நிரைஇதழ் - பூப்போலும்; உண்கண் - மையுண்ட கண்.
20. அரிய என - செல்லுதற்கு அரிய என; அழுங்கிய - காலம் தாழ்த்தி யிருந்த; செலவு - உடன்போக்கு.

தோழி கூற்று

நாலடியார் 397 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : பாலை

கூற்று

தலைமகள் பெற்றோரைப் பிரிந்து தலைமகனுடன் செல்ல உடன்படாமையைத் தோழி, தலைமகனிடம் கூறியது.

கூற்று விளக்கம்

களவுப் புணர்ச்சியிலிருந்த தலைவன், தலைவியைத் தன்னூருக்குத் தன்னுடன் வருமாறு அழைத்தான். பெற்றோரைப் பிரிந்து தலைவி, தலைவனுடன் செல்ல உடன்படாமையைத் தோழி தலைவனுக்குக் கூறியது.

ஓலைக் கணக்கர் ஒலிஅடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதில், மணந்தார் பிரி(வு)உள்ளி
மாலை பரிந்திட்(டு) அழுதாள்; வனமுலைமேல்
கோலம்செய் சாந்தம் திமிர்ந்து.

தெளிவுரை

ஓலையில் எழுதும் கணக்கரின் (வேலை முடிந்து) ஓசை ஒழியும்படியான மாலை நேரத்தில், தலைவி தன்னைத் தழுவிய தலைவனின் பிரிவினை நினைந்து, தான் அணிந்திருந்த மாலையை அறுத்தெறிந்தாள்; அழகிய முலைகளின்மேல் பூசப்பட்டிருந்த சந்தனக் குழம்பினையும் உதிர்த்துத் தள்ளித் துன்புற்று அழுதாள்.

கருத்து

தலைவி பெற்றோரைப் பிரிந்து தலைவனுடன் உடன்போக்கில் செல்ல உடன்படாத நிலையில் மாலைப் பொழுதில் தலைவன் பிரிந்து செல்வதைப் பொறாது தவித்தாள்.

விளக்கம்

தலைவனும் தலைவியும் களவுப்புணர்ச்சியில் இருந்தனர். திருமணம் பற்றித் தலைவியின் பெற்றோர் கருத்துத் தெரியவில்லை. ஆதலின், தலைவன், தலைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்வதாய்க் கூறுகிறான். தலைவியோ பெற்றோரைப் பிரிந்து வர உடன்படவில்லை. ஆயினும், மாலையில் தலைவன் பிரியும்போது தலைவி பெரிதும் வருந்திப் புலம்புகிறாள்.

குறிப்பு

தோழி, தலைவியின் நிலையைச் சொல்லி அவளை உடனே மணந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யுமாறு தலைவனுக்குக் கூறினாள்.

சொற்பொருள்

1. ஓலைக் கணக்கர் - ஓலையில் எழுதிக் கணக்கு வேலை செய்வோர்; புன் - புல்லிய; செக்கர் - செந்நிறமுடைய மாலைக் காலம் (இக்காலத்தில் வேலை செய்வோர் தம் வேலையை முடித்துக் கொள்வர்.)

2. மணந்தார் - களவுப் புணர்ச்சியில் கூடியுள்ள தலைவன்; உள்ளி - நினைந்து.
3. பரிந்து இட்டு - அறுத்து எறிந்து; வனமுலை - அழகிய முலை.
4. சாந்தம் - சந்தனம்; திமிர்ந்து - உதிர்த்து.

தோழி கூற்று

அகநானூறு 221 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகற்குப் போக்குடன்பட்ட தோழி தலைமகட்குப் போக்குடன்படச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை வேறொருவர்க்கு மணம் செய்து கொடுக்க அவள் வீட்டார் ஏற்பாடு செய்தனர். அது கண்ட தோழி, தலைவனிடம் தலைவியை அவனூர்க்கு அழைத்துச் சென்று மணம் முடித்துக்கொள்ளுமாறு கூறினாள். அவனும் இசைய, உடன்போக்கிற்கு இசையுமாறு தலைவியிடம் தோழி கூறியது.

நனைவிளை நறவின் தேறல் மாந்திப்
புனைவினை நல்இல் தருமணல் குவைஇ,
'பொம்மல் ஓதி எம்மகள் மணன்'என,
வதுவை அயர்ந்தனர் நமரே; அதனால்,
புதுவது புனைந்த சேயிலை வெள்வேல்,
மதிஉடம் பட்ட மைஅணற் காளை
வாங்குசினை மலிந்த திரள்அரை மராஅத்து,
தேன்பாய் மெல்இணர் தளிரொடு கொண்டு,நின்
தண்நறும் முச்சி புனைய, அவனொடு
கழைகவின் போகிய மழைஉயர் நனந்தலை,
களிற்றுஇரை பிழைத்தலின், கயவாய் வேங்கை
காய்சினம் சிறந்து, குழுமலின் வெரீஇ,
இரும்பிடி இரியும் சோலை
அருஞ்சுரம் சேறல் அயர்ந்தனென், யானே.

தெளிவுரை

"தலைவியே! அரும்புகளிலிருந்து உண்டாகும் கள்ளினை நம் உறவினர் நிரம்பக் குடித்தனர்; கலையழகுடன் கட்டப்பட்டுள்ள வீட்டு முற்றத்தில், புதிதாய்க் கொண்டுவரப்பட்ட மணலைப் பரப்பி, 'பொலிவு பெற்ற கூந்தலைக் கொண்ட எம் மகளுக்குத் திருமணம்' என்று கூறி ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

அவர்கள் வேறு ஒருவனுக்கு உன்னை மணமுடிப்பர் என்றறிந்த நான், புதிதாய்ச் செய்யப்பட்டதும் செம்மையான இலை வடிவினைக் கொண்டதுமான வேலினை ஏந்தியவனும், உன் போக்கிற்கு ஒத்தவனும், கரிய தாடியினைக் கொண்டவனு மாகிய தலைவனிடம் தக்கவாறு கூறி உன்னை அவன் ஊர்க்கு அழைத்துச் சென்று மணம் முடிக்க வேண்டினேன்; அவனும் இசைந்தான்.

அவன் உன்னை அழைத்துச் செல்லும் வழியில் வளைந்த கிளைகளுடன் திரண்ட அடிப்பகுதி கொண்ட வெண்கடம்ப மரத்தின் தேன் சொரியும் பூங்கொத்துகளைத் தளிருடன் கொண்டுவந்து, குளிர்ச்சி பொருந்திய நறுமணம் கொண்ட உன் கொண்டையில் அணிந்து மகிழ்வான்.

மழை பெய்யாது மூங்கில்கள் அழகிழந்துள்ள வறண்ட காட்டில் பெரிய வாயினைக் கொண்ட புலி, தன் இரையாகிய ஆண்யானை தப்பியோடிவிட்டமையால் மிகுசினம் கொண்டு முழங்கும். அதைக் கேட்டு அஞ்சிய பெண்யானை நிலை கெட்டு ஓடும். அத்தகைய காட்டில் நீ அவனோடு செல்ல வேண்டும் என்று நான் விரும்பி, அதற்கான ஏற்பாடுகளையும் செய் துள்ளேன்" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் உன்னை அழைத்துச் செல்ல இசைந்துள்ளான்; நீயும் அவன் உடன் செல்.

விளக்கம்

உறவினர் உன்னை வேற்றவர் ஒருவருக்கு மணம் பேசு கின்றனர்; ஆதலின் நீ தலைவனுடன் சென்றுவிடுவதைத் தவிர

வேறு வழியில்லை. உன்னை அழைத்துச் செல்ல அவனும் விரும்புகிறான். அரிய காட்டுவழியில் செல்ல வேண்டியிருக் கிறது என்றாலும், அவன் உன்னை அயர்வு தோன்றாது மகிழ்வுடன் அழைத்துச் செல்வான். நீ செல்லுதலை நானும் விரும்பி ஏற்றுக்கொண்டேன்.

சொற்பொருள்

1. நனைவிளை தேறல் - அரும்புகளினின்று உண்டாகும் கள்ளின் தெளிவு; மாந்தி - அருந்தி.
2. புனைவினை - கலையழகுடன் புனையப்பட்ட; நல் இல் - நல்ல வீடு; தருமணல் - புதிதாய்க் கொண்டுவரப்பட்ட மணல்; குவைஇ - குவித்து, பரப்பி.
3. பொம்மல் ஓதி - பொலிவு பெற்ற கூந்தல்; எம் மகள் மணன் என - 'எம் மகளுக்குத் திருமணம்' என்று (கூறி).
4. வதுவை அயர்ந்தனர் - மண ஏற்பாடுகளைச் செய்கின்றனர்; நமர் - நம் உறவினர்.
5. புதுவது புனைந்த - புதிதாய்ச் செய்யப்பட்ட; சேய்இலை - செம்மையாகச் செய்யப்பட்ட இலை வடிவு (பொருந்திய); வெள்வேல் - ஒளி பொருந்திய வேல்.
6. மதி உடம்பட்ட - உடன்போக்கிற்கு இயைந்த அறிவினைக் கொண்ட; மை அணல் - கரிய தாடி.
7. வாங்குசினை - வளைந்த கிளை; மலிந்த - மிகுந்த; திரள் அரை - திரண்ட அடிமரம் கொண்ட; மரா - வெண்கடம்ப மரம்.
8. தேன்பாய் - தேன் சொரியும்; மெல் இணர் - மென்மையான பூங்கொத்து.
9. தண் நறும் - குளிர்ச்சி பொருந்திய மணம்; முச்சி - கொண்டை; புனைய - சூட.
10. கழை - மூங்கில்; கவின் - அழகு; போகிய - இழந்த; மழை உயர் - மேகம் பெய்யாது மேலே சென்ற (மழை பெய்யாத); நனந்தலை - அகன்ற பாலை வழியில்.
11. களிறு - ஆண்யானை; இரை பிழைத்தலின் - இரையைத் தப்ப விட்டதால்; கயவாய் - பெரிய வாயினைக் கொண்ட; வேங்கை - வேங்கைப்புலி.
12. காய் சினம் - கொதிக்கும் கோபம்; சிறந்து - மிக்கு; குழுமலின் - முழங்குதலின்; வெரீஇ - அஞ்சி.
13. இரும்பிடி - பெரிய பெண்யானை; இரியும் - (நிலை கெட்டு) ஓடும்.

14. அருஞ்சுரம் சேறல் - அரிய சுரத்தில் செல்லுதலை; யான் - நான்; அயர்ந்தனென் - விரும்பி ஏற்றுக்கொண்டேன்.

தோழி கூற்று

அகநானூறு 285 **காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கு உடன்படுவித்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணத்திற்காகப் பொருள் ஈட்டப் பிரிவான் என்பதை உணர்ந்த தலைவி பொறுக்க இயலாது வருந்தினாள். அது கண்ட தோழி தலைவனிடம் சென்று, தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்லும் படி கூறினாள். அதற்குத் தலைவன் உடன்பட்ட செய்தியைத் தோழி தலைவியிடம் கூறியது.

'ஒழியச் சென்மார், செல்ப' என்றுநாம்,
அழிபடர் உழக்கும் அவல நெஞ்சத்து
எவ்வம் இகந்துசேண் அகல, வைஎயிற்று,
ஊன்நசைப் பிணவின் உறுபசி களைஇயர்,
காடுதேர் மடப்பிணை அலற, கலையின்
ஒடுகுறங்கு அறுத்த செந்நாய் ஏற்றை
வெயில்புலந்து இளைக்கும் வெம்மைய, பயில்வரி
இரும்புலி வேங்கைக் கருந்தோல் அன்ன,
கல்எடுத்து எறிந்த பல்கிழி உடுக்கை
உலறுகுடை வம்பலர் உயர்மரம் ஏறி,
ஏறுவேட்டு எழுந்த இனம்தீர் எருவை
ஆடுசெவி நோக்கும் அத்தம், பணைத்தோள்
குவளை உண்கண் இவளும் நம்மொடு
வரூஉம் என்றனரே, காதலர்;
வாராய் – தோழி! – முயங்குகம், பலவே.

தெளிவுரை

தலைவியே! நாம் தனித்திருக்கத் தலைவர் நம்மை வரைதல் பொருட்டுப் பொருள் ஈட்டச் செல்வார் என்று நாம் மிகவும் வருந்தியிருக்கிறோம். அத்துன்பம் நம்மை விட்டு நீங்கி நெடுந் தொலைவு செல்லுமாறு தலைவர் ஒரு முடிவு செய்துள்ளார்.

அவர் செல்லும் காட்டுவழியில், ஆண்செந்நாய் பசியால் வருந்தும் பெண்நாயின் மிக்க பசியினைப் போக்குவதற்கு இரை கொண்டுவரச் சென்றது. தன் ஆண்மானைத் தேடிக்கொண் டிருந்த பெண்மான் அலறுமாறு, செந்நாய் அஞ்சி ஓடுகின்ற அந்த ஆண்மானின் தொடையில் அடித்துக் கொன்றது. மானைக் கொன்ற செந்நாய் வெயிலின் வெப்பம் தாங்க இயலாது வருந்தியிருந்தது.

அத்தகைய கொடிய வழியில் ஆறலை கள்வர் (வழிப்பறிக் கள்வர்) வேங்கைப்புலியின் தோலினைப் போன்ற கரிய கற்களை எடுத்து வழிப்போக்கர்மீது எறிந்து தாக்கினர். அதனால் வழிப்போக்கர் பல இடங்களில் கிழிந்த ஆடையையும் காய்ந்த குடையினையும் கொண்டவராய் அஞ்சி ஓடி, உயர்ந்த மரங்களில் ஏறி அமர்ந்தனர். (அச்சம் அடங்கிய பின்) தாம் செல்லுதற்குரிய திசையை அறிவதற்காக வானத்தில் தன் கூட்டத்தினை விட்டுப் பிரிந்து இரையைத் தேடித் தனியே பறக்கும் பருந்து செல்லும் திசையினை நோக்கியிருப்பர்.

அத்தகைய காட்டுவழியில், 'பெருத்த தோள்களையும், குவளை மலர் போன்ற மையுண்ட கண்களையும் கொண்ட நம் தலைவியும் நம்முடன் வருவாள்' என்று தலைவர் கூறினார். இம்மகிழ்ச்சியைக் கொண்டாட இருவரும் பலமுறை ஆரத் தழுவிக்கொள்வோம், வா!

கருத்து

தலைவர் உன்னை உடன் அழைத்துச் செல்ல முடிவு செய்துவிட்டார்; மகிழ்வு கொள்.

விளக்கம்

தலைவி! தலைவர், 'காட்டுவழியில் தலைவியும் என்னுடன் வருகிறாள்' என்று கூறினார்; அவர் உன்னை உடன் அழைத்துச்

செல்ல முடிவு செய்துவிட்டார்; இம்மகிழ்ச்சியால் நாம் பலமுறை தழுவிக்கொள்வோம், வா!

சொற்பொருள்

1. ஒழிய - நாம் பிரிந்திருக்க; சென்மார் - பொருளீட்டுவதற்குச் செல்வார்.
2. அழிபடர் - மிக்க துன்பம்; உழக்கும் - வருத்தும்.
3. சேண்அகல - தொலைவில் செல்ல; வை எயிறு - கூரிய பல்.
4. பிணவு - பெண் (செந்நாய்); உறுபசி - மிக்க பசி; களைஇயர் - போக்குவதற்கு.
5. காடு தேர் - (தன் கலையினைக்) காட்டில் தேடும், மடப்பிணை - இளைய பெண்மான்; அலற - கதற.
6. ஓடு குறங்கு - ஓடித் தப்புவதற்குப் பயன்படும் தொடை; ஏற்றை - ஆண்.
7. புலந்து - வெறுத்து; இளைக்கும் - மெலியும்; வெம்மைய - வெப்பம் பொருந்திய; பயில் வரி - வரிகள் பொருந்திய.
8. இரும் புலி வேங்கை - பெரிய வேங்கைப்புலி.
9. பல்கிழி - பல கிழிவுகளைக் கொண்ட; உடுக்கை - ஆடை.
10. உலறு குடை - காய்ந்த குடை; வம்பலர் - புதியவர்.
11. ஏறு வேட்டு - இரையை விரும்பி; எருவை - பருந்து.
12. ஆடு செவி - வானில் பறக்க ஏற்ற சமயம் (செவி - செவ்வி); அத்தம் - வழி; பணை - பெரிய.
13. குவளை உண் கண் - குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்.
14. வரூஉம் - வருவாள்.
15. முயங்குகம் - தழுவுவோம்; பலவே - பலமுறை.

தோழி கூற்று

அகநானூறு 259 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கு நேர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்லக் கருதினான்; அதனைத் தோழியிடம் சொன்னான். அதற்கு இசைந்த தோழி அதனைத் தலைவியிடம் சொல்லி அவளை உடன்படுமாறு செய்தது.

வேலும் விளங்கின; இளையரும் இயன்றனர்;
தாரும் தையின; தழையும் தொடுத்தன;
நிலம்நீர் அற்ற வெம்மை நீங்கப்
பெயல்நீர் தலைஇ, உலவைஇலை நீத்துக்
குறுமுறி ஈன்றன, மரனே; நறுமலர்,
வேய்ந்தன போலத் தோன்றி, பலஉடன்
தேம்படப் பொதுளின பொழிலே; கானமும்,
நனிநன்று ஆகிய பனிநீங்கு வழிநாள்,
பால்எனப் பரத்தரும் நிலவின் மாலைப்
போதுவந் தன்று, தூதே; நீயும்
கலங்கா மனத்தை ஆகி, என்சொல்
நயந்தனை கொண்மோ– நெஞ்சுஅமர் தகுவி!–
தெற்றி உலறினும், வயலை வாடினும்,
நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும்,
நின்னினும் மடவள் நனிநின் நயந்த
அன்னை அல்லல் தாங்கி,நின் ஐயர்
புலிமருள் செம்மல் நோக்கி,
வலியாய் இன்னும்; தோய்க,நின் முலையே!

தெளிவுரை

"என் உள்ளம் கவர்ந்த அன்புடையாளே! எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன். வேல்கள் நெய் பூசப்பெற்றுப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஏவலாளர்கள் ஆயத்தமாய் உள்ளனர். மாலைகள் கட்டப்பட்டுள்ளன. தழை உடைகளும் தொடுக்கப்பட்டுள்ளன. மழை பெய்தமையால் நிலத்தின் வெப்பம் தணிந்துள்ளது. மரங்கள் முதிர்ந்த இலைகளை உதிர்த்துப் புதிய தளிர்களைத் தோற்றுவித்துள்ளன. சோலைகளில் வேயப்பட்டனபோலப் புதுமலர்கள் பூத்து அழகாய் விளங்குகின்றன; பூக்களிலெல்லாம் தேன் சொட்டுகிறது. காடுகளும் பயணத்திற்கேற்றவாறு சிறப்புற அமைந்துள்ளன. பனிக்காலம் முடிந்து இளவேனிலின் அழகு தோன்றிவிட்டது. பால்போல் ஒளி வீசும் நிலாவும், மாலைப் பொழுதும் தூதாய் வந்துள்ளன.

" 'நான் சென்றுவிட்டால் வீட்டுத்திண்ணையில் வளர்த்த பூச் செடிகள் உலர்ந்துவிடுமே; வயலைக்கொடிகள் வாடிவிடுமே!

நொச்சி மரத்தின் வளைந்த பூங்கொத்துகள் வாடிக் கவிழ்ந்து விடுமே' என்றெல்லாம் எண்ணி வருந்தாதே! உன்னை விரும்பும் அன்னையின் துயரத்தையும், புலி போன்ற உன் தமையன்மாரின் சீற்றத்தையும் எண்ணிக் கலங்காதே!

"உள்ளத்தைத் திடப்படுத்திக்கொண்டு என் சொல்லை விரும்பி ஏற்றுக்கொள்! தலைவனுடன் உடன்போக்கில் செல்வதற்கு உன் மனத்தை உறுதிப்படுத்திக்கொள். உன் முலைகள் என் மார்பிலே பதியுமாறு இன்னுமொரு முறை தழுவிக்கொள்."

கருத்து

தலைவியே! பயண ஏற்பாடுகள் அனைத்தும் செய்துவிட்டேன்; உள்ளத்தைத் திடப்படுத்தி, உடன்போக்கில் செல்.

விளக்கம்

பயணத்திற்குரிய ஏற்பாடுகள் நிறைவுற்றன; பயணத்திற்கேற்ற காலமும் பொழுதும் நன்றாய் உள்ளன; நாம் வளர்த்தவை யெல்லாம் வாடிவிடுமே என்று வருத்தங்கொள்ளாதே! உன் அன்னையின் துன்பத்தையும் தமையன்மாரின் சீற்றத்தையும் எண்ணிக் கலங்கி இங்கே கிடந்து வாடாதே! உடன்போக்கில் சென்றுவிடு. புறப்படு முன் என்னை ஒருமுறை இறுகத் தழுவிக் கொள்.

சொற்பொருள்

1. விளங்கின - (நெய் பூசப்பெற்று) விளக்கமுற்றன; இளையர் - ஏவலாளர்; இயன்றனர் - புறப்பட்டனர்.
2. தார் - மாலை; தையின - கட்டப்பெற்றன; தழையும் - தழையாடையும்; தொடுத்தன - தொடுக்கப்பட்டன.
4. பெயல்நீர் - மழை; தலைஇ - பெய்து; உலவை இலை - முதிர்ந்த இலை; நீத்து - உதிர்த்து.
5. குறுமுறி - இளைய தளிர்; ஈன்றன - தளிர்த்தன.
6. வேய்ந்தன போல - புனையப்பட்டதுபோல.
7. தேம்பட - தேன் பொருந்த; பொதுளின - செறிந்தன.
8. நனி - மிகவும்; பனி நீங்கு - பனிக்காலம் கழிந்த; வழிநாள் - இளவேனிற்காலம்.

9. பரத்தரும் - பரவிய.
10. போது - பொழுது.
11. மனத்தை ஆகி - மனத்தை உடையவள் ஆகி.
12. நயந்தனை - விரும்பி; கொண்மோ - ஏற்றுக்கொள்க; நெஞ்சு அமர் தகுவி - என் உள்ளம் விரும்பும் தன்மை பெற்றவளே!
13. தெற்றி - தொட்டியில் வைத்து வளர்க்கப்படும் செடி; வயலை - வயலைக் கொடி.
14. மென்சினை - மெல்லிய கிளை; வணர் குரல் - வளைந்த பூங்கொத்துகள்; சாயினும் - வாடினாலும்.
15. மடவள் - மடப்பம் வாய்ந்தவள்; நின் நயந்த - உன்னை மிக விரும்பிய.
16. அல்லல் - துன்பம்; ஐயர் - உடன்பிறந்தவர்.
17. புலிமருள் - புலியை ஒத்த; செம்மல் - (அச்சம் தரும்) தலைமை.
18. வலியாய் - துணிவாய்; தோய்க - தழுவுக.

தோழி கூற்று

திருக்குறள் 1279 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் குறிப்பறிந்த தோழி, அதனைத் தலைமகற்கு அறிவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்தால் அவனுடன் செல்லத் தலைவி முடிவு செய்துள்ளாள் என்பதைத் தலைவியின் குறிப்பை அறிந்த தோழி, அதனைத் தலைவனுக்குச் சொல்லியது.

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃ(து)ஆண்(டு) அவள்செய் தது.

தெளிவுரை

"தலைவ! நீ பிரிந்து செல்ல இருக்கிறாய் என்பதை உன் குறிப்பு களால் அறிந்த தலைவி, தன் வளையல்களை நோக்கினாள்; பின்

தன் மெலிந்த தோள்களை உற்றுப் பார்த்தாள்; தொடர்ந்து தன் கால் அடிகளை நோக்கினாள். இவையே அவள் அப்பொழுது செய்த செயல்."

கருத்து

தலைவ! பிரிந்தால் அவள் கைவளை கழன்று தோள் மெலிந்து துன்புற்று வாடுவதைத் தவிர்க்க, உன்னுடன் வர முடிவு செய்துள்ளாள்.

விளக்கம்

நீ பிரிந்தால் உடல் வாடி வளையல் கழலும் என்பதால், வளையல்களைப் பார்த்தாள்; உறுப்பு நலன் அழியும் என்பதால், தோள்களை நோக்கினாள். இவ்வாறு வாடித் துன்புறுவதைவிட உன்னுடன் சேர்ந்து செல்வது என்று முடிவு செய்து, அவள் தன் காலடிகளை நோக்கினாள்.

குறிப்பு

தலைவி தலைவனுடன் (உடன்போக்கில்) செல்லச் செய்துள்ள முடிவைத் தன் அடிகளை நோக்கும் குறிப்பால் உணர்த்தினாள்.

சொற்பொருள்

1. தொடி நோக்கி - (கழலும்) வளையல்களை நோக்கினாள்; மென் தோளும் நோக்கி - மெலிந்த தோள்களை உற்றுப் பார்த்தாள்; அடி நோக்கி - (தொடர்ந்து) தன் காலடிகளையும் நோக்கினாள்.
2. ஆண்டு - அவ்விடத்து; அஃது - தலைவனுடன் செல்வதை; அவள் செய்தது - அவள் முடிவு செய்தாள்.

தோழி கூற்று

அகநானூறு 107 **காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தோழி, தலைமகள் குறிப்பறிந்துவந்து தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்திற்கு இடையூறு உண்டாயிற்று. எனவே, உறவினர் அறியாதபடி உடன் அழைத்துப்போக எண்ணியதைத் தலைவன் தோழியிடம் கூறினான். அதனைத் தோழி தலைவியிடம் கூறி அவள் உடன்பாட்டைக் குறிப்பால் அறிந்துவந்து தலைவனிடம் உரைத்தது.

நீசெலவு அயரக் கேட்டொறும், பலநினைந்து,
அன்பின் நெஞ்சத்து, அயாஅப்பொறை மெலிந்த
என்அகத்து இடும்பை களைமார், நின்னொடு,
கருங்கல் வியல்அறைக் கிடப்பி, வயிறுதின்று
இரும்புலி துறந்த ஏற்றுமான் உணங்கல்,
நெறிசெல் வம்பலர் உவந்தனர் ஆங்கண்,
ஒலிகழை நெல்லின் அரிசியொடு ஓராங்கு
ஆன்நிலைப் பள்ளி அளைபெய்து அட்ட
வால்நிணம் உருக்கிய வாஅல்வெண் சோறு
புகர்அரைத் தேக்கின் அகல்இலை மாந்தும்
கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர்
வல்ஆண் அருமுனை நீந்தி, அல்லாந்து,
உகுமண்ஊறு அஞ்சும் ஒருகால் பட்டத்து
இன்னா ஏற்றத்து இழுக்கி, முடம்கூர்ந்து,
ஒருதனித்து ஒழிந்த உரனுடை நோன்பகடு
அம்குழை இருப்பை அறைவாய் வான்புழல்
புல்உளைச் சிறாஅர் வில்லின் நீக்கி,
மரைகடிந்து ஊட்டும் வரையகச் சீறூர்
மாலை இன்துணை ஆகி, காலைப்
பகுநனை நறுவீப் பரூஉப்பரல் உறைப்ப,
மணமனை கமழும் கானம்
துணைஎர் ஓதிஎன் தோழியும் வருமே.

தெளிவுரை

தலைவ! தலைவியை நீ உடன் அழைத்துச் செல்ல விருப்பம் கொண்டிருப்பதை அவளிடம் கூறிய பொழுதெல்லாம் அவளும் முன்னர் நிகழ்ந்த நிகழ்வுகளை எண்ணிப் பார்த்தாள். பின் அவளுக்காக வருந்திய என் மனத்துன்பத்தை நீக்கும்பொருட்டு உன்னுடன் கானக வழியில் வர இசைந்தனள்.

(அவள் செல்ல வேண்டிய வழி கொடுமை நிறைந்தது.) அகன்ற கருங்கற்பாறையில் ஆண்மானைக் கொன்ற பெரிய புலி, தன் வயிறு நிறைய உண்டுவிட்டு, எஞ்சிய ஊனை அங்கேயே விட்டுச் செல்லும். அவ்வழிச் செல்லும் புதியவர்கள், புலி விட்டுச் சென்ற காய்ந்துபோன இறைச்சியை மூங்கில் நெல்லின் அரிசியோடு சேர்த்து, ஆயர் சேரியிலிருந்து கொண்டுவந்த தயிரினைப் பெய்து சமைப்பர். வெண்மையான நிணம் சேர்ந்த அவ்வெண்சோற்றினை, அடிப்புறத்திலே புள்ளிகளைக் கொண்ட அகன்ற தேக்கிலையில் வைத்து உண்பர். கல்வி யில்லாதவராய் நீண்ட பேச்சுகளைப் பேசுபவரும், சினமிக்க நாய் களையுடையவருமான அவ்வடுகரது அரிய போர் முனைகளைக் கொண்ட பாலை வழியை என் தலைவி கடந்து செல்ல வேண்டும்.

ஓடையில் நீருண்டு மேலேறும்போது மண் சரிந்ததால் வலிமையான எருது ஒன்று வழுக்கி விழுந்து நடக்க இயலாத தாயிற்று. புல்லிய குடுமி கொண்ட சிறுவர்கள், இருப்பைப் பூக்களை வில்லால் அடித்து உதிர்த்து, அப்பூக்களைத் தின்ன வரும் மான்களை விரட்டிப் பூக்களைச் சேகரித்து வந்து, அந்த எருதுக்கு உணவாய்க் கொடுப்பர்.

இவ்வாறான சிறுவர்களைக் கொண்ட சிற்றூர்களில் மாலையில் தலைவி உனக்கு இனிய துணையாய்த் தங்குவாள். காலையில் பாறைமேல் பூக்கள் உதிர்ந்து கிடப்பதால், மணம் நிகழும் வீடுபோல் கமழும் பூக்காட்டில் உன்னுடன் வருவாள்.

கருத்து

'தலைவ! தலைவி உன்னோடு வருவாள்' என்று தோழி உறுதி கூறினாள்.

விளக்கம்

தலைவ! என் மனத்துன்பம் தீரத் தலைவி உன்னோடு காட்டு வழியே வருவாள்; வடுகரது கடத்தற்கரிய பகைப்புலங்களை வலிமை மிக்க உன்னோடு கடப்பாள்; கீழே விழுந்து முடமான எருதுக்குச் சிறுவர்கள் இருப்பைப் பூக்களை உணவாய்க் கொடுக்கும் சிற்றூரில் மாலை நேரத்தில் உனக்குத் துணையாய் என் தலைவியும் தங்குவாள். அவள் உன்னோடு வருவது உறுதியாயிற்று.

உள்ளுறை

ஓடையில் நீருண்டு, மண் சரிந்ததால் துறையினின்று ஏற இயலாததாய் இருந்தது, எருது. குறச்சிறுவர் இருப்பைப்பூக்களை உதிர்த்து அவற்றைத் தின்ன வந்த மான்களை விரட்டிவிட்டு அப்பூக்களை அவ்வெருதினுக்கு உணவாய்க் கொடுத்தனர். இத்தொடர்மூலம், களவின்பத்தை நுகர்ந்து அவ்வொழுக் கத்திலிருந்துநீங்கி, தலைவியை மணந்து கொள்ள இயல வில்லையே என வருந்தியிருந்த தலைவனுடன் வேற்றவர் மணத்தலினின்றும் தவிர்த்துத் தலைவியை உடன்போக்காய்ச் செல்லத் தோழி வழி செய்தாள் என்னும் உள்ளுறைப் பொருள் கிட்டுகிறது.

சொற்பொருள்

1. நீ செலவு அயர - நீ (தலைவியை) உடன்கொண்டு செல்ல விரும்ப.
2. அயாஅப் பொறை - வருத்தத்தைத் தாங்குவது; மெலிந்த - மெலிந்துள.
3. அகம் - நெஞ்சம்; களைமார் - நீக்கும்பொருட்டு.
4. வியல் அறை - பெரிய பாறை; கிடப்பி - கிடத்தி; வயிறு தின்று - வயிறு நிறையத் தின்று.
5. துறந்த - விட்டுப்போன; ஏற்றுமான் - ஆண்மான்; உணங்கல் - உலர்ந்த தசை.
6 நெறி - வழி; வம்பலர் - புதியவர்; ஆங்கண் - அவ்விடத்தே.
7. ஒலிகழை - தழைத்த மூங்கில்; ஒராங்கு - ஒருங்கே கூட்டி.
8. ஆன்நிலைப் பள்ளி - ஆயர் சேரி; அளை - தயிர்; அட்ட - சமைத்த.
9. வால் நிணம் - வெண்மையான கொழுப்பு; உருக்கிய - உருகச்செய்த;

வாஅல் - மிக வெள்ளிய.

10. புகர் அரை - அடிப்புறத்தில் புள்ளிகளைக் கொண்டுள்ள; அகல் - அகன்ற; மாந்தும் - உண்ணும்.
11. கல்லா - கல்வியில்லாத; நீள்மொழி - நீண்ட பேச்சு; கதம் - சினம்.
12. வல்ஆண் - வலிய ஆண்மை விளங்கும்; அருமுனை - அரிய போர் முனை; நீந்தி - கடந்து; அல்லாந்தல் - துன்புறுதல்.
13. உகுமண் - இடிந்து விழும் மண்; ஊறு - இடையூறு; ஒரு கால் பட்டத்து - ஒரே துறையினைக் கொண்ட ஓடையிலுள்ள (பட்டம் - குளம்).
14. இன்னா - இன்னாததாகிய; ஏற்றத்து - ஏற்றத்தில்; இழுக்கி - வழுக்கி விழுந்து; முடம் கூர்ந்து - முடம்பட்டு (நொண்டியாகி).
15. ஒரு தனித்து - தன்னந்தனியே; ஒழிந்த - ஒழிந்து கிடக்கும்; உரனுடை - வலிமை மிக்க; நோன்பகடு - வலிமை வாய்ந்த எருது.
16. அம்குழை - அழகிய தளிர்; இருப்பை - இருப்பை மரம்; அறைவாய் - வாயற்ற; வான் புழல் - வெள்ளிய துளை.
17. புல் உளை - சிறிய குடுமி; வில்லின் - வில்லினால்; நீக்கி - உதிர்த்து.
18. மரை - மான்; கடிந்து - ஓட்டி; ஊட்டும் - உண்பிக்கும்; வரை அகம் - மலையிடத்தேயுள்ள.
19. இன் துணையாகி - (உனக்கு) இனிய துணையாய்த் தங்கி.
20. பசு நனை - புதிய தேன்; நறுவீ - நறிய பூக்கள்; பரூஉப் பரல் - பெரிய பாறைக்கல்; உறைப்ப - உதிர்ந்து கிடக்க.
21. மணமனை - மணம் நிகழும் வீடு; கமழும் - மணம் வீசும்.
22. துணை ஈர் ஓதி - கடையொத்த குளிர்ச்சி பொருந்திய கூந்தல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 149 **வெள்ளிவீதியார்**

திணை : பாலை

கூற்று

உடன்போக்குணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'நீ நம் வீட்டார் அறியாமல் தலைவனுடன் செல்ல வேண்டும்' என்றுணர்த்திய பொழுது தலைவி நாணம் அழிவதற்கு இரங்கிக் கூறியது.

அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே; இனியே,
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்துஉக் காஅங்கு,
தாங்கும் அளவைத் தாங்கி,
காமம் நெரிதரக் கைந்நில் லாதே.

தெளிவுரை

தோழியே! நாணம் எனும் பண்பு நம்மோடு நீண்ட காலமாய் இருந்து துன்புற்றுக் கிடந்தது. வெண்ணிறப்பூக் கொண்ட கரும்பு ஓங்கி வளர்ந்துள்ள மணல் நிரம்பிய சிறுகரை, நீர் பெருகி நெருக்கும்போது கரைந்து அழிவது போன்று நமது நாணமும் பொறுக்குமளவு பொறுத்திருந்து, இப்போது காமநோய் மிகவும் நெருக்குவதால் நம்மிடம் நிலைபெறாது நீங்கிவிட்டது. இஃது இரங்கத்தக்கது.

கருத்து

தோழியே! நீர் பெருகி நெருக்கும்போது மணற்கரை அழிந்துவிடும். அதுபோலக் காமம் நெருக்குதலால் என் நாணமும் அழிந்துவிட்டது.

விளக்கம்

இதனால் உடன்போக வேண்டுமென்ற தோழியிடம் தான் உடம்பட்டமையைத் தலைவி உணர்த்தினாள். தலைவனுடன்

செல்ல இருக்கும் காரணத்தால் நாணம் அகன்று காமம் வென்றது.

சொற்பொருள்

1. அளிது - இரங்கத்தக்கது; நாண் - நாணம்.
2. நனி நீடு - மிக நீண்ட காலம்; உழத்தல் - வருந்துதல்.
3. வான் பூ - வால் பூ - வெண்மையான பூ; சிறுசிறை - சிறிய கரை.
4. நெரிதர - நெருக்கித் தாக்க; வீய்ந்து - அழிந்து; உக்காஅங்கு - கரைந்துவிட்டதுபோல.
6. கைந்நில்லாது - நிலை பெறாது.

தலைவி கூற்று

அகநானூறு 95 **ஓரோபோகத்துக் கந்தரத்தனார்**

திணை : பாலை

கூற்று

போக்குடன்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் காரணமாய்ப் பிரிவுத்துன்பமும், மிகுந்த பழிச்சொல்லும், தாயின் கடிந்துரையும் ஏற்பட்டன; அதனால் சுற்றத்தார் அறியாவண்ணம் தலைவனுடன் செல்ல உடன்பட்ட தலைவி, தான் உடன்பட்டதற்கான காரணத்தைத் தோழியிடம் கூறுகிறாள்.

பைப்பயப் பசந்தன்று நுதலும்; சாஅய்,
ஐதுஆ கின்று,என் தளிர்புரை மேனியும்;
பலரும் அறியத் திகழ்தரும், அவலமும்;
உயிர்கொடு கழியின் அல்லதை, நினையின்
எவனோ? வாழி, தோழி!– பொரிகால்
பொகுட்டுஅரை இருப்பைக் குவிகுலைக் கழன்ற
ஆலி ஒப்பின் தூம்புடைத் திரள்வீ,
ஆறுசெல் வம்பலர் நீள்இடை அழுங்க,
ஈனல் எண்கின் இருங்கிளை கவரும்
சுரம்பல கடந்தோர்க்கு இரங்குப என்னார்,
கௌவை மேவலர் ஆகி, 'இவ்ஊர்

நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ
புரைய அல்ல,என் மகட்கு'எனப் பரைஇ,
நம்உணர்ந்து ஆறிய கொள்கை
அன்னை முன்னர்யாம் என்இதற் படலே?

தெளிவுரை

தோழியே! வாழி! மெல்ல மெல்ல என் நெற்றியில் பசலை பாய்ந்தது; தளிர் போன்ற மேனியும் மெலிந்து நுணுகியது; என் துயரமும் ஊரார் அறியுமாறு வெளிப்பட்டது. ஆராய்ந்து பார்த்தால், இவற்றால் என் உயிரைக் கொண்டுசெல்வதைத் தவிர்த்து வேறு என்ன செய்ய இயலும்?

இருப்பை மரத்தின் குவிந்த குலையினின்றும் கழன்ற உள் துளை கொண்ட பூக்கள் பனிக்கட்டிகள்போல உதிர்ந்து கிடக்க, அவற்றைக் குட்டிகளை ஈன்ற புலிகள் கவர்ந்துண்ணும்; இதனைக் கண்டு வழிச்செல்வார் மிகவும் அஞ்சுதற்குக் காரணமான காடுகள் பலவற்றைக் கடந்து செல்லும் தலைவனுக்காக இரவில் மனம் நொந்து துன்புறும் என்னை இவ்வூரிலுள்ள இழிந்த இயல்புள்ள பெண்டிர் இன்னாச்சொல் கூறுகின்றனர்.

அவர்கள் தூற்றும் பழிச்சொற்கள் நம் மகளுக்குப் பொருந் தாதவை என்று எண்ணிய தாய், தெய்வத்தை வழிபட்டு (வெறியாட்டு எடுத்து) நம் களவொழுக்கத்தை அறிந்தாள்; ஆயினும், அமைதியாய் இருக்கிறாள். இத்தாயின் முன் இனியும் களவொழுக்கத்தில் ஈடுபட்டு ஒழுகுதல் எங்ஙனம் இயலும்?

கருத்து

ஊரில் அலர் எழுந்தது; இற்செறிப்பும் நேரலாம்; ஆதலால், உடன் போக்கில் செல்ல உடன்பட்டேன்.

விளக்கம்

தோழியே! நுதல் பசந்தது; மேனி மெலிந்து நுணுகியது; ஊரில் அலரும் எழுந்தது. இவை உயிரைக் கொண்டுபோவதன்றி வேறு என்ன செய்யும்? சுரம் பல கடந்து வரும் நம் தலைவருக்காக மனம் வருந்தித் துன்பமுறும் எனக்காக இரங்காதவராய், இழிதக வுடைய இவ்வூர்ப்பெண்டிர் இன்னாதன கூறினர். அதனால்

அன்னை தெய்வத்தை வழிபட்டு, நம் களவொழுக்கத்தை அறிந்தும் அமைதியுடன் இருக்கிறாள். எல்லாவற்றையும் அறிந்தும் இனியும் நாம் களவொழுக்கத்தை எவ்வாறு மேற் கொள்ள முடியும்? (ஆதலின், உடன்போக்கில் செல்ல உடன் பட்டேன்.)

குறிப்பு

காட்டுவழிச் செல்வோர் கரடிக்கு அஞ்சுதல்போல, ஊராரின் அலருக்கு அஞ்சிய தலைவி உடன்போக்கிற்கு உடன்பட்டாள் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. பைப்பய - மெல்ல, மெல்ல; பசந்தன்று - பசந்தது (பசத்தல் - காமத்தால் மேனி பசலை நிறமடைதல், ஒளி மழுங்குதல், இது பசலை எனப்படும்); நுதல் - நெற்றி; சாஅய் - மெலிந்து.
2. ஐது - நுண்ணியது; புரை - போன்ற.
3. அவலம் - துன்பம்.
4. உயிர் கொடு - உயிரைக் கொண்டு; கழியின் அல்லது - நீக்குவது அல்லாது; நினையின் - ஆராயுமிடத்து.
5. எவனோ? - என்ன செய்ய இயலும்?; பொரிகால் - பொரிந்த அடிமரம்.
6. பொகுட்டு அரை - மொட்டுகளைக் கொண்ட தண்டு; இருப்பை - இருப்பை மரம்; குவிகுலை - குவிந்த குலையினின்றும்; கழன்ற - வீழ்ந்த.
7. ஆலி - பனிக்கட்டி; தூம்பு உடை - உள் துளை கொண்ட; திரள்வீ - திரட்சியான பூ.
8. ஆறு - வழி; வம்பலர் - புதியவர், வழிப்போக்கர்; நீள்இடை - நீண்ட வழி; அழுங்க - அஞ்சி (போக்கினைத் தவிர).
9. ஈனல் - குட்டிகளை ஈன்ற; எண்கு - கரடி; இருங்கிளை - பெரிய கூட்டம்; கவரும் - கவர்ந்து (உண்ணும்).
10. கடந்தோர் - கடந்து சென்ற (நம் தலைவர் பொருட்டு); இரங்குப என்னார் - தலைவி இரங்குதல் இயல்பு என்று எண்ணாமல்.
11. கௌவை - பழிச்சொல்; மேவலர் ஆகி - விரும்புவார் ஆகி.
12. நிரையப் பெண்டிர் - இழிந்த இயல்புடைய (நரகம் செல்லும்) பெண்டிர்.
13. புரைய அல்ல - பொருந்துவன அல்ல; பரைஇ - பரவி வணங்கி (பரவுதல் - துதித்தல்).

14. நம் உணர்ந்து - நம் நிலையினை உணர்ந்து; ஆறிய - அடங்கிய (அமைதியுற்றிருக்கும்); கொள்கை - கொள்கையினைக் கொண்ட.
15. அன்னை முன்னர் - நம் தாயின் முன்னர்; யாம் என் இதற்படல் - நாம் இக்களவொழுக்கத்தில் ஈடுபட்டு ஒழுகுதல் எங்ஙனம் முடியும்?

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 87 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்து உடன்போக்கு நயப்பித்த தோழிக்குத் தலைமகள் உடன்பட்டுச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் உடன்போக்குச் செல்லத் தலைவியைத் தோழி வற்புறுத்திய போது, அத்தோழிக்குத் தலைவி கூறியது.

ஒன்றானும் நாம்மொழிய லாமோ செலவுதான்
பின்றாது பேணும் புகழான்பின் – பின்றா
வெலற்கரிதாம் வில்வலான் வேல்விடலை பாங்காச்
செலற்(கு)அரிதாச் சேய சுரம்.

தெளிவுரை

தலைவனுடன் உடன்போக்காய்ச் செல்லத் தலைவி இசைய வேண்டும் எனச் சொன்ன தோழியிடம், "வெல்லுதற்கு அரியதான விற்போரில் வல்லமை வாய்ந்த தலைவன் வேலுடன் அருகே துணையாய் வர, 'தொலைவான பாலை நில வழி செல்வதற்கு அரிது' என்று நாம் சொல்லலாமோ? கூடாது. எல்லாரும் விரும்பும் புகழைக் கொண்ட நம் தலைவனுக்குப் பின் செல்லுதல் நல் ஒழுக்கத்தினின்றும் மாறுபடாததே" என்று தலைவி உடன்போக்குக்கு உடன்பட்டுக் கூறினாள்.

கருத்து

தோழியே! விரும்பிய வீரன்பின் செல்லுதல் அறமே!

குறிப்பு

வெல்லுதற்கரிய வில்லாற்றலையும் யாவராலும் விரும்பப்படும் புகழையும் கொண்டவன் என்று தலைவி தலைவனைப் போற்றுகிறாள்.

சொற்பொருள்

1. ஒன்றானும் - யாதாயினும்; செலவு - பின்னே செல்லுதல்.
2. பின்றாது - ஒழுக்கத்தில் மாறுபடாததேயாகும்; பேணும் - யாவரும் விரும்பும்; பின்றா - பின்வாங்காத.
3. வெலற்கு - வெல்லுதற்கு; வில்வலான் - விற்போரிலே வல்லமை வாய்ந்தவன்; வேல் - வேல் கொண்ட; விடலை - தலைவன்; பாங்கா - பக்கத்தே (துணையாய் வர).
4. செலற்கு அரிதா - செல்லுதற்கு அரியதாகிய; சேய - தொலை விலுள்ள; சுரம் - பாலை நில வழி.

தோழி கூற்று

அகநானூறு 283 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கு வலித்த தோழி தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்துக்கு இடையூறு ஏற்பட்டது. எனவே, தலைவியைத் தலைவனுடன் அனுப்பத் துணிந்த தோழி, தன் கருத்தைத் தலைவனிடம் கூறியது.

நல்நெடுங் கதுப்பொடு பெருந்தோள் நீவிய,
நின்இவண் ஒழிதல் அஞ்சிய என்னினும்,
செலவுதலைக் கொண்ட பெருவிதுப்பு உறுவி –
பல்கவர் மருப்பின் முதுமான் போக்கி,
சில்உணாத் தந்த சீறூர்ப் பெண்டிர்
திரிவயின், தெவிட்டும் சேண்புலக் குடிஞைப்
பைதல் மென்குரல் ஐதுவந்து இசைத்தொறும்,

போகுநர் புலம்பும் ஆறே ஏகுதற்கு
அரிய ஆகும்என் னாமை, கரிமரம்
கண்அகை இளங்குழை கால்முதல் கவினி,
விசும்புடன் இருண்டு வெம்மை நீங்க,
பசுங்கண் வானம் பாய்தளி பொழிந்தெனப்
புல்நுகும்பு எடுத்த நல்நெடுங் கானத்து,
ஊட்டு பஞ்சிப் பிசிர்பரந் தன்ன,
வண்ண மூதாய் தண்நிலம் வரிப்ப,
இனிய ஆகுக தணிந்தே –
இன்னா நீப்பின் நின்னொடு செலற்கே.

தெளிவுரை

தலைவ! நீ தலைவியின் நல்ல, நெடிய கூந்தலொடு பெரிய தோளினையும் வருடி மகிழ்வித்தனை! நீ பிரிவதால், நான் இங்கே தனித்துத் தங்கியிருத்தலை அஞ்சினேன். தலைவியோ உடன் போக்கிற்செல்ல மிகவும் விருப்பம் கொண்டவளாயிருக்கிறாள். (விரைவு காட்டுகின்றாள்.)

அதனால் அவள் செல்ல வேண்டிய காட்டுவழியின் கொடுமை யினையும் கருத்தில் கொள்ளவில்லை.

(அவள் செல்ல வேண்டிய பாலை நிலத்தில்) சிற்றூரில் வாழும் பெண்கள் உணவுக்கு வழியின்றி, கவடுகள் பல பொருந்திய கொம்புகளைக் கொண்ட முதிய மான்களை விரட்டிவிட்டு அவை உண்டுகொண்டிருந்த சிறிதளவு உணவுப் பொருள்களைக் கொண்டுவருவர்; அவர்கள் திரியும் வழியில், வெகுதொலைவிலிருந்து பேராந்தையின் வருத்தம் தருகின்ற குரல் மெல்லென வந்து ஒலிக்கும்; வழிச்செல்வோர் அதனைக் கேட்டு அச்சமுற்று வருந்துவர். தான் செல்ல வேண்டிய வழி இத்தகைய கடுமையானது என்பதனையும் தலைவி எண்ணிப் பார்க்கவில்லை.

(அந்த வழி, செல்வதற்கு அரிது என்று கூற இயலாதவாறு அங்குச் சூழ்நிலை அமைய வேண்டும்.)

வானம் இருண்டு, மேகம் பெருமழையைச் சொரியட்டும்! காட்டின் வெம்மை முற்றிலும் நீங்கிப் போகட்டும்! கரிந்துபோன

மரங்களின் கணுக்களிலிருந்து இளைய தளிர்கள் அடிமுதல் நுனிவரை துளிர்த்து அழகுடன் தோன்றட்டும்! புற்கள் குருத்து விட்டு எழட்டும்! நெடிய காட்டிலே செந்நிறம் ஊட்டிய பஞ்சின் பிசிர் பரவலாய்க் கிடப்பதுபோல, செந்நிறமுள்ள தம்பலப் பூச்சிகள், மழையால் குளிர்ச்சி பெற்றுள்ள நிலத்திலே கோல மிட்டாற்போல ஊர்ந்துகொண்டிருக்கட்டும்!

இவ்வாறாய், வெப்பம் தணிந்த இனிய காட்டில் தலைவி உன்னுடன் பயணம் செய்யட்டும்!

கருத்து

உடன்போக்கில் தலைவி செல்ல உடன்பட்டபோது, தோழி, தலைவி செல்லும் வழி இனிதாய் அமைய வேண்டும் என உருக்கத்துடன் நினைக் கிறாள்.

விளக்கம்

'தலைவியை விட்டுப் பிரிந்து வருந்தியிருப்பதற்கு அஞ்சிய நானே அவளை உடன்போக்கில் செல்லத் தூண்டுவதற்கு நினைத்திருக்க, அவளோ எனக்கும் முற்பட்டு உடன்போக்கில் செல்ல விரைவு காட்டினாள். அவள் செல்லும் காடு, மேகம் மழைத்துளி சிந்த, வெம்மை மாறி இனியதாகட்டும்' எனத் தோழி மனம் நெகிழ்ந்து கூறுகிறாள்.

குறிப்பு

உடன்போக்கானது தனக்கும் தாய் முதலாயினார்க்கும் இன்னா விளைக்குமாகலின் அதனை 'இன்னா நீப்பு' என்று தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. கதுப்பு - கூந்தல்.
2. நின் இவண் ஒழிதல் - இங்கு உன்னை நீங்கித் (தங்கியிருக்க).
3. செலவு தலைக்கொண்ட - உடன்போக்கினை மேற்கொண்ட (தலைவி); பெருவிதுப்பு உறுவி - பெரிதும் விரைவுகொண் டுள்ளாள்.
4. பல் கவர் மருப்பு - கிளைகள் பல கொண்ட கொம்பு; முதுமான் - முதிய மான்; போக்கி - நீக்கி, விரட்டி.

5. சில் உணா - சிறிதளவு உணவு; தந்த - கொண்டுவந்த.
6. திரிவயின் - திரியும் வழியில்; தெவிட்டும் - ஒலிக்கும்; சேண்புலம் - தொலைவிலுள்ள இடம்; குடிஞை - ஆந்தை.
7. பைதல் - வருத்தம் (தரும்); ஐதுவந்து - மென்மையாய் வந்து; இசைத்தொறும் - ஒலிக்குந்தோறும்.
8. போகுநர் - வழிச்செல்வோர்; புலம்பும் - வருந்தும்; ஆறு - வழி.
9. அரிய ஆகும் என்னாமை - அரியது என்று கருதாது; கரிமரம் - கரிந்த மரம்.
10. கண்அகை - கணுக்களில் துளிர்க்கின்ற; குழை - தளிர்; கால் முதல் - அடிமரம்முதல்; கவினி - அழகு பெற்று.
11. விசும்பு - ஆகாயம்; வெம்மை - வெப்பம்.
12. பசுங்கண் வானம் - ஈரத் தன்மை கொண்ட மேகம்; பாய்தளி - பரந்த தளிர்களை; பொழிந்தென - பொழிந்ததாக.
13. நுகும்பு - குருத்து; எடுத்த - விட்ட.
14. ஊட்டு பஞ்சி - செந்நிறம் ஊட்டிய பஞ்சின்; பிசிர் - பொடி; பரந்தன்ன - பரவியது போன்ற.
15. வண்ணம் - (செந்)நிறம் கொண்ட; மூதாய் - தம்பலப்பூச்சி; தண் நிலம் - குளிர்ந்த நிலத்தில்; வரிப்ப - அழகு செய்ய.
16. தணிந்தே - வெப்பம் தணிந்து.
17. இன்னா நீப்பு - துன்பத்தைத் தரும் பிரிவு, உடன்போக்கு.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 73 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

முன்னை ஞான்று உடன்போக்கு வலித்துத் தலைமகனையும் தலைமகளையும் உடன்படுத்துப் பின்னை அறத்தொடு நிலை மாட்சிமைப் பட்டமையால் தலைமகனைக் கண்டு தோழி உடன்போக்கு அழுங்கு வித்தது.

கூற்று விளக்கம்

தோழி தலைவனையும் தலைவியையும் முன்னாளில் உடன்போக்குக்கு இசையச் செய்திருந்தாள். தலைவி அறத்தொடு நிற்கும் இயல்பால் அதனைக் கைவிட்டாள். இதைத் தோழி தலைவனிடம் உரைத்தல்.

செவ்வாய், கரியகண், சீரினால் கேளாதும்
கவ்வையால் காணாதும், ஆற்றாதும் – அவ்ஆயம்
தார்த்தத்தை வாய்மொழியும் தண்கயத்து நீலமும்
ஓர்த்தொழிந்தாள் என்பேதை ஊர்ந்து.

தெளிவுரை

"தலைவ! உன்னையும் தலைவியையும் சேர்த்து ஊரார் பேசும் பழிச்சொற்களைக் கேட்கப் பொறுக்காமல் தலைவி உன்னுடன் உடன்போக்குவர உடன்பட்டிருந்தாள். அவ்வாறு சென்று விட்டால், தான் வளர்க்கும் மாலை போன்ற வரியினைக் கழுத்தில் கொண்டுள்ள கிளியின் இனிய சொற்களைக் கேட்க இயலாது; குளிர்ச்சி பொருந்திய நீர் நிலையில் கரிய கண்களைப் போன்று மலர்ந்துள்ள நீல மலர்களைக் காண இயலாது; தன் அன்புக்குரிய தோழியரைப் பிரிவதால் அடையும் துன்பத்தைப் பொறுக்க இயலாது. இவற்றையெல்லாம் நீள நினைந்து பார்த்துத் தலைவி உடன்போக்கைக் கைவிட்டாள்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

உடன்போக்குக்கு உடன்பட்ட தலைவி, தோழியரைப் பிரியும் துன்பத்தைப் பொறுக்க இயலாது, உடன்போக்கைக் கைவிடக் கருதினாள்.

விளக்கம்

"தான் வளர்க்கும் கிளியின் இனிய சொற்களைக் கேட்க இயலாது; தன் வீட்டருகே மலரும் நீல மலர்களைக் காண இயலாது; தோழியரின் பிரிவுத்துயரை ஆற்ற இயலாது என் றெண்ணித் தலைவி உடன்போக்கைக் கைவிட்டாள்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

முறையாய் அறத்தொடு நின்றால் திருமணம் நிகழும் என்பதால் உடன்போக்கு வேண்டா என்றும் தலைவி எண்ணி

னாள். உடன்போக்கைக் கைவிடுவதன்வழி தலைவன் மணம் பேசி வரவேண்டும் என்பதையும் தோழி உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

4. என் பேதை - என் தலைவி.
2. கவ்வையால் - ஊரவர் கூறும் பழிச்சொற்களால் (முன்பு உடன் போக்கிற்கு உடன்பட்டு இப்போது).
3. தார்த்தத்தை - கழுத்திலே மாலை போன்ற வரியினைக் கொண்ட (தலைவி வளர்த்த) கிளி.
1. செவ்வாய் - சிவந்த வாயினின்று வெளிப்படும்.

3-1.வாய்மொழி - இனிய சொற்களை; கேளாதும் - தான் கேட்கப் பெறாதும்.

1. சீரினால் - சிறப்பினால்; கரிய கண் - கருமையான கண்களை ஒத்த.
3. தண்கயத்து - குளிர்ச்சி பொருந்திய குளத்திலே (மலர்ந்த); நீலமும் - நீல மலர்களையும்.
2. காணாதும் - காண இயலாமலும்; அவ்ஆயம் - தன் விளையாட்டுத் தோழியர்; ஆற்றாதும் - தான் பிரிவதால் படும் துயரத்தை பொறுக்க இயலாமையாலும்.
4. ஓர்த்து - நீள நினைந்து; ஒழிந்தாள் - உடன்போக்கைக் கைவிட்டாள்.

தோழி கூற்று

நற்றிணை 12 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

தோழி உடன்போக்கு அஞ்சுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனோடு உடன்போக்கில் சென்றுவிட இசைந்தனள். தலைவன் அழைத்துச் செல்ல வந்தபோது தலைவி உடன்போக்கைத் தவிர்த்ததைத் தோழி தலைவனிடம் கூறுவது.

விளம்பழம் கமழும் கமஞ்சூல் குழிசிப்
பாசந் தின்ற தேய்கால் மத்தம்
நெய்தெரி இயக்கம் வெளில்முதன் முழங்கும்
வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கால்
அரிஅமை சிலம்பு கழீஇப் பல்மாண்
வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்,
இவைகாண் தோறும் நோவர் மாதோ;
அளியரோ அளியர்என் ஆயத் தோர்என
நும்மொடு வரவுதான் அயரவும்,
தன்வரைத்து அன்றியும் கலுழ்ந்தன கண்ணே.

தெளிவுரை

"விளாம்பழத்தின் மணத்தினையும், நிறை கருவுள்ள மகளிரின் பெரிய வயிறுபோன்ற தோற்றத்தையும் கொண்டது, தயிர்த் தாழி; அதில் கடைகயிற்றால் அரைப்புண்டு தேய்ந்துள்ள தண்டினைக் கொண்ட மத்தினையிட்டு வெண்ணெய் பெறும் பொருட்டுத் தயிர் கடையும் ஓசை, மன்று வெளிதோறும் முழங்கும் இருள் புலரும் காலைப்பொழுது; தலைவி தன்னைப் பிறர் காணாதவாறு உடம்பினை மறைத்துக்கொண்டு, காலில் அணிந்துள்ள பரல்கள் அமைந்த சிலம்பினைக் கழற்றினாள்; அதனை அவள் விளையாடும் வரிந்து புனையப்பட்ட பந்துடன் ஓர் இடத்தில் வைக்கச் சென்றாள். அப்போது, தன் விளை யாட்டுத்தோழியர் அப்பொருள்களைக் காணும்போது, 'என்னை நினைந்து மிகவும் வருந்துவரே; என் தோழியர் இரங்கத்தக்கவர் அல்லரோ' என்று நினைத்து, அவர்களை நீங்கி உன்னுடன் வருதலை விடுத்தாள்; அவள் கண்கள் அவள் கட்டுப்பாட்டிற்கு அடங்காது அழுது கலங்கின" எனத் தலைவனிடம் தோழி கூறினாள்.

கருத்து

"தலைவி உன்னோடு வர உடன்பட்டாள்; ஆனால், சிலம்பு முதலிய வற்றைக் கழற்றி வைக்கும்போது, தன் தோழியர் வருந்துவரே என அவர்க்காக இரங்கிச் செலவைத் தவிர்த்தாள்; இனி அவளை வரைந்து கொள்ளுதலே கருதத்தக்கது" எனத் தோழி புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. கமழும் - மணம் வீசும்; கமம் சூல் - நிறை சூல் (கருப்பம்); குழிசி - (தயிர்ப்) பானை.
2. பாசம் - கடைகயிறு; தேய்கால் - தேய்ந்துள்ள தண்டு; மத்தம் - (தயிர் கடையும்) மத்து.
3. நெய்தெரி இயக்கம் - வெண்ணெய் பெறும்பொருட்டுக் கடையும்; வெளில் - தயிர் கடைய நடப்பட்ட தூண்.
4. வைகுபுலர் - இருள் புலரும்; மெய்கரந்து - உடலை மறைத்து.
5. அரி அமை - பரல்கள் பொருந்திய; கழீஇ - கழற்றி.
6. வரிபுனை - வரிகளால் புனையப்பட்ட; வைஇய - வைப்பதற்காக.
7. இவை - (தலைவியினுடைய) இப்பொருள்களை; நோவர் - வருந்துவர்.
8. அளியர் - இரங்கத்தக்கவர்; ஆயத்தோர் - விளையாட்டுத் தோழியர்.
9. வரவு - உடன்போக்கில் வர; அயரவும் - வருதலுற்றாளாயினும்.
10. தன் வரைத்து - தன் எல்லைக்குள் (கட்டுப்பாட்டுக்குள்); அன்றியும் - நில்லாது; கலுழ்ந்தன - நீர் சொரிந்தன.

தோழி கூற்று

குறுந்தொகை 383 **படுமரத்து மோசிகீரனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கு நேர்வித்து வந்த தோழி, நாணால் வருந்தும் தலைமகளை நாணுக்கெடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்குக்குத் தலைவனை உடன்படச்செய்து வந்தாள், தோழி. 'இன்றைய பொழுது கழியட்டும்' என்று சொல்லி நாணத்தால் தயங்குகிறாள், தலைவி. அதைத் தவிர்த்து உடனே புறப்படுமாறு தோழி கூறியது.

நீஉடம் படுதலின், யான்தர வந்து
குறிநின் றனனே, குன்ற நாடன்;
'இன்றை அளவைச் சென்றைக்க' என்றி

கையும் காலும் ஒய்வன ஒடுங்கத்
தீஉறு தளிரின் நடுங்கி,
யாவதும் இலை,யான் செயற்கு உரியதுவே.

தெளிவுரை

"உடன்போக்கிற்கு நீ முதலில் உடன்பட்டதால்தான், நான் குன்ற நாடனாம் தலைவனை அழைத்தேன். அவனும் குறி யிடத்தில் வந்து நிற்கிறான். இப்பொழுது, நீயோ, 'இன்றைக்கு ஒரு நாள் மட்டும் கழியட்டும்' என்கிறாய். நீ இவ்வாறு காலங் கடத்துவதால் என் கையும் காலும் ஓய்ந்து ஒடுங்கித் தீயிலிட்ட தளிர்போல வாடி நடுங்குகின்றன. நான் இனிச் செய்யக்கூடியது ஒன்றுமில்லை" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

உடன்போக்கில் அழைத்துச் செல்லத் தலைவன் வந்துவிட்டான். 'இற்றைப் பொழுது தவிர்க' எனச் சொல்லித் தலைவி நாணத்தால் தயங்குகிறாள். தோழி, 'நீ இப்பொழுதே அவனுடன் புறப்படு' என்கிறாள்.

சொற்பொருள்

1. உடம்படுதல் - ஒத்துக்கொள்ளுதல்; தர - அழைக்க.
2. குறி - குறித்த இடம்; நின்றனன் - நிற்கின்றான்.
3. இன்றை அளவை - இன்றைய பொழுது; சென்றைக்க - கழியட்டும்; என்றி - என்று சொல்கிறாய்.
4. ஓய்தல் - தளர்தல்; ஒடுங்குதல் - செயலற்று விடுதல்.
5. தீஉறு - தீப்பட்ட.
6. இலை - இல்லை; செயற்கு - செய்வதற்கு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 200 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

உடன்போக்குத் துணிந்தவழி, அதற்கு இரவின்கண் தலைமகன் வந்ததறிந்த தோழி, தலைமகளைப் பாயலுணர்த்திச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரும் முடிவு செய்திருந்தபடி தலைவன் தலைவியை உடனழைத்துச் செல்ல இரவில் தேரோடு வந்திருந்தான். அதனை அறிந்த தோழி, உறங்கிக்கொண்டிருந்த தலைவியை எழுப்பிச் சொல்லியது.

இலங்குவீங்கு எல்வளை! ஆய்நுதல் கவினப்
பொலந்தேர்க் கொண்கன் வந்தனன் இனியே;
விலங்கரி நெடுங்கண் ஞெகிழ்மதி;
நலங்கவர் பசலையை நகுகம் நாமே!

தெளிவுரை

நெகிழ்ந்து ஒளி வீசுகின்ற வளையல் அணிந்த தலைவியே! நுட்பமான அழகு பொருந்திய உன் நெற்றி மேலும் அழகு பெறுமாறு உன்னை உடன்கொண்டு போவதற்காக நம் தலைவன் பொலிவுள்ள தேரில் வந்துள்ளான். எனவே, செவ்வரி குறுக்கே படர்ந்து விளங்குகின்ற நெடிய உன் கண்களை அகல விழி! உன் நலத்தைக் கவர்ந்து சென்ற பசலை நோயை நாம் இகழ்ந்து சிரிப்போம், வா.

கருத்து

அழைத்துச் செல்லத் தலைவன் வந்துள்ளான்; நீயும் புறப்படு.

விளக்கம்

அழகு அழிந்துபோன நுதல் அழகுபெற உன்னைக் கொண்டு செல்லக் கொண்கன் தேரில் வந்துள்ளான்; நீயும் காலந்தாழ்த் தாமல் உடனே புறப்படு. உன் அழகைக் கவர்ந்த பசலையை நாம் இகழ்ந்து சிரிப்போம்.

குறிப்பு

'பசலையை நகுகம்' என்றது, ஐயுற்று அலர் கூறித் திரிந்தாரை எள்ளி நகையாடுவோம் என்பதும் ஆம்.

சொற்பொருள்

1. இலங்கு - ஒளி வீசுகின்ற; வீங்கு - நெகிழ்ந்து; எல்வளை - ஒளி பொருந்திய வளையலை அணிந்தவளே!; ஆய்நுதல் - நுட்பமான நெற்றி; கவின - அழகு பெற.
2. பொலந்தேர் - பொன்னாலாகிய தேர்; கொண்கன் - தலைவன்.
3. விலங்கரி - செவ்வரி குறுக்கே பரந்திருக்கும் கண்கள்; ஞெகிழ்மதி - திறப்பாயாக.
4. நலம் - அழகு; நகுகம் - சிரிப்போம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 235 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

உடன்போக்கு நேர்வித்த பின்பு, தலைமகன் உடன் கொண்டுபோவான் இடையாமத்து வந்துழித் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை உடன்கொண்டு போக இசைந்த பிறகு, தலைவன் அவளை அழைத்துச் செல்வதற்காக நள்ளிரவில் வந்தான். அதனைக் கண்ட தோழி தலைவியிடம் சொல்லியது.

கையற வீழ்ந்த மைஇல் வானமொடு
அரிது காதலர்ப் பொழுதே; அதனால்,
தெரிஇழை தெளிர்ப்ப முயங்கிப்
பிரியலம் என்கமோ, எழுகமோ? தெய்யோ!

தெளிவுரை

"*மழைமேகங்கள் முற்றிலும் ஒரு பக்கமாய் ஒதுங்கி வானம் தெளிவாய் இருக்கிறது. காதலர் கூடக்கூடிய நள்ளிரவுப்*

பொழுதும் வாய்த்திருக்கிறது. ஆதலால், தேர்ந்தெடுக்கப்பெற்ற அணிகலன்கள் ஒலிக்கும்படி தலைவனைத் தழுவி, 'இனி உம்மைப் பிரிய மாட்டோம்' என்று சொல்வோமா அல்லது உடனே அவனுடன் சேர்ந்து புறப்பட்டுச் செல்வோமா?"

கருத்து

தலைவியே! தயங்காதே! இப்போதே புறப்படு.

விளக்கம்

'முகில் இல்லாத வானம்; காதலர் கூடுதற்கேற்ற நள்ளிரவு; இவை வாய்ப்பது அரிது. ஆகையால், இவை வாய்த்திருக்கும் இப்போதே தலைவனோடு நீ புறப்பட்டுச் செல்லலாம்' என்பதைத் தோழி தலைவியிடம் எடுத்துரைக்கிறாள்.

குறிப்பு

தலைவனைத் தழுவி, 'பிரிய மாட்டோம்' என்று சூளுரைத்து உடன் போக்கை இன்னொரு நாள் வைத்துக்கொள்வோமா அல்லது இன்றே போவோமா எனத் தோழி தலைவியைக் கேட்கிறாள்.

'புறப்படு' என்று நேரடியாகச் சொல்லாமல், தலைவி தலைவனுடன் செல்வதே ஏற்றது என்பதைக் குறிப்பாய்ச் சொல்லுகிறாள், தோழி.

சொற்பொருள்

1. கையற - கை + அற - ஒரு பக்கமாய் முழுவதும் சென்று ஒதுங்கிய; மை - மேகம்; இல் - இல்லாத.
2. காதலர்ப் பொழுது - காதலரொடு கூடுதற்கு வாய்க்கும் பொழுது.
3. தெரி இழை - ஆராய்ந்தெடுத்த அணிகலன்கள்; தெளிர்ப்ப - ஒலிக்க; முயங்கி - தழுவி.
4. என்கமோ - என்று கூறுவோமா? எழுகமோ - (அவருடன்) செல்லப் புறப்படுவோமா?; தெய்யோ - தலைவியே!

தலைவி கூற்று

நாலடியார் 398 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : பாலை

கூற்று

தலைமகனுடன் போக உடன்பட்ட தலைமகள் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் உடன்போக்கில் செல்ல உடன்பட்ட தலைவி அதனைத் தோழிக்குக் கூறுகிறாள்.

கடக்(க)அருங் கானத்துக் காளைபின் நாளை
நடக்கவும் வல்லையோ என்றி – சுடர்த்தொடீஇ
பெற்றான் ஒருவன் பெருங்குதிரை அந்நிலையே
கற்றான் அஃதூரும் ஆறு.

தெளிவுரை

ஒளி பொருந்திய வளையலை உடைய தோழியே! கடத்தற்கரிய பாலை நில வழியில் காளைபோலும் காதலனுடன், நாளை நடந்து செல்லும் ஆற்றல் உனக்கு உண்டா? என்று தானே கேட்கிறாய்! ஒருவன் ஒரு குதிரையை எப்போது வாங்கினானோ அப்போதே அதில் ஏறிச் செல்லும் ஆற்றலையும் கற்றவன் ஆவான் அன்றோ? (ஆதலால் காதலனுடன் நடத்தல் அரிதன்று என்று தெரிந்து கொள்.)

கருத்து

தலைவனுடன் புறப்பட முடிவு கொண்ட அப்போதே அதற்கான ஆற்றல்கள் அனைத்தையும் பெற்றுவிட்டேன்.

சொற்பொருள்

1. கடக்க அரும் - கடத்தற்கு அரிய; காளை - தலைவன்.
2. வல்லையோ - வல்லமை உடையவளோ; என்றி - என்று கேட்கிறாய்.
3. அந்நிலையே - அப்போதே.
4. ஊர்தல் - செல்லுதல்; ஊரும் ஆறு - செலுத்தும் வழி.

தோழி கூற்று

குறுந்தொகை 115 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

உடன்போக்கு ஒருப்படுத்து மீளும் தோழி தலைமகற்குக் கூறியது.

(ஒருப்படுத்து - தலைவியைச் சம்மதிக்க வைத்து.)

கூற்று விளக்கம்

தலைவனோடு உடன்போக்கில் செல்லும்படியாகத் தலைவியைச் சம்மதிக்கச் செய்த தோழி, அவளை என்றும் அன்புடன் காத்துப் பேணுமாறு தலைவனிடம் சொல்லியது.

பெருநன்று ஆற்றின், பேணாரும் உளரே?
ஒருநன்று உடையள் ஆயினும், புரிமாண்டு,
புலவி தீர அளிமதி இலைகவர்பு,
ஆடுஅமை ஒழுகிய தண்நறும் சாரல்,
மென்நடை மரையா துஞ்சும்
நன்மலை நாட! நின்அலது இலளே.

தெளிவுரை

“குளிர்ச்சியும் அழகும் பொருந்திய மலைச்சாரலில் அசைகின்ற மூங்கில்கள் நீண்டு வளர்ந்துள்ளன. அங்கு மெதுவாய் நடக்கின்ற காட்டுப்பசு, இலைகளை விரும்பியுண்டு தூங்கும். அத்தகைய காட்சி கொண்டுள்ள நல்ல மலைநாட்டுக்குரிய தலைவனே! பெரிய நன்மை செய்த ஒருவரைப் போற்றாரும் உள்ளனரோ? இவள் இப்போது இளமையள் ஆதலால் உனக்கு மிகவும் இன்பம் தருபவளாயிருப்பாள். இவளுனக்குச் செய்யும் நன்மை மிகச் சிறிதேயாகும் அந்த முதுமைக்காலத்தும் நீ இவளை விரும்பிப் பெருமையுடன் பிணக்கம் இல்லாது போற்றிக் காக்க வேண்டும்” என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

‘தலைவியை அழைத்துச் செல்லவுள்ள தலைவ! எந்நாளும் இன்று போலவே இவளைப் பாதுகாக்க வேண்டும்.’

விளக்கம்

இவள் உனக்குப் பல வகையிலும் இன்பம் தருபவளாய் இப்போது இருப்பதால் இவளை நீ அன்புடன் ஓம்பிப் போற்றி வருவது இயல்பு. இவளிடம் இன்பத்தைப் பெற இயலாத முதுமைப்பருவத்திலும் இப்போது போலவே பெருமையுடனும் அன்புடனும் பேணிக் காக்க வேண்டும். இவளுக்கு உன்னை யன்றி வேறு பற்றுக்கோடு இல்லை.

சொற்பொருள்

1. பெரு நன்று - பெரிய நன்மை; ஆற்றுதல் - செய்தல்; பேணாரும் - போற்றாரும்; உளரோ? - உள்ளனரோ?
2. ஒரு நன்று உடையள் ஆயினும் - உனக்குச் செய்யும் நன்மை மிகச் சிறிதே உடையவளாய் இருந்தாலும்; புரிமாண்டு - விருப்பம் பெருகி.
3. புலவி தீர - பிணக்கம் இல்லாமல்; அளிமதி - போற்றிப் பாதுகாப்பாயாக; கவர்பு - கவர்ந்து உண்ணும்.
4. ஆடு அமை - அசைகின்ற மூங்கில்; ஒழுகிய - வரிசைப்பட உள்ள; தண் நறும் - குளிர்ச்சியும் அழகும்; சாரல் - மலைச்சாரல்.
5. மென் நடை - மென்மையான நடை; மரையா - ஒருவகைக் காட்டு விலங்கு; துஞ்சும் - தூங்கும்.
6. நின் அலது - உன்னை அல்லாது; இலள் - (பற்றுக்கோடு வேறு) இல்லாதவள்.

தோழி கூற்று

நற்றிணை 10 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கும் தோழி கையடுத்தது. (கையடை - பிறர் கையில் ஒப்புவித்தல்.)

கூற்று விளக்கம்

உடன்போக்குச் செல்லத் தலைவியைத் தலைவன் கையில் ஒப்படைத்த தோழி, அவளை என்றும் கைவிடாது காக்க வேண்டும் எனத் தலைவனிடம் கூறியது.

அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன்நேர் மேனி மணியின் தாழ்ந்த
நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்,
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர
இன்கடுங் கள்ளின் இழைஅணி நெடுந்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்,
வெண்கோட்டு யானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னநின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே.

தெளிவுரை

பூம்பொழில் சூழ்ந்துள்ள ஊருக்குத் தலைவனே! இனிய கடுப்பேறிய கள்ளுணவையும் அணி செய்யப்பட்ட நெடிய தேர்களையுமுடையவர், சோழ மன்னர். அவர்கள், தம் பகைவராகிய கொங்கரை அடக்கி வைப்பதற்காக, 'போஒர்' எனும் ஊருக்குத் தலைவனும் வெண்மையான தந்தங்களைக் கொண்ட யானைப்படையைக் கொண்டவனுமான பழையன் என்பவனைத் துணையாய்க் கொண்டனர். பழையனுடைய வேல் என்றும் குறி தப்பியதே இல்லை. அதுபோல, என்றுமே தவறாத உன் மொழியை நம்பியே தலைவி உன்னுடன் வருகிறாள்.

இளமையால் நிமிர்ந்து உயர்ந்துள்ள அழகிய இவள் மார்பகங்கள் முதுமையால் தளர்வுற்றுச் சாயும் காலத்தும், இன்று இவள் பொன்னிற மேனியில் கரிய நிறத்தோடு தாழ்ந்து தொங்கும் நல்ல, நெடிய கூந்தலானது நரையொடு முடியிடப்படுகின்ற அக்காலத்தும் நீ இவளைக் கைவிடாது பாது காப்பாயாக!

கருத்து

தலைவி உன் பேச்சினை நம்பியே உன்னுடன் வருகிறாள். அவள் இளமை மாறி முதுமை எய்தினும் இன்றுபோலவே என்றும் அவளைப் பாதுகாப்பாயாக!

சொற்பொருள்

1. அண்ணாந்து - நிமிர்ந்து மேல் நோக்கிய; வனமுலை - அழகிய முலை.
2. பொன்நேர் மேனி - பொன் போன்ற மேனியில்; மணியின் - நீலமணி யினைப் போல; தாழ்ந்த - தாழ்ந்து தொங்கும்.
3. நல்நெடுங்கூந்தல் - நல்ல நெடிய கூந்தல்; நரையொடு முடிப்பினும் - நரையுடனே முடியிடப்பெற்றாலும்.
4. நீத்தல் - கைவிடாது; ஓம்பு - பாதுகாப்பாயாக; பூக்கேழ் - பூக்கள் பொருந்திய.
5. இன் கடுங் கள் - இனிய கடுப்பேறிய கள்; இழைஅணி - அணிகலன்கள் அணிந்த (வேலைப்பாடமைந்த).

6-7.கொற்றம் - வெற்றி; கொங்கர் - கொங்கு நாட்டவர்; பணீஇயர் - பணிய வைப்பதற்காக; வெண்கோடு - வெண்மையான தந்தம்; போஓர் கிழவோன் பழையன் - போஓர் என்னும் ஊருக்கு உரியவனான பழையன் என்பவன்.

8. வேல் வாய்த்தன்ன - குறி தவறாத வேலைப் போன்ற.
9. பிழையா நன்மொழி - என்றுமே தவறாத உன் மொழி; தேறிய - நம்பிய; இவள் - இத்தலைவியை.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 88 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்து உடன்போவான் ஒருப்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது. (ஒருப்பட்ட - உடம்பட்ட.)

கூற்று விளக்கம்

தலைவனுடன் செல்ல உடன்பட்ட தலைவி, தோழியிடம் கூறியது.

அல்லாத என்னையும் தீரமற்(று) ஐயன்மார்
பொல்லாத(து) என்பது நீபொருந்தாய் – எல்லார்க்கும்
வல்லி ஒழியின் வகைமைநீள் வாள்கண்ணாய்!
புல்லி ஒழிவான் புலந்து.

தெளிவுரை

தலைவனுடன் உடன்போக்கில் செல்லப் புறப்பட்டு நின்ற தலைவி தோழியை நோக்கி, "நேர்த்தியான நீண்ட வாள்போன்ற கண்களைக் கொண்ட தோழியே! தலைவன் என்னைத் தழுவிக் கொண்டு செல்வான். என்னை நீங்கி நீ மனைக்குச் சென்றபின், நம் தந்தையும் தமையன்மாரும் என்னையும் தலைவனையும் பற்றிப் பொல்லாத மொழிகளைப் பேசுவர். அப்பேச்சினை உன் திறமையால் தவிர்த்திடு. நாங்கள் செய்தது தவறு என்று கருதும் கருத்தினையும் நீக்கு; நீ எல்லாருக்கும் நல்லவளாய்ப் பொருந்தி யிரு!" என்று கூறிப் புறப்பட்டாள்.

கருத்து

"தோழியே! எம்மை நீங்கித் தனித்துச் செல்லும் நீ, வீட்டில் தந்தை, தமையன்மார் ஆகியோர் எம்மைப்பற்றிக் கூறும் பழியை நீக்கி, நீயும் நல்லவளாய் நடந்துகொள்!"

குறிப்பு

தலைவி, தோழியிடம் மனைக்குச் சென்று, தன் உடன்போக்கா லுண்டாகிய மனைக்குழப்பங்களை அவ்வப்பொழுது வேண்டுவ கூறி அடக்கி, தன் பெருமைக்கு இழுக்கு வாராவகையில் நடந்துகொள்ளுமாறு கூறுகிறாள். தலைவி உடன்போக்கில் புகுவது தன் கற்பிற்குப் பழுது நேருவதைத் தடுப்பதற்காகவேயாதலான், அவ்வுண்மையைப் பெற்றோர் முதலியவர்கட்குத் தெரிவித்துத் தன் பெருமையினைக் காக்க வேண்டு கிறாள்.

சொற்பொருள்

1. அல்லாத - (பெருமைக்குப் பொருத்தம்) இல்லாத (மொழிகளினின் றும்); என்னையும் - என்னையும் (என் தலைவனையும்); தீர - நீக்கி; ஐயன்மார் - நம் தந்தை தமையன்மார்.
2. பொல்லாதது என்பது - நாங்கள் செய்தது தவறு என்று (எண்ணும் கருத்தையும் நீக்கு); பொருந்தாய் எல்லார்க்கும் - நீ எல்லார்க்கும் நல்லவளாய்ப் பொருந்தியிரு.
3. வல்லி - வல்லமை வாய்ந்தவளே!; ஒழியின் - (என்னை நீங்கி நீ மனைக்குச் செல்வாயாயின்); வகைமை - நேர்த்தியான; நீள் வாள் கண்ணாய் - நீண்ட வாள் போன்ற கண்களைக் கொண்ட என் தோழியே!

4. புல்லி ஒழிவான் - உடன் போகின்ற என்னைத் தலைவன் தழுவிக் கொண்டு செல்லுவதை; புலந்து – மனத்தில் மாறுபட்டு.

புலந்து ஐயன்மார் பொல்லாதது என்பதைத் தீர்த்து, நீ நல்லவளாய்ப் பொருந்தியிரு.

செவிலித்தாய் கூற்று

குறுந்தொகை 15 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்; நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவி தமரைப் பிரிந்து தலைவனுடன் சென்றதைத் தோழியால் அறிந்த செவிலி, "நம் மகளும் அவள் காதலனும் பாலையைக் கடந்து சென்று இதற்குள் மணம் புரிந்துகொண்டிருப்பார்கள். அதனால் அவர்கள் காதல் உலகறிய உறுதி பெற்றதாயிற்று" என்று நற்றாய்க்குக் கூறியது.

பறைபட, பணிலம் ஆர்ப்ப, இறைகொள்பு
தொல்மு தாலத்துப் பொதியில் தோன்றிய
நால்ஊர்க் கோசர் நன்மொழி போல,
வாய்ஆ கின்றே தோழி! ஆய்கழல்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

தெளிவுரை

தோழியே! அழகிய வீரக்கழலையும் சிவந்த இலைப்பகுதியை உடைய வெள்ளிய வேலையும் கொண்ட காளையொருவனுடன், தொகுக்கப்பட்ட பல வளையல்களையணிந்த முன் கைகளைக் கொண்ட நம் மகள் கொண்ட காதல் உறுதிப்பட்டு விட்டது.

மிகப்பழமையான ஆலமரத்தின் அடியிலுள்ள பொது இடத்தில் தங்கியிருந்து புகழொடு தோன்றிய நாலூர்க்கோசரது நல்ல மொழிகள் உண்மையாவதுபோல, முரசு முழங்கவும், சங்கு ஒலிக்கவும் (மணம் நடைபெற்று) இவர்கள் காதலும் உண்மை யானது.

கருத்து

மகள் தான் விரும்பியவனுடன் உடன்போக்குச் சென்றுள்ளதால் உறுதியான அவள் கற்பு நிலைபெற்றுவிட்டது.

குறிப்பு

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்; செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள்.

முதிர்ந்த ஆலமரத்தடியிலே பொதுச்சபை கூடுவது பண்டைய வழக்கம்.

கோசர் என்பார் ஒருவகை வீரக்குடியினர். வாக்குறுதி தவறாது இவர்கள் வாழ்ந்து வந்தவர். நாலூர்க்கோசர் என்பதற்கு நாலூர் என்னும் ஊரிலிருந்த கோசர் என்றும், நான்கு பிரிவினராய கோசர் என்றும் பொருள் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. பறைபட - பறை ஒலிக்க; பணிலம் - சங்கு; ஆர்ப்ப - ஆரவாரிக்க; இறைகொள்பு - தங்கியிருந்து.
2 தொல் மூது (முது) ஆலம் - மிகப் பழமையான ஆலமரம்; பொதியில் - பொது இடத்தில்.
3. நால் ஊர்க் கோசர் - ஒருவகை வீரக்குடியினர்.
4. வாய் ஆகின்று - வாய்மை ஆகிறது.
5. சேயிலை - சிவந்த இலை போன்றதான (வேலின் மேற்பகுதி); வெள்வேல் - வெள்ளிய வேல்; விடலை - இளைஞன் (தலைவன்).
6. தொகுவளை - வரிசையாய்த் தொகுத்துப் போடப்பட்ட கைவளையல்கள்; மடந்தை - பெண் (தலைவி).

நற்றாய் கூற்று

நற்றிணை 143 **கண்ணகாரன் கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

மனை மருட்சி.

கூற்று விளக்கம்

மகள் உடன்போக்கில் சென்றுவிட இல்லத்திலிருந்த தாய், அவள் பிரிவைத் தாங்க இயலாமல் கலங்கிப் புலம்புவது மனை மருட்சி ஆம்.

ஐதே காமம் அம்ம; ஒய்யென,
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து,
ஓரை ஆயமும் நொச்சியும் காண்தொறும்,
நீர்வார் கண்ணேன் கலுழும் என்னினும்,
கிள்ளையும் கிளைஎனக் கூஉம் இளையோள்
வழுஇலள் அம்ம, தானே; குழீஇ,
அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்
இன்னா இன்உரை கேட்ட சில்நாள்
அறியேன் போல உயிரேன்;
நறிய நாறும்நின் கதுப்பு என்றேனே.

தெளிவுரை

புதிதாய்க் கொண்டுவந்து மணல் பரப்பிய அழகிய மனை முற்றத்தில் ஓரை விளையாட்டயரும் என் மகளுக்குத் தோழியர் கூட்டத்தையும், அவள் நட்டு வளர்த்த நொச்சிச் செடியினையும் காணுந்தோறும் நீர் வழியும் கண்களுடன் அழுகின்றேன். என்னைக் காட்டிலும் அவள் வளர்த்த கிளியும், 'அன்னாய்!' என உறவோடு அழைத்து மிழற்றும். இளம் பருவத்தினளாய என் மகள் குற்றமுள்ளவள் அல்லள். பழிச்சொற்கள் மிகப் பேசும் இப்பழைய ஊரில் உள்ள பெண்கள் ஒருங்கே கூடி நின்று கொடியதும் இனியதுமாய்ப் பேசிய பேச்சினைக் கேட்டு, சில நாள் யாதும் அறியாதவள்போலப் பேசாதிருந்த நான், ஒரு சமயம், 'மகளே! உன் கூந்தலில் புதிய மணம் வீசுகிறதே'

என்றேன். அவ்வளவுதான், தன் காதலனுடன் விரைவாய்ச் சென்றுவிட்டாள். காமம் வியத்தற்குரியது!

கருத்து

ஊரார் சொற்கேட்டு மகளிடம் ஒன்றும் பேசாதிருந்தேன். ஒருநாள் அவளிடம், 'கூந்தலில் புதுமணம் வீசுகிறதே' என்றேன். அவ்வளவுதான், தன் தலைவனுடன் புறப்பட்டுவிட்டாள்.

குறிப்பு

களவுக்காலத்தில் தலைவன் தன் நாட்டிலிருந்து கொண்டுவந்த மலரைத் தலைவியின் கூந்தலில் சூட்டினான். அப்பூ தலைவியின் ஊரில் இல்லாதது. அதனாலேயே தலைவியின் கூந்தலில் புதுமணம் வீசியது.

பழிச்சொல் கூறுவோர் உரை, கேட்பதற்கு இன்னாததாய் இருந்தது; ஆயினும், அவ்வுரை தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள காதலை உணர்த்தியதால் இனிமையதாய் இருந்தது. ஆதலின், அவ்வுரை 'இன்னா இன்னுரை' எனப்பட்டது.

சொற்பொருள்

1. ஐதே - வியப்புக்குரியது; ஓய்யென - விரைவாய்.
2. தருமணல் - புதிதாய்க் கொண்டுவந்து பரப்பப்பட்ட மணல்; ஞெமிரிய - பரப்பிய; திருநகர் - அழகிய வீடு.
3. ஓரை - பாவை கொண்டு மகளிர் விளையாடுவது; ஆயம் - தோழியர் கூட்டம்; நொச்சி - நொச்சிச்செடி; காண்தொறும் - காணும் போதெல்லாம்.
5. நீர்வார் - நீரொழுகும்; கண்ணேன் - கண்களுடன்; கலுழ்தல் - அழுதல்; என்னினும் - என்னைவிட.
6. கிள்ளை - கிளி; கிளை - உறவு.
7. வழு இலள் - குற்றமற்றவள்; குழீஇ - கூடி.
8. அம்பல், அலர் - பழிச்சொற்கள்; மூதூர் - பழைமையான ஊர்.
9. சில்நாள் - சில நாள்.
10. அறியேன் போல - ஏதும் அறியாதவள்போல; உயிரேன் - மூச்சும் விட்டிலேன் (ஏதும் பேசவில்லை).
11. நறிய - நன்மையான; நாறும் - மணம் வீசும்; கதுப்பு - கூந்தல்.

நற்றாய் கூற்று

ஐந்திணை ஐம்பது 33 **மாறன்பொறையனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய நற்றாய் கவன்று சொல்லியது. (கவன்று - வருந்தி.)

கூற்று விளக்கம்

தன் மகள் உடன்போக்கில் சென்றுவிட்டபோது அவளைப் பெற்றெடுத்த நற்றாய் வருந்திச் சொல்லியது.

பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியும்
ஆயமும் ஒன்றும் இவைநினையாள் – பால்போலும்
ஆய்ந்த மொழியினாள் செல்லும்கொல் காதலன்பின்
காய்ந்து கதிர்தெறூஉம் காடு.

தெளிவுரை

தலைவனுடன் தன் மகள் உடன்போயதை அறிந்த நற்றாய், "பால்போலும் இனிய சொற்களைக் கொண்ட என் மகள், தன் காதலன் பின், கடும் வெப்பம் நிறைந்த காட்டுவழியில் சென்று விட்டாள். தான் விளையாடப் பயன்படுத்திய பொம்மை, பந்து, பவளம் போலும் வாய்கொண்ட பச்சைக்கிளி, தோழியர் கூட்டம் ஆகிய இவற்றுள் ஒன்றைக்கூட எண்ணிப் பார்க்காத வளாய்ச் செல்ல எப்படி இயன்றதோ?" என்று தனக்குள்ளே கவலைப்பட்டவளாய்ச் சொல்லிக்கொண்டாள்.

கருத்து

தன் தோழியரையும் விளையாட்டுப் பொருள்களையுங்கூட எண்ணிப் பார்க்காதவளாய் என் மகள் சென்றுவிட்டாளே!

சொற்பொருள்

1. பாவை - விளையாட்டுப்பொம்மை; பவளவாய் - பவளம் போலும் செந்நிற வாய்; பைங்கிளி - பசிய நிறமுள்ள கிளி.
2. ஆயம் - விளையாட்டுத்தோழியர் கூட்டம்.
3. ஆய்ந்த மொழியினாள் - ஆராய்ந்தமைந்த மொழியினைக் கொண்டவள்; செல்லும்கொல்? - சென்றனளோ?
4. காய்ந்து - வெப்பத்தை மிகுத்து; கதிர் - ஞாயிறு; தெறூஉம் - சுடும்.

நற்றாய் கூற்று

நாலடியார் 399 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : பாலை

கூற்று

தலைமகனுடன் போன தன் மகளை எண்ணி நற்றாய் வருந்திச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னை விட்டுவிட்டுப் பிரிந்து தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்ட தன் மகளை நினைந்து வருந்தி நற்றாய் கூறியது.

முலைக்கண்ணும் முத்தும் முழுமெய்யும் புல்லும்
இலக்கணம் யாதும் அறியேன் – கலைக்கணம்
வேங்கை வெரூஉம் நெறிசெலிய போலும்என்
பூம்பாவை செய்த குறி.

தெளிவுரை

என் மகள் தன் முலைக்காம்புகளும் முத்துமாலையும் என் உடல் முழுவதும் அழுந்தும்படி தழுவிக் கொண்டதன் காரணத்தை அப்போது அறியேன். தாமரைப் பூவில் உறையும் திருமகள் போன்ற என் மகள், மான் கூட்டம் புலிக்கு அஞ்சும் பாலை வழியில் என்னை விட்டுப் பிரிந்து தன் காதலனுடன் செல்வதற்காகத்தான் அப்படி அன்பாக என்னைத் தழுவிக் கொண்டாளோ?

கருத்து

மகள் பிரிவை முன்னரே அறியாதது போயினனே என நற்றாய் வருந்துகிறாள்.

விளக்கம்

பிரிந்தால் பிறகு இயலாது என்பதால், எப்பொழுதும் தழுவுவதைவிட அன்பு பெருக இறுகத் தழுவிக் கொண்டாள்; அது பிரிதற்பொருளைத் தருவது என்பதைத் தாய் அறியாது போயினள்.

சொற்பொருள்

1. முலைக்கண் - முலைக்காம்பு; முழுமெய் - உடல் முழுதும்; புல்லுதல் - தழுவிக் கொள்ளுதல்.
2. கலை - மான்; கணம் - கூட்டம்.
3. வெரூஉம் - அஞ்சும்; நெறிசெலிய - வழியில் செல்ல.
4. குறி - அடையாளம்.

நற்றாய் கூற்று

ஐந்திணை ஐம்பது 37 — **மாறன்பொறையனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போய தலைமகட்கு நற்றாய் கவன்றுரைத்தது.

கூற்று விளக்கம்

தன் மகள் தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டதை அறிந்த நற்றாய் வருந்தி உரைத்தது.

தோழியர் சூழத் துறைமுன்றில் ஆடுங்கால்
வீழ்பவள் போலத் தளரும்கால் – தாழாது
கல்அதர் அத்தத்தைக் காதலன் பின்போதல்
வல்லவோ மாதர் நடை.

தெளிவுரை

தன் மகள் தான் விரும்பிய தலைவனுடன் உடன்போயதை யறிந்த நற்றாய், "தோழியர் நாற்புறமும் சூழ முற்றத்தில் விளையாடுகின்றபோதே விழுந்துவிடுபவளைப் போலத் தளர்ந்து நடையிடுபவள், என் மகள். கற்கள் நிரம்பிய காட்டுவழியில் தன் தலைவன் பின்னால் ஓய்ந்துவிடாமல் நடந்து செல்ல மெல்லிய அவள் அடிகள் வல்லனவோ?" என்று வருந்திப் புலம்புகிறாள்.

கருத்து

விளையாடும்போதே நடக்கத் தடுமாறும் என் மகள் காட்டுவழியில் எப்படி நடப்பாளோ?

சொற்பொருள்

1. துறைமுன்றில் - முற்றமாகிய துறையிடத்தில்; ஆடுங்கால் - விளையாடும் பொழுது.
2. தளரும் கால் - தளர்ச்சியுறும் கால்களைக் கொண்டவள்; தாழாது - ஓய்ந்துவிடாமல்.
3. கல் அதர் - கற்கள் நிரம்பிய வழியில்.
4. வல்லவோ? - வல்லனவோ?; மாதர் - காதல் கொண்ட என் மகள்.

நற்றாய் கூற்று

நற்றிணை 29 **பூதனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனோடு உடன்போக்கிலே வீட்டை விட்டுப் போய்விட்டாள் எனக் கேட்ட நற்றாய், அஃது அறத்தொடுபட்டது என்று உணரினும், தன் மகளது மென்மைக்கு இரங்கி ஆற்றாது கூறியது.

நின்ற வேனில் உலந்த காந்தள்
அழல்அவிர் நீள்இடை, நிழலிடம் பெறாஅது,
ஈன்றுகான் மடிந்த பிணவுப்பசி கூர்ந்தென,
மான்ற மாலை, வழங்குநர்ச் செகீஇய,
புலிபார்த்து உறையும் புல்அதர்ச் சிறுநெறி
யாங்குவல் லுநள்கொல் தானே யான்,தன்
வனைந்துஏந்து இளமுலை நோவ கொல்என
நினைந்துகைந் நெகிழ்ந்த அனைத்தற்குத் தான்தன்
பேர்அமர் மழைக்கண் நீரிய கலுழ,
வெய்ய உயிர்க்கும் சாயல்,
மைஈர் ஓதிப் பெருமடத் தகையே.

தெளிவுரை

என் மகளை அணைத்தபடி படுத்திருந்த நான், தொய்யில் எழுதப்பட்ட அவளின் பருத்த இளமுலைகள் நோகுமோ என்று

கருதி அணைத்திருந்த என் கையைச் சிறிது தளர்த்தினாலும், அதனையே பொறுக்க இயலாது பெரிய விரும்பத்தக்க குளிர்ச்சியான அவள் கண்கள் நீரைச் சொரியப் பெருமூச்சு விட்டு வருந்துவாள். அத்தகைய மென்மையும் கரிய குளிர்ச்சி பொருந்திய கூந்தலும் மிக்க இளமையும் கொண்டவள், என் மகள்.

ஏனைய பருவம் ஏதுமின்றி வேனிற்பருவம் ஒன்றை மட்டுமே கொண்டிருப்பதும், வாடிய காந்தளை உடையதும், அழல் வீசுகின்றதுமான நீண்ட சுரத்தில், நிற்கவும் நிழலிடம் பெறாமல், குட்டியை ஈன்று சோர்வுற்றிருந்த பெண்புலி மிகவும் பசித்து இருந்தது. அதன் பசியைப் போக்க, இருள் மயங்கிய மாலைப் பொழுதில் வழியிடையில் செல்வோரைத் தாக்கிக் கொல்லும் பொருட்டு ஆண்புலி காத்திருக்கும். அத்தகைய புன்மைமிக்க குறுகிய வழியில் நடந்து செல்வதற்கு என் மகள் எவ்வாறு வல்லமை கொண்டவள் ஆயினளோ?

கருத்து

வெப்பமிக்க நிலத்தில் மகள் நடந்து செல்ல எவ்வாறு வல்லமை பெற்றனளோ?

விளக்கம்

அணைத்த கை சிறிது தளர்ந்தாலும் அழுது புலம்பும் என் மகள், பசித்திருக்கும் பெண்புலிக்கு இரை தேட, வழிச்செல் வோரைக் கொல்ல ஆண்புலி காத்திருக்கின்ற கொடிய வெப்பம் மிக்க நிலத்தில், குறுகிய வழியில் நடந்து செல்ல எவ்வாறு வல்லமை பெற்றனளோ?

குறிப்பு

பெண்புலியின் பசியைப் போக்க ஆண்புலி உணவு தேடி வழியிடைப் பார்க்கும் என்றது, தலைவியின் அயர்ச்சியைப் போக்கத் தலைவன் மாலைப் பொழுதில் தங்குமிடம் தேடி அடைய, அங்குத் தங்குவர் என்னும் குறிப்புப் பொருள் கொண்டது. பெண்புலி குட்டிகளை ஈன்றது என்றது, தலைவி மக்களைப் பெற்றெடுத்து மனையறம் காப்பாள் என்பதாம்.

சொற்பொருள்

1. நின்ற வேனில் - ஏனைப் பருவம் இன்றி வேனில் மட்டுமே நிலைத்து நிற்கும்; உலந்த - வாடிய.
2. அழல் அவிர் - அழல் வீசுகின்ற; நீள்இடை - நீண்ட வழி.
3. ஈன்று - குட்டியைப் பெற்று; கான் - காட்டில்; மடிந்த - சோர்ந்துள்ள; பிணவு - பெண்புலி; கூர்ந்தென - மிக்கதென்று.
4. மான்ற - இருள் மயங்கிய; வழங்குநர் - வழிச்செல்வோர்; செகீஇய - தாக்கிக் கொல்லும்பொருட்டு.
5. புலி - ஆண்புலி; பார்த்து - வருவோரை எதிர்நோக்கி; உறையும் - தங்கியிருக்கும்; புல்அதர் - புல் நிறைந்த வழி; சிறுநெறி - அகலமில்லாத பாதை.
6. யாங்கு - எவ்வாறு?; வல்லுநள் கொல் - வல்லமை கொண்டவள் ஆனாளோ? (அறியேன்).
7. வனைந்து ஏந்து இளமுலை - தொய்யில் எழுதப்பட்ட உயர்ந்த முலைகள்; நோவ - வருந்தும்.
8. அனைத்தற்கு - அந்த அளவிற்கே.
9. பேர்அமர் - பெரிய விரும்பத்தக்க, மழைக்கண் - குளிர்ச்சியான கண்; நீரிய - நீர் சுரந்து; கலுழ - சொரிய.
10. வெய்ய உயிர்க்கும் - வெம்மையான பெருமூச்சு விடும்; சாயல் - மென்மை.
11. மைஈர் ஓதி - கரிய குளிர்ச்சி பொருந்திய கூந்தல்; பெருமடத்தகை - மிக இளமையும் அழகும் பொருந்திய என் மகள்.

நற்றாய் கூற்று

ஐந்திணை எழுபது 42 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

உடன்போய தலைமகட்கு நற்றாய் கவன்றுரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிட, அதனையறிந்து அவளைப் பெற்ற தாய் வருந்தித் தனக்குத் தானே சொல்லிக்கொண்டது.

ஒல்லோம்!என்(று) ஏங்கி உயங்கி இருப்பளோ?
கல்இவர் அத்தம் அரிபெய் சிலம்பொலிப்பக்
கொல்களிறு அன்னான்பின் செல்லுங்கொல் என்பேதை
மெல்விரல் சேப்ப நடந்து.

தெளிவுரை

தலைவனுடன் தலைவி புறப்பட்டுப் போய்விட்டாள். அஃதறிந்த நற்றாய், "என் மகள் களிறனைய காதலன் பின்னால் காற்சிலம்பு ஒலிக்க, கற்கள் மேலெழுந்து நிற்கும் பாலை நில வழியே தன் மெல்லிய காலடிகள் சிவப்ப நடந்து செல்வாளோ? அல்லது செல்ல இயலாமல் வாடித் துன்புற்றிருப்பாளோ? அறியேன் நான்" என்று வருந்தித் தன்னுள்ளே கூறிக் கொண்டாள்.

கருத்து

நடக்க இயலா வழியில் என் மகள் எப்படி நடப்பாளோ?

சொற்பொருள்

1. ஒல்லோம் - நம்மால் இயலாது; உயங்கி - வாடி; இருப்பளோ - துன்புற்றுத் தங்குவளோ?
2. கல் - கற்கள்; இவர் - மேலெழுந்து நிற்கும்படியான; அத்தம் - பாலை நில வழியில்; அரிபெய் - பரல்கள் இடப்பட்ட; சிலம்பொலிப்ப - சிலம்பு ஒலி செய்ய.
3. கொல்களிறு அன்னான் - கொல்லுகின்ற யானையை ஒத்தவனாகிய தலைவன்; பின் - பின்னே; செல்லுங்கொல் - செல்வாளோ?; என் பேதை - என் மகள்.
4. மெல் விரல் - மெல்லிய விரல்; சேப்ப - சிவக்கும்படியாய்.

நற்றாய் கூற்று

திணைமொழி ஐம்பது 20 **கண்ணன்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய நற்றாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்றுவிட்ட மகளை நினைந்து நற்றாய் வருந்திக் கூறியது.

ஏற்றிய வில்லின் எயினர் கடுஞ்சுரம்
பாற்றினம் சேரப் படுநிழல் கண்டஞ்சிக்
கூற்றன வல்வில் விடலையோ(டு) என்மகள்
ஆற்றுங்கொல் ஐய நடந்து.

தெளிவுரை

மகள் உடன்போக்கில் சென்றுவிட்டதை அறிந்த நற்றாய், "நாணை ஏற்றி அம்பினைப் பொருத்திய வில்லினைக் கொண்ட வேட்டுவர் வாழ்கின்ற கொடிய பாலை நிலத்தில் என் மகள் கூற்றுவனைப் போன்ற வலிமை வாய்ந்த வில்லை ஏந்தி நடந்து செல்லும் தலைவனுடன் சென்றுவிட்டாள். அங்குப் பருந்துக் கூட்டம் ஒன்றாய்க் கூடிப் பறக்க, அதனால் உண்டாகும் நிழலைக் கண்டு அது யாரோ ஒருவர் என்று அஞ்சி, மெல்ல நடந்து செல்லப் பொறுப்பாளோ?" என வருந்திக் கூறினாள்.

கருத்து

பாலை வழியில் பருந்து நிழலையும் கண்டஞ்சும் பாவை, வழிக் கொடுமை கண்டு கலங்காது செல்லுவளோ?

சொற்பொருள்

1. ஏற்றிய - நாணில் பூட்டிய அம்பினைப் பொருத்தி; (வளைத்த) வில்லின் - விற்களையுடைய; எயினர் - வேட்டுவர் (வாழும்); கடுஞ்சுரம் - கொடிய பாலைவனத்தில்.
2. பாற்றினம் - பருந்துக்கூட்டம்; சேர - ஒருங்கு கூடிப் பறக்க; படுநிழல் - அதனால் உண்டாகும் நிழலினை; கண்டு - பார்த்து; அஞ்சி - (யாதோ என) அச்சமுறுதலால்.

3. கூற்றன - கூற்றுவனை ஒத்த; வல்வில் - வலிய வில்லுடைய; விடலையோடு - காளையாகிய தலைவனுடனே.
4. ஆற்றுங்கொல்? - பொறுப்பாளோ?; ஐய நடந்து - மெதுவாய் நடந்து.

நற்றாய் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 75 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்றுவிட்ட தன் மகளை நினைந்து அவளைப் பெற்றெடுத்த தாய் வருந்திச் சொல்லியது.

> எரிந்து சுடும்இரவி ஈடில் கதிரான்
> விரிந்து விடுகூந்தல் வெஃகாப் – புரிந்து
> விடுகயிற்றின் மாசுணம் வீயும்நீள் அத்தம்
> அடுதிறலான் பின்சென்ற ஆறு.

தெளிவுரை

தலைவனுடன் மகள் உடன்போக்கில் சென்றனள். அதனை யறிந்த நற்றாய், "விரிந்த கூந்தலைக் கொண்ட என் மகள், போர் வன்மை மிக்க தலைவனுடன் விருப்பத்துடன் கூடிச் சென்று விட்டாள். அவள் சென்ற வழியில், சூரிய வெப்பத்தால் மலைப் பாம்புகள், முறுக்கிவிட்ட கயிறுபோன்று புரண்டு மாண்டு கிடக்கும்; கடத்தற்கரிய அந்நீண்ட வழியில் அவள் எப்படி நடந்து செல்வாளோ?" என்று வருந்திக் கூறினாள்.

கருத்து

வெப்பத்தால் மலைப்பாம்புகளும் மாண்டு கிடக்கும் வழியில் மகள் எப்படி நடந்து செல்வாளோ?

சொற்பொருள்

1. எரிந்து - அழன்று; சுடும் - சுடுகின்ற; இரவி - சூரியன்; ஈடில் - ஒப்பில்லாத; கதிரான் - கதிர்களின் வெப்பத்தினாலே.
2. விரிந்து விடு கூந்தல் - விரித்துவிட்ட கூந்தலைக் கொண்ட என் மகள்; வெஃகா - விருப்பத்தோடு (கூடி); புரிந்து - முறுக்கி.
3. விடு - விட்ட; கயிற்றின் - கயிற்றினைப் போன்று; மாசுணம் - மலைப்பாம்புகள்; வீயும் - புரண்டு மாண்டு கிடக்கும்; நீள் - நீண்ட; அத்தம் - வழி.
4. அடுதிறலான் - போர் வன்மை மிக்க தலைவன்; பின் - பின்னர்; சென்ற ஆறு - போன வழி.

நற்றாய் கூற்று

நற்றிணை 66 **இனிசந்த நாகனார்**

திணை : பாலை

கூற்று

மனை மருட்சி.

கூற்று விளக்கம்

(தலைவன் தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்ல, அதனை அறிந்த நற்றாய் மனையிலிருந்து கலக்கத்துடன் கூறுதல் மனைமருட்சி ஆம்.)

மெல்லியலான மகள், வெப்பம் மிக்க பாலை வழியினை எப்படிக் கடந்து செல்வாளோ என நற்றாய் கலங்கிக் கூறியது.

மிளகுபெய்து அனைய சுவைய புன்காய்
உலறுதலை உகாஅய்ச் சிதர்சிதர்த்து உண்ட
புலம்புகொள் நெடுஞ்சினை ஏறி நினைந்துதன்
பொறிகிளர் எருத்தம் வெறிபட மறுகி,
புன்புறா உயவும் வெந்துகள் இயவில்,
நயந்த காதலற் புணர்ந்தனள் ஆயினும்,
சிவந்துஒளி மழுங்கி அமர்த்தன கொல்லோ;
கோதை மயங்கினும் குறுந்தொடி நெகிழினும்,
காழ்பெயல் அல்குல் காசுமுறை திரியினும்,

10 மாண்நலம் கையறக் கலுழும்என்
மாயக் குறுமகள் மலர்ஏர் கண்ணே.

தெளிவுரை

"சிறிய அடிமரத்தையும் உலர்ந்த கிளைகளையும் கொண்ட உகாய் மரத்தின் காய்கள் மிளகைச் சுவைத்தாற்போன்ற சுவையினைக் கொண்டவை. அக்காய்களை அவற்றில் மொய்த்த வண்டுகளை விலக்கி உண்ட சிறிய ஆண்புறா நெடிய கிளையில் தங்கிப் பெண்புறாவை நினைக்கும்; புள்ளிகள் நிறைந்துள்ள அதன் கழுத்துமயிர் சிலிர்க்க, உகாய்க் காய்களைத் தின்ற காரணத்தால் மயக்கமுற்று வருந்தி நிற்கும்.

"இத்தகைய வெப்பம் கொண்ட, புழுதி படிந்த வழியில் தன்னை விரும்பிய காதலனோடு என் மகள் சென்றுவிட்டாள்.

"அவள், கூந்தலில் தான் சூடியுள்ள மாலை சிக்குண்டாலும், சிறிய வளையல்கள் நெகிழ்ந்தாலும், இடையில் அணிந்துள்ள மணிக்கோவையில் பொருத்தப்பெற்ற பொற்காசு முறைபிறழ்ந்து கிடந்தாலும் அவற்றைத் திருத்துதற்கு அறியாமல் கண்கலங்கி மாட்சிமைப்பட்ட தன் அழகு அழிந்தொழியுமாறு அழுவாள்.

"அத்தகைய என் அழகிய இளம் புதல்வியின் மலர் போன்ற கண்கள் வழிநடை வருத்தத்தால் சிவந்து ஒளி மழுங்கிக் கலக்கம் அடைந்தனவோ?" என்று நற்றாய் தன் மகளை நினைத்து மனக் கலக்கத்துடன் கூறினாள்.

கருத்து

கூந்தலில் சூடிய மாலையில் சிக்குண்டாலும், வளையல்கள் நெகிழ்ந்தாலும், மணிக்கோவையில் பொற்காசு பிறழ்ந்தாலும் அவற்றைத் திருத்த அறியாது அழும் ஏதுமறியா என் மகள் கொடிய வழிநடை வருத்தத்தில் அழுது புலம்புவளோ?

இறைச்சி

தின்னத் தகாத காயைப் புறா தின்று, கிளையிலே கலக்கமுற்று வருந்தும் என்னும் தொடர்மூலம், தலைவி அயலவனான தலைவனின் மாய இன்பத்தினை நன்றெனக் கருதிச் சென்று,

பின்பு கலங்கி வருத்தமுறுவாளோ எனத் தாய் வருந்துகிறாள் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. மிளகு பெய்து அனைய - மிளகினை இட்டு வைத்தாற்போன்ற; சுவைய - சுவையைக் கொண்ட; புன்காய் - சிறிய காய்.
2. உலறுதலை - காய்ந்த கிளை; உகாஅய் - உகாய் மரத்தின் காய்; சிதர் - வண்டு; சிதர்த்து - விலக்கி.
3. புலம்பு - தனிமை; சினை - கிளை; நினைந்து - (தன் பெண் புறாவை) நினைத்து.
4. பொறி - புள்ளி; கிளர் - நிறைந்துள்ள; எருத்தம் - கழுத்து; வெறிபட - மயக்கமுற்று; மறுகி - கலக்கமுற்று.
5. புன்புறா - சிறிய புறா; உயவும் - வருந்தும்; வெந்துகள் - வெப்பமான புழுதி; இயவு - வழி.
6. நயந்த - தான் விரும்பிய; புணர்ந்தனள் - கூடினள்.
7. ஒளி மழுங்கி - ஒளி மங்கி; அமர்த்தன கொல்லோ - (நிலத்தில்) பொருந்தினவோ?
8. கோதை - மாலை; மயங்கினும் - சிக்குண்டாலும்; குறுந்தொடி - சிறிய வளையல்.
9. காழ் - மணிக்கோவையில்; பெயல் - பொருத்தப்பட்டுள்ள; காசு - பொற்காசு.
10. மாண்நலம் - சிறந்த அழகு; கையற - செயலற்றுவிட, அழிந்தொழிய; கலுழும் - கண் கலங்கி அழுவாள்.
11. மாயம் - அழகு; குறுமகள் - இளமகள்; மலர்ஏர் - மலர் போன்ற.

நற்றாய் கூற்று

நற்றிணை 179 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

மனை மருட்சி. (மனையிலிருந்து மனம் மயங்கிக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவனுடன் சென்றுவிட்ட தன் மகளை நினைந்து நற்றாய், தன் வீட்டிலிருந்து மனம் மயங்கிக் கூறியது.

இல்எழு வயலை ஈற்றுஆ தின்றெனப்
பந்துநிலத்து எறிந்து, பாவை நீக்கி,
அவ்வயிறு அலைத்தஎன் செய்வினைக் குறுமகள்
மான்அமர்ப்பு அன்ன மையல் நோக்கமொடு,
யானும் தாயும் மடுப்ப, தேனொடு
தீம்பால் உண்ணாள், வீங்குவனள் விம்மி,
நெருநலும் அனையள் மன்னே; இன்றே,
மைஅணற் காளை பொய்புகல் ஆக,
அருஞ்சுரம் இறந்தனள் என்ப,தன்
முருந்துஏர் வெண்பல் முகிழ்நகை திறந்தே.

தெளிவுரை

இளமையளான என் மகள் வீட்டில் முளைத்துப் படர்ந்த வயலைக்கொடியை, கன்றினை ஈன்ற பசு தின்றதைக் கண்டு, தான் விளையாடப் பயன்படுத்திய பந்தினை நிலத்தில் எறிந்தாள்; விளையாட்டுப் பாவையையும் ஒருபுறத்தே ஒதுக்கித் தள்ளினாள்; தன் அழகிய வயிற்றிலே அடித்துக்கொண்டாள்; மான்போன்று விரும்பத்தக்க பார்வை கொண்ட அவளுக்கு நானும் செவிலித் தாயும் தேனொடு கலந்த இனிய பாலை ஊட்டவும் உண்ணாது, கன்னம் வீங்குமாறு விம்மி அழுது கொண்டிருந்தாள். நேற்று வரை அத்தன்மை கொண்டவளாய் இருந்த அவள், இன்றோ கருத்த தாடியைக் கொண்ட காளை ஒருவன் கூறிய பொய்ம் மொழிகளை உண்மையெனக் கொண்டு, இளமுறுவலுடன் அரிய சுரங்களைக் கடந்து சென்றுவிட்டாள்.

கருத்து

வயலைக் கொடியைப் பசு தின்றதால், பந்தினையும் பாவையையும் எறிந்துவிட்டு வயிற்றிலே அடித்துக்கொண்டு வருந்திப் புலம்பிய என் மகள், இல்லினைத் துறந்து புதியவனின் பின்னர்ச் செல்லும் துணிவினை எங்ஙனம் பெற்றனளோ?

சொற்பொருள்

1, இல் எழு - வீட்டில் முளைத்தெழுந்த; வயலை - ஒருவகைக் கொடி; ஈற்று ஆ - கன்று ஈன்ற பசு.
2. பாவை - விளையாட்டுப் பொம்மை.
3. அ வயிறு - அழகிய வயிறு; அலைத்த - அடித்துக்கொண்ட; செய் வினை - செய்யும் செயலில் (வல்லவளான); குறுமகள் - இளமகள்.
4. மான் அமர்ப்பு அன்ன - மானினது விரும்பத்தக்க பார்வையைப் போன்ற; மையல் நோக்கம் - விருப்பம் தரும் பார்வை.
5. தாய் - செவிலித்தாய்; மடுப்ப - ஊட்ட.
6. தீம்பால் - இனிய பால்; வீங்குவனள் - கன்னம் வீங்குமாறு; விம்மி - விம்மி (அழுதாள்).
7. நெருநல் - நேற்று; அனையள் - அத்தன்மையவளாய் இருந்தவள்; இன்றே - இன்று.
8. மை அணல் - கரிய தாடி; காளை - காளை போன்றவனான தலைவன்; புகலாக - பற்றுக்கோடாய்க் (உண்மையெனக்) கொண்டு.
9. அருஞ்சுரம் - அரிய வழி; இறந்தனள் - கடந்தனள்; என்ப - என்று கூறுவர்.
10. முருந்து ஏர் - மயிலிறகுக் குருத்துப் போன்ற; முகிழ்நகை திறந்தே - இளமுறுவலுடன்.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 377 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் உடன்போயவழி அவள் பந்து முதலாகிய கண்ட நற்றாய் கலங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள். அதனை அறிந்த நற்றாய் அவள் விளையாடிய பந்து முதலியவற்றைக் கண்டு மனம் வருந்திக் கூறியது.

நீர்நசைக்கு ஊக்கிய உயவல் யானை
இயம்புணர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்
சென்றனள் மன்ற,என் மகளே!
பந்தும் பாவையும் கழங்கும்எமக்கு ஒழித்தே.

தெளிவுரை

நீர் வேட்கையால் வருத்தமுற்றுத் தவிக்கும் யானை, அதனைப் பெற முயன்று தன் துதிக்கையை மேலே உயர்த்தி, உள்துளை கொண்ட நெடுவங்கியம் எனும் இசைக்கருவியின் ஓசைபோலப் பெருமூச்சு விடும். அத்தகைய காட்சிக்கிடனான வெப்பம் மிக்க பாலை வழியில் என் மகள், தான் விளையாடிய பந்து, பாவை, கழங்கு ஆகியவற்றை யாம் கண்டு வருந்துமாறு எம்மிடம் விட்டுவிட்டுச் சென்றுவிட்டனளே!

கருத்து

என் மகள் தன் விளையாட்டுப் பொருள்களை நாங்கள் பார்த்துப் பார்த்துப் புலம்பவோ விட்டுச் சென்றாள்? நீரில்லாத அருவழியை எப்படித்தான் கடப்பாளோ!

சொற்பொருள்

1. நசை - வேட்கை, தாகம்; ஊக்கிய - முயன்ற; உயவல் - வருத்தத்தைக் கொண்ட.
2. இயம் - இசைக்கருவிகளுடன்; புணர் - சேர்ந்து; தூம்பு - நெடு வங்கியம் எனும் இசைக்கருவியைப் போல; உயிர்க்கும் - ஒலி எழுப்பும்; அத்தம் - காட்டுவழி.
4. கழங்கு - கழற்சிக்காய்.

நற்றாய் கூற்று

அகநானூறு 105 **தாயங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி உடன்போக்கில் சென்றுவிட்டதையறிந்து நற்றாய் வருந்திச் சொல்லியது.

அகல்அறை மலர்ந்த அரும்புமுதிர் வேங்கை
ஒள்இலைத் தொடலை தைஇ, மெல்லென
நல்வரை நாடன் தற்பா ராட்ட
யாங்குவல் லுநள்கொல் தானே – தேம்பெய்து,
மணிசெய் மண்டைத் தீம்பால் ஏந்தி,
ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள்,
நிழற்கயத் தன்ன நீள்நகர் வரைப்பின்
எம்முடைச் செல்வமும் உள்ளாள் பொய்ம்மருண்டு;
பந்துபுடைப் பன்ன பாணிப் பல்அடிச்
சில்பரிக் குதிரை, பல்வேல் எழினி
கெடல்அரும் துப்பின் விடுதொழில் முடிமார்,
கனைஎரி நடந்த கல்காய் கானத்து
வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்
தேம்பிழி நறுங்கள் மகிழின், முனைகடந்து,
வீங்குமென் சுரைய ஏற்றினம் தரூஉம்
முகைதலை திறந்த வேனில்
பகைதலை மணந்த பல்அதர்ச் செலவே?

தெளிவுரை

“நெஞ்சே! மணிகள் இழைத்த பொற்கிண்ணத்தில் இனிய பாலோடு தேனும் கலந்து ஏந்தியவராய்ச் செவிலித்தாயர் ஊட்டவும் உண்ணாதவள், என் மகள்; நிழலின்கீழ் உள்ள குளம் போலக் குளிர்ச்சி பொருந்திய நெடிய எம் மாளிகையில் உள்ள செல்வச் செழிப்பையும் கருத்தில் கொள்ளாதவளாய்ச் சென்று விட்டாள்.

"அகன்ற பாறையிடத்தே, வேங்கைமர இலையையும் பூவையும் சேர்த்துக் கட்டிய மாலையை அணிந்த மலைநிலத்தலைவன், தன்னைப் பாராட்டிக் கூற அவன் சொல்லிய பொய்ம்மொழிகளில் மயங்கி என் மகள் அவன் பின்னே எப்படித்தான் சென்றாளோ?

"எழினி என்பான் பெரும் வலிமை வாய்ந்தவன்; தாளம் தப்பாது அடியிட்டுச் செல்லும் குதிரைப்படையும், சிறந்த வேற்படையும் உடையவன். அவன் வீரர்கள் அவன் ஏவிய பணியினை வெற்றியுடன் செய்து முடிக்கும் போர்த்திறன் மிக்கவர்; அம்பினைக் குறி தப்பாது தொடுக்கும் பயிற்சி மிக்கவர். அவர்கள் கள்ளுண்ட மகிழ்ச்சியில் பகைவரைப் போரில் வென்று, பருத்து மெல்லிய மடியினைக் கொண்ட பசுக்கூட்டங்களோடு காளைகளையும் பாலைநில வழியாக ஓட்டி வருவார்கள். பகைவருடன் நெருங்கிப் போரிடும் அப்பாலைவழியில் கற்பாறைகளே வெடித்தற்குக் காரணமாகிய வேனிற்காலத்தில், என் மகள், எங்ஙனம் நடக்க வல்லவள் ஆயினளோ?

கருத்து

பாலொடு தேன் கலந்து செவிலி ஊட்டவும் உண்ண மறுத்த மென்மையான என் மகள் பாலைநில வழியில் எப்படி நடப்பாளோ?

விளக்கம்

பொற்கிண்ணத்தில் பாலை ஏந்தி ஊட்டினாலும் உண்ண மறுத்த என் மகள், ஒருவன் கூறிய பொய்ம்மொழிகளில் மயங்கிச் சென்றுவிட்டனளே! சுட்டெரிக்கும் பாலை வழியில் அவள் எப்படித்தான் நடப்பாளோ?

சொற்பொருள்

1. அகல்அறை - அகன்ற பாறை; வேங்கை - வேங்கை மரத்தின்.
2. ஒள் இலை - ஒள்ளிய இலை; தொடலை - மாலை; தைஇ - விராவிய.
4. யாங்கு வல்லுநள் கொல்? - எங்ஙனம் வல்லமை பெற்றனளோ?
5. மணிசெய் மண்டை - மணிகள் இழைத்த பொற்கலத்தில்; தீம்பால் - இனிய பால்.
6. ஈனாத் தாயர் - செவிலித்தாயர்; மடுப்பவும் - ஊட்டவும்.

7. நிழற்கயத்து அன்ன - நிழலில் உள்ள குளம்போல (குளிர்ச்சி பொருந்திய); நீள்நகர் - நீண்ட மாளிகை; வரைப்பின் - இடத்தேயுள்ள.
8. உள்ளாள் - எண்ணாள்; பொய்ம் மருண்டு - பொய்யை மெய்யென மயங்கி.
9. பந்து புடைப்பு அன்ன - பந்து புடைக்கப்பட்டு எழுவது போன்ற; பாணி - தாளத்துடன் பொருந்திய; பல் அடி - பலவாகிய அடி வைப்பினைக் கொண்ட.
10. சில்பரி - சிலவாகிய குதிரை; எழினி - குதிரை என்னும் மலைக்குத் தலைவன்.
11. கெடல் அரும் துப்பின் - கெடுதல் இல்லாத வல்லமையுடன்; விடுதொழில் முடிமார் - ஏவிவிட்ட தொழிலை முடிக்கும்பொருட்டு.
12. கனை எரி - மிக்க வெப்பம்; நடந்த - படுதலான்; கல்காய் - பாறைகள் சூடாய் இருக்கும்.
13. வினை வல் அம்பின் - தொழில் வல்லமை கொண்ட அம்பு; விழுத்தொடை - தப்பாது தொடுக்கும்.
14. தேம்பிழி நறுங்கள் மகிழின் - பிழிந்த தேனால் சமைத்த கள்ளினை உண்ட மகிழ்ச்சியால்; முனை கடந்து - பகைவர் போர்முனையைக் கடந்து சென்று.
15. வீங்குமென் சுரைய - பருத்த மெல்லிய சுரப்பிகளைக் கொண்ட; ஏற்றினம் - (ஏறுகளோடு கூடிய) பசுக்கூட்டத்தை; தரூஉம் - கொண்டுவந்து தரும்.
16. முகைதலை - மலை முழைஞ்சுகள்; திறந்த - வெடித்தற்கேதுவாகிய.
17. பகைதலை மணந்த - பகைவருடன் பொருதக் கூடிய; பல்அதர் - பலவாகிய வழிகளில்; செலவே - செல்லுதல்.

நற்றாய் கூற்று

அகநானூறு 219 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்திற்கு இடையூறு உண்டாவதால் தலைவி தன் உறவினர் அறியாமல் தலைவனுடன் சென்றுவிட்டாள். அதனால் ஆற்றாமை மிகுந்த நற்றாய் கூறியது.

சீர்கெழு வியன்நகர்ச் சிலம்புநக இயலி,
ஓரை ஆயமொடு பந்துசிறிது எறியினும்,
'வாரா யோ'என்று ஏத்தி, பேர்இலைப்
பகன்றை வான்மலர் பனிநிறைந் ததுபோல்
பால்பெய் வள்ளம் சால்கை பற்றி,
'என்பாடு உண்டனை ஆயின், ஒருகால்,
நுந்தை பாடும் உண்'என்று ஊட்டி,
பிறந்ததற் கொண்டும் சிறந்தவை செய்து,யான்
நலம்புனைந்து எடுத்தஎன் பொலந்தொடிக் குறுமகள்
அறனி லாளனொடு இறந்தனள், இனிஎன,
மறந்துஅமைந்து இராஅ நெஞ்சம் நோவேன்–
'பொன்வார்ந் தன்ன வைவால் எயிற்றுச்
செந்நாய் வெரீஇய புகர்உழை ஒருத்தல்
பொரிஅரை விளவின் புன்புற விளைபுழல்,
அழல்எறி கோடை தூக்கலின், கோவலர்
குழல்என நினையும் நீர்இல் நீள்இடை,
மடத்தகை மெலியச் சாஅய்,
நடக்கும் கொல்?'என, நோவல் யானே.

தெளிவுரை

என் அருமை மகள், சிறப்புமிக்க பெரிய வீட்டில் தன் சிலம் பொலிக்க நடந்து, தன் தோழியரோடு பந்து விளையாடுவாள்.

அவள் சிறிது பொழுதே விளையாடியிருந்தாலும் (களைத் திருப்பாள் என்று கருதி), 'இங்கு என்னிடம் வருக' என அழைத்துப் பாராட்டிப் பேசுவேன்; அகன்ற இலையினைக் கொண்ட பகன்றையின் வெண்ணிறப் பூக்கள், பனிநீரால் நிறைந் திருப்பதுபோலத் தோன்றுகின்ற பால் பெய்த வெள்ளிக் கிண்ணத்தைக் கையில் பற்றி அவளுக்கு ஊட்ட முயல்வேன். (அவள் சிறிது உண்டதும் மறுப்பாள்.) "என் பங்குக்கு உண்டு விட்டாய்; இதுபோல உன் தந்தையின் பங்குக்கும் உண்ண வேண்டாவா?" என்று இரந்து ஊட்டுவிப்பேன். பிறந்தது முதலே பற்பல சிறப்புகளைச் செய்து அவள் நலம் பேணி வளர்த்து வந்தேன். பொற்றொடி அணிந்த அந்த இளைய மகள் அறத் தன்மை இல்லாத ஒருவனோடு இன்று சென்றுவிட்டாள்.

பொன்கம்பியை இழுத்துச் செய்யப்பட்டதுபோலக் கூர்மை யான வெண்ணிறப் பற்களைக் கொண்ட செந்நாய்க்கு அஞ்சியது புள்ளிகளைக் கொண்ட ஆண்மான் ஒன்று. அந்த மான், புள்ளிகள் பொருந்திய அடி மரத்தினைக் கொண்ட விளா மரத்தின் பழங்களின் மேலுள்ள மெல்லிய ஓட்டில் தோன்றிய துளையில் வெப்பம் மிகுந்த மேல்காற்றுப் புகுந்து எழும் ஒலியைத் தொலைவில் பசுக்களை மேய்க்கும் கோவலர்களின் குழலோசை என்று கருதியது. அந்த இடம் தனக்குப் பாதுகாப் பானது என்று கருதி, செந்நாய்க்கு அஞ்சிய அம்மான் அங்கே ஓடும்.

அத்தகைய நீரில்லாத நீண்ட காட்டுவழியில் என் மகள் மடப்பத்தைக் கொண்ட தன் அழகுத்தன்மையெல்லாம் கெடுமாறு மெலிந்து, நடப்பதற்கு வல்லமை வாய்ந்தவளோ என்று நினைந்து வருந்துகின்றேன்.

கருத்து

இங்குப் பாலையும் குடிக்க மறுத்த அவள், பாலை வழியில் நடக்க வல்லவளோ?

விளக்கம்

நான் நலத்துடன் வளர்த்த என் இளைய மகள், அறத்தன்மை இல்லாத ஒருவனோடு அரிய வழியிலே சென்றுவிட்டாள்;

அவள் சென்றுவிட்டாளே என்பதற்காக நான் வருந்தவில்லை. இங்குப் பாலையும் குடிக்க மறுத்த அவள், அங்கு நீரில்லாத நீண்ட வழியில் தன் அழகெல்லாம் கெடுமாறு மெலிந்து இளைத்து நடப்பதற்கு வல்லவளோ என்று நினைந்தே வருந்துகிறேன்.

தாய்மை உள்ளத்தை வெளிப்படுத்திக் காட்டும் இனிய பாடல், இது.

சிறப்புக் குறிப்பு

செந்நாய்க்கு அஞ்சிய கலைமான் விளாம்பழத்துளையில் காற்றுப் புகுந்து எழுப்பும் ஒலியைக் கோவலரின் குழல் எனக் கருதித் தனக்குப் பாதுகாப்புக் கிடைத்தது என மயங்கியது என்னும் தொடர்மூலம், பாலை நில வெப்பத்தால் தன் மகள் என்ன பாடுபடுவாளோ என அஞ்சிய தாய், அவளுடன் தலைவன் இருக்கிறான் என்னும் எண்ணத்தால் அவ்வச்சம் சற்றுக் குறைகிறது எனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று.

சொற்பொருள்

1. சீர் கெழு - சிறப்புப் பொருந்திய; வியன்நகர் - பெரிய வீடு; நக - ஒலிக்க; இயலி - நடந்து.
2. ஓரை - மகளிர் விளையாட்டு; ஆயமொடு - தோழியரோடு; சிறிது - சிறிது பொழுதே; எறியினும் - எறிந்து விளையாடியிருந்தாலும்.
3. ஏத்தி - பாராட்டி; பேர்இலை - பெரிய இலை.
4. பகன்றை - பகன்றைக்கொடி; வான் மலர் - வெண்ணிறப் பூக்கள்; பனி - பனிநீர்.
5. வள்ளம் - கிண்ணம்; சால்கை - சால்புடைய கை.
6. என்பாடு - என் பங்குக்கு; ஒருகால் - ஒரு முறை.
7. நுந்தை பாடும் - உம் தந்தையின் பங்கிற்கும்.
8. பிறந்ததற்கொண்டு - பிறந்தது முதல்.
9. எடுத்த - வளர்த்த; குறுமகள் - இளமகள்.
10. அறனிலாளனொடு - அறம் இல்லாதவனொடு (தலைவனொடு); இறந்தனள் - சென்றுவிட்டனள்.
11. மறந்து அமைந்து இராஅ நெஞ்சம் - சிறிதும் மறந்திருத்தலில்லாத நெஞ்சம்.
12. பொன் வார்ந்தன்ன - பொற்கம்பியை இழுத்துச் செய்யப்பட்டது போல; வைவால் எயிறு - கூரிய வெண்மையான பற்கள்.

13. வெரீஇய - அஞ்சிய; புகர்உழை ஒருத்தல் - புள்ளிகளைக் கொண்ட ஆண் மான்.
14. பொரிஅரை - பொரிந்த அடிமரத்தினைக் கொண்ட; விளவின் - விளாம் பழத்தின்; புன்புறம் - மேற்புறம்; விளைபுழல் - தோன்றிய துளையில்.
15. அழல் எறி - வெப்பத்தை வீசும்; கோடை - மேல்காற்று; தூக்கலின் - நுழைந்து இசைத்தலின்; கோவலர் குழல் என - (அது) இடையரது குழலோசை என்று; நீள்இடை - நீண்ட வழி.
17. மடத்தகை - இளமையயுடைய அழகு; மெலிய - கெட; சாஅய் - மெலிந்து.
18. நோவல் - வருந்துகின்றேன்.

நற்றாய் கூற்று

அகநானூறு 207 **மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, தன் சுற்றத்தார் அறியாதவாறு இரவில் தலைவனுடன் சென்று விட்டாள். பாலை நில வழியில் அவள் சென்றதை அறிந்த நற்றாய் வருந்திக் கூறியது.

அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார், புள்ஓர்த்துப்
படைஅமைத்து எழுந்த பெருஞ்செய் ஆடவர்
நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம்பு உதைத்த கல்பிறழ் இயவின்,
வெஞ்சுரம் போழ்ந்த, அஞ்சுவரு கவலை,
மிஞிறுஆர் கடாஅம் கரந்துவிடு கவுள,
வெயில்தின வருந்திய, நீடுமருப்பு ஒருத்தல்
பிணர்அழி பெருங்கை புரண்ட கூவல்

தெண்கண் உவரிக் குறைக்குட முகவை
அறனி லாளன் தோண்ட, வெய்துஉயிர்த்து,
பிறைநுதல் வெயர்ப்ப உண்டனள் கொல்லோ–
தேம்கலந்து அளைஇய தீம்பால் ஏந்திக்
கூழை உளர்ந்து மோஸழமை கூறவும்,
மறுத்த சொல்லள் ஆகி,
வெறுத்த உள்ளமொடு உண்ணா தோளே?

தெளிவுரை

அச்சத்தைத் தரும் கடல்நீர், உப்பு வயலில் பாய்ந்து, வெயிலில் காய்ந்து உப்பாய் விளையும். அதனை மேற்குத்திசையிலுள்ள நாடுகளுக்குக் கொண்டுசென்று விற்பதற்காக வீரம் மிக்க உமணர், நல்ல சகுனம் பார்த்து, பாதுகாப்புக்குப் படைத்துணை யினையும் அமைத்துக்கொண்டு, உப்பு மூட்டைகளை நரைத்த முதுகினைக் கொண்ட கழுதைகள்மீது ஏற்றுவர். நிரையாகப் பாரத்தைச் சுமந்து செல்லும் கழுதைகளின் தேய்ந்த குளம்புகள் உதைத்தலால், பரல்கற்கள் பிறழ்ந்து கிடக்கும் வழிகள், பாலை நிலத்தை ஊடறுத்துச் செல்லுவதுபோல விளங்கும்.

அத்தகைய அச்சம் தரும் வழியில், மதநீர் சொரிந்ததால் வண்டுகள் மொய்த்த கன்னத்தைக் கொண்ட ஆண்யானை, வெயிலால் வருந்தி, மெலிந்து, நீர்வேட்கை கொண்டு திரியும். ஓரிடத்தில் நீரற்ற பாழுங்கிணறு தென்பட, அதனைத் தன் நீண்ட கொம்புகளுக்கிடையேயுள்ள சொரசொரப்பு அழிந்த பெரிய துதிக்கையால் துழாவித் தோண்டிவிட்டுச் செல்லும்.

என் மகளை உடனழைத்துச் சென்ற அறனில்லாத காதலன் அக்கிணற்றினை மேலும் தோண்டச் சிறிதளவு தெளிந்த உவர்நீர் ஊறும்; அந்நீரைக் குடத்தில் முகந்தால் குறை குடமாகவே இருக்கும்.

எம் மகள் இங்குச் செல்லமாய் வளர்ந்தவள். பாலில் தேன் கலந்து, கிண்ணத்தில் ஏந்தி, அவள் கூந்தலைக் கோதி, பணிந்து, நயமான சொற்களைச் சொல்லி, 'இதைப் பருகு' என்றாலும் வேண்டா என்று உண்ண மறுத்து ஓடுபவள்.

இத்தகையவள், இப்போது, அந்தச் சிறிதளவு உவர்நீரை, காதலன்மீதுள்ள அன்பால், பிறை போன்ற தன் நெற்றி வியர்க்க வெப்பப் பெருமூச்சோடு உண்பாளோ?

கருத்து

பாலை உண்ண மறுத்தவள் பாலை வழியில் குடிக்க நல்ல நீரின்றியும் தவிப்பாளே!

விளக்கம்

உடன்போக்கில் மகள் செல்ல அதனால் வருந்திய தாய், "தேன் கலந்த பாலை, இனிய சொற்களைக் கூறி வேண்டினாலும் உண்ண மறுத்த என் மகள், பாலை வழியில் காதலன் தோண்டிய கூவலில் குறைகுடமாய் முகந்த உவர்நீரை வெப்பப் பெருமூச்சு விட்டு நெற்றி வியர்க்கப் பருகினாளோ?"என்று உருகினாள்.

சொற்பொருள்

1. அணங்குடை - அச்சத்தைத் தரும்; முந்நீர் - கடல்; பரந்த - பாய்ந்த; செறுவின் - வயலில்.
2. உணங்குதிறம் - (நீர்) வெயிலில் காய்ந்த தன்மையால்; பெயர்ந்த - வேறாகிய; வெண்கல் அமிழ்தம் - வெண் கல்லாகிய உப்பு.
3. குடபுல மருங்கின் - மேற்குத் திசையில்; உய்ம்மார் - கொண்டு செல்வதற்காக; புள்ஓர்த்து - (பறவைச்) சகுனம் பார்த்து.
4. பெருஞ்செய் ஆடவர் - வீரச்செயல்களைப் புரியும் ஆடவர்.
5. நிரைப்பரப் பொறை - அடுக்கிய பொதியாகிய சுமை; நரைப்புறம் - நரைத்த முதுகு.
6. குறைக்குளம்பு - தேய்ந்த குளம்புகள்; உதைத்த - உதைத்தலால்; கல்பிறழ் - பரற்கற்கள் பிறழ்ந்து கிடக்கும்; இயவு - வழி.
7. போழ்ந்த - ஊடறுத்துச் செல்லும்; அஞ்சு வரு - அச்சத்தைத் தரும்; கவலை - கவர்த்த வழி.
8. மிஞிறு ஆர் - வண்டுகள் பொருந்தும்; கடாஅம் - மதம்; கரந்து விடு - மறைந்து வழியும்; கவுள - கன்னத்தினைக் கொண்ட.
9. வெயில் தின - வெயில் நலிதலால்; நீடு மருப்பு - நீண்ட தந்தத்தை; ஒருத்தல் - ஆண்யானை.
10. பிணர்அழி - சொரசொரப்பு அழிந்த; பெருங்கை - பெரிய துதிக்கை; புரண்ட - துழாவிப் பார்த்த; கூவல் - கிணறு.

11. தெண்கண் உவரி - தெளிந்த உவரைக் கொண்ட; குறைக்குட முகவை - குறை குடமாய் முகக்கப்பட்ட நீரை.
12. அறன் இலாளன் தோண்ட - அறம் இல்லாதவனாகிய தன் தலைவன் தோண்டுதலால் (ஊறிய); வெய்துயிர்த்து - பெருமூச்சு விட்டு.
13. பிறைநுதல் - பிறை போன்ற நெற்றி; வெயர்ப்ப - வியர்வை உண்டாக.
14. தேம் கலந்து - தேனைப் பெய்து; அளைஇய - நன்கு கலந்த; தீம்பால் - இனிய பால்.
15. கூழை - கூந்தல்; உளர்ந்து - கோதி; மோழைமை - நயமொழிகள்.
16. மறுத்த சொல்லள் - மறுத்துரைப்பவள்.
17. உண்ணாதோள் - உண்ணாதவள்.

நற்றாய் கூற்று

நற்றிணை 271 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

நற்றாய் மனைமருண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

மகள் உடன்போக்கில் சென்றதால் அயலார் கூறும் பழிச்சொற்களைத் தன் இல்லத்திலிருந்து கேட்ட நற்றாய், 'என்னை இன்னும் உயிர்கொண்டு செல்லாதிருக்கும் கூற்றுவன் கெட்டொழிவானாக' என்று மனம் மயங்கிப் பலவாறாய்க் கூறியது.

இரும்புனிற்று எருமைப் பெருஞ்செவிக் குழவி
பைந்தாது எருவின் வெகுதுயில் மடியும்
செழுந்தண் மனையோடு எம்இவண் ஒழிய,
செல்பெருங் காளை பொய்ம்மருண்டு சேய்நாட்டுச்
சுவைக்காய் நெல்லிப் போக்குஅரும் பொங்கர்
வீழ்கடைத் திரள்காய் ஒருங்குடன் தின்று,
வீசுனைச் சிறுநீர் குடியினள், கழிந்த
குவளை உண்கண்என் மகள்ஓர் அன்ன,
செய்போழ் வெட்டிப் பொய்தல் ஆயம்,

மாலைவிரி நிலவில் பெயர்புபுறங் காண்டற்கு,
மாஇருந் தாழி கவிப்ப,
தாஇன்று கழிகஎற் கொள்ளாக் கூற்றே.

தெளிவுரை

எருமை அண்மையில் ஈன்றெடுத்த பெரிய காதுகளைக் கொண்ட கன்று, பசிய பூந்தாதுக் குவியலில் படுத்துத் தூங்கும் செழுமையும் குளிர்ச்சியும் கொண்டுள்ளது, எம் வீடு. அவ்வில்லத்தையும் எம்மையும் இங்கே விட்டுவிட்டு, தன்னுடன் வரும் பெரிய காளை போன்றவன் சொன்ன பொய்ம்மொழி களைக் கேட்டு மயங்கித் தொலைவிலுள்ள நாட்டிற்குச் சென்று விட்டாள், என் மகள்.

நெல்லி மரங்கள் செறிந்து, செல்லுதற்கரிய வழியிலுள்ள பெரிய சோலையில், தரையின் ஓர் ஓரத்தில் உதிர்ந்து கிடக்கும் திரண்டுள்ள சுவையான நெல்லிக்காய்களைத் தின்று, வறண்ட சுனையிலுள்ள மிகச்சிறிய அளவிலான நீரைப் பருகி, குவளை மலர்போலும் மையுண்ட கண்களைக் கொண்ட என் மகள் சென்றுகொண்டிருப்பாளே!

சிவந்த பனங்குருத்தைப் பிளந்து வெட்டிப் பதப்படுத்து தற்காகப் பனியில் போடுகின்ற மாலைப்பொழுதிற்குப் பின்னர், நிலவு விரிகின்ற இரவுப்போதில், அவளைத் தேடிப் பின் சென்றவர் அவளைக் காணாது மீண்டும் வருவதைக் காணவும் இன்னும் உயிரோடு இருக்கிறேனே!

அதற்கு முன்பே என்னைப் பெரிய தாழியிலிட்டுக் கவிக்கும் படி, என் உயிரைக் கொண்டுபோகாத கூற்றுவன், தானே வலி யிழந்து தன்னை அத்தாழியிலிட்டுக் கவிக்கும்படி இறந்து ஒழியட்டும்!

கருத்து

மகள் சென்ற பின்னரும் உயிரோடிருக்கிறேனே!

விளக்கம்

இளைய எருமைக்கன்று பூந்தாதின் மேலே படுத்துறங்கும் வளமிக்க எம் இல்லத்தையும் எம்மையும் நீங்கி, காளையொரு

வனுடன் என் மகள் காட்டுவழிச் சென்றுவிட்டாளே! அவ் வழியில் உதிர்ந்து கிடக்கும் நெல்லிக்காய்களைத் தின்று, வறண்ட சுனையிலிருக்கும் சிறிதளவு நீரைக் குடித்து அவள் செல்ல வேண்டுமே!

என் மகளைத் தேடிச் சென்றோர் அவளைக் காணாமல் திரும்புவதைக் காணுமுன் என் உயிரைக் கொண்டுசெல்லாமல் விட்டிருக்கும் கூற்றுவன் செத்தொழியட்டும்!

சொற்பொருள்

1. இரும் புனிற்று எருமை - அண்மையில் கன்றினை ஈன்றெடுத்த கரிய எருமை; பெருஞ்செவி - பெரிய காது; குழவி - கன்று.
2. பைந்தாது - பசிய பூந்துகள் (கிடக்கும்); எருவின் - குவியலின் (மேல்படுத்து); வெகு துயில் - மிக்க உறக்கம் கொண்டு; மடியும் - தலைசாய்த்திருக்கும்.
3. செழுந் தண்மனை - செழுமையுடைய குளிர்ச்சி பொருந்திய இல்லம்; எம் - எம்மை; இவண் ஒழிய - இங்கே தவிர்த்துவிட்டு.
4. செல்பெருங்காளை - தன்னோடு வருகின்ற பெரிய தலைவன்; மருண்டு - மயங்கி; சேய் நாடு - தொலைவில் உள்ள நாடு.
5. போக்குஅரும் பொங்கர் - போதற்கு அரிய சோலை.
6. வீழ் - உதிர்ந்த; கடைத்திரள் காய் - ஓரத்தில் திரண்டுள்ள காய்; ஒருங்குடன் - ஒருசேர.
7. வீ சுனை - வறண்ட சுனை; சிறுநீர் - சிறிது அளவு நீரை; குடியினள் - குடித்து; கழிந்த - சென்ற.
8. குவளை உண்கண் - குவளை போன்ற மையுண்ட கண்.
9. செய்போழ் வெட்டி - சிவந்த பனங்குருத்தைக் கீண்டு; பொய்தல் - பதனிடுமாறு போடுகின்ற.
10. விரி நிலவில் - விரிந்த நிலவிலே; பெயர் புறம் காண்டற்கு - பின்னே போய்க் காணும்படியாக விட்ட (என்னை, அதற்கு முன்னாலேயே).
11. மா இருந்தாழி கவிப்ப - பெரிய கரிய தாழியிலிட்டுக் கவிக்கும்படி.
12. கொள்ளாக் கூற்று - என்னுயிரைக் கொண்டுபோகாத கூற்றுவன்; தாஇன்று கழிக - தன் வலியிழந்து அந்தத் தாழியிலிட்டுக் கவிக்கும் படி இறந்தொழிக.

நற்றாய் கூற்று

அகநானூறு 275 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை உடன்போக்கில் அழைத்துச் சென்றான். தாய் தன் மகளைப் பிரிய நேர்ந்தமையால் வருந்தி, அயல்வீட்டுப் பெண்டிருக்குத் தலைவியின் அடிச்சுவட்டைக் காட்டிப் புலம்பிச் சொல்லியது.

ஓங்குநிலைத் தாழி மல்கச் சார்த்தி,
குடைஅடை நீரின் மடையினள் எடுத்த
பந்தர் வயலை, பந்துஎறிந்து ஆடி,
இளமைத் தகைமையை, வளமனைக் கிழத்தி –
'பிதிர்வை நீரை பெண்நீறு ஆக'என,
யாம்தன் கழறுங் காலை, தான்தன்
மழலை இன்சொல், கழறல் இன்றி,
இன்உயிர் கலப்பக் கூறி, நன்னுதல்
பெருஞ்சோற்று இல்லத்து ஒருங்குஇவண் இராஅள்,
ஏதி லாளன் காதல் நம்பி,
திரள்அரை இருப்பைத் தொள்ளை வான்பூக்
குருளை எண்கின் இருங்கிளை கவரும்
வெம்மலை அருஞ்சுரம், நம்இவண் ஒழிய,
இருநிலன் உயிர்க்கும் இன்னாக் கானம்,
நெருநைப் போகிய பெருமடத் தகுவி
ஐதுஅகல் அல்குல் தழைஅணிக் கூட்டும்
கூழை நொச்சிக் கீழது, என்மகள்
செம்புடைச் சிறுவிரல் வரித்த
வண்டலும் காண்டிரோ, கண்உடை யீரே?

தெளிவுரை

" 'வளங்கொழிக்கும் இல்லத்திற்குரிய மகளே! வீட்டு முற்றத்தில் உயரமான சாடியில் வயலைக்கொடியை நிறைய

நட்டு, பனங்குடையால் முகந்த நீரினை ஊற்றி வளர்த்தாய்! அக்கொடி வளர்ந்து படர்ந்துள்ள பந்தலின்கீழ், பந்து வீசி விளையாடுகின்றாய்! இளமைப்பருவத்தைக் கடந்தவளாகிய நீ இன்னும் சிறுமிபோலப் பந்தாடித் திரிகிறாய்! உன் பெண்மைத் தன்மை அழிந்துவிடாதா?" என்று நான் அவளைக் கடிந்து பேசினேன்.

"நல்ல நெற்றியைக் கொண்ட அவள் அதற்குக் கோபங் கொள்ளவில்லை; வன்மையாய் ஒரு சொல்லும் கூறவில்லை. மாறாய், மழலைச்சொற்களால் என் உயிர் தளிர்க்குமாறு பேசினாள். (இவ்வாறு அன்போடு பழகியவள் இன்று இங்கு இல்லை.)

"நாளும் பெருவிருந்து நிகழும் எம் இல்லத்தில் எம்முடன் இருக்க விரும்பாமல், எம்மை இங்கே விட்டுவிட்டு அயலான் ஒருவனின் அன்பை விரும்பி, அவனுடன் சென்றுவிட்டாள்.

"மிகுந்த மடப்ப குணம் வாய்ந்த அவள் கடந்து சென்றுள்ள நிலமோ, பெரிய மலைகளை ஒட்டிச் செல்லும் அரிய வழிகளைக் கொண்டது. அந்தப் பாலைநிலத்தில், இக்கோடைக்காலத்தில் வெப்ப மிகுதியால், தரை பெருமூச்சு விடுவதுபோல ஆவி பறந்து கொண்டிருக்கும். திரண்ட அடிப்பகுதியினைக் கொண்ட இருப்பை மரத்தின் துளை பொருந்திய வெண்ணிறப் பூக்களைக் கரடிக்குட்டிகளின் பெரிய கூட்டம் கவர்ந்து உண்டுகொண் டிருக்கும். அத்தகைய வழியிலே அவள் சென்றுவிட்டாள்.

"அதோ தெரியும் நொச்சி மரத்தின் தழைகளைக் கொய்து தான் என் மகள் தன் இடையில் உடுக்கும் தழையுடையைத் தொடுப்பாள். அந்த மரத்திற்குக் கீழே சிவந்த தன் சிறுவிரல் களால் என் மகள் கட்டி விளையாடிய மணல்வீட்டினைக் கண் இருப்பவர்களே, இதோ காணுங்கள்!" என்று ஊரவரிடம் தாய் கூறுகிறாள்.

கருத்து

நேற்று இங்கு என்னோடு மழலைமொழி பேசி இருந்தவள், இன்று இங்கில்லாமல் சென்றுவிட்டாளே!

விளக்கம்

"பந்து விளையாடியிருந்த என் மகளை, 'நீ என்ன இன்னும் சிறுமியா?' என்று நான் நேற்றுக் கண்டித்துப் பேசியபோது அவள் தன் மழலைச்சொல்லால் என் மனம் மகிழப் பேசியவள், இன்று இங்கே நாங்கள் தனித்திருக்க, அவள் அயலான் ஒருவனின் காதலை நம்பி, கொடுமைகள் நிறைந்த காட்டு வழியிலே சென்றுவிட்டாள்! அதோ! அந்த நொச்சி மரத்திற்குக் கீழ் அவள் கட்டி விளையாடிய மணல்வீடு இன்னும் இருக்கிறது, பாருங்கள்" எனத் தாய் அயல்வீட்டுப் பெண்டிரிடம் தன் வருத்தத்தைச் சொன்னாள்.

சொற்பொருள்

1. ஓங்குநிலைத் தாழி - உயரமான சாடியில்; மல்க - நிறைய; சார்த்தி - நட்டு.
2. குடை அடை நீரின் - பனங்குடையால் முகந்த நீரினை; மடையினள் எடுத்த - சொரிந்து வளர்த்த.
3. பந்தர் வயலை - வயலைக்கொடி படர்ந்த பந்தலில்.
4. தகைமையை - தன்மையை.
5. பிதிர்வை நீரை - சுற்றித் திரியும் தன்மை கொண்டவளாயுள்ளாய்; பெண் நீறு ஆக - உன் பெண்மைத்தன்மை அழிந்துவிடாதா?
6. கழறும் காலை - (நான் அவளைக்) கடிந்து கூறும்பொழுது.
7. கழறல் இன்றி - அவள் வன்மையாய் எதுவும் கூறாமல்.
9. பெருஞ்சோற்று இல்லத்து - நாளும் பெருவிருந்து நிகழும் எம் இல்லில்; ஒருங்கு இவண் இராஅள் - எம்முடன் கூடி இங்குத் தங்காதவளாய்.
11. திரள் அரை - திரண்ட அடிப்பகுதியினைக் கொண்ட; இருப்பை - இருப்பை மரத்தின்; தொள்ளை - துளை பொருந்திய; வான் பூ - வெண்மையான பூ.
12. குருளை எண்கின் - குட்டிக்கரடிகளின்; இருங்கிளை கவரும் - பெரிய கூட்டம் கவர்ந்து உண்ணும்.
13. வெம்மலை - கொடிய மலைகளைக் கொண்ட; நம் இவண் ஒழிய - நாம் இங்கே தனித்திருக்கும்படி.
14. இருநிலன் - பெரிய நிலம்; உயிர்க்கும் - அஞ்சி உயிர்த்தற்கு ஏதுவாகிய.
15. நெருநை - நேற்று.

16. ஐதுஅகல் - அழகிய அகன்ற.
17. கூழை - குறிய; நொச்சிக் கீழது - நொச்சிச்செடிக்குக் கீழே.
18. செம்புடைச் சிறுவிரல் வரித்த - சிவந்த சிறு விரல்களால் இயற்றப்பெற்ற.
19. வண்டல் - மணல்வீடு; காண்டிரோ - கண்டீர்களா?

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 375 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

சேரியும் அயலும் தேடிக் காணாது வந்தாரைக் கண்டு தலைமகள் தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனோடு சென்ற பின்னர் அவ்வூர்ச் சேரிகளிலும் அயலிடங்களிலும் பலர் அவளைத் தேடிப் பார்த்துக் காணாது திரும்பியவர்களைக் கண்டு, அவளைப் பெற்றெடுத்த தாய் கூறியது.

இதுவென் பாவை பாவை இதுவென
அலமரு நோக்கின் நலம்வரு சுடர்நுதல்
பைங்கிளி எடுத்த பைங்கிளி என்றிவை
காண்தொறும் காண்தொறும் கலங்க,
நீங்கின ளோஎன் பூங்க ணோளே?

தெளிவுரை

பாவை போன்ற என் மகள் வைத்து விளையாடிய பாவை (பொம்மை) இது; சுழற்சி பொருந்திய பார்வையையும் அழகு மிகுந்து ஒளிவீசும் நெற்றியினையும் கொண்ட பைங்கிளி போன்ற என் மகள் கையிலெடுத்துக் கொஞ்சி மகிழ்ந்த பச்சைக் கிளி இது; என இவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து நான் வருந்தி அழுதுகொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவே பூப் போன்ற கண்களைக் கொண்ட என் மகள் என்னை விட்டு நீங்கி விட்டனளோ?

கருத்து

'தான் வைத்து விளையாடிய பாவையையும், வளர்த்த பச்சைக்கிளியை யும் காணும்போதெல்லாம் நான் கலங்கியழ வேண்டும் என்பதற்காகவே என் மகள் என்னை விட்டு நீங்கினளோ' எனத் தாய் வருந்திக் கூறினாள்.

விளக்கம்

தலைவியுடன் தொடர்பு கொண்ட பொருள்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவள் நினைவே தோன்றித் தன்னை வருத்துதலின் தாய் கலங்கியழுகிறாள்.

சொற்பொருள்

1. இது என் பாவை - பாவை போன்ற என் மகள்; பாவை இது - அவள் வைத்து விளையாடிய பாவை (பொம்மை) இது.
2. அலமரு - சுழற்சி; நோக்கு - பார்வை; நலம் வரு - அழகு மிகுந்த; சுடர் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
3. பைங்கிளி - கிளி போன்ற என் மகள்; எடுத்த - வளர்த்த; பைங்கிளி - பச்சைக்கிளி.
4. கலங்க - வருத்த.
5. பூங்கணோள் - பூப்போன்ற கண்களைக் கொண்டவள்.

நற்றாய் கூற்று

அகநானூறு 383 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

மகள் தான் விரும்பிய காதலனுடன் சென்றுவிட்டாள்; அவளைப் பெற்றெடுத்த தாய், மகள் வளர்த்த வயலைக்கொடியை நோக்கி வருத்தத் துடன் சொல்லியது.

தன்புரந்து எடுத்த என்துறந்து உள்ளாள்,
ஊரும் சேரியும் ஓராங்கு அலர்எழ,
காடும் காவும் அவனொடு துணிந்து,
நாடும் தேயமும் நனிபல இறந்த
சிறுவன் கண்ணிக்கு ஏர்தே றுவர்என,
வாடினை—வாழியோ, வயலை! — நாள்தொறும்,
பல்கிளைக் கொடிக்கொம்பு அலமர மலர்ந்த
அல்குல் தழைக்கூட்டு அம்குழை உதவிய,
வினைஅமை வரல்நீர் விழுத்தொடி தத்தக்
கமஞ்சூல் பெருநிறை தயங்க முகந்துகொண்டு,
ஆய்மடக் கண்ணள், தாய்முகம் நோக்கி,
பெய்சிலம்பு ஒலிப்பப் பெயர்வனள், வைகலும்,
ஆரநீர் ஊட்டிப் புரப்போர்
யார்மற்றுப் பெறுகுவை? அளியை நீயே!

தெளிவுரை

வயலைக்கொடியே! நீ வாழ்க! என் மகள், தன்னை வளர்த்தெடுத்த என்னையும் நினைத்துப் பாராதவளாய், ஊரிலும் சேரியிலும் ஒரு தன்மையாய் அலர் உண்டாக, காடும் சோலையும் கடந்து காதலனுடன் செல்லத் துணிந்தனள். மிகப் பல நாடுகளையும் தேயங்களையும் கடந்து சென்ற வன்கண்மை வாய்ந்த இளையவளுக்கு இனி அழகு செய்விப்பவர் யார் என எண்ணியதுபோல நீ வாடியிருக்கிறாய். (வயலைக்கொடி அவள் ஒப்பனை செய்து கொள்ளப் பயன்பட்டது. இப்போது அவள் சென்றுவிட்டதால் தான் அவளை ஒப்பனை செய்ய இயலாததாயிற்றே என்று வருந்தியிருக்கிறது.)

நாள்தோறும் பல கிளையாய கொம்புகள் பாரம் தாங்காது அலமர, மலர்கள் நிறைந்த அழகிய குழையினை அவள் அல்குலிடத்தே அமையும் தழையுடைக்காக உதவினாய். இளமை தோன்றும் அழகிய கண்களைக் கொண்ட என் மகள் கையில் சிறந்த வளையல்கள் அசையவும், காலில் சிலம்பு ஒலிக்கவும் நீர் முகந்து வருவாள்; செய்தொழிலால் சிறப்புற்ற மூங்கில் குழாய் வழியாய் வந்து விழும் நீரினைப் பெரிய சால் நிரம்ப முகந்துகொண்டு வந்து நாள்தோறும் ஊற்றி, ஒரு

தாயைப்போல உன்னைப் பாதுகாத்தாள். அவளைப் போல உனக்கு நிறைய நீரினை ஊற்றி உன்னைக் காப்பவராக இனி யார் இருந்திடுவார்? (எவரும் இலர்) ஆதலால், நீ இரக்கத்துக்கு உரியை.

கருத்து

அவளால் வளர்க்கப்பட்ட வயலைக்கொடியே, உன்னையும் மறந்து அவள் சென்றுவிட்டாளே!

விளக்கம்

"வயலையே! தன்னை எடுத்து வளர்த்த என்னையும் பொருட் படுத்தாது என் மகள் தன் காதலனோடு போய்விட்டாள். இனி அவளை அழகு செய்விக்க இயலாதே என்பதை நினைத்து நீயும் வாடியுள்ளனையோ? அவளுக்குத் தழையுடைக்குப் பயன்படும் தளிர்களைத் தரும் உனக்கு நாள்தோறும் நீர் ஊற்றித் தாய்போலப் பார்த்துக்கொள்ள இனி யாரும் இருந்திடார். வயலையே! நீ இரக்கத்திற்கு உரியை!" என வயலைக் கொடியைப் பார்த்துத் தாய் புலம்புகிறாள்.

குறிப்பு

'என் மகள் தன்னைப் பாதுகாத்த என்னையும் பொருட்படுத்தவில்லை; தான் பாதுகாத்த உன்னையும் பொருட்படுத்தவில்லை' எனத் தாய் வயலையிடம் சொல்லி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. புரந்து - வளர்த்து; உள்ளாள் - நினையாள்.
2. ஓராங்கு - ஒன்றுபோல; அலர் - பழிச்சொல்.
3. கா - சோலை; அவனொடு - தன் தலைவனொடு.
4. நனிபல - மிகப்பல; இறந்த - கடந்த.
5. சிறு வன்கண்ணிக்கு - வன்கண்மை வாய்ந்த இளையவளுக்கு; ஏர் தேறுவர் என - அழகு செய்விப்பவர் எவர் என்று.
6. வயலை - ஒருவகைக் கொடி.
7. பல்கிளை - பல கிளையாய; கொடிக் கொம்பு - கொடியென வளையும் கொம்புகள்; அலமர - (பாரம் தாங்காது) சுழல.
8. தழைக்கூட்டு - தழையுடைக்குக் கூட்டும்; அம்குழை - அழகிய தளிர்.

9. வினை அமை வரல் நீர் - வேலைப்பாடமைந்த மூங்கிற்குழாய் வழியாக வந்து சொரியும் நீர் (அமை - மூங்கில்); விழுத்தொடி தத்த - சிறந்த வளையல் அசைய.
10. கமம் சூல் - நிறை சூல்; பெருநிறை - பெரிய சால்; தயங்க - அசைய.
11. ஆய் மடக்கண்ணள் - இளமை தோன்றும் கண்களைக் கொண்ட என் மகள்; தாய் முகம் நோக்கி - தாயன்பு முகத்தில் விளங்குமாறு நோக்கி.
12. பெய்சிலம்பு - பரல்கள் பெய்யப்பட்ட சிலம்பு; பெயர்வனள் - செல்வாள்; வைகலும் - நாள்தோறும்.
13. ஆரநீர் - மிகுதியான நீர்; ஊட்டி - பாய்ச்சி; புரப்போர் - பாதுகாப்பவர்.
14. யார்மற்றுப் பெறுகுவை - வேறு யாரைப் பெறவிருக்கிறாய்? அளியை நீ - நீ இரக்கத்திற்கு உரியை.

நற்றாய் கூற்று

நற்றிணை 184 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

மனை மருட்சி.

கூற்று விளக்கம்

மகளது பிரிவைத் தாங்க இயலாமல் மனையிலிருந்து மயங்கிப் புலம்பிய தாயிடம், ‘மகள் அறவழியில் சென்றுள்ளாள்; அதனால் பொறுத்துக்கொள்க’ என்று கூறியவர்களிடம், ‘அஃதெப்படி இயலும்?’ எனக் கலங்கிக் கூறியது.

ஒருமகள் உடையேன் மன்னே; அவளும்
செருமிகு மொய்ம்பின் கூர்வேல் காளையொடு
பெருமலை அருஞ்சுரம் நெருநல் சென்றனள்;
இனியே, தாங்குநின் அவலம் என்றிர்; அதுமற்று
யாங்ஙனம் ஒல்லுமோ? அறிவுடை யீரே;
உள்ளின் உள்ளம் வேமே, உண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னஎன்
அணிஇயல் குறுமகள் ஆடிய
மணிஏர் நொச்சியும் தெற்றியும் கண்டே.

தெளிவுரை

அறிவுடைய பெண்டிர்களே! நான் மகள் ஒருத்தியையே பிள்ளையாய்க் கொண்டவள். ஆயினும், போர் வலிமையும் கூரிய வேலையுமுடைய காளை ஒருவனுடன் அவள் நேற்று நள்ளிருளில் பெரிய மலையிடத்தேயுள்ள கடத்தற்கரிய காட்டுவழியில் சென்று விட்டாள். 'அவள் பிரிந்த துயரத்தைப் பொறுத்துக்கொள்க' என்கிறீர். அஃதெப்படி இயலும்? நினைத்தாலே நெஞ்சு வேகின்றதே! கண்ணின் மணியில் வாழும் பாவை நடை கற்று, நிலத்தில் நடந்து வந்தது போன்ற அழகிய சாயலைக் கொண்டவள், என் இளமகள்; நீலமணிபோலும் பூக்களைக் கொண்ட நொச்சி மர நிழலையும், அங்கு அவள் விளையாடியிருந்த திண்ணையையும் காணும்போதெல்லாம் என் உள்ளம் வேகின்றது. நான் எவ்வாறு பொறுத்துக்கொள்ள இயலும்?

கருத்து

மகள் பிரிவை என்னால் ஆற்றியிருக்க முடியவில்லையே!

விளக்கம்

நான் மகள் ஒருத்தியை மட்டுமே கொண்டவள். அவளும் நேற்றிரவு காளை ஒருவனுடன் காட்டுவழியே சென்றுவிட்டாள். 'பொறுத்துக்கொள்க' என்கிறீர். என் மகள் விளையாடிய நொச்சிமர நிழலையும், அங்குள்ள திண்ணையையும் காணும் போதெல்லாம் என்னுள்ளம் வேகின்றது. நான் எவ்வாறு பொறுத்துக்கொள்ள இயலும்?

சில நாள் கடந்திருந்தாலும் ஆறுதல் அடைய இயலும். நேற்றுத்தான் சென்றுள்ளாள். அவள் சென்றுள்ள வழியின் கொடுமையை நினைத்தாலே நெஞ்சம் வேகின்றது. இந் நிலையில் துன்பத்தை எப்படி மறக்க இயலும்?

குறிப்பு

மணிவாழ் பாவை நடை கற்றன்ன: கண்ணின் மணிப்பாவை உயிர் பெற்று வெளியிலே நடந்து வந்ததுபோலத் தோன்றும் தலைவியின் அழகினையும், பாவையைக் கண்ணிமை காப்பதுபோல் அவள் எங்கும் சென்றுவிடாமல் தாய் காத்து வந்ததையும் இவ்வுவமை விளக்குகிறது.

சொற்பொருள்

2. செருமிகு - போரில் மிகுந்த; மொய்ம்பு - வலிமை (வாய்ந்தவன்); கூர்வேல் - கூரிய வேல்; காளையொடு - தலைவனொடு.
3. பெருமலை - பெரிய மலை; அருஞ்சுரம் - அரிய வழி; நெருநல் - நேற்று.
4. இனியே - இனிமேல்; தாங்கு - பொறுத்துக்கொள்; அவலம் - துன்பம்; என்றிர் - என்கின்றீர்.
5. ஒல்லும் - இயலும்.
6. உள்ளின் - நினைத்தால்; உண்கண் - மையுண்ட கண்.
7. மணிவாழ் பாவை - கண்ணின் கருவிழியுள்ளே வாழும் பாவை.
8. அணி இயல் - அழகிய சாயலைக் கொண்ட; குறுமகள் - இளமகள்; ஆடிய - விளையாடிய.
9. மணிஏர் - நீலமணி போன்ற; நொச்சி - முன்றில் வேலியில் இருக்கும் மரம்; தெற்றி - திண்ணை.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 372 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் உடன்போயவழி நற்றாய், 'தன் ஒழுக்கத்தால் ஊர் அலரெடுத்து உரைத்தலை நினையாது சென்றவள், என்னையும் உள்ளினள் கொல்லோ?' எனக் கவன்று உரைத்தது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தலைவி தலைவனுடன் சென்றுவிட்டாள். அப்போது நற்றாய், தன் செயலை ஊரார் பழிப்பார்களே என்று கருதாமல் சென்று விட்ட என் மகள், 'என்னை நினைத்தாளோ, அன்றோ?' என்று கவலையோடு கூறியது.

என்னும் உள்ளினள் கொல்லோ? தன்னை
நெஞ்சுஉணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு,
அழுங்கல் மூதூர் அலர்எழ,
செழும்பல் குன்றம் இறந்தஎன் மகளே?

தெளிவுரை

தன் நெஞ்சம் ஏற்குமாறு தெளிவித்து உறுதிமொழி கூறிய தலைவனுடன் என் மகள் வளப்பம் மிகுந்த பல குன்றங்களைக் கடந்து சென்றுள்ளாள். ஆரவாரம் கொண்ட பழமையான இவ்வூரில் பழிச்சொல் உண்டாகும்படி சென்றுவிட்ட அவள் என்னை நினைத்திருப்பாளோ? (அல்லது நினையாதே போயினளோ?)

கருத்து

தன் காதலனோடு சென்ற என் மகள், பெற்றுப் பேணி வளர்த்த என்னையும் நினைந்திருப்பாளோ, அன்றோ?

குறிப்பு

பிறரை நினைத்திடவில்லையெனினும் பெற்ற தாயாகிய என்னை யேனும் நினைத்தாளோ என்று தாயுள்ளம் மருகுகிறது.

'மகள் தன் காதலை என்னிடம் தெரிவித்திருந்தால் நானே முன்னின்று திருமணத்தை நடத்தியிருப்பேனே! இதனை அறியாது பலருக்கும் துன்ப முண்டாகும்படி மகள் போய்விட்டாளே' என்பதை நினைத்து ஏங்குகிறாள், அத்தாய்!

சொற்பொருள்

1. என்னும் - என்னையும்; உள்ளினள் கொல்லோ - நினைத்தாளோ அன்றோ; தன்னை - தலைவியை.
2. நெஞ்சு உண - நெஞ்சம் ஏற்றுக்கொள்ளுமாறு; தேற்றிய - தெளிவித்த; வஞ்சினம் - உறுதிமொழி; காளை - காளை போன்ற தலைவன்.
3. அழுங்கல் - ஆரவாரம்; மூதூர் - பழைய ஊர்; அலர் - பழிச்சொல்.
4. செழும் - வளப்பம் மிகுந்த; பல் - பல; இறந்த - கடந்து சென்ற.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 313 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் புணர்ந்துடன் போகியவழிச் செவிலி ஆற்றாமை கண்ட நற்றாய் அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனோடு உடன்போக்கில் சென்றுவிட்டாள்; செவிலி வருந்தினாள். அவளுக்கு நற்றாய் சொல்லியது.

தெறுவது அம்ம நும்மகள் விருப்பே!
உறுதுயர் அவலமொடு உயிர்செலச் சாஅய்,
பாழ்படு நெஞ்சம் படர்அடக் கலங்க,
நாடுஇடை விலங்கிய வைப்பின்
காடுஇறந் தனள்;நம் காத லோளே!

தெளிவுரை

மிக்க துயரத்தால் உண்டாகியுள்ள அவலத்தோடு, உயிர் நீங்குமாறு மெலிந்து பாழ்பட்டுள்ள என் நெஞ்சம், தலைவனுடன் சென்ற நம் அன்பு மகளைப் பிரிந்ததனால் உண்டாகிய ஆற்றாமை நோய் வருத்தக் கலங்கியுள்ளது. அவளோ, நாடுகள் பல இடையிட்ட சம நிலங்களையும் காடுகளையும் கடந்து சென்றுவிட்டாள். உன் மகளாகிய அவள்மேல் நாம் வைத்திருக்கும் பேரன்பு நம்மையெல்லாம் துன்புறுத்துகின்றது.

கருத்து

நம் மகள் நம்மைப் பிரிந்து சென்றுவிட்டாள்; செவிலியே! நீயும் அதனைப் பொறுத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்.

குறிப்பு

களவுக்காலத்தில் நற்றாயைக் காட்டிலும் செவிலி தலைவியிடம் நெருக்கமுள்ளவள். ஆதலால், நற்றாய் தன் மகளைச் செவிலியிடம், 'உன் மகள்' என்கிறாள்.

சொற்பொருள்

1. தெறுவது - துன்பம் தருவது.
2. அவலம் - துன்பம்; சாஅய் - மெலிந்து.
3. படர் - (அவள் பிரிதலால் உண்டாகிய) ஆற்றாமைத் துன்பம்; அட - வருத்த.
4. நாடு இடை விலங்கிய - நாடுகள் இடையே குறுக்கிட்டு அமைந்திருப்பதான; வைப்பின் - நிலப்பரப்பு.
5. இறந்தனள் - கடந்தனள்; காதலோள் - அன்புக்குரியவள்.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 378 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் உடன்போயவழி, அவள் தோழி ஆற்றாமை கண்ட நற்றாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவனோடு உடன்போக்கி வைத்த தோழி, அவளைப் பிரிந்த பின்னர் அப்பிரிவினை ஆற்றாது மிகவும் வருந்தினாள். அத்தோழியின் துயர்நிலை கண்டு நற்றாய் சொல்லியது.

செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவல் உகக்கும் மாலை,யாம் புலம்பப்
போகிய அவட்கோ நோவேன்; தேமொழித்
துணைஇலள் கலிழும் நெஞ்சின்
இணைஏர் உண்கண் இவட்குநோ வதுவே.

தெளிவுரை

தனக்குரிய உணவாகிய பழத்தைத் தேர்தற்குப் பழம் இருக்கும் இடம் நாடிப் பறக்க முயன்று, விரித்துப் பரப்பிய சிறகுகளைக் கொண்ட வௌவால் விரும்பிப் பறக்கும் மாலைக்காலம்; இப் பொழுதில் யாம் வருந்துமாறு எம்மைப் பிரிந்து சென்ற

மகளுக்காகவா நான் வருந்துகிறேன்? (அன்று; பின் யாருக்காக?) இனிய மொழி பேசும் என் மகளைப் பிரிந்து துணை இல்லாது வருந்திக் கண்ணீர் வடித்துக் கலங்கும் நெஞ்சினையும் இணை யொத்த மையுண்ட கண்களையும் கொண்ட இவள் (மகளுக்குத் தோழி) பொருட்டேயாகும்.

கருத்து

உடன்போக்கில் சென்ற மகளைக் குறித்து அடையும் வருத்தத்தைவிட, அவள் பிரிவுக்காக வருந்தும் அவள் (இத்)தோழியின் துயர் கண்டு மிகவும் வருந்துகிறேன்.

சொற்பொருள்

1. செல்லிய - செல்லுதற்கு; முயலி - முயன்று; பாஅய - பரப்பிய, சிறகர் - சிறகுகள்.
2. வாவல் - வௌவால்; உகக்கும் - விரும்பும்; புலம்ப - வருந்த.
3. போகிய - சென்றுவிட்ட; அவட்கோ - என் மகளுக்காகவா; நோவேன் - வருந்துவேன்; தேமொழி - இனிய மொழி.
4. கலிழும் - கலங்கி அழும்.
5. இணைஏர் - இரு அழகிய; உண்கண் - மையுண்ட கண்; இவட்கு - என் மகளின் தோழியாகிய இவளுக்கு.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 373 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளைத் தலைமகன் கொண்டு கழிந்த கொடுமை நினைந்து நற்றாய் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் கூட்டிச் சென்ற கொடுமையை நினைந்து நற்றாய் சொல்லியது.

நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக!
புலிக்கோள் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை
மான்பிணை அணைதர, ஆண்குரல் விளிக்கும்
வெஞ்சுரம் என்மகள் உய்த்த
வம்புஅமை வல்வில் விடலை தாயே!

தெளிவுரை

புதிய மூங்கிலால் செய்யப்பெற்ற வலிமையான வில்லினையுடைய ஆண்மகன் (விடலை), என் மகளை, புலியின் தாக்குதலிலிருந்து தப்பிப் பிழைத்த, கவர்த்த கொம்புகளைக் கொண்ட ஆண்மான், தன் பெண்மான் தன்னை வந்து சேருமாறு ஆண்மைக்குரலெடுத்து அழைக்கும் வெம்மையான காட்டு வழியே அழைத்துச் சென்றுள்ளான். அவனைப் பெற்ற தாயும், மகளை இழந்து நிற்கும் என்னைப் போலவே நினைக்குந்தோறும் கண்ணீர் விட்டழும் துயரத்தை அடையட்டும்.

கருத்து

என் மகளைப் பிரிந்து நான் அடைந்துள்ள துயரை, அவளை அழைத்துச் சென்றவனின் தாயும் அடையட்டும்!

சொற்பொருள்

1. நினைத்தொறும் - நினைக்குந்தொறும்; கலிழும் - கண்ணீர் விட்டு அழுகின்ற; இடும்பை - துன்பம்; எய்துக - அடையட்டும்.
2. புலிக்கோள் - புலியால் பற்றிக்கொள்ளப்படுவதிலிருந்து; பிழைத்த - தப்பிய; கவைக்கோட்டு - கிளைபட்டுள்ள கொம்பினைக் கொண்ட; முதுகலை - முதிய ஆண்மான்.
3. மான்பிணை - பெண்மான்; அணைதர - வந்தடையுமாறு; ஆண்குரல் - ஆண்மானின் குரல்; விளிக்கும் - அழைக்கும்.
4. வெம்சுரம் - வெம்மையான காடு; உய்த்த - அழைத்துச் செல்கின்ற.
5. வம்புஅமை - புதிதாய் அமைக்கப்பட்ட; வல்வில் - வலிமையான வில்; விடலை - ஆண் (பாலைநிலத் தலைவன்).

நற்றாய் கூற்று

நற்றிணை 293 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

தாய் மனைமருண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

மகள் உடன்போக்கில் சென்றுவிட அவளைப் பெற்றெடுத்த தாய், தன் இல்லத்தில் நடுக்கமுற்றவாறு, 'என் மகளை அழைத்துச் சென்றவன் தாய் என்னைப் போலவே நடுக்கமுறட்டும்' எனப் புலம்பிச் சொல்லியது.

மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடி,
பலிக்கள் ஆர்கைப் பார்முது குயவன்
இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து,
விழவுத்தலைக் கொண்ட பழவிறல் மூதூர்ப்
பூங்கண் ஆயம் காண்தொறும், எம்போல்,
பெருவிதுப் புறுக மாதோ, எம்இல்
பொம்மல் ஓதியைத் தன்மொழிக் கொளீஇ,
கொண்டுஉடன் போக வலித்த
வன்கண் காளையை ஈன்ற தாயே.

தெளிவுரை

பாரில் தோன்றிய மூத்த குடியினன், குயவன். அவன் நீலமணி போலும் பூங்கொத்துகளைக் கொண்ட நொச்சி மாலையைச் சூடிக் கொள்வான்; தெய்வங்கட்குப் படையிலிடப்பட்ட கள்ளினைக் குடித்துக்கொண்டு, கடவுளர்க்கு மேலும் என்னென்ன பலிகள் கொடுக்க வேண்டுமென்பதை எடுத்துரைப்பான். அவன் சொல்லியவாறே, அகன்ற இடமுள்ள மன்றத்தில் பலியிட்டு, விழாவெடுக்கும் பழமையான சிறப்பு வாய்ந்தது, இவ்வூர்.

இங்கு, எம் இல்லத்திலிருந்த பொலிவுபெற்ற கூந்தலைக் கொண்ட என் மகளை, தன் மொழிகளால் நம்பச்செய்து, உடன் போக்கிற்கு உடன்படச்செய்து, தன்னுடன் கொண்டுசென்று விட்டான், வன்கண்மை வாய்ந்த காளை ஒருவன்.

பூப்போன்ற கண்களைக் கொண்டவர்களான என் மகளுக்குத் தோழியரைக் காணும்போதெல்லாம் நான் (என் மகளை நினைந்து) நடுங்குவதுபோல, அக்காளையின் தாயும் மனம் நடுக்குற்றுத் துன்புறுவாளாக!

கருத்து

மகளைப் பிரிந்து என் மனம் நடுங்குவதுபோல, அவனைப் பெற்றெடுத்த தாயும் மன நடுக்கம் கொள்ளட்டும்.

குறிப்பு

குயவன் நீலமணிபோலும் நொச்சி மலர் சூடி, கள்ளினைக் குடித்து, கடவுளர்க்குப் பலியிடும் முறையை மன்றத்திலிருப்போர்க்குச் சொல்லிக் கொண்டிருக்கும் சிறப்பு வாய்ந்தது, எம் பழைமையான ஊர்.

குயவன், காளி கோவில் பூசாரி. அவன் பாலைநில மறவர்க்கு அவர் இட வேண்டிய பலியைப்பற்றி எடுத்துரைப்பான். அவரும் அவ்வாறே பலியிட்டு விழாக் கொண்டாடுவர்.

சொற்பொருள்

1. மணிக்குரல் நொச்சி - நீலமணி போலும் நொச்சிப் பூங்கொத்து; தெரியல் - மாலை.
2. பலிக் கள் - தெய்வங்கட்குப் பலியிடப்பட்ட கள்; ஆர்கை - உண்ணும்; பார் முது குறவன் - பாரில் தோன்றிய மூத்த குடியினனான குயவன்.
3. இடுபலி - தெய்வங்கட்கு இடவேண்டிய பலியை; நுவலும் - சொல்லுகின்ற; அகன்தலை - அகன்ற இடமுள்ள; மன்றத்து - பொது இடத்தில்.
4. விழவுத் தலைக் கொண்ட - பலியிட்டு விழா எடுத்தலை முதன்மை யாய்க் கொண்ட; பழ விறல் - பழமையான (நெடுங்காலச்) சிறப்பு வாய்ந்த; மூதூர் - பழைமையான ஊர்.
5. பூங்கண் - பூப் போன்ற கண்களைக் கொண்ட; ஆயம் - என் மகளுக்கு விளையாட்டுத்தோழியர்.
6. பெரு விதுப்பு - மிகுந்த நடுக்கம்; உறுக - கொள்ளட்டும்; எம் இல் - எம்முடைய வீட்டிலிருந்து.
7. பொம்மல் - பொலிவு பெற்ற; ஓதி - கூந்தலைக் கொண்ட (என் மகளை); தன்மொழிக் கொளீஇ - தன் பேச்சினை ஏற்கச்செய்து.

8. வலித்த - உடன்படச்செய்த.
9. வன்கண் - கொடுமை (வாய்ந்த); ஈன்ற - பெற்றெடுத்த.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 376 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் போயவழி நற்றாய் விதியை வெகுண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனோடு சென்றுவிட்டாள் என்பதுணர்ந்த நற்றாய், இவ்வாறு நிகழும்படி செய்த ஊழ்வினையைச் சினந்து கூறியது.

நாடொறும் கலிழும் என்னினும் இடைநின்று
காடுபடு தீயில் கனலியர் மாதோ!
நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்
பூப்புரை உண்கண் மடவரல்
போக்கிய புணர்த்த அறன்இல் பாலே!

தெளிவுரை

நல்ல வேலைப்பாடமைந்த நெடிய எம் வீட்டில் உள்ளவரெல்லாம் ஆரவாரத்துடன் அழுது புலம்புமாறு, பூப்போன்ற மையுண்ட கண்களைக் கொண்ட என் மகளை உடன்போக்கில் செலுத்திவிட்டது, அறப்பண்பில்லாத விதி. நாள்தோறும் கலங்கியழும் என்னைக்காட்டிலும் அவ்விதியும் பன்மடங்கு கலங்கி, காட்டிடையே பற்றி எரியும் பெருநெருப்பில் சிக்கி வெந்து ஒழியட்டும்.

கருத்து

என்னிடமிருந்து என் மகளைப் பிரித்த விதி, என்னினும் பன்மடங்கு கலங்கி, காட்டில் தோன்றும் தீயில் சிக்கி வெந்து ஒழியட்டும்.

குறிப்பு

செல்வ மனைக்கண் தங்கியிருந்த தன் மகள், அதனின் நீங்கிக் கடுமையான காட்டில் சேர்வதற்குக் காரணம் ஊழ் என்பதால் அதனை வன்மையாய்க் கடிந்துரைக்கிறாள், தாய்!

சொற்பொருள்

1. நாடொறும் - நாள்தொறும் - ஒவ்வொரு நாளும்; கலிழும் - அழுது புலம்பும்; என்னினும் - என்னை விடவும்; இடை நின்று - (தீயின்) இடையே சிக்கி.
2. காடுபடு தீ - காட்டில் பற்றியெறியும் தீ; கனலியர் - எரிந்து அழிக.
3. நல்வினை - நல்ல வேலைப்பாடமைந்த; நெடுநகர் - நெடிய வீடு; கல்லென - ஆரவாரத்துடன் (கதறி அழுது); கலங்க - வருந்த.
4. பூப்புரை - பூப் போன்ற; உண்கண் - மையுண்ட கண்; மடவரல் - இளமை பொருந்தியவள்.
5. போக்கிய புணர்ந்த - உடன்போக்கில் தலைவனுடன் சேர்ந்த.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 374 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் உடன்போயவழி, அவள் இளமை நினைந்து இரங்கித் தாய் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனோடு உடன்போக்கில் சென்ற தலைவியின் இளமை நினைந்து அவளைப் பெற்ற தாய் இரங்கிக் கூறியது.

> பல்ஊழ் நினைப்பினும், நல்லென்று ஊழ;
> மீளி முன்பின் காளை காப்ப,
> முடிஅகம் புகாஅக் கூந்தலள்
> கடுவனும் அறியாக் காடுஇறந் தோளே.

தெளிவுரை

"பலமுறை அடுத்தடுத்து நினைத்துப் பார்த்தாலும் உடன் போக்கே நன்று என்று என் மகள் முடிவு செய்தனள். ஆதலின், என் மகள் கூற்றுவனை ஒத்த வலிமைமிக்க காளையாகிய தலைவன் காத்துவர அவனுடன் சென்றுவிட்டாள். அள்ளிக் கொண்டையிடுவதற்குக்கூடக் கூந்தல் வளர்ச்சி பெறாத இளமை யானவள், என் மகள். அவள், ஆண்குரங்குகளும் புகுந்தறியாக் காட்டினைக் கடந்து சென்றுவிட்டாளே!" என்று நற்றாய் வருந்துகிறாள்.

கருத்து

தலைவி தலைவனுடன் செல்வது அறமே என்றாலும், தலைவியின் இளமையையும் காட்டின் கொடுமையையும் நினைந்து தாய் ஆற்றாளா யினாள்.

சொற்பொருள்

1. பல் ஊழ் - பல முறை; நல் என்று ஊழ - நல்ல முறைகளைக் கொண்ட தலைவியின் செய்கைகள்.
2. மீளி - கூற்றுவன்; முன்பு - வலிமை; காளை - (கூற்றுவனையொத்த வலிமையுள்ள) காளை.
3. முடி அகம் புகாஅக் கூந்தல் - அள்ளி முடித்தற்குக்கூட இயலாத அளவில் வளர்ந்துள்ள கூந்தல்.
4. கடுவன் - ஆண்குரங்கு; அறியா - புகுந்து அறியாத; இறந்தோள் - கடந்து சென்றவள்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 397 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

மகள் காதலனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள். அந்த ஆற்றாமை யினால் புலம்பும் செவிலித்தாய் சொல்லியது.

என்மகள் பெருமடம் யான்பா ராட்ட,
தாய்தன் செம்மல் கண்டுகடன் இறுப்ப,
முழவுமுகம் புலரா விழவுடை வியல்நகர்,
மணன்இடை யாகக் கொள்ளான், 'கல்பகக்
கணமழை துறந்த கான்மயங்கு அழுவம்
எளிய வாக ஏந்துகொடி பரந்த
பொறிவரி அல்குல் மாஅ யோட்கு'எனத்
தணிந்த பருவம் செல்லான், படர்தரத்
துணிந்தோன் மன்ற - துனைவெங் காளை-
கடும்பகட்டு ஒருத்தல் நடுங்கக் குத்தி,
போழ்புண் படுத்த பொரிஅரை ஓமைப்
பெரும்பொளிச் சேயரை நோக்கி, ஊன்செத்து,
கருங்கால் யாத்துப் பருந்துவந்து இறுக்கும்
சேண்உயர்ந்து ஓங்கிய வான்உயர் நெடுங்கோட்டுக்
கோடை வெவ்வளிக்கு உலமரும்
புல்இலை வெதிர நெல்விளை காடே.

தெளிவுரை

முழவு இடைவிடாது ஒலித்துக்கொண்டேயிருக்கும் அகன்ற பெரிய எம் வீட்டில், என் மகளின் பெருமையான இளமையழகை நான் பாராட்டவும், நற்றாய் தன் தகைமையினை அறிந்து அதற் கேற்பத் தன் மகளுக்குரிய கடமைகளைச் செய்யவும், பலரறிய அவளைத் திருமணம் செய்துகொள்ளாமல் தன் விருப்பப்படி அழைத்துச் சென்றுவிட்டான், அவள் காதலன்.

கற்கள் பிளவுபட்டுள்ளன. மேகக்கூட்டங்கள் பெய்யாது பொய்த்தமையால் கடுமையான வெயிலில் (இந்தக் கொடுமை யான பருவத்தில்) உயர்ந்த கொடிகள் பரந்த அடர்ந்த காட்டு வழியில் அவர்கள் சென்றுள்ளனர். புள்ளிகளும் வரிகளும் பொருந்திய அல்குலைக் கொண்ட மாமை நிறம் பொருந்திய வளுக்கு, நடத்தற்கு எளிதாய் இருக்கும்படி வெப்பம் குறைந்த காலத்தில் அவளை அழைத்துச் செல்லக் கருதானாய், நடக்க இயலாத வெயில் கொளுத்தும் கடுமையான காலத்தில் அழைத்துச் சென்றுள்ளான்.

ஓமை மரம் அசையுமாறு ஆண்யானை அதனைக் குத்திப் பிளந்ததால், பொரிகள் பொருந்திய அம்மரத்தின் அடிப்பகுதி சிதைந்தது. அதனால் பட்டையுரிந்த அம்மரத்தின் சிவந்த பகுதியினை ஊனென்று கருதி, நெடிதுயர்ந்த யா மரத்திலுள்ள பருந்து அங்கு வந்து தங்கும்; வானளாவிய சிகரங்களில் வெப்பம் பொருந்திய கோடைக் காற்றினால் அலையும் சிறிய இலைகளைக் கொண்ட மூங்கிலின் நெல் விளையும் காட்டுவழியில், விரைந்து செல்லும் இயல்புள்ள வெம்மையான காளையைப் போன்றவன், என் மகளை உடன் கொண்டுசெல்வதற்குத் துணிந்தான்.

கருத்து

எம் வீட்டில் திருமணத்தைச் செய்துகொள்ளாமல் கடுமையான வெயில் கொளுத்தும் காலத்தில் காளை ஒருவன் என் மகளை அழைத்துச் சென்று விட்டான்.

விளக்கம்

என் மகளின் நலத்தை யான் பாராட்ட, பெற்ற தாய் தன் கடமைகளைச் செய்ய எம் இல்லத்தே திருமணம் செய்து கொள்ளாமல் தலைவன் அழைத்துச் சென்றுவிட்டான். வெப்பம் தணிந்த காலத்தில் அழைத்துச் செல்லாமல், வெயில் கொளுத்தும் கடுமையான காலத்தில் காட்டுவழியில் அழைத்துச் சென்றுள்ளான்!

சொற்பொருள்

1. பெருமடம் - பெருமையான இளமை அழகு.
2. தாய் - நற்றாய்; செம்மல் - தலைமை; கண்டு - அறிந்து; கடன் இறுப்ப - செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய.
3. முழவு முகம் புலரா - முழவொலி மாறாத; வியல் நகர் - அகன்ற வீட்டில்.
4. மணன் இடையாகக் கொள்ளான் - திருமணத்தின் வாயிலாய்க் கொள்ளான்; கல் பக - பாறை பிளவுபட.
5. கணமழை - கூட்டமாகிய மேகம்; துறந்த - பெய்யாத; அழுவம் - அடர்ந்த காடு.
6. எளியவாக - நடத்தற்கு எளிமையான பருவத்தில் (செல்லாமல்); ஏந்து கொடி பரந்த - உயர்ந்த கொடிகள் பரந்திருக்கும்.

7. மாஅயோட்கு - மாமை நிறமுள்ளவளுக்கு.
8. தணிந்த பருவம் - வெப்பம் குறைந்த பருவத்தில்.
9. துனை வெம் காளை - விரைதலைக் கொண்ட வெவ்விய காளை போன்றவன்.
10. கடும்பகட்டு - கடுமையான தன்மை; ஒருத்தல் - தலைவனான ஆண்யானை.
11. போழ் - போழ்ந்து, பிளந்து; புண்படுத்த - புண்ணுண்டாகச் செய்த; பொரிஅரை - பொரிந்த அடிமரத்தைக் கொண்ட; ஓமை - ஓமை மரம்.
12. பெரும் பொளி - பிளந்துரிக்கப்பட்ட பெரிய பட்டை; சேயரை - சிவப்பாய்த் தோன்றும் அடிமரம்; ஊன்செத்து - ஊன் எனக் கருதி.
13. கருங்கால் - கரிய அடிமரம்; யாத்து - யா மரத்தில்; இறுக்கும் - தங்கும்.
14. சேண்உயர்ந்து - நெடுந்தொலைவு உயர்ந்து; வான் உயர்ந்த - வானளாவிய; நெடுங்கோடு - உயர்ந்த உச்சி.
15. கோடை - கோடைக்காலத்து; வெவ்வளி - கடுமையான காற்று; உலமரும் - கலங்கும்.
16. புல்இலை - சிறிய இலை; வெதிர்- மூங்கில்.

செவிலித்தாய் கூற்று

குறுந்தொகை 84 | **மோசிகீரனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, தமரைப் பிரிந்து தலைவனுடன் சென்றாள். அதனையறிந்த செவிலி, ‘நேற்று நான் அவளைத் தழுவியபோது வெறுத்தாள். அதற்கான காரணத்தை இப்போதுதான் அறிகிறேன்’ என்று வருந்திக் கூறியது.

பெயர்த்தனென் முயங்க,‘யான் வியர்த்தனென்’ என்றனள்;
இனிஅறிந் தேன்,அது துனிஆ குதலே –
கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி,
ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே.

தெளிவுரை

“என் மகள், காலிலே வீரக்கழலையும், தோளிலே வீர வளையையும் அணிந்த ஆய் வள்ளலின் முகில் தவழும் பொதிய மலையில் இருக்கும் வேங்கைப்பூவையும் காந்தள் பூவையும் போல மணம் பொருந்தியவள்; நீர்ப்பூவாகிய ஆம்பல் மலரைக் காட்டிலும் குளிர்ச்சி பொருந்தியவள். அவளை நான் ஒருமுறை தழுவி, அன்பினால் மீண்டும் தழுவ முற்பட்டபோது, ‘எனக்கு வியர்க்கிறது’ என்று கூறினாள். அஃது அவள் வெறுப்பினால் கூறியது என்பதை அவள் சொன்ன அப்பொழுது அறிந்திலனே! இப்பொழுதுதானே உணர்கிறேன்” எனச் செவிலித்தாய் வருந்திக் கூறுகிறாள்.

கருத்து

மகள் எண்ணம் அறியாது போயினனே எனச் செவிலித்தாய் வருந்துகிறாள்.

விளக்கம்

களவொழுக்கத்தின்போது தலைவன் தழுவியதில் இன்பங் கண்ட தலைவி, செவிலித்தாய் தழுவும்போது ‘வியர்க்கிறது, விடு’ என்கிறாள். அதற்குமுன் சொல்லாத ஒன்றை ஏன் சொன்னாள் என்பதை அப்போது செவிலித்தாய் புரிந்துகொள்ளவில்லை. தலைவி உடன்போக்கில் சென்ற பின்னரே, ‘காதலன் தழுவு தலைத் தவிர, நான் தழுவுவதைக்கூட அவள் விரும்பாதவளா யினாள் என்பது புரிகிறது’ என்று செவிலித்தாய் வருந்திக் கூறினாள்.

குறிப்பு

தலைவன் தழுவுவதை விரும்பியவளாதலின், செவிலித்தாய் தழுவியதை வெறுத்தாள்.

சொற்பொருள்

1. பெயர்த்தனென் - மீண்டும்; முயங்க - தழுவ; வியர்த்தனென் - (எனக்கு) வியர்த்துவிட்டது.
2. இனி - இப்பொழுது; துனி - வெறுப்பு.

3. கழல்தொடி - வீரக்கழல்; ஆஅய் - ஆய் எனும் வள்ளல்; மழை தவழ் - மேகம் தவழ்கின்ற; பொதியில் - பொதிய மலை.
4. வேங்கை - வேங்கை மலர்; காந்தள் - காந்தள் பூ; நாறி - மணம் வீசி.
5. தண்ணியள் - குளிர்ச்சி பொருந்தியவள்.

செவிலித்தாய் கூற்று

குறுந்தொகை 144 **மதுரை ஆசிரியர் கோடன்கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் மகள் தலைவனொடு உடன்போக்கில் சென்றபின் அவள் பிரிவினுக்கு ஆற்றாது செவிலித்தாய் கூறியது.

கழிய காவி குற்றும், கடல
வெண்தலைப் புணரி ஆடியும், நன்றே
பிரிவுஇல் ஆயம் உரியதுஒன்று அயர,
இவ்வழிப் படுதலும் ஒல்லாள், அவ்வழிப்
பரல்பாழ் படுப்பச் சென்றனள் மாதோ
செல்மழை தவழும் சென்னி
விண்உயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே!

தெளிவுரை

“கடற்கரையின் உப்பங்கழிகளில் கருங்குவளை மலர்களைப் பறித்தும், வெண்மையான மேற்பரப்புக் கொண்ட கடலலைகளில் விளையாடியும், என்றும் பிரிதலில்லாத தன் தோழியருடன் தான் விரும்புமொரு விளையாட்டில் ஈடுபட்டும் இருந்த என் மகள் இங்கிருந்தும் சென்றுவிட்டாள். விரைந்து செல்லும் மேகங்கள் தவழ்கின்ற உச்சியுடன் வானளாவ உயர்ந்துள்ள மலைகள் குறுக்கிட்டுத் தடுக்கும் மலைநாட்டில், வெம்மை

மிகுந்த பாலை வழியில், பருக்கைக் கற்கள் தன் அடிகளின் அழகைச் சிதைக்க, தன் காதலனோடு அவள் சென்றுவிட்டாள்" என்று கூறிச் செவிலித்தாய் வருந்துகிறாள்.

கருத்து

தலைவனுடன் சேர்ந்து வாழ்வதே சிறந்தது என்று கருதி, தலைவி தன் இல்லத்தாரையும் தோழியரையும் நீங்கித் தன் தலைவனுடன் வெப்பம் மிக்க பாலை வழியில் சென்றுவிட்டாள்.

சொற்பொருள்

1. கழி - உப்பங்கழி; காவி - நீல மலர்; குற்றும் - பறித்தும்.
2. வெண் தலை - வெண்மையான மேற்பரப்பைக் கொண்ட; புணரி - அலை.
3. பிரிவுஇல் - தன்னை விட்டுப் பிரியாத; ஆயம் - தோழியர் கூட்டம்; உரியது ஒன்று - தான் விரும்பும் ஒரு விளையாட்டு; அயர - விளையாட.
4. இவ்வழிப்படுதலும் - இவ்விடத்தே பொருந்துதலும்; ஒல்லாள் - உடம்படாதவளாய்; அவ்வழி - அக்கொடிய பாலை வழி.
5. பரல் - பருக்கைக் கற்கள்; பாழ்படுப்ப - (தன் அடியைச்) சிதைக்கும்படி.
6. செல்மழை - விரைந்து செல்லும் மேகம்; சென்னி - உச்சி.
7. பிறங்கல் - பலரும் காணும்படி விளங்குதல்; விலங்குதல் - குறுக்கிடுதல்.

செவிலித்தாய் கூற்று

குறுந்தொகை 356 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டதையறிந்த செவிலித்தாய் வருந்திக் கூறியது.

நிழல்ஆன்று அவிந்த நீர்இல் ஆர்இடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி,
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்குவல் லுநள்கொல் தானே – ஏந்திய
செம்பொற் புனைகலத்து அம்பொரிக் கலந்த
பாலும் பலஎன உண்ணாள்,
கோல்அமை குறுந்தொடித் தளிர்அன் னோளே?

தெளிவுரை

திரட்சியான சிறிய வளையல்களை அணிந்துள்ள மாந்தளிர் போன்ற மென்மையானவள், என் மகள். அவள், செம்பொன்னால் செய்யப்பெற்ற பாத்திரத்தில் நல்ல பொரியுடன் கலந்த பாலை ஏந்தித் தந்தாலும் அது மிகுதியாய் உள்ளது எனக் கூறி உண்ண மறுப்பாள். தற்போது, நிழலே இல்லாத, நீர் அற்றுப் போன, கடத்தற்கரிய பாலை நில வழியில் வீரக்கழலணிந்த தலைவன் பாதுகாப்பாய் வர, விரைந்து நடந்து சென்றுவிட்டாளே! வழியில் நீரில்லாத வறண்ட சுனையருகே சூடேறிக் கிடக்கின்ற மிக வெப்பமான கலங்கல் நீரைத் 'தவ்'வென்னும் ஒலியுண்டாகும்படி (தவக் என்று) குடிப்பதற்கு எவ்வாறு துணிவு கொண்டனளோ? (வல்லவள் ஆனாளோ?)

கருத்து

வீட்டிலே பாலையும் குடிக்க மறுத்தவள், தலைவனுடன் செல்லும் பாலை நிலத்துச் சேற்றுத் தண்ணீரை உலர்ந்த தொண்டையில் 'தவக் தவக்' என்ற ஓசை உண்டாகுமாறு குடிக்கத் துணிவு கொண்டனள்.

விளக்கம்

வெப்பம் மிகுந்த பாலை நிலம்; வழிச்செல்வோர்க்கு நீர் கிட்டுவது அரிது. தலைவியோ தன் வீட்டிலிருந்தபோது, செம்பொற்கலத்தில் தந்த பாலைக் குடிக்க மறுத்தாள். இப்போது கிடைப்பதோ சூரிய வெப்பத்தால் சூடேறி வெந்நீர்போல இருக்கும் கலங்கிய நீர். வேட்கை மிகுதியால் இரு கைகளிலும் அந்நீரை வேகமாய் மொண்டு குடிக்கிறாள். உலர்ந்த தொண்டை

வழியே நீர் செல்லும்போது 'தவக் தவக்' என்னும் ஓசை உண்டாகிறது.

சொற்பொருள்

1. நிழல் ஆன்று அவிந்த - நிழல் அறவே அற்றுப்போன; நீர்இல் - நீரில்லாத; ஆர்இடை - கடத்தற்கரிய வழி.
2. கழலோன் - வீரக்கழல் அணிந்துள்ள தலைவன்; கடுகுபு - விரைந்து.
3. அறுசுனை - நீரற்ற சுனை; மருங்கின் - அருகே; மறுகுபு - நன்றாய்; வெந்த - சூடேறிய.
4. வெவ்வெம் - மிகமிக வெப்பமான; கலுழி - கலங்கல் நீர்; தவ்வென - 'தவ்' என்னும் ஒலியுண்டாகும்படி; குடிக்கிய - குடிக்க.
5. யாங்கு வல்லுநள் - எவ்வாறு வலிமை பெற்றனளோ?
6. பொன் புனைகலம் - பொன்னால் செய்யப்பட்ட பாத்திரம்; அம் பொரி - அழகிய நெற்பொரி.
7. பல என - மிகுதி என்று கூறி.
8. கோல் அமை - திரட்சியான; குறுந்தொடி - குறுகிய வளையல்; தளிர் - தளிர் போன்ற மென்மை.

செவிலி கூற்று

நாலடியார் 396 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : பாலை

கூற்று

தலைமகனுடன் சென்ற தலைமகளை எண்ணிச் செவிலி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் கடுமையான காட்டு வழியே உடன்போக்கில் சென்றுவிட்ட தலைவியை நினைந்து செவிலி சொல்லியது.

அரக்காம்பல் நாறும்வாய் அம்மருங்கிற்(கு) அன்னோ
பரல்கானம் ஆற்றின கொல்லோ! – அரக்(கு)ஆர்ந்த
பஞ்சிகொண்டு ஊட்டினும் பையெனப் பையெனஎன்(று)
அஞ்சிப்பின் வாங்கும் அடி.

தெளிவுரை

சிவந்த ஆம்பல்போல மணங்கமழும் வாயையும், அழகிய இடையையுமுடையவள், என் மகள். முன்னர், செம்பஞ்சுக் குழம்பைப் பாதத்தில் பஞ்சினால் தடவினாலும், 'மெல்ல மெல்ல' என்று சொல்லிக் காலைப் பின்னுக்கு இழுத்துக் கொள்வாள். அந்தோ! இப்போது அந்தப் பாதங்கள் பருக்கைக் கற்கள் பொருந்திய காட்டு வழியின் கொடுமையை எவ்வாறு தாங்கினவோ?

கருத்து

கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியில் என் மகளின் மென்மையான பாதம் எப்படி நடந்ததோ?

சொற்பொருள்

1. அரக்கு - சிவப்பு; ஆம்பல் - ஆம்பல் மலர்; நாறும் - மணக்கும்; மருங்கு - இடை.
2. பரல் - பருக்கைக் கல்; ஆற்றின கொல்லோ - தாங்கினவோ?; அரக்கு ஆர்ந்த - செந்நிறம் பொருந்திய.
3. பஞ்சி - பஞ்சு; ஊட்டினும் - எழுதினாலும்; பையஎன - மெல்லென்று.
4. பின்வாங்கும் - பின்னுக்கு இழுத்துக் கொள்வாள்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 89 **மதுரைக் காஞ்சிப் புலவர்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் வீட்டினின்று மகள் வெளியேறியதை அறிந்த செவிலித் தாய் வருந்திச் சொல்லியது.

தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின்,
உறுபெயல் வறந்த ஓடுதேர் நனந்தலை,
உருத்துஎழு குரல குடிஞைச் சேவல்,
புல்சாய் விடரகம் புலம்ப வரைய,
கல்எறி இசையின் இரட்டும் ஆங்கண்,
சிள்வீடு கறங்கும் சிறியிலை வேலத்து,
ஊழுறு விளைநெற்று உதிர, காழியர்
கவ்வைப் பரப்பின் வெவ்உவர்ப்பு ஒழிய,
களரி பரந்த கல்நெடு மருங்கின்,
விளர்ஊன் தின்ற வீங்குசிலை மறவர்
மைபடு திண்தோள் மலிர வாட்டிப்
பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவாள் வயவர் அருந்தலை துமித்த
படுபுலாக் கமழும் ஞாட்பில் துடிஇகுத்து,
அருங்கலம் தெறுத்த பெரும்புகல் வலத்தர்,
வில்கெழு குறும்பில் கோள்முறை பகுக்கும்
கொல்லை இரும்புனம் நெடிய என்னாது,
மெல்லென் சேவடி மெலிய ஏக
வல்லுநள் கொல்லோ தானே – தேம்பெய்து
அளவுறு தீம்பால் அலைப்பவும் உண்ணாள்,
இடுமணற் பந்தருள் இயலும்,
நெடுமென் பணைத்தோள், மாஅ யோளே?

தெளிவுரை

சுடுகின்ற கதிர்களைக் கொண்ட ஞாயிறு வானத்தின் நடுநின்று வெயில் காய்தலால் மழை வற்றிவிட, கானல் நீரே காணப்படும் கடுமையான காடு. அங்கு வெகுண்டெழுகின்ற குரலைக் கொண்ட பேராந்தைச்சேவல் புற்களில்லாத வெடிப் பிடங்களை விட்டகன்று சென்று, மலையிலிருந்து உருளும் கற்களைப்போலக் கடிய குரலில் மாறி மாறி அலறும். சிள் வண்டு இருந்து ஒலிக்கும்படியான சிறிய இலைகளைக்கொண்ட வேலமரங்களின் முற்றிய நெற்றுகள் வழியெங்கும் பரவிக் கிடக்கும். துணி வெளுப்போர் எடுக்கும் உவர் மண்ணோடு களர் மண்ணும் பரந்து கிடக்கும் கற்கள் நிறைந்த வழியில்

கொழுப்புள்ள ஊனைத் தின்று விசைகொண்ட வில்லினரான மறவர்கள் தங்கியிருப்பர். அவர்கள், கருமை பொருந்திய தோள்கள் பூரிக்க, கழுதைகளின் நீண்ட நிரைகளைப் பின்பற்றி வரும், செப்பமுள்ள வாளினைக் கொண்ட வீரர்களாகிய வாணிகர்களைக் கொன்று, அவர்தம் தலையைத் துண்டித்து அவர்களுடைய பொருள்களைக் கொள்ளை அடிப்பர். அப் பொருள்களைப் புலவு நாறும் போர்க்களத்தே துடியினைத் தாழக் கொட்டி, அரிய அணிகலன்களை மாற்றரசரிடமிருந்து திறையாய்ப் பெற்றுக் குவித்துப் பகிர்ந்து கொள்ளும் போர் மறவர்கள்போல விற்கள் பொருந்திய அரணிடத்தே அவரவர்க்கு உரியவற்றை முறைப்படி பிரித்துக்கொள்வர். அத்தகைய பெரிய காடுகளைக் கொண்ட வழி நீண்டது என்று கருதாது தன் மெல்லிய அடி வருந்தச் செல்வதற்கு என் மகள் வலிமை வாய்ந்தவள் ஆவளோ?

என் மகள், நீண்ட மெல்லிய மூங்கில் போலும் தோளினையும் மாமை நிறத்தினையும் கொண்டவள். தேன் கலந்த இனிய பாலைக் குடி என்று கொடுத்தாலும் குடிக்காது, மணல் பரப்பிய பந்தலின் கீழே அங்குமிங்கும் ஓடித் திரிந்த அவள், எங்ஙனம் இக்காட்டின் வழியே சென்றனளோ?

கருத்து

இல்லத்தில், தேன் கலந்த இனிய பாலையும் குடிக்க மறுத்த என் மகள் கடுமையான காட்டில் எப்படி நடப்பாளோ?

விளக்கம்

மழையின்றி நீரற்று வழியெங்கும் கானல் நீரே தென்படும் கடுமையான காடு. அங்கே பேராந்தைகள், மலையிலிருந்து உருட்டிவிட்ட கற்களைப் போலக் கடுமையான குரலில் மாறி மாறி அலறும். சிள் வண்டு ஒலிக்கும் வேல மரத்தின் முற்றிய நெற்றுகள் வழியெல்லாம் பரவிக் கிடக்கும்; உவர் மண்ணும் களர் மண்ணும் கலந்த அவ்வழியில் கற்கள் நிறைந்து கிடக்கும். கழுதைகளில் பாரம் ஏற்றிச் செல்லும் வாணிகர்களைக் கொன்று அவர்களிடம் கொள்ளையடித்த பொருள்களைக் காட்டு மறவர்கள், போர்வீரர்கள் மாற்றரசர் தந்த திறைப்பொருளைப்

பகிர்ந்துகொள்வதுபோல, ஆரவாரத்துடன் தமக்குள் பிரித்துக் கொள்வர். தேன் கலந்த பாலைக் குடி என்று வற்புறுத்தினாலும் குடிக்காது அங்குமிங்கும் ஓடித் திரிந்த இளமையும் மென்மையும் வாய்ந்த என் மகள் அக்காட்டு வழியில் எப்படி நடப்பாளோ?

சொற்பொருள்

1. தெறுதல் - சுடுதல்; நடுநின்று - நடுவிசும்பில் நின்று.
2. உறுபெயல் - மழை; வறந்த - அற்றுப்போன; ஓடு தேர் - பேய்த் தேர்; நனந்தலை - அகன்ற இடம்.
3. உருத்தெழு குரல - சினந்து எழுகின்ற குரலைக் கொண்ட; குடிஞை - பேராந்தை, கோட்டான்.
4. புல்சாய் - புற்கள் ஒழிந்த; விடரகம் - மலைப்பிளவு; புலம்ப - தனித்திட; வரைய - மலையிலிருந்து.
5. கல் எறி இசையின் - மலையிலிருந்து உருண்டு விழும் கற்களைப் போல் கடிய குரலில்; இரட்டும் - மாறிமாறி ஒலிக்கும்.
6. சிள் வீடு - சிள் வண்டு; கறங்கும் - ஒலிக்கும்; வேலத்து - கருவேல மரத்து.
7. ஊழ்உறு - முறையாய் முற்றிய; காழியர் - வண்ணார்.
8 கவ்வை - ஆரவாரம்; வெவ்உவர்ப்பு - வெவ்விய உவர் மண்.
9. களரி - களர் மண்; கல்நெடு மருங்கு - கற்களை இடையே கொண்ட நீண்ட இடத்தின் பக்கம்.
10. விளர் ஊன் - கொழுப்பினைக் கொண்ட ஊன்; வீங்கு சிலை - விசை கொண்ட அம்பு.
11. மை - கருமை; மலிர - பூரிக்க.
12. பொறை மலி - பண்டச்சுமை மிகுந்த; நெடுநிரை - நீண்ட நிரை; தழீஇய - பின்பற்றி.
13. வயவர் - வாணிகர்; துமித்த - துணித்த, வெட்டிய.
14. படுபுலாக் கமழும் - மிக்க புலவு நாறும்; ஞாட்பில் - போர்க்களத்தில்; துடி - உடுக்கை; இகுத்து - அடித்து முழக்கி.
15. தெறுத்த - திறையாய்ப் பெற்ற; புகல் வலத்தர் - போரை விரும்பும் வெற்றி வீரர்.
16. கெழு - பொருந்திய; குறும்பு - அரண்; கோள் முறை - இன்னார்க்கு இத்துணை என்ற முறையில்; பகுக்கும் - பகுத்துக் கொடுக்கும்.
17. கொல்லை இரும்புனம் - கொல்லைகளையுடைய பெரிய காடு.

18. மெல்லென் - மென்மையான; சேவடி - சேஅடி - சிவந்த அடி; மெலிய ஏக - வருந்துமாறு செல்ல.
19. வல்லுநள் - வல்லமை வாய்ந்தவள்; தேம் பெய்து - தேனைச் சொரிந்து.
20. அளவுறு பால் - கலந்த பால்; அலைப்பவும் - வற்புறுத்தியும் அடித்து விரட்டியும்.
21. இடு மணல் - பரப்பப்பட்ட மணல்; இயலும் - ஓடித் திரியும்.
22. நெடுமென் - நீண்ட மெல்லிய; பணைத்தோள் - மூங்கில் போன்ற தோள்; மாஅயோள் - மாமை நிறத்தினள்.

செவிலித்தாய் கூற்று

குறுந்தொகை 396 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் உரைத்தது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற தன் மகளது மென்மையையும் காட்டினது வெம்மையையும் நினைந்து செவிலித்தாய் வருந்திக் கூறியது.

பாலும் உண்ணாள்; பந்துடன் மேவாள்;
விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே,
எளிதுஎன உணர்ந்தனள் கொல்லோ – முளிசினை
ஓமைக் குத்திய உயர்கோட்டு ஒருத்தல்
வேனில் குன்றத்து வெவ்வறைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குரல் ஓர்க்கும்
கழைதிரங்கு ஆர்இடை, அவனொடு செலவே?

தெளிவுரை

"நம் மகள் வீட்டிலிருந்தபோது பாலும் உண்ணமாட்டாள்; பந்தாடுதலையும் விரும்பமாட்டாள்; தன் விளையாட்டுத்

தோழியரோடு சேர்ந்து இடையறாது விளையாடிக் கொண்டிருப்பாள். இப்போது தலைவனோடு போய்விட்டாள். வழியில் உலர்ந்த கிளைகளைக் கொண்ட ஓமை மரத்தை நீளமான கொம்புகளைக் கொண்ட ஆண்யானை (நீரை விரும்பி) குத்திப் பார்க்கும். (அதிலும் நீர் இல்லாமையால்) வெப்பம் மிகுந்த பாறைகளைக் கொண்ட பக்க மலையில் மேகங்கள் முழங்கும் கடுமையான இடிக்குரலைக் கேட்டு (மழை பெய்யுமா என ஏங்கி) நிற்கும்; அங்கிருக்கும் மூங்கில்கள் எல்லாம் வெப்பத்தால் கரிந்து நிற்கும். இத்தகைய கொடுமையான வழியில் தன் காதலனுடன் செல்வது எளிது என்று நினைத்துவிட்டாளோ?" என்று செவிலித்தாய், தலைவியை நினைந்து வருந்திச் சொல்கிறாள்.

கருத்து

வீட்டில் பாலும் உண்ணாது எப்போதும் தோழியரோடு விளையாடிக் கொண்டிருந்த தலைவி, வளமிக்க தன் இல்லத்தில் இருப்பதனினும் தலைவனோடு கூடி வெப்பம் மிகுந்த வழியில் செல்லுதல் எளிதென எண்ணினளோ?

குறிப்பு

எங்கும் நீர் இல்லாதபோது, யானை, ஓமை மரத்தின் பட்டையை உரித்து அதிலுள்ள நீரை உறிஞ்சி உண்ணும்; இப்போது வெப்ப மிகுதியால் அப் பட்டையும் நீரின்றி உலர்ந்திருந்தமையால், யானை தாகத்தால் வருந்தி நிற்கும்போது இடி இடித்ததால், 'மழை பெய்யும்' என்னும் நம்பிக்கையுடன் இடியொலியைக் கூர்ந்து கேட்டு நிற்கிறது.

சொற்பொருள்

1. மேவாள் - பொருந்தாள், பந்தாடுதலை விரும்ப மாட்டாள்.
2. ஆயம் - தோழியர் கூட்டம்; அயர்தல் - விளையாடுதல்; இனியே - இனிமேல்.
3. முளிசினை - வற்றிய கிளை.
4. ஓமை - ஓமை மரம்; உயர்கோட்டு - நீண்ட தந்தத்தைக் கொண்ட; ஒருத்தல் - ஆண்யானை.
5. வெவ்வறை - வெம்மையான மலை; கவாஅன் - பக்க மலை.
6. மழை - மேகம்; கடுங்குரல் - கடுமையான இடி முழக்கம்; ஓர்க்கும் - உற்றுக் கேட்கும்.

7. கழை - மூங்கில்; திரங்குதல் - கரிந்துவிடுதல்; ஆர் இடை - அரிய பாலைவழி; அவனொடு - தலைவனொடு.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 17 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி சுற்றத்தார் அறியாது அவளைத் தலைவன் உடன்போக்கில் அழைத்துச் சென்றுவிட்ட பின்பு, அதனையறிந்த செவிலித்தாய், தலைவியின் மெல்லிய தன்மைக்கு இரங்கிக் கூறியது.

வளம்கெழு திருநகர்ப் பந்துசிறிது எறியினும்,
இளந்துணை ஆயமொடு கழங்குஉடன் ஆடினும்,
'உயங்கின்று அன்னைஎன் மெய்'என்று அசைஇ,
மயங்குவியர் பொறித்த நுதலள் தண்ணென,
முயங்கினள் வதியும் மன்னே! இனியே
தொடிமாண் சுற்றமும் எம்மும் உள்ளாள்,
நெடுமொழித் தந்தை அருங்கடி நீவி,
நொதும லாளன் நெஞ்சுஅறப் பெற்றஎன்
சிறுமுதுக் குறைவி சிலம்புஆர் சீறடி
வல்லகொல், செல்லத் தாமே – கல்லென
ஊர்எழுந் தன்ன உருகெழு செலவின்,
நீர்இல் அத்தத்து ஆர்இடை மடுத்த,
கொடுங்கோல் உமணர், பகடுதெழி தெள்விளி
நெடும்பெருங் குன்றத்து இமிழ்கொள இயம்பும்,
கடுங்கதிர் திருகிய, வேய்பயில், பிறங்கல்
பெருங்களிறு உரிஞ்சிய மண்அரை யாஅத்து
அருஞ்சுரக் கவலைய அதர்படு மருங்கின்
நீள்அரை இலவத்து ஊழ்கழி பல்மலர்

விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்
நெய்யுமிழ் சுடரில் கால்பொரச் சில்கி
வைகுறு மீனில் தோன்றும்
மைபடு மாமலை விளங்கிய சுரனே!

தெளிவுரை

என் மகள், செல்வம் மிக்க அழகிய வீட்டில், சிறிது நேரம் பந்தாடினாலும் அல்லது விளையாட்டுத் தோழியருடன் ஒன்று சேர்ந்து கழங்கு ஆடினாலும், 'அன்னையே! என் உடல் வருந்து கின்றது' எனக் கூறித் தளர்ந்துவிடுவாள். வியர்வை அரும்பிய நெற்றியினளாய் என் உடல் குளிருமாறு என்னைத் தழுவிக் கொள்வாள்.

இப்போதோ, தொடியணிந்த தோழியரையும் எம்மையும் மறந்தவளாய், மிக்க புகழைக் கொண்ட தன் தந்தையின் கடத்தற் கரிய காவலையும் கடந்து சென்றுவிட்டாள்.

அவள் சென்றதோ நீரில்லாப் பாலை வழி. அங்கு உப்பு வாணிகர் கொடிய கோல்களைக் கையில் கொண்டு, ஊரே திரண்டெழுந்தது போன்ற அச்சமிக்க ஆரவாரத்துடன் வண்டி யோட்டுவர். அப்போது, எருதுகளை அதட்டி ஓட்டும் ஒலி, நீண்ட மலையெங்கும் எதிரொலிக்கும். ஞாயிற்றின் கடுமையான கதிர்களின் தாக்குதலால் முறுகிய மூங்கில் காடுகள் பக்க மலையெங்கும் அடர்ந்து நிற்கும். பெரிய ஆண்யானை தன் உடலில் படிந்த சேற்றினை உரசித் தேய்த்தலால், யாமரத்தின் அடிப்பகுதியில் சேறு பொருந்தியிருக்கும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கமாய்ப் பிரிந்து செல்லும் வழிகள் பல கொண்ட கடத்தற்கரிய காடு அது. அவற்றுள் ஏதேனும் ஒரு வழியில் சென்றால் நீண்ட அடிமரங்களைக் கொண்ட இலவ மரங்களில் மலர்ந்த புதிய மலர்கள் பல, காற்று வீசுவதால், விழாக் கொண் டாடும் ஊரிலே ஏற்றி வைத்த விளக்கின் சுடர் விழுவதுபோல உதிரும்; உதிராத எஞ்சிய பூக்கள் விண்மீன்களைப் போலச் சிலவாய்த் தோன்றும். இத்தகைய பெரிய மலைகள் குறுக்கிட்டு நிற்கும் அவ்வழியில், காதலனது நெஞ்சத்தைத் தனக்கே உரித்தாகப்பெற்ற அறிவுமிக்க என் மகளின் சிலம்பு பொருந்திய சிறிய அடிகள் நடந்து செல்வதற்கு வல்லமை பெற்றனவோ?

கருத்து

தோழியரோடு கழங்காடும்போதும் தளர்ந்துவிடும் என் மகளின் மெல்லடிகள் காட்டுவழிச் செல்ல வல்லனவோ?

விளக்கம்

வீட்டிலே பந்து விளையாடினாலும் தோழியரோடு கழங்கு ஆடினாலும் நெற்றியிலே வியர்வை பொங்க, 'என் உடம்பு நோகின்றது' என்று சொல்லி என்னைத் தழுவி ஆறுதல் பெற்ற என் மகளின் சீறடிகள் பெருமலைகள் குறுக்கிடும் காட்டு வழியே செல்வதற்கு வல்லனவோ?' என எண்ணித் தாயுள்ளம் கலங்குகிறது.

சொற்பொருள்

1. வளம்கெழு - வளம் பொருந்திய; திருநகர் - அழகிய வீடு.
2. இளந்துணை - இளைய துணை; ஆயம் - விளையாட்டுத்தோழியர்.
3. உயங்கின்று - வருந்துகின்றது; அசைஇ - தளர்ந்து.
4. மயங்கு - செறிந்த; வியர் - வியர்வை; நுதலள் - நெற்றியைக் கொண்டவள்.
5. முயங்குதல் - தழுவுதல்; வதியும் - இருப்பாள்.
6. தொடிமாண் சுற்றமும் - தொடியணிந்த தோழியரையும்.
7. நெடுமொழி - மிக்க புகழ்; அருங்கடி - அரிய காவல்; நீவி - கடந்து.
8. நொதுமலாளன் - ஏதிலாளனது (தலைவனது).
9. சிறுமுதுக் குறைவி - இளமையிலேயே அறிவு முதிர்ந்த என் மகள்.
10. வல்ல கொல் - வல்லமை பெற்றனவோ?; கல்லென - 'கல்' என்னும் ஒலியுடன்.
11. ஊர் எழுந்தன்ன - ஊரே திரண்டெழுந்தது போன்ற; உருகெழு - அச்சமிக்க.
12. நீரில் அத்தம் - நீரில்லாத காட்டின்; ஆரிடை - அரிய வழிகளிலே; மடுத்த - செல்லவிட்ட.
13. உமணர் - உப்பு வாணிகர்; பகடுதெழி - எருதுகளை அதட்டுகின்ற; தெள்விளி - தெளிந்த ஒலி.
14. இமிழ்கொள இயம்பும் - எதிரொலி உண்டாக ஒலிக்கும்.
15. திருகிய - முறுகிய; பிறங்கல் - பக்க மலை.
16. உரிஞ்சிய - தேய்த்த; மண் (சேறு) - மண் பொருந்திய; யாஅத்து - யாமரங்களைக் கொண்ட.

17. கவலை - கவர்த்த வழிகளைக் கொண்ட.
18. நீள் அரை - நீண்ட அடிமரத்தைக் கொண்ட; இலவத்து - இலவ மரத்தின்; ஊழ்கழி - முதிர்ச்சிமிக்க.
19. விழவுத் தலைக்கொண்ட - விழாக்களைத் தன்னிடத்தே கொண்ட; பழவிறல் - பழைய வெற்றியைக் கொண்ட; மூதூர் - முதிய ஊரில்.
20. நெய் உமிழ் - எண்ணெய் சொரியப்பட்டுள்ள; சுடரின் - விளக்குச் சுடர் விழுவது போல; கால் பொர - காற்றுப் பொருதலால்; சில்கி - சிலவாகி.
21. வைகுறு மீனில் - விடியற்காலத்து மீன் போல.
22. மைபடு மாமலை - மேகங்கள் பொருந்திய பெரிய மலைகள்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 153 **சேரமான் இளங்குட்டுவன்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொற்றது (சொல்லியது.)

கூற்று விளக்கம்

தலைவி, தன் உற்றார் உறவினர் அறியாவண்ணம் தலைவனுடன் சென்று விட்டாள். அதனை அறிந்த செவிலித்தாய் தலைவியின் மென்மையையும் அவள் செல்லத் துணிந்த பாலைவழியின் கொடுமையையும் நினைந்து வருந்திக் கூறியது.

நோகோ யானே; நோதகும் உள்ளம்;
அம்தீம் கிளவி ஆயமொடு கெழீஇ,
பந்துவழிப் படர்குவள் ஆயினும், நொந்துநனி,
வெம்பும்மன் அளியள் தானே – இனியே,
வன்க ணாளன் மார்புஉற வளைஇ,
இன்சொற் பிணிப்ப நம்பி, நம்கண்
உறுதரு விழுமம் உள்ளாள், ஒய்யெனத்
தெறுகதிர் உலைஇய வேனில் வெங்காட்டு,
உறுவளி ஒலிகழைக் கண்உறுபு தீண்டலின்,
பொறிபிதிர்பு எடுத்த பொங்குஎழு கூர்எரிப்

பைதுஅறு சிமையப் பயநீங்கு ஆர்இடை
நல்அடிக்கு அமைந்த அல்ல; மெல்இயல்
வல்லுநள் கொல்லோ தானே – எல்லி
ஓங்குவரை அடுக்கத்து உயர்ந்த சென்னி
மீனொடு பொலிந்த வானில் தோன்றி,
தேம்பாய்ந்து ஆர்க்கும் தெரிஇணர்க் கோங்கின்
கால்உறக் கழன்ற கள்கமழ் புதுமலர்
கைவிடு சுடரின் தோன்றும்
மைபடு மாமலை விலங்கிய சுரனே?

தெளிவுரை

இரங்கத்தக்கவளாகிய என் மகள், அழகிய இனிய சொற்களைப் பேசும் தன் தோழியரோடு சிறிது நேரம் பந்து விளையாடினாலும் அதற்கே உடல் நொந்து மிகவும் வருந்துவாள்.

அவள் இப்போது மேகம் பொருந்திய பெரிய மலை குறுக்கிடும் காட்டுவழியே சென்றுவிட்டாள். அம்மலைச்சாரலில் வண்டுகள் ஒலிக்கும் பொலிவு வாய்ந்த பூங்கொத்துகளைக்கொண்டு கோங்கு மரங்கள் உயர்ந்து நிற்கும். இரவில் அவற்றின் புதுமலர்கள் மலை உச்சியில் விண்மீன்கள் நிறைந்த வானத்தைப்போலத் தோன்றும். காற்று வீசுவதால் அம்மலர்கள் கழன்று விழுந்து, சுற்றுப்புறமெல்லாம் மணம் பரப்பி, கானவர் கையினின்று விடுபட்ட தீப்பந்தம்போலத் தோன்றும்.

வேனிற்காலத்தில் கதிரவனின் வெம்மையால் காய்ந்து கிடக்கும் காட்டில், தழைத்த மூங்கிலின் கணுக்களைப் பெருங்காற்று விரைந்து தாக்க அவை தீப்பற்றி எரியும். அதனால் பசுமை இழந்த பயனற்ற காட்டுவழிகள் என் மகளின் நல்ல பாதங்கள் நடந்து செல்லுதற்கு ஏற்றன அல்லவே!

வன்கண்மையுடையவனான அவள் காதலன் அவளை மார்புறத் தழுவி, இனிய சொல் கூறி அவளைத் தன்வயப்படுத்தினான். அவளும் அவன் சொற்களை நம்பி, இங்கு நாம் வருந்துவோம் என்பதையும் நினைத்துப் பாராது சென்றுவிட்டாள்.

அச்சுடுவழியில் மென்மைத்தன்மை வாய்ந்த என் மகளால் விரைந்து நடக்க இயலுமா? இயலாதே!

அதை நினைந்து என் உள்ளம் வருந்துகின்றது. நானும் வருந்துகின்றேன்.

கருத்து

சிறிது நேரமே பந்து விளையாடினாலும் தளர்ந்து வருந்தும் என் மகள் காதலனுடன் காட்டுவழியில் சென்றுவிட்டாளே!

விளக்கம்

இரங்கத்தக்கவளாகிய என் மகள் தோழியரோடு பந்து விளையாடினாலும் மிகவும் நொந்து வாடுவாள். அத்தகையவள் தன் அடிகளுக்குப் பொருந்தாத அரிய காட்டுவழியில் எப்படித்தான் நடப்பாளோ? தன் காதலன் சொல்லை நம்பி, அவள் பிரிவால் நாம் வருந்துவோம் என்பதைச் சிறிதும் எண்ணிப் பாராது சென்றுவிட்டாளே!

சொற்பொருள்

1. நோகோ யானே - நான் வருந்துகின்றேன்.
2. அம் தீம் கிளவி - அழகிய இனிய சொற்கள்; கெழீஇ - பொருந்தி.
3. படர்குவள் - செல்பவளாயினும்; நொந்து - வருந்தி.
4. வெம்பும் - வாடுவள்; அளியள் - இரங்கத்தக்கவள்.
5. வன்கணாளன் - வன்கண்மையுடையவனாகிய தலைவன்; வளைஇ - வளைத்து.
6. பிணிப்ப - பிணித்துவிட; நம் கண் - நம்மிடம்.
7. விழுமம் - துன்பம்; உள்ளாள் - நினையாள்; ஒய்யென - விரைவாய்.
8. தெறுகதிர் - காய்கின்ற கதிர்; உலைஇய - அழித்த.
9. உறுவளி - காற்றுத் தாக்க; ஒலிகழை - தழைத்த மூங்கில்; கண் உறுபு தீண்டலின் - கணுக்களைப் பொருந்தித் தாக்கலின்.
10. பொறி பிதிர்பு - நெருப்புப்பொறியைச் சிதறி; எடுத்த - எழுப்பப்பட்ட; கூர் எரி - மிக்க நெருப்பு.
11. பைதுஅறு - பசுமையற்ற; சிமையம் - உச்சி; பயநீங்கு - பயன் ஒழிந்த.
12. அமைந்த அல்ல - ஏற்றன அல்ல.
13. வல்லுநள் கொல்லோ - வல்லமை வாய்ந்தவள் ஆவாளோ?; எல்லி - இரவில்.
14. வரை அடுக்கம் - மலைச்சாரல்; சென்னி - உச்சி.
15. மீனொடு பொலிந்த - மீன்களோடு விளங்குகின்ற.

16. தேம் - வண்டுகள்; பாய்ந்து - படிந்து; ஆர்க்கும் - ஆரவாரிக்கும்; தெரி இணர் - விளக்கமுற்ற பூங்கொத்துகள்; கோங்கின் - கோங்க மரத்தில்.
17. கால் உற - காற்று அடித்தலின்; கழன்ற - கழன்று விழுந்த; கள் - தேன்; கமழ் - மணம் வீசும்.
18. கைவிடு - கையினால் விடப்பெறும்; சுடரின் - சுடர்ப்பொறிபோல (கானவர் கையினின்று விடுத்த தீப்பந்தம்).
19. மைபடு - மேகம் பொருந்திய; விலங்கிய - குறுக்கிட்ட.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 117 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை அவள் பெற்றோரும் சுற்றமும் அறியாவண்ணம் தலைவன் தன்னுடன் அழைத்துக்கொண்டு போயினன்; அதனை அறிந்த செவிலித்தாய் தலைவியை நினைந்து வருந்திக் கூறியது.

மௌவலொடு மலர்ந்த மாக்குரல் நொச்சியும்,
அவ்வரி அல்குல் ஆயமும், உள்ளாள்,
ஏதிலன் பொய்ம்மொழி நம்பி, ஏர்வினை
வளம்கெழு திருநகர் புலம்பப் போகி
வெருவரு கவலை ஆங்கண், அருள்வர,
கருங்கால் ஓமை ஏறி, வெண்தலைப்
பருந்துபெடை பயிரும் பாழ்நாட்டு ஆங்கண்,
பொலந்தொடி தெளிர்ப்ப வீசி, சேவடிச்
சிலம்புநக இயலிச் சென்றஎன் மகட்கே —
சாந்துஉளர் வணர்குரல் வாரி, வகைவகுத்து,
யான்போது துணைப்ப, தகரம் மண்ணாள்,
தன்ஓ ரன்ன தகைவெங் காதலன்
வெறிகமழ் பன்மலர் புனையப் பின்னுவிட,

சிறுபுறம் புதைஇய நெறிபுதாழ்ந் தனகொல் –
நெடுங்கால் மாஅத்து ஊழுறு வெண்பழம்
கொடுந்தாள் யாமை பார்ப்பொடு கவரும்
பொய்கை சூழ்ந்த, பொய்யா யாணர்,
வாணன் சிறுகுடி வடாஅது
தீம்நீர்க் கான்யாற்று அவிர்அறல் போன்றே?

தெளிவுரை

முல்லைப்பூவோடு சேர்ந்து மலர்ந்திருக்கும் கரிய கொத்தினைக் கொண்ட நொச்சியையும், அழகிய வரி பொருந்திய அல்குலினைக் கொண்ட தன் தோழியரையும் என் மகள் நினைத்துப் பார்க்கவில்லை. பிறன் ஒருவனது பொய் வார்த்தையை நம்பி, அழகிய வேலைப்பாடமைந்ததும், வளம் பொருந்தியதும், செல்வம் மிக்கதுமான மாளிகை போன்ற வீடு தனித்தொழியும்படி சென்றுவிட்டனளே!

அவள் செல்லும் பாதையோ அச்சந்தரும் கவர்த்த வழிகளைக் கொண்டது. அவ்வழியில் வற்றிப்போன ஓமை மரம் ஒன்றன்மீது அமர்ந்த, வெண்ணிறத் தலையைக் கொண்ட பருந்து ஒன்று, தன் பெண் பருந்தை இரக்கம் உண்டாகும்படி அழைக்கும். அத்தகைய பாழ்பட்ட நாட்டிடத்தே, பொன்னாலான வளையல்கள் ஒலிக்கக் கைகளை வீசியும், சிவந்த அடியில் சிலம்பு விளங்கவும் நடந்து சென்றனளோ?

முன்பு நான் அவளது கூந்தலை வாரிப் பலவகையாய் முடித்துப் பூச்சூட்டுவித்தற்கு (அழைக்க) அவள் மயிர்ச்சாந்தினையும் பூசிக்கொள்ள இசையாதிருந்தனள். இப்போதோ தன்னையொத்த பெருமை அமைந்த தன்மையினையும் பெரு விருப்பத்தினையும் கொண்ட காதலனாகிய தலைவன் பல்வகை மலர்களை வைத்து அவள் கூந்தலைப் பின்னிவிடுவானோ?

கரையோரத்தில் நெடிய அடிப்பகுதியைக் கொண்ட மாமரத்திலிருந்து முற்றிக் கனிந்து உதிர்ந்த மாம்பழத்தை, வளைந்த காலினைக் கொண்ட ஆமை தன் குட்டியோடு கவர்ந்துண்ணும் நீர்நிலைகளினால் செல்வ வளம் மிக்கது, வாணனது சிறுகுடி என்னும் ஊர். அவ்வூரின் வடபாலுள்ள நல்ல நீரைக் கொண்ட

காட்டாற்றில் விளங்கும் கருமணல் போன்று, அவன் பின்னி விட்ட கருங்கூந்தல் என் மகள் பிடரியை மறைத்துத் தொங்குமோ?

கருத்து

கூந்தலை வாரி முடிக்க அழைத்தபோது மறுத்த எம் மகள், இப்போது காட்டுவழியில் தலைவன் பின்னிவிட நடந்து செல்வாளோ?

விளக்கம்

என் மகள் எம்மோடு இருந்தபோது அவள் கூந்தலை வாரி முடித்து மலர் சூட்டுவதற்கு முற்பட்டபோது சாந்தினைப் பூசிக் கொள்வதற்கும் உடன்படாது மறுப்பாள். இப்போது, அவள் செல்லும் வழியில் தலைவன் பலவகை மலர்களைக்கொண்டு அவள் கூந்தலைப் பின்னிவிட அக்கூந்தல் அவளது பிடரியினை மறைத்துத் தொங்குமோ?

குறிப்பு

மாமரத்தின் இனிய பழத்தைத் தொடர்பு இல்லாத பொய்கையில் வாழும் ஆமையும் அதன் குட்டியும் கவர்ந்து உண்ணும் என்னும் தொடர்மூலம், தலைவி வீட்டாருடன் எவ்விதத் தொடர்புமில்லாத அயலானாகிய தலைவன், உயர்குடிப் பிறப்பினளான தலைவியைக் கவர்ந்து சென்று தன் சுற்றத்தாருடன் அவள் நற்குணங்களை நுகர்வான்; தலைவி வீட்டார் அக்கனி வீழப்பெற்ற மரத்தைப்போல வீணாய் நிற்பர் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. மௌவல் - முல்லைப்பூ; மாக் குரல் - கரிய கொத்து.
2. அவ்வரி - அழகிய வரி; ஆயம் - தோழியர் கூட்டம்; உள்ளாள் - நினையாளாய்.
3. ஏதிலன் - பிறனொருவன்; ஏர்வினை - அழகிய வேலைப்பாடமைந்த.
4. வளங்கெழு - வளப்பம் பொருந்திய; திருநகர் - அழகிய வீடு; புலம்ப - தனிமைப்பட.
5. வெருவரு - அஞ்சத்தக்க; கவலை - கவர்த்த வழி.
6. கருங்கால் ஓமை - கரிய அடிமரத்தைக் கொண்ட ஓமை மரம்; வெண்தலை - வெண்மையான தலையைக் கொண்ட.
7. பருந்து பெடை - பெண் பருந்து; பயிரும் - அழைக்கும்.

8. பொலந்தொடி - பொன் வளையல்; தெளிர்ப்ப - ஒலிக்க.
9. சிலம்பு நக - சிலம்பு ஒலிக்க; இயலி - உலாவி.
10. சாந்து - மயிர்ச்சாந்து; உளர் - பூசிய; வணர்குரல் - வளைந்த கொத்தாகிய (கூந்தலை); வகை வகுத்து - வகைப்படுத்து.
11. போது - மலர்களை; துணைப்ப - சூட்ட முற்படும்போது; தகரம் - மயிர்ச்சாந்து; மண்ணாள் - பூசிக்கொள்ள மாட்டாள்.
12. தன் ஓரன்ன - தன்னை ஒத்த; தகை - தகைமை வாய்ந்த; வெங்காதலன் - விருப்பமுள்ள தலைவன்.
13. வெறிகமழ் - மணம் கமழும்; புனைய - புனைந்து; பின்னுவிட - பின்னி விட.
14. சிறுபுறம் - பிடர்; புதைஇய - மறைய; நெறிபு - நெறிந்து; தாழ்ந்தன கொல் - தொங்குகின்றனவோ?
15. மாத்து - மாமரத்தினது; ஊழ்உறு - முறையாய் முற்றிய; வெண்பழம் - வெள்ளிய பழம்.
16. கொடுந்தாள் - வளைந்த காலினைக் கொண்ட; யாமை - ஆமை; கவரும் - கவர்ந்து உண்ணும்.
17. பொய்யா - என்றும் அறாத; யாணர் - புதுவருவாய்.
18. வாணன் - வாணன் என்பவனுடைய; சிறுகுடி - சிறுகுடி என்னும் ஊருக்கு; வடாஅது - வடபுறம்.
19. தீம்நீர் - இனிய நீர்; கான் யாற்று - காட்டாற்றின்; அவிர் - விளங்கும், பரந்திருக்கும்; அறல் - நெளிநெளியான கருமணல்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 321 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலி சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தலைவி அவள் காதலனுடன் சென்றுவிடவே, செவிலித் தாய் வருந்திக் கூறியது.

பசித்த யானைப் பழுங்கண் அன்ன,
வறுஞ்சுனை முகந்த கோடைத் தெள்விளி,
விசித்துவாங்கு பறையின் விடரகத்து இயம்பக்
கதிர்க்கால் அம்பிணை உணீஇய, புகல்ஏறு
குதிர்க்கால் இருப்பை வெண்பூ உண்ணாது,
ஆண்குரல் விளிக்கும் சேண்பால் வியன்சுரைப்
படுமணி இனநிரை உணீஇய, கோவலர்
விடுநிலம் உடைத்த கலுழ்கண் கூவல்
கன்றுடை மடப்பிடி களிறொடு தடவரும்
புன்தலை மன்றத்து அம்குடிச் சீறூர்,
துணையொடு துச்சில் இருக்கும் கொல்லோ?
கணையோர் அஞ்சாக் கடுங்கண் காளையொடு
எல்லி முன்னுறச் செல்லும் கொல்லோ?
எவ்வினை செயுங்கொல்? நோகோ யானே!-
அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ,
யாய்அறி வுறுதல் அஞ்சி,
வேய்உயர் பிறங்கல் மலைஇறந் தோளே.

தெளிவுரை

தன் தாய் அறிந்து கொள்வாள் என்று அஞ்சி, ஓசையிடும் பரல்கள் பொதிந்த அழகிய சிலம்பைக் காலிலிருந்து கழற்றி விட்டு, மூங்கில் உயர்ந்து வளர்ந்திருக்கும் சாரலைக் கொண்ட மலைவழியில் தன் தலைவனுடன் என் மகள் சென்றுவிட்டாள்.

பசி மிகுந்த யானையின் அழகிழந்த கண்ணினைப் போன்று (உட்குழிந்து) நீரின்றி வறண்டு காய்ந்து கிடக்கும் சுனைக்குள் புகுந்து வரும் கோடைக் காற்றின் தெளிவான ஒலி, தோலினை இழுத்துக் கட்டிய பறையின் ஒலியைப்போல மலைப்பிளவுகளில் ஒலிக்கும். மெலிந்து நீண்ட கால்களைக் கொண்ட அழகிய பெண்மான் தின்பதற்காக, அதன்பால் விருப்பமுள்ள ஆண் மான், குதிர் போன்ற அடிமரத்தினைக் கொண்ட இருப்பை மரத்தின் உதிர்ந்து கிடக்கும் வெண்மையான மலர்களைத் தான் தின்னாமல், ஆண்மைக்குரல் தோன்ற அப்பெண்மானை அழைத்துக் கொண்டிருக்கும்.

பால் சுரக்கும் பெரிய மடியினையும், ஒலிக்கின்ற கழுத்து மணி களையும் கொண்ட பசுக்கூட்டம் நீர் குடிப்பதற்காக ஆயர்கள் தரிசு நிலத்தில் கற்களை உடைத்துக் கிணறுகளைத் தோண்டி யிருப்பர்; கண்களிலிருந்து நீர் கசிவதுபோல அவற்றிலுள்ள ஊற்றுக்கண்களில் நீர் பிலிற்றும். கன்றினைக் கொண்ட இளைய பெண்யானை, தன் ஆண்யானையுடன், நீர் கிடைக்காமையால் அக்கிணற்றினைத் தடவிப் பார்க்கும் பொலிவற்ற இடமுள்ள மன்றினையும், அழகிய குடியிருப்பினையும் கொண்ட ஓர் ஊரில் ஒரு வீட்டின் புறத்தே ஓர் ஒதுக்கிடத்தில் என் மகள் தன் துணைவனுடன் தங்கியிருப்பாளோ?

அல்லது, அந்த இரவில் அம்பு எய்யும் வழிப்பறி கள்வர்க்கும் அஞ்சாத வீரமிக்க காளை போன்ற தன் தலைவனுடன் அவன் பார்க்க அவனுக்கு முன்னே தான் நடந்து செல்வாளோ? என்ன செய்வாளோ? அறியேன்.

அதனை நினைந்து நான் வருந்துகின்றேன்.

கருத்து

வளமனையில் தங்கியிருந்த என் மகள் தலைவனுடன் இன்றிரவு எங்கே தங்குவாளோ?

விளக்கம்

தான் நடக்கும்போது சிலம்பின் ஒலி கேட்டு நான் அறிந்து கொண்டுவிடுவேனோ என அஞ்சி என் மகள் தன் சிலம்பைக் கழற்றி வைத்துவிட்டுத் தலைவனுடன் உடன்போக்கில் சென்று விட்டாள். அவ்வாறு சென்ற என் மகள் இரவில் தன் தலைவனுடன் வழியிலுள்ள ஊரில் ஏதேனும் ஒரு வீட்டின் ஒதுக்குப்புறத்தில் தங்கியிருப்பாளோ? அல்லது தங்காது இரவிலேயே தலைவனோடு அவன் முன்னே நடந்து செல் வாளோ? என்ன செய்வாளோ? எதுவாயினும் வருந்துதற் குரியதே!

சொற்பொருள்

1. பழங்கண் - பொலிவற்ற (அழகிழந்த) கண்.

2. வறுஞ்சுனை - நீரற்ற சுனை; முகந்த - புகுந்து வரும்; கோடை - மேல் காற்று; தெள்விளி - தெளிந்த ஒலி.
3. விசித்து வாங்கு - தோலினை இழுத்துக் கட்டிய; விடரகம் - மலைப் பிளப்புகள்.
4. கதிர்க்கால் - நீண்ட மென்கால்; அம் பிணை - அழகிய பெண்மான்; உணீஇய - உண்பதற்காக.
5. குதிர்க்கால் - குதிர் போன்று பருத்த அடிமரம்; வெண் பூ - வெண்மையான பூ.
6. விளிக்கும் - அழைக்கும்; சேண்பால் - சேய்மையில் உள்ள; வியன் சுரை - பெரிய மடி.
7. படுமணி - ஒலிக்கும் மணி; கோவலர் - இடையர்.
8. விடு நிலம் - தரிசு நிலம்; கலுழ்கண் - நீர் ஊறும் ஊற்றுக்கண்; கூவல் - கிணறு.
9. தடவரும் - தடவிப் பார்க்கும்.
10. புன்தலை - பொலிவற்ற இடமுள்ள.
11. துணையொடு - தன் துணைவனொடு; துச்சில் - ஒதுக்கிடம்.
12. கணையோர் - வில்லினையுடையவர் (ஆறலை கள்வர்); கடுங்கண் - தறுகண்மை, அஞ்சாமை.
13. எல்லி - இரவு.
14. எவ்வினை - என்ன செயலை.
15. அரி - சிலம்பில் இடும் பரல்; பெய்து - இட்டு; பொதிந்த - மூடிய, மூட்டுவாய் மூடியுள்ள; தெரிசிலம்பு - ஆராய்ந்தெடுத்த சிலம்பு; கழீஇ - நீக்கி, விலக்கி.
16. யாய் - தாய்; உறுதல் - அறிதல்.
17. வேய் - மூங்கில்; பிறங்கல் - பக்க மலை; இறந்தோள் - கடந்து சென்றவள்.

செவிலித்தாய் கூற்று

ஐங்குறுநூறு 380 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் உடன்போயவழித் தெருட்டுவார்க்குச் செவிலித்தாய் சொல்லியது. (தெருட்டுதல் - மனம் தெளியச்செய்தல்.)

கூற்று விளக்கம்

தலைவி உடன்போக்கில் சென்ற பின்னர், அவளைப் பேணிக் காத்த செவிலித்தாய் ஆற்றாது வருந்தியபோது, அவள் துயர நிலை கண்டோர் அவளுக்கு ஆறுதல் கூறினர். அவள் அவர்களிடம் தன்னையே வெறுத்துக் கூறியது.

அத்த நீள்இடை அவனொடு போகிய
முத்துஏர் வெண்பல் முகிழ்நகை மடவரல்
தாயர் என்னும் பெயரே வல்லாறு
எடுத்தேன் மன்ற, யானே;
கொடுத்தோர் மன்ற,அவள் ஆயத் தோரே.

தெளிவுரை

நீண்ட காட்டுவழியே தலைவனுடன் என் மகள் சென்று விட்டாள். முத்துப் போன்ற வெள்ளிய பற்களும், மொட்டு விரிந்தது போன்ற சிரிப்பும், இளமையும் கொண்டவள், அவள். அவளை வளர்த்தெடுத்துப் பெரும்பாடுபட்டுத் தாய் என்னும் பெயரினை மட்டுமே நான் பெற்றுள்ளேன். ஆனால், அவளைத் தலைவனுக்கு மனைவி ஆகுமாறு கொடுக்கும் பேறு பெற்றவர்கள், அவள் தோழிமாரே!

கருத்து

நான் தாய் என்னும் பெயரை மட்டுமே பெற்றேன். அவளை ஒருவனுக்குக் கொடுத்து மகிழும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. அப்பேற்றினை அவள் தோழியர் பெற்றுக்கொண்டனர் (என்னும் ஏக்கத்தால் செவிலி புலம்புகிறாள்).

சொற்பொருள்

1. அத்த நீள் இடை - நீண்ட காட்டுவழி.
2. முத்து ஏர் - முத்துப் போன்ற; முகிழ்நகை - மலர்ந்த சிரிப்பு; மடவரல் - இளமை பொருந்தியவள்.
3. வல்லாறு எடுத்தேன் - வளர்த்துப் பாடுபட்டுப் பெற்றுக் கொண்டேன்.
5. ஆயத்தோர் - தோழியர் கூட்டம்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 145 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி உடன்போக்கில் சென்றுவிட்டாள். அவள் சென்றதை வழியில் கண்ட சிலர் செவிலியிடம் கூறினர். அது கேட்ட அவள், 'ஒரு நாள் ஒரு பொழுது என் மகளைக் கோல் சிதையுமாறு அடித்த என் கைகள், குறுக்கைப் போர்க்களத்து அன்னி என்பான் வெட்டிச் சிதைத்த தித்தன் என்பானது காவல் மரமாகிய புன்னையைப் போலத் துன்பத்தை அடையட்டும்' எனக் கூறி வருந்தியது.

வேர்முழுது உலறி நின்ற புழல்கால்,
தேர்மணி இசையின் சிள்வீடு ஆர்க்கும்,
வற்றல் மரத்த பொன்தலை ஓதி
வெயில்கவின் இழந்த வைப்பின் பையுள்கொள,
நுண்ணிதின் நிவக்கும் வெண்ஞெமை வியன்காட்டு
ஆள்இல் அத்தத்து அளியள் அவனொடு–
வாள்வரி பொருத புண்கூர் யானை
புகர்சிதை முகத்த குருதி வார,
உயர்சிமை நெடுங்கோட்டு உரும்என முழங்கும்
'அருஞ்சுரம் இறந்தனள்' என்ப – பெருஞ்சீர்
அன்னி குறுக்கைப் பறந்தலை, திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல்இணர்ப் புன்னை போல,
கடுநவைப் படீஇயர் மாதோ – களிமயில்
குஞ்சரக் குரல குருகோடு ஆலும்,
துஞ்சா முழவின், துய்த்துஇயல் வாழ்க்கை,
கூழுடைத் தந்தை இடனுடை வரைப்பின்,
ஊழ்அடி ஒதுங்கினும் உயங்கும் ஐம்பால்
சிறுபல் கூந்தல் போதுபிடித்து அருளாது,
எறிகோல் சிதைய நூறவும், சிறுபுறம்

'எனக்குஉரித்து' என்னாள், நின்றஎன்
அமர்க்கண் அஞ்ஞையை அலைத்த கையே!

தெளிவுரை

வெயில் மிகுதியால், உள்துளையைக் கொண்ட, உலர்ந்து வற்றிய மரங்கள் வேர்முதல் நுனிவரை முழுதும் காய்ந்து விட்டன. அவற்றில் ஒருவகை வண்டுகள் (சிள் வண்டுகள்), ஓடுகின்ற தேரிலுள்ள மணிபோல ஒலித்துக்கொண்டிருக்கும். அம்மரங்களுள் ஒன்றில் வாழ்ந்த பொன்நிறத் தலையைக் கொண்ட ஓணான் ஞாயிற்றின் வெப்பத்தைப் பொறுக்க மாட்டாது, மரத்தின்மீது மெல்ல மெல்ல ஏறிச் செல்லும். வெள்ளை ஞெமை மரங்கள் உள்ள அப்பெரிய காட்டில், ஆள் நடமாட்டம் இல்லாத அரிய வழியில், வாள் போன்ற வரிகளைக் கொண்ட புலியுடன் சண்டையிட்டுப் புண்பட்ட யானை, முகத்தில் குருதியொழுக இடியென முழங்கும். அத்தகைய கடத்தற்கரிய பாலை நிலத்தில் என் மகள் சென்றுவிட்டனள் என்று கண்டோர் கூறுவர்.

இங்கே, அவள் தந்தையின் மாளிகை நெல்வளம் மிக்கது; மகிழ்ச்சி மிக்க மயில்கள் யானை போன்ற பெருங்குரல் கொண்ட 'யானைக் குருகு' எனப் பெயர் கொண்ட பறவைகளுடன் கூடி ஒலிக்கும். இடையறாது முரசு முழங்க இங்குள்ளவர் செல்வப் பயனை நுகர்ந்து வாழ்கின்றனர். இவ்வளமனையில் என் செல்வ மகள் அடிமேல் அடி எடுத்து வைத்தாலும் நொந்துவிடுவாள். அத்தகைய மெல்லியலாளை நான் காவலுக்கு உட்படுத்தினேன்; கண்டிக்கவும் செய்தேன். ஐவகையாய்ப் பகுத்து அழகு செய்யப்பெற்று மலர் சூடியிருந்த அவள் கூந்தலைக் கையால் பற்றி இழுத்துக் கருணையின்றிப் பிரம்பு முரியும்படி அவள் முதுகில் அடித்துத் துன்புறுத்தினேன். அடியையெல்லாம் வாங்கிக்கொண்டு, அது 'தன் முதுகு' என்று கருதாமல் ஆடாமல் அசையாமல் நின்றாள்.

குறுக்கைப் பறந்தலை என்னும் போர்க்களத்தில் பெரும்புகழ் படைத்த அன்னி என்பவன், திதியன் என்பவனுக்குரிய பரம்பரைக் காவல் மரமாகிய, மென்மையான பூங்கொத்துகளைக் கொண்ட

புன்னை மரத்தை அடியோடு வெட்டியபோது அம்மரம் சிதைவுற்றதுபோல, என் கைகள் மிகுந்த துன்பத்தை அடையட்டும்.

கருத்து

என் மகளை அடித்த என் கைகள் மிகுந்த துன்பம் அடையட்டும்.

விளக்கம்

"என் மகள் மிகவும் இரங்கத்தக்கவள்; ஆள் நடமாடாத வழியிலே தலைவனோடு சென்றுவிட்டாள். எம் வளமனையில் அடிமேல் அடிவைத்து நடந்தாலும் என் மகள் நொந்து விடுவாள். அத்தகையவளைக் காவலுக்குட்படுத்தி, கூந்தலைப் பற்றிப் பிரம்பால் அடித்துத் துன்புறுத்திய என் கை மிகவும் துன்படையட்டும்" என்று செவிலித்தாய் மகளைத் துன்புறுத்தியதை நினைந்து மிகவும் வருந்தினாள்.

குறிப்பு

அன்னி, திதியனுக்குரிய புன்னை மரத்தை வெட்டினாலும், அவன் திதியனோடு நிகழ்த்திய போரில் கொல்லப்பட்டான் என அகநானூறு 126ஆம் பாடல் கூறும்.

சொற்பொருள்

1. உலறி - காய்ந்து; புழல்கால் - உள் துளை கொண்ட அடிமரம்.
2. சிள் வீடு - சிள் வண்டுகள்; ஆர்க்கும் - ஒலிக்கும்.
3. வற்றல் - ஒரு வகை மரம்; பொன்தலை - பொன் நிறத் தலையைக் கொண்ட; ஓதி - ஓணான்.
4. வெயில் கவின் இழந்த - வெயிலால் அழகு குறைந்த; வைப்பு - ஊர்; பையுள் கொள - வருத்தம் கொள்ளுதலின்.
5. நுண்ணிதின் நிவக்கும் - மெல்ல மெல்ல ஏறிச் செல்லும்; வெண் ஞெமை - வெள்ளிய ஞெமை மரங்களைக் கொண்ட; வியன்காடு - அகன்ற காடு.
6. ஆள்இல் - ஆள்கள் நடமாடாத; அத்தம் - வழி; அளியள் - இரங்கத் தக்கவளாய என் மகள்.
7. வாள்வரி - வாள்போலும் வரிகளைக் கொண்ட புலி; புண்கூர் யானை - (போர் செய்தமையால்) புண்மிக்க யானை.
8. புகர் சிதை முகத்த - புள்ளிகள் சிதைந்த முகத்தினைக் கொண்டனவாய்; வார - ஒழுக.

9. உயர்சிமை - உயர்ந்த உச்சியினைக் கொண்ட; நெடுங்கோடு - நெடிய சிகரத்தில்; உரும் - இடி; முழங்கும் - ஒலிக்கும்.
10. பெருஞ்சீர் - பெரிய புகழினைக் கொண்ட.
11. அன்னி - அன்னி என்பவன்; குறுக்கைப் பறந்தலை - குறுக்கைப் பறந்தலை என்னும் போர்க்களத்தில்; திதியன் - திதியன் என்பவனின்.
12. தொல்நிலை - பழமை பொருந்திய; முழு முதல் - அடி முதல்; துமிய - துணித்திட்ட.
13. நன்னர் மெல் இணர் - நல்ல மெல்லிய பூங்கொத்துகளைக் கொண்ட; புன்னைபோல - புன்னை மரம்போல; கடுநவைப் படீஇயர் - பெரிய துன்பம் அடையட்டும்.
14. களிமயில் - களிக்கும் மயில்கள்.
15. குஞ்சரக் குரல - யானை போலும் குரல் கொண்ட; குருகோடு - யானையங்குருகு எனப் பெயர் பெறும் பறவையோடு சேர்ந்து; ஆலும் - ஒலிக்கும்.
16. துஞ்சா முழவின் - இடையறாது ஒலிக்கும் முழவினையும்; துய்த்து இயல் வாழ்க்கை - செல்வம் நுகர்ந்து வாழும் வாழ்க்கையினையும் கொண்ட.
17. கூழுடைத் தந்தை - மிகுந்த நெல்லை உடைய தந்தையின்; இடனுடை வரைப்பின் - அகன்ற இடமுள்ள மாளிகையில்.
18. ஊழ் அடி ஒதுங்கினும் உயங்கும் - முறையாய் அடியெடுத்து வைத்து நடந்தாலும் வருந்தும்; ஐம்பால் - ஐந்தாய் வகுக்கப்பட்ட.
19. சிறுபல் கூந்தல் - சிறிய பலவாகிய கூந்தலை; போது பிடித்து - மாலையுடன் பற்றி; அருளாது - இரக்கமில்லாமல்.
20. எறிகோல் - அடிக்கும் கோல்; சிதைய - சிதையும்படி; நூறவும் - அடிக்கவும்; சிறுபுறம் - முதுகு; எனக்குஉரித்து - எனக்கு உரியது; என்னாள் - என்று கருதாது.
21. அமர்க்கண் - விரும்பும் கண்களைக் கொண்ட; அஞ்ஞை - மகளை; அலைத்த - அடித்த.

கண்டோர் கூற்று

நற்றிணை 2 **பெரும்பதுமனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போகா நின்றோரை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனும் தலைவியும் பாலைநில வழியில் உடன்போக்கில் சென்றனர். 'கொடுமையான இவ்வழியில் இவளைக் கொண்டுசெல்லும் இவ் விளைஞனின் உள்ளம், இடியினும் கொடுமையானது' என அவ்வழியில் அவர்களைக் கண்டோர் சொல்லியது.

அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து,
ஒலிவல் ஈந்தின் உலவைஅம் காட்டு,
ஆறுசெல் மாக்கள் சென்னி எறிந்த,
செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய,
வல்லியம் பெருந்தலைக் குருளை மாலை,
மான்நோக்கு இண்டுஇவர் ஈங்கைய சுரனே;
வைஎயிற்று ஐயள் மடந்தை முன்னுற்று
எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளம்,
காலொடு பட்ட மாரி
மால்வரை மிளிர்க்கும் உருமினும் கொடிதே!

தெளிவுரை

மிகுந்த குளிர்ச்சி பொருந்திய குன்றத்தில் ஆழமாய் வேர் விட்டுத் தழைத்த வலிய ஈத்த மரங்களிடையே காற்று, சுழன்று வீசுவதான காடு; இக்காட்டுவழியே செல்லும் மக்களின் தலை களைக் கடித்தலால், பெருத்த தலை கொண்ட புலிக்குட்டிகள் குருதி படிந்து சிவப்புக்கறைபட்ட தலையையும், இரத்தம் பூசிய சிவந்த வாயையும் கொண்டனவாய் உள்ளன. மாலைப் பொழுதில் இக்குட்டிகள் தமக்கு உணவாய் மான்களை எதிர் நோக்கியபடி இண்டங்கொடி பின்னிப் படர்ந்த ஈங்கைப் புதர்களில் பதுங்கியிருக்கும்.

இத்தகைய காட்டுவழியில் கூரிய பற்களைக் கொண்ட மெல்லியளான மடந்தையை முன்னே செல்ல விடுத்து, தானும் அவள் பின்னாக இவ்விராப்போதில் செல்லுகின்றான், இவ் விளைஞன். இவன் உள்ளம், காற்றோடு கலந்து பெய்யும் பெருமழையில் பெரிய கற்களைப் புரட்டுமாறு இடிக்கின்ற இடியைக் காட்டிலும் கொடுமையானது.

கருத்து

கொடிய காட்டுவழியில் இவளை அழைத்துச் செல்லும் இளைஞனின் உள்ளம் இடியினும் கொடியது.

விளக்கம்

பகற்போதில் வழிச்செல்வாரது தலையை எறிந்து அதனால் குருதிக்கறை படிந்த வாயோடு விளங்கிய புலிக்குட்டிகள், மீண்டும் தமக்கு இரையாய் மான்களை எதிர்நோக்கி, இண்டங் கொடி படர்ந்த ஈங்கைப் புதர்களில் மாலைப் பொழுதில் மறைந் திருக்கும் இயல்பினைக் கொண்டது, இக்காடு. இவ்வழியில் மெல்லியலாளோடு இரவில் செல்லத் துணிந்துள்ள இளைஞனின் உள்ளம் இடியினும் கொடியது.

சொற்பொருள்

1. அழுந்துபட வீழ்ந்த - ஆழமாய் வேர்விட்ட.
2. ஒலி வல் - தழைத்த வலிய; ஈந்தின் - ஈத்த மரங்கள் பொருந்திய; உலவை - காற்று மோதி அலைக்கும்.
3. சென்னி - தலையை; எறிந்த - பிளந்து (உண்டதனால்).
4. செம்மறுத் தலைய - (குருதிபட்டுச்) சிவப்புக் கறைபட்ட தலையையும்; நெய்த்தோர் வாய - குருதி பூசிய வாயையும்.
5. வல்லியம் - புலி; பெருந்தலை - பெரிய தலையைக் கொண்ட; குருளை - குட்டி.
6. மான் நோக்கு - மானை எதிர்நோக்கி; இண்டு இவர் - இண்டங்கொடி பின்னிப் படர்ந்த; ஈங்கைய - ஈங்கை மரங்களைக் கொண்டது.
7. வை எயிற்று - கூரிய பற்களையும்; ஐயள் - மென்மைத் தன்மையும் வாய்ந்த; மடந்தை - காதலியாகிய பெண்ணை; முன்னுற்று - முற்படச் செலுத்தி, முன்னே விட்டு.
8. எல்லிடை - இரவுப்பொழுதில்; நீங்கும் - செல்லுகின்ற.

9. காலொடு பட்ட மாரி - காற்றொடு கலந்து மழை பெய்யும் காலத்தில்.
10. மால்வரை - பெரிய மலைப்பாறைகள்; மிளிர்க்கும் - பிளந்து விழ (மோதுகின்ற); உருமினும் - இடியைவிட.

கண்டோர் கூற்று

குறுந்தொகை 7 **பெரும்பதுமனார்**

திணை : பாலை

கூற்று

செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனும் தலைவியும் உடன்போக்கில் செல்லும்போது பாலை நிலத்து வழியிடையில் அவர்களைக் கண்டவர் இரங்கிக் கூறியது.

வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்அடி மேலவும் சிலம்பே; நல்லோர்
யார்கொல்? அளியர்தாமே – ஆரியர்
கயிறுஆடு பறையின் கால்பொரக் கலங்கி,
வாகை வெண்நெற்று ஒலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே.

தெளிவுரை

ஆரியக்கூத்தர்கள் மூங்கில் நட்டு, கயிறு கட்டி, அதன்மேல் நின்று ஆடும்போது கொட்டப்படும் பறையோசைபோல, வாகை மரத்தின் முற்றிய வெண்மையான நெற்றுகள், மேல் காற்றுத் தாக்குவதால் 'கலகல' என ஒலிக்கும். இவ்வேளையில், மூங்கில் அடர்ந்துள்ள இக்காட்டுவழியே செல்லக் கருதி இருவர் வந்துகொண்டுள்ளனர். இருவருள், வில்லேந்தியுள்ள இளைஞனின் கால்களில் வீரக்கழல்கள் உள்ளன; வளையலணிந்துள்ள மகளின் மெல்லிய அடிகளில் சிலம்புகள் உள்ளன. (ஆதலின், இவர்கள் திருமணமாகாதவர்கள்; உடன்போக்குச் செல்பவர் என அறிய இயல்கிறது.) அச்சமின்றிக் காட்டுவழியில் செல்லும் இந்த நல்லவர் எவ்வூரினரோ, யார் பெற்ற மக்களோ! இவர்கள் இரக்கப்படுவதற்கு உரியவர் (காக்கப்பட வேண்டி

யவர்) என்று அவர்களை வழியில் கண்டவர் சொல்லிக்கொண் டனர்.

கருத்து

பாலைநில வழியில் செல்லும் இளைஞன் வீரக்கழல் அணிந்துள்ளான். அவனுடன் செல்லும் இளையவளின் காலடிகளில் சிலம்புகள் தென்படு கின்றன; உடன்போக்கில் செல்லும் இந்நல்லோர் யாரோ? இவர்கள் காக்கப்பட வேண்டியவர்கள்.

குறிப்பு

மணம் புரிவதற்கு முன்பு, மணமகளது காலில் பெற்றோர்களால் அணிவிக்கப்பட்ட சிலம்பை நீக்குவர். அது 'சிலம்புகழி நோன்பு' எனப்படும். 'இவள் காலில் சிலம்பு உள்ளதால் இவர்கள் திருமண மாகாதவர்கள், உடன்போக்கில் செல்பவர்கள்' என்று அவர்களை வழியில் கண்டார் அறிந்தனர்.

ஆரியக்கூத்தர் கழைக்கூத்தாடுதல் வழக்கம். நீண்ட இடைவெளியில் நடப்பட்டிருக்கும் இரு மூங்கில்களின் உச்சிகளைச் சேர்த்து ஒரு கயிறு இறுக்கமாய்க் கட்டப்பட்டிருக்கும். அதன்மீது கூத்தர் நின்றாடுவார். மேலே அவர் ஆடிக்கொண்டிருக்கையில் கீழே நிற்கும் ஒருவன் பறையினைத் தட்டி, வேடிக்கை பார்க்கக் கூட்டம் சேர்த்துக்கொண்டிருப்பான். இது 'கழைக்கூத்து' எனப்படும். (கழை - மூங்கில்.)

வாகை நெற்றுகளைக் காற்றுத் தாக்கும்போது எழும் ஒலியானது, ஆரியக்கூத்தர் கழையில் கட்டிய கயிற்றின்மீது ஏறி ஆடும்பொழுது கொட்டப்படும் பறையின் ஒலியைப் போன்றிருக்கிறது.

சொற்பொருள்

1. வில்லோன் - வில்லையுடையவன்; காலன - காலில் கிடப்பன; கழல் - வீரக்கழல்; தொடியோள் - வளையலணிந்தவள்.
2. மெல் அடி - மென்மையான அடி; மேலவும் - மேலே கிடப்பது.
3. யார் கொல் - எவரோ?; அளியர் - இரங்கத்தக்கவர்; ஆரியர் - ஆரியக் கழைக்கூத்தர்.
4. கால் பொர - காற்று மோதுதலால்; கலங்கி - அசைந்து.
5. வாகை - வாகை மரம்; வெண் நெற்று - வெண்மையான முற்றிய காய்.
6. வேய் - மூங்கில்; பயில் - அடர்ந்திருக்கும்; அழுவம் - காடு; முன்னியோர்- முற்பட்டவர்.

கண்டோர் கூற்று

குறுந்தொகை 229 **மோதாசனார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துக் கண்டார் தம்முள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் செல்லும் தலைவன் தலைவியை முன்பே அறிந்தவர், வழியிடையே கண்டபோது தம்முள்ளே சொல்லிக்கொண்டது.

இவன்இவள் ஐம்பால் பற்றவும், இவள்இவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்,
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது,
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ;
நல்லை மன்றம்ம பாலே – மெல்இயல்
துணைமலர்ப் பிணையல் அன்னஇவர்
மணம்மகிழ் இயற்கை காட்டி யோயே.

தெளிவுரை

இளம் வயதில் இவன் இவள் கூந்தலைப் பற்றி இழுப்பான்; இவளும் இவனது புல்லிய சிறிய தலைமுடியை வளைத்து இழுத்து ஓடுவாள். செவிலித்தாயர் இடைமறித்து விலக்கிவிட்ட போதும் விலகாமல் காரணமின்றிச் சிறுசிறு பூசல் இட்டுக் கொண்டே இருப்பர். (அக்காலம் கழிந்தது.) இப்போதோ இணையாய்ப் பொருந்தக் கட்டிய மலர்மாலைபோல இவர்கள் மணம் புரிந்து வாழும் இயல்பினைத் தோற்றுவித்துள்ள இயற்கை விதியே! நீ பெரிதும் நன்மை உடையை!

கருத்து

இளமையில் சண்டையிட்டு விளையாடிக்கொண்டிருந்தவர், இப்போது உளங்கலந்த காதலராய்விட்டனரே!

விளக்கம்

தலைவியும் தலைவனும் பாலைநில வழியில் உடன்போக்கில் சென்றதை வழியில் கண்டவர்கள், "இவர்கள் இளமையில் ஒருவ

ரோடொருவர் சிறுசிறு சண்டைகளை இட்டுக்கொண்டிருந் தவர்கள். இப்பொழுதோ இணைபிரியாத துணைவர் ஆயினர். இயற்கையின் சக்திதான் எத்துணை வலியது!" எனத் தம்முள்ளே சொல்லிக்கொண்டனர்.

சொற்பொருள்

1. ஐம்பால் - கூந்தல் (கூந்தலைக் குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என மகளிர் ஐந்து வகையாய்ப் பிரித்துப் புனைவு செய்து கொண்டதால் கூந்தலுக்கு ஐம்பால் எனப் பெயர் ஏற்பட்டது.)
2. புன்தலை - சிறிய தலை; ஓரி - ஆணின் தலைமுடி; வாங்குநள் - வளைப்பவள்; பரிதல் - ஓடுதல்.
3. தவிர்ப்பவும் - தடுக்கவும்; தவிராது - விலகாமல்.
4. ஏதுஇல் - காரணம் இல்லாமல்; சிறுசெரு - சிறு சச்சரவு; உறுப - செய்துகொள்வர்.
5. நல்லை - நன்மை உடையை; மன்ற - நிச்சயமாய்; பால் - இயற்கை விதி; மெல் இயல் - மென்மையான தன்மை.
6. துணைமலர்ப் பிணையல் - இணையாய்ப் பொருந்தக்கட்டிய மாலை.
7. இயற்கை - இயல்பு.

கண்டோர் கூற்று

ஐங்குறுநூறு 381 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கின்கண் இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற தலைவன் தலைவியரை இடைவழியில் கண்டவர்கள் சொல்லியது.

பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து,
செங்கால் மராஅத்த வரிநிழல் இருந்தோர்
யார்கொல், அளியர் தாமே வார்சிறைக்
குறுங்கால் மகன்றில் அன்ன,
உடன்புணர் கொள்கைக் காத லோரே?

தெளிவுரை

பசுமையான நெல்லிக்காய்கள் பலவற்றை உண்டு, சிவந்த அடிப்பகுதியைக் கொண்ட கடம்ப மரத்தின் செறிவில்லாத நிழலிலே தங்கியிருக்கும் இவர்கள் யாரோ? நீண்ட சிறகு களையும் குறுகிய கால்களையும் கொண்ட மகன்றில் பறவைகள் போல (ஈருயிரும் ஒருடலுமாய்) இணைபிரியாத காதலர் ஆவரோ? (யாவரே ஆயினும் ஆகுக!) இவர்கள் நம்மால் இரங்கத்தக்க நிலையில் இருக்கின்றனர்.

கருத்து

உடன்போக்கில் சென்றுகொண்டிருக்கும் இவர்கட்கு நம்மாலியன்றதைச் செய்து உதவுவோம்.

சொற்பொருள்

1. பைங்காய் நெல்லி - பசுமையான நெல்லிக்காய்; மிசைந்து - உண்டு.
2. செங்கால் - சிவந்த அடிமரத்தைக் கொண்ட; மரா - ஒருவகை மரம் (கடம்பு); வரி நிழல் - கோடு கோடாய் வரிப்பட்டுள்ள நிழல்.
3. யார் கொல் - யாவரோ? அளியர் - இரங்கத்தக்கவர்; வார்சிறை - நீண்ட சிறகு.
4. மகன்றில் - ஒரு வகை நீர்வாழ் பறவை (ஆணும் பெண்ணும் இணை பிரியாது).
5. உடன்புணர் கொள்கை - ஒன்றையொன்று இணை பிரியாத கொள்கை.

கண்டோர் கூற்று

நற்றிணை 324 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துக் கண்டோர் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தான் விரும்பிய தலைவனோடு உடன்போக்கில் செல்ல, வழியிடைக் கண்டோர் அவளை நோக்கி வருந்திக் கூறியது.

அந்தோ! தானே அளியள் தாயே!
நொந்துஅழி அவலமொடு என்ஆகு வள்கொல்?
பொன்போல் மேனித் தன்மகள் நயந்தோள்
கோடுமுற்று யானை காடுடன் நிறைதர
நெய்பட்டு அன்ன நோன்காழ் எஃகின்
செல்வத் தந்தை இடனுடை வரைப்பின்
ஆடுபந்து உருட்டுநள் போல ஓடி,
அம்சில் ஓதி இவள்உறும்,
பஞ்சி மெல்லடி நடைபயிற் றும்மே.

தெளிவுரை

பொன்போல் ஒளிரும் எழிலார்ந்த மேனி வாய்ந்த இவளை இவள் தாய் மிகவும் விரும்பிப் போற்றுவாள். இவள் இடைச்சுரத்தில் நடந்து செல்லுகின்றாள். இவள் தாய் மிகவும் இரங்கத்தக்கவள். அவள் நொந்து, மிகுந்த துயரத்துடன் இனி என்ன ஆவளோ? இம்மகளுக்குத் தந்தை, முதிர்ந்த கொம்புகளைக் கொண்ட யானைகள் விளங்கும் கானகத்தை உடையவன்; நெய் ஒழுகினாற் போன்ற வலிய காம்பு செருகிய வேலினைக் கொண்டவன். அத்தந்தையின் இடம் அகன்ற மனையில் ஆடுகின்ற பந்தினை உருட்டுபவள்போல ஓடி விளையாடும் எழில் கொண்ட இம்மகள் சிலவாகிய கூந்தலைக் கொண்டவளாய் மென்மையான அடிகளால் நடந்து செல்லுகின்றனளே!

கருத்து

பொன்போலப் பேணி வளர்த்த மகளைப் பிரிந்த தாய் மிகவும் துன்பம் அடைவாளே!

விளக்கம்

போக்குடன்பட்டுத் தலைவனோடு நடந்து செல்லும் தலைவியைச் சுரத்தின் இடைவழியில் கண்டோர், 'இவளைப் பெற்ற தாய் என்னாவளோ? அவள் இரங்கத்தக்கவள்' என்று தமக்குள் கூறிக்கொண்டனர். சுரத்தின் வெம்மையையும் அதனைக் கடந்து செல்லும் அருமையையும் கண்டு, இரக்கம் மிகுந்து, 'கண்ணிற்காணும் நமக்கே இத்துணை அவலம் தோன்றுகின்றதெனின், பெற்றெடுத்த தாயின் பெருந்துயரத்தை நம்மால் சொல்லவும் இயலுமோ?' என மகளைக் கண்டோர் தாயின் நிலைக்காக இரக்கமுறுகின்றனர்.

சொற்பொருள்

1. அளியள் - இரங்கத்தக்கவள்.
2. அவலம் - துன்பம்; என் ஆகுவள் - எத்துணைத் துன்பம் அடைவளோ?
3. பொன்போல் மேனி - தலைவியின் பொன் நிற உடல்; நயந்தோள் - விரும்பியவள் (தாய்).
4. கோடு - யானைக்கொம்பு; முற்று - முற்றிய; நிறைதர - நிறைந்திருக்க.
5. நோன்காழ் எஃகு - வலிமையான வேல்.
6. இடனுடை வரைப்பு - அகன்ற இடம்.
8. அம்சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலைக் கொண்டவள்.
9. பஞ்சி மெல் அடி - பஞ்சு போன்ற மென்மையான பாதம்.

கண்டோர் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 69 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துக் கண்டார் செலவு விலக்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவில் தலைவியை உடன் அழைத்துச் சென்றான். அவர்களை வழியிற்கண்ட மக்கள் கூறியது.

அத்தம் நெடிய அழற்கதிரோன் செம்பாகம்
அத்த(ம்)மறைந் தான்இவ் அணியிழையோ(டு) – ஒத்த
தகையினால் எம்சீறூர்த் தங்கினிராய் நாளை
வகையினிராய்ச் சேறல் வனப்பு.

தெளிவுரை

"நீங்கள் செல்ல வேண்டிய பாலை நில வழிகள் நீண்டு உள்ளன. மேற்கு மலையில் நெருப்பினை ஒத்த கதிரவனும் சரிபாதி மறைந்துவிட்டான். எனவே, இவ்வழகிய மங்கையுடன் நீயும் எம் சிறிய ஊரில் இன்றிரவு உமக்குரிய தகுதியுடன் தங்கி, நாளை எம்மிடமிருந்து நீங்கிச் செல்வது சிறந்ததாகும்" என்று, உடன்போக்கில் சென்ற இணையரை இடைவழியில் கண்டார் அவர்களிடம் சொல்லியது.

கருத்து

நீண்ட வழி; பொழுது மறைந்துவிட்டது; இரவில் எம் ஊரில் தங்கி விடிந்ததும் நீங்கள் செல்லலாம்.

சொற்பொருள்

1. அத்தம் - (நீங்கள் செல்லவிருக்கிற) வழி; நெடிய - நீண்டது; அழற்கதிரோன் - நெருப்பினைப் போன்ற கதிர்களைக் கொண்ட சூரியன்; செம்பாகம் - பாதியளவு.
2. அத்தம் - மலையில்; இவ்அணியிழையோடு - இவ்வழகிய அணிகளணிந்த மங்கையுடன்; ஒத்த - (எம்மோடு) ஒருபடித்தாய.

3. தகையினால் - தகுதியோடு; எம் சீறூர் - எமது சிறிய ஊரில்; தங்கினிர் ஆய் - தங்கி.
4. வகையினிர் ஆய் - எங்களைவிட்டு நீங்கி; சேறல் - வேற்றிடம் சேருதல்; வணப்பு - அழகு.

கண்டோர் கூற்று

குறுந்தொகை 390 **உறையூர் முதுகொற்றனார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போயினாரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுது செலவும் பகையும் காட்டிச் செலவு விலக்கியது.

கூற்று விளக்கம்

தலைவியை உடன் அழைத்துக்கொண்டு பாலைவழியில் போகும் தலைவனை, எதிரே கண்டார் பொழுது போயினமையும், வழியினது தீமை யினையும் காட்டி, 'இனிப் போகாது தங்குக' எனக் கூறியது.

எல்லும் எல்லின்று; பாடும் கேளாய்
செல்லா தீமோ, சிறுபிடி துணையே!
வேற்றுமுனை வெம்மையின் சாத்துவந்து இறுத்தென,
வளைஅணி நெடுவேல் ஏந்தி,
மிளைவந்து பெயரும் தண்ணுமைக் குரலே.

தெளிவுரை

இளைய பெண்யானையுடன் துணையாய்ச் செல்லும் ஆண் யானை போன்றவனே! பொழுதும் ஒளி மழுங்கியது. வாணிகச் சாத்து வழியில் தங்கியிருப்பதால், அவர்கள் பொருளைக் கொள்ளையடிக்க ஆறலை கள்வர், வேற்று மன்னருடன் போருக்குச் செல்வதுபோல, கையில் நெடிய வேலை ஏந்தி, தண்ணுமை முழக்கிக் காட்டினிடையே வந்துகொண்டுள்ளனர். ஆதலின், மேற்கொண்டு செல்லாதீர்!

கருத்து

"மாலை வந்துவிட்டது; வழிச்செல்வோர் ஆறலை கள்வர் துன்பத்திற்கு ஆளாவர். ஆதலின், மேலே செல்லாது இங்கேயே தங்கி விடிந்தபின் செல்லுங்கள்" என அறிவுரை கூறினர்.

சொற்பொருள்

1. எல் - சூரியன்; எல் இன்று - ஒளியில்லாதாயிற்று; பாடும் - ஓசையும்.
2. செல்லாதீமோ - செல்லாதீர்; சிறு பிடிதுணையே - சிறிய பெண் யானைக்குத் துணையாய்ச் செல்லும் ஆண்யானை போன்றவனே!
3. வேற்றுமுனை - பகைப்புலம்; வெம்மையின் - பகையைப் போல; சாத்து - வாணிகர் கூட்டம்; இறுத்தென - தங்கியது என.
4. வளை அணி - வளையம் பொருந்திய.
5. மிளை - காவற்காடு; பெயரும் - முழக்குவதால் எழும்; தண்ணுமைக் குரல் - தண்ணுமை என்னும் இசைக்கருவியின் முழக்கம்.

கண்டோர் கூற்று

ஐங்குறுநூறு 382 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் இடைச்சுரத்தினது ஊரின்கண் எல்லிடைத் தங்கியவழி அவ்வூர்ப்பெண்டிர் பார்த்து இரங்குதல் கண்டார் கூறியது. (எல் - இரவு.)

கூற்று விளக்கம்

தலைவியும் தலைவனும் சுரநெறியில் சென்றபொழுது அவர்கள் இடைப் பட்டதோர் ஊரில் இரவில் தங்கினர். அவர்கள் வரவு கண்ட ஊரில் ஆரவாரம் எழுந்தது. இக்காட்சியைக் கண்டவர்கள், 'இவ்வூரில் பெண்களைப் பெற்றவர் வருத்தம் பெரிதாயிருக்கும்' என்று இரங்கினர்.

புள்ஒலிக்கு அமர்த்த கண்ணள், வெள்வேல்,
திருந்துகழல் காளையொடு அருஞ்சுரம் கழிவோள்,
எல்லிடை அசைந்த கல்லென் சீறூர்ப்
புனைஇழை மகளிர்ப் பயந்த
மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே.

தெளிவுரை

ஒளி பொருந்திய வேலைக் கையிலும், வீரக்கழல்களைக் காலிலும் கொண்டுள்ள தலைவனோடு அருஞ்சுரத்தைக் கடந்து செல்வோளாகிய இவள், பறவைகளின் ஒலிக்கே அச்சமுற்று மருண்ட கண்களைக் கொண்டவளாய்த் தோன்றுகிறாள். இவர்கள் இருவரும் இவ்வூரில் இரவில் தங்கியுள்ளதால் இவ்வூரே ஆரவாரத்தினையுடையதாயிற்று. அணிகலன்களை அணிந்தவரான இளைய மகளிரைப் பெற்றுள்ள முதுபெண்டிர் இதனால் மிகவும் வருந்துகின்றனர்.

கருத்து

இடைச்சுரத்தில் தங்கியிருக்கும் இவளைப் பார்த்து முதுபெண்டிர் வருந்துகின்றனர்.

குறிப்பு

ஒருவேளை தம் மகளும் இதுபோல் சென்றுவிடுவாளோ என்பதால் முதுபெண்டிர்க்கு வருத்தம் உண்டாயிற்று.

சொற்பொருள்

1. புள் ஒலி - பறவை ஒலி; அமர்த்த - அஞ்சி மருளும்; கண்ணள் - பார்வையைக் கொண்டவள்; வெள்வேல் - வெள்ளிய வேல்.
2. திருந்து கழல் - திருத்தமுற்ற கழல்; கழிவோள் - கடந்து செல்வோள்.
3. எல்லிடை - இரவில்; அசைந்த - தங்கியிருந்த; கல்லென் - 'கல்' எனும் ஒலியுடன்; சீறூர் - சிறிய ஊர்.
4. புனை இழை மகளிர் - அணிகலன்களை அணிந்தவராகிய மகளிர்; பயந்த - ஈன்ற, பெற்றெடுத்த.
5. மனைகெழு பெண்டிர் - வீட்டில் தங்கியிருக்கும் முதுமகளிர்; நோவு - துன்பம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 384 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போகிய தலைமகள் ஆண்டு எதிர்வரும் அந்தணர்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் சென்றுகொண்டிருக்கும் தலைவி, வழியில் எதிரே வரும் அந்தணர்களை நோக்கிச் சொல்லியது.

சேட்புலம் முன்னிய அசைநடை அந்தணிர்!
நும்ஒன்று இரந்தனென் மொழிவல்; எம்ஊர்,
'யாய்நயந்து எடுத்த ஆய்நலங் கவின
ஆர்இடை இறந்தனள்' என்மின்
நேர்இறை முன்கைஎன் ஆயத் தோர்க்கே.

தெளிவுரை

நெடுந்தொலைவு பயணம் மேற்கொண்டு மெதுவாய் நடந்து செல்லுகின்ற அந்தணர்களே! உங்களைப் பணிந்து ஒன்று கேட்டுக்கொள்கின்றேன். (நீங்கள் எம் ஊருக்குச் சென்றால்) அங்குள்ள நேரிய திரண்ட முன்னங்கைகளைக் கொண்ட என் தோழியரிடம், "உங்கள் தலைவி, தன் தாய் பேணி வளர்த்த சிறந்த நலமெல்லாம் மேலும் வனப்பெய்துமாறு பாலை நிலத்தைக் கடந்து தலைவனுடனே நலமாய்ச் செல்லுகின்றாள்" என்று கூறுங்கள்.

கருத்து

"அந்தணர்களே! என் தோழிமாரிடம், தலைவனுடன் 'தாய் வளர்த்த நலத்தினும் மேம்பட்ட நலத்துடன்' நான் சென்றுகொண்டிருக்கிறேன் என்பதைக் கூறுங்கள்."

சொற்பொருள்

1. சேட்புலம் - நெடுந்தொலைவு; முன்னிய - (செல்லக்) கருதிய; அசைநடை - அசைந்து அசைந்து செல்லும் மெல்லிய நடை.

2. இரந்தனென் - கெஞ்சிக் கேட்டு; மொழிவல் - கூறுகின்றேன்.
3. யாய் - தாய்; நயந்தெடுத்த - விரும்பி வளர்த்துப் பேணிய; ஆய் நலம் - சிறந்த அழகு; கவின - (மேலும்) வனப்பெய்த.
4. ஆர் இடை - செல்லுதற்கு அரிய வழியிலே; இறந்தனள் - கடந்து சென்றனள்; என்மின் - என்று கூறுங்கள்.
5. நேர் இறை முன்கை - நேரிய திரண்ட முன் கை; ஆயத்தோர் - விளையாட்டுத் தோழியர்.

கண்டோர் கூற்று

அகநானூறு 165 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாயது நிலைமை கண்டார் சொல்லியது.

கூற்று விளக்கம்

உறவினர் அறியாது தலைவி உடன்போக்கில் சென்றுவிட்டாள். அதனை அறிந்து மிகவும் வருந்திய தாயின் நிலையினைக் கண்டார் வருத்தமுற்று இரங்கிக் கூறியது.

கயந்தலை மடப்பிடி பயம்பில் பட்டென,
களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ,
ஒய்யென எழுந்த செவ்வாய்க் குழவி
தாதுஎரு மறுகின் மூதூர் ஆங்கண்,
எருமை நல்ஆன் பெருமுலை மாந்தும்
நாடுபல இறந்த நன்ன ராட்டிக்கு,
ஆயமும் அணிஇழந்து அழுங்கின்று, தாயும்
'இன்தோள் தாராய் இறீஇயர்என் உயிர்'என,
கண்ணும் நுதலும் நீவி, தண்ணென,
தடவுநிலை நொச்சி வரிநிழல் அசைஇ,
தாழிக் குவளை வாடுமலர் சூட்டி,
'தருமணற் கிடந்த பாவைஎன்
அருமக ளே'என முயங்கினள் அழுமே!

தெளிவுரை

(பாலை வழியில் ஆண்யானை, பெண்யானை, அவற்றின் கன்று ஆகியவை சென்றுகொண்டிருந்தபோது) இளைய பெண்யானை, யானை பிடிப்பதற்காக வெட்டப்பட்டிருந்த குழியில் வீழ்ந்துவிட்டது. அது கண்ட ஆண்யானை பெருங் குரலெடுத்துப் பிளிறியது. அந்த முழக்கத்தைக் கேட்டு அஞ்சி, சிவந்த வாயைக் கொண்ட யானைக்கன்று அஞ்சி ஓடி, எருப்பொடிகள் பரவிய தெருக்களைக் கொண்ட முல்லை நில ஊர்க்குள் சென்றது; அதற்குப் பசி தோன்றவே, (தோற்றத்தால் யானை போன்றிருந்த) நல்ல எருமையின் பாலை வயிறார உண்டது. இத்தகைய காட்சி கொண்ட நாடுகள் பலவற்றைக் கடந்து தலைவி, தலைவனோடு சென்றுவிட்டாள்.

அவளைப் பிரிந்து அவள் தோழியர் கூட்டம் வருந்திப் பொலிவிழந்து நின்றது. அவள் தாயும் துயர மிகுதியால் தன் வீட்டு முற்றத்தில் பரப்பியிருந்த மணலில் பிறர் பாராது கிடந்த தன் மகளின் விளையாட்டுப் பொம்மையை எடுத்து, (அது வெயிலில் கிடந்து வாடுவதாய்க் கருதி) அப்பொம்மையின் கண்களையும் நெற்றியையும் தடவினாள்; அதனை அங்கு நின்ற நொச்சி மரத்தின் வரிவரியான நிழலில் கிடத்தினாள்; தாழியில் இருந்த வாடிய குவளை மலரை அதற்குச் சூட்டி, 'என் அருமை மகளே' என்று ஆற்றாமையோடு கூறி, அந்தப் பொம்மையை எடுத்து ஆரத் தழுவி அழுது நின்றாள். (இதனைக் கண்டார் தாயின் நிலைமை கருதி இரங்கினர்.)

கருத்து

மகளைப் பிரிந்த தாய், அம்மகளின் விளையாட்டுப் பொம்மையை நோக்கி, 'என் மகளே' என மருங்கி அழுதனள். அது கண்டு, தலைவன் தலைவியை வழியிடைக் கண்டார் மிகவும் இரங்கினர்.

விளக்கம்

நாடுகள் பல கடந்து சென்றுவிட்ட தன் மகளை நினைந்து தாய் மிகவும் வருந்துகிறாள். தன் மகளின் வியைாட்டுப் பொம்மையை எடுத்து அதைத் தன் மகளாகவே கருதி, 'என்

அருமை மகளே' என்று அணைத்துக்கொண்டு அழுகிறாள். வழிச்செல்வோர் தாயின் நிலை கண்டு வருந்தி இரங்குகின்றனர்.

உள்ளுறை

தாய்யானை குழியில் விழுந்து மறுகவும், தந்தையானை முழங்கி வருந்திடவும் அஞ்சி ஓடிய யானைக்கன்று ஊரினுள் இருந்த எருமையின் பாலைப் பருகியது என்னும் தொடர்மூலம், தாய் முதலானவர் மறுகிப் புலம்பிடத் தலைவி அந்நியன் ஒருவன் பின் சென்று இன்புற்றாள் என்று கண்டோர் கூறினர் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்பட்டது.

சொற்பொருள்

1. கயந்தலை - மெல்லிய தலை; மடப்பிடி - இளமை வாய்ந்த பெண் யானை; பயம்பு - யானையைப் பிடிக்க உண்டாக்கப்பட்ட படுகுழி; பட்டென - வீழ்ந்ததாக.
2. விளிப்படுத்த - பெருங்குரலெடுத்துப் பிளிறிய; கம்பலை - முழக்கம்; வெரீஇ - அஞ்சி.
3. ஒய்யென - விரைந்து; செவ்வாய் - சிவந்த வாயைக் கொண்ட; குழவி - யானைக்கன்று.
4. தாது எரு - தாதாகிய எருவினைக் கொண்ட; மறுகு - வீதி; மூதூர் - பழைய ஊர்; ஆங்கண் - அவ்விடத்து.
5. நல்ஆன் - நல்ல எருமைமாடு; மாந்தும் - குடிக்கும்.
6. இறந்த - கடந்து சென்ற; நன்னராட்டி - நன்மையுடையளான (என் மகள்).
7. அணி இழந்து - அணிகலன்களைத் துறந்து; அழுங்கின்று - வருந்துகின்றது.
8. இன்தோள் தாராய் - இனிய தோளைத் தா; இறீஇயர் என் உயிர் - என் உயிர் நீங்கட்டும்.
9. நீவி - தடவி; தண்ணென - தட்பமுற.
10. தடவு நிலை - வளைந்த நிலையினைக் கொண்ட; வரிநிழல் - வரிவரியாய் இருக்கும் நிழல்; அசைஇ - கிடத்தி.
11. தாழிக் குவளை - தாழியில் வளர்க்கப்பட்டுள்ள குவளை.
12. தருமணல் - கொணர்ந்து பரப்பிய மணலில்; பாவை - பாவைப் பொம்மையை.
13. அருமகளே - அருமை மகளே!; முயங்கினள் - தழுவினள்.

கண்டோர் கூற்று

ஐங்குறுநூறு 386 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போகிய தலைமகளை இடைச்சுரத்துக் கண்டார் அவள் தாய்க்குச் சென்று கூறியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தலைவியை இடைவழியில் கண்டவர்கள், தலைவியின் இல்லம் சென்று, தாங்கள் அவளைக் கண்டதை, வருந்தியிருக்கும் நற்றாயிடம் சொல்லியது.

புன்கண் யானையொடு புலிவழங்கு அத்தம்
நயந்த காதலற் புணர்ந்துசென் றனளே;
நெடுஞ்சுவர் நல்லில் மருண்ட
இடும்பை உறுவி!நின் கடுஞ்சூல் மகளே.

தெளிவுரை

நெடிய சுவர்களைக் கொண்ட அழகிய வீட்டிலிருந்து கொண்டு, பிரிந்து சென்ற உன் மகளை நினைத்து மயங்கித் துன்புற்றிருப்பவளே! உன் தலைப்பிள்ளையாகிய (முதல் சூலில் தோன்றிய) உன் மகள் யானையும் புலியும் திரிகின்ற அச்சம் மிக்க. காட்டுவழிகளைத் தன்னை விரும்பிய காதலனோடு கடந்து விட்டாள். (இனி அவளுக்குத் துன்பமில்லை. நீ அவள் பற்றிய கவலையைக் கைவிடுக.)

கருத்து

உன் மகள் தலைவனோடு காட்டுவழிகளைக் கடந்துவிட்டாள்; அவள் பொருட்டாய் நீ இனி வருந்துதல் வேண்டா.

சொற்பொருள்

1. புன்கண் யானை - சிறிய கண்களைக் கொண்ட யானை; புலி வழங்கும் - புலி திரியும்; அத்தம் - வழி.
2. நயந்த - தான் விரும்பிய; புணர்ந்து - சேர்ந்து.
3. நல்லில் - நல்ல வீடு; மருண்ட - மயங்கிய.
4. இடும்பை - துன்பம்; உறுவி - உற்றிருப்பவளே!; கடுஞ்சூல் - முதல் சூலில் பிறந்த மகள் (முதற்பிள்ளை).

கண்டோர் கூற்று

ஐங்குறுநூறு 383 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போகிய தலைமகள், தலைமகன் வளைத்த கொம்பிற் பூக்கொண்டு தனக்கும் பாவைக்கும் வகுக்க, கண்டார் கூறியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கின்போது, வழியில் தலைவி பூப்பறிப்பதற்காகத் தலைவன் ஒரு கிளையைப் பற்றி வளைத்து நின்றான். தலைவி, தான் கொய்த பூவைத் தனக்கென்றும், தன் விளையாட்டுப் பாவைக்கென்றும் தனித்தனியே வகுத்து வைத்தாள். இக்காட்சியைக் காணும் வழிச்செல்வோர் தம்முள் கூறியது.

கோள்சுரும்பு அரற்றும் நாள்சுரத்து அமன்ற
நெடுங்கால் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி,
வலஞ்சுரி வால்இணர் கொய்தற்கு நின்ற
மள்ளன் உள்ளம் மகிழ்கூர்ந் தன்றே;
பைஞ்சாய்ப் பாவைக்கும் தனக்கும்
அம்சாய் கூந்தல் ஆய்வது கண்டே.

தெளிவுரை

தலைவனும் தலைவியும் சென்றுகொண்டிருந்த பாலை வழியில் காலை நேரம்; காட்டுவழியில் நெருங்கி வளர்ந்துள்ள நெடிய அடிப்பகுதியைக் கொண்ட வெண்கடம்ப மரங்களின் குறுகிய கிளைகளில் வெண்ணிறப் பூக்கள் வலமாய்ச் சுழிந்து மலர்ந்திருந்தன. தலைவன் சற்று நின்று, தலைவி அப்பூக்களைப் பறித்துக்கொள்வதற்காக மரத்தின் கிளையை வளைக்கிறான். பூக்களைக் கொய்த அழகிய கூந்தலைக் கொண்ட தலைவி, பூக்களைத் தனக்கும், தான் வைத்து விளையாடும் பைஞ்சாய்க் கோரையால் செய்யப்பட்ட பாவைக்கும் தனித்தனியாய்ப் பிரித்து வைக்கின்றாள். இதைக் கண்ட தலைவனின் உள்ளத்தில் மகிழ்ச்சி மிகுந்தது. வழிச்செல்லும் மக்களும் இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து சென்றனர்.

கருத்து

தலைவி பூக்கொய்வதற்காகத் தலைவன் மரத்தின் கொம்பை வளைத்தான். தலைவி, தான் கொய்த பூவைத் தனக்கென்றும் பாவைக் கென்றும் தனித்தனியே பிரித்து வைத்தாள். அதைக் கண்டு தலைவன் மகிழ்ந்தான். அவ்வழிச் சென்றோர் இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து சென்றனர்.

சொற்பொருள்

1. கோள் - தேனைக் கொள்ளும்; சுரும்பு - வண்டுகளுள் ஓர் இனம்; அரற்றும் - ஒலிக்கும்; நாள் - விடியற்காலம்; சுரத்து - பாலை வழியில்; அமன்ற - நெருங்கிய.
2. நெடுங்கால் - நீண்ட அடிமரம்; மரா - மரா மரம் (வெண்கடம்ப மரம்); குறுஞ்சினை - குறுகிய கிளை; பற்றி - பற்றி (வளைக்க).
3. வலஞ்சுரி - வலமாய்ச் சுழித்த; வால்இணர் - வெண்மையான பூங்கொத்து.
4. மள்ளன் - வீரன்; மகிழ் கூர்தல் - மகிழ்ச்சி மிகுதல்.
5. பைஞ்சாய்ப் பாவை - பைஞ்சாய்க் கோரையால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொம்மை.
6. அம்சாய் கூந்தல் - அழகிய மென்மையான கூந்தல்; ஆய்வது - தேர்ந்தெடுத்துப் பிரிப்பது.

தலைவன் கூற்று

திணைமொழி ஐம்பது 16 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போகிய தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக்கொண்டு சொல்லியது. (ஆற்றுவித்தல் - தேற்றித் துன்பத்தைப் போக்குதல்.)

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தலைவி தலைவனுடன் சென்றாள். வழியில் தலைவன் அவளை ஆற்றுவித்தது.

கருங்கால் மராஅம் நுணாவோ(டு) அலர,
இருஞ்சிறை வண்டினம் பாலை முரல,
அரும்பிய முள்ளெயிற்(று) அம்சொல் மடவாய்!
விரும்பும்நாம் செல்லும் இடம்.

தெளிவுரை

உடன்போக்கில் தன்னுடன் வரும் தலைவியிடம் தலைவன், "சிறிய கூரிய பற்களையும் இனிய சொற்களையும் கொண்ட இளமங்கையே! நாம் இருவரும் கூடிச் செல்லும் இவ்வழியில் கரிய அடிமரத்தைக் கொண்ட மரா மரமும் நுணா மரமும் மலர்ந்தும், பெரிய சிறகுகளைக் கொண்ட வண்டுக் கூட்டம் பாலைப்பண்ணைப் பாடியும் நம்மை அன்புடனே வரவேற் பதைப் பார்" என்று கூறி அவளை ஆற்றுவித்து அழைத்துச் சென்றான்.

கருத்து

தலைவிக்கு மலர்களைக் காட்டியும் வண்டிசையைக் கேட்கச்செய்தும் மகிழ்ச்சியூட்டித் தலைவன் அழைத்துச் செல்கிறான்.

சொற்பொருள்

1. கருங்கால் - கரிய அடிமரத்தைக் கொண்ட; மராம் - மரா மரம்; நுணாவோடு - நுணா மரத்துடன்; அலர - மலர.
2. இருஞ்சிறை - பெரிய சிறகுகளைக் கொண்ட; வண்டினம் - வண்டுக் கூட்டம்; பாலை - பாலைப்பண்ணை; முரல - இசைக்க.
3. அரும்பிய - தோன்றிய; முள் எயிற்று - கூரிய பற்களையும்; அம்சொல் - இனிய சொற்களையுங் கொண்ட; மடவாய் - இளமங்கையே!
4. விரும்பும் - வரவேற்கும்; நாம் செல்லும் இடம் - நாம் செல்லுகின்ற இவ்வழி.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 70 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போய தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக்கொண்டு போவான் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தன்னுடன் அழைத்துச் செல்லும் தலைவிக்குத் தலைவன் தேறுதல் சொல்லியது.

நின்நோக்கம் கொண்டமான் தண்குரவ நீழல்காண்
பொன்நோக்கம் கொண்டபூங் கோங்கம்காண் – பொன்நோக்கம்
கொண்ட சுணங்குஅணி மென்முலைக் கொம்பன்னாய்!
வண்டல் அயர்மணல்மேல் வந்து.

தெளிவுரை

"பொன் நிறத் தேமல் படர்ந்துள்ள அழகிய மென்மையான கொங்கைகளைக் கொண்ட பூங்கொம்பு போன்றவளே! (இதோ) உன் பார்வையின் தன்மையைக் கொண்ட இளமான்களைப் பார்! குளிர்ந்த குரவ மரத்தின் நிழலைப் பார்! பொன்போன்ற மலர்களைக் கொண்டுள்ள கோங்க மரங்களைக் கண்டு மகிழ் வாய்! இந்த அழகிய மணல் மேல் வந்து விரும்பி விளையாடு" என்று தலைவன் தலைவியை ஆற்றுவித்து அழைத்துச் செல்கின்றான்.

கருத்து

மான், மலர், நிழல் ஆகியன கண்டு மகிழ்ச்சியுடன் விளையாடி வா.

சொற்பொருள்

1. நின் நோக்கம் - உன் பார்வையைக் கொண்ட (மானைப் பார்); தண்குரவ - குளிர்ந்த குரவ மரத்தின்; நீழல் காண் - நிழலைப் பார்.
2. பொன் நோக்கம் கொண்ட - பொன்னைப் போன்றிருப்பதான: பூங்கோங்கம் காண் - பூக்களைக் கொண்ட கோங்க மரங்களைப் பார்.

3. சுணங்கு - தேமல்; அணி - அழகாய்ப் பெற்றுள்ள; கொம்பு அன்னாய் - பூங்கொம்பு போன்றவளே!
4. வண்டல் அயர் - விளையாட்டினை மேற்கொள்.

தலைவன் கூற்று

நற்றிணை 9 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

உடன்போகாநின்ற தலைமகன் தலைமகட்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றாள். வழியிடையே வருத்தமின்றி அவள் நடந்து வருமாறு தலைவன் கூறியது.

அழிவில முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண் டாங்கு,
அலமரல் வருத்தம் தீர, யாழநின்
நலமென் பணைத்தோள் எய்தினம்; ஆகலின்,
பொரிப்பூம் புன்கின் அழல்தகை ஒண்முறி
சுணங்கணி வனமுலை அணங்குகொளத் திமிரி,
நிழல்காண் தோறும் நெடிய வைகி,
மணல்காண் தோறும் வண்டல் தைஇ
வருந்தாது ஏகுமதி – வால்எயிற் றோயே!
மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும்
நறுந்தண் பொழில கானம்
குறும்பல் ஊர,யாம் செல்லும் ஆறே!

தெளிவுரை

"இனியவளே! குறைவிலாத முயற்சியுடன் செயற்படும் ஆர்வ முள்ளவர்கள் தாம் விரும்பியதைக் கண்கூடாய் அடைந்து மகிழ்வதைப்போல, நான், என்னை அலைத்த வருத்தமெல்லாம் நீங்க உன்னைக் கண்டு உன் தோள்களை அடைந்து மகிழ்ந்

துளேன். இனி, நீ பொரி போன்ற பூக்களைக் கொண்ட புன்கினது அழகு மிக்க ஒளி பொருந்திய இளந்தளிர்களைக் கொய்து, சுணங்கு நிரம்பிய உன் அழகிய முலைகளில் அணிந்துகொள்; நிழல் காணுமிடமெல்லாம் நெடும்பொழுது தங்கி இளைப்பாறு; மணல் காணுமிடமெல்லாம் சிற்றில் கட்டி விளையாடு; வழி நடந்து வந்த வருத்தத்தினைப் போக்கி மெல்ல மெல்ல நடந்து வா!

கருத்து

'நான் எண்ணியதை எண்ணியவாறே அடைந்தேன். பாலை வழியில் நிழல் காணுமிடமெல்லாம் நெடும்பொழுது இளைப்பாறி மெல்லத் துன்பமின்றி நடந்து வருக!' என்று தலைவன் தலைவியிடம் கூறினான்.

சொற்பொருள்

1. அழிவில முயலும் - குறைவில்லாத முயற்சியுடன் செயல்படும்.
2. வழிபடு தெய்வம் - தாம் அடைய விரும்பியதை (தாம் வழிபடு தெய்வத்தை); கண் கண்டாங்கு - கண்கூடாய்க் கண்டதுபோல.
3. அலமரல் வருத்தம் - நான் என்னை அலைக்கழித்த வருத்த மெல்லாம்; தீர - நீங்கும்படியாக; யாழ - முன்னிலை அசை.
4. நலமென் பணைத்தோள் - அழகிய மென்மையான பருத்த தோள்களை; எய்தினம் - அடைந்தனன்.
5. பொரிப்பூம் புன்கின் - பொரி போன்ற பூக்களைக் கொண்ட புன்கினது; அழல் தகை - அழகு மிக்க; ஒண்முறி - ஒள்ளிய தளிரை.
6. சுணங்கணி வனமுலை - சுணங்கு நிரம்பிய அழகிய முலையிலே; அணங்கு கொள - தெய்வம் வீற்றிருக்குமாறு; திமிரி - அணிந்து கொண்டு.
7. நெடிய வைகி - நீண்ட நேரம் தங்கி.
8. வண்டல் தைஇ - சிற்றில் புனைந்து விளையாடி.
9. ஏகுமதி - செல்வாய்.
10. கொழுதி - (மாந்தளிர்களைக்) கோதி; மகிழ் குயில் - மகிழ்ச்சியுற்ற குயில்; ஆலும் - கூவும்.
11. நறுந்தண் பொழிலகானம் - நறிய குளிர்ச்சி பொருந்திய சோலைகளைக் கொண்டுள்ளது இக்காடு.
12. குறும்பல் ஊர - சிறிய பல ஊர்களைக் கொண்டது; யாம் செல்லும் ஆறே - நாம் செல்லும் வழி.

தலைவன் கூற்று

நற்றிணை 202 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

உடன்போகா நின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன் அழைத்துச் செல்லும் தலைவன் தலைவியிடம் சொல்லியது.

புலிபொரச் சிவந்த புலால்அம் செங்கோட்டு
ஒலிபல் முத்தம் ஆர்ப்ப, வலிசிறந்து,
வன்சுவல் பராரை முருக்கி, கன்றொடு
மடப்பிடி தழீஇய தடக்கை வேழம்,
தேன்செய் பெருங்கிளை இரிய, வேங்கைப்
பொன்புரை கவளம் புறந்தருபு ஊட்டும்
மாமலை விடரகம் கவைஇ, காண்வர,
கண்டிசின் வாழியோ, குறுமகள்! நுந்தை,
அறுமீன் பயந்த அறம்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போல
பல்பூங் கோங்கம் அணிந்த காடே.

தெளிவுரை

இளம் மடந்தையே! ஆண்யானையானது புலியோடு போர் செய்ததால் இரத்தம் தோய்ந்து புலால் நாற்றம் வீசும் தன் தந்தங்களில் உண்டான முத்துகள் ஒலிக்கும்படியாய், வலிய மேட்டு நிலத்தில் நின்ற பருத்த அடியைக் கொண்ட வேங்கை மரத்தை, அம்மரத்தில் தேன் சேகரித்துக்கொண்டிருந்த வண்டுகள் ஓடும்படியாய் முரித்துச் சாய்க்கிறது.

தன் கன்றுடனுள்ள இளைய பெண்யானையை அந்த ஆண் யானை தன் நீண்ட துதிக்கையால் அணைத்தவாறு வேங்கை மரத்தின் பூவும் தழையும் கலந்த பொன் போன்ற உணவுக் கவளத்தை ஊட்டுகிறது. அத்தகைய பெரிய மலையில் பிளவுகள் தோறும் வரிசைவரிசையாய்க் கோங்க மலர்கள் மலர்ந்துள்ளன.

அவை கார்த்திகைத் திங்களில் ஏற்றி வைக்கப்பட்டு நீண்ட வரிசையில் தோன்றும் விளக்குகளைப் போன்றுள்ளன. உன் தந்தைக்குரிய அழகிய இக்காட்டினைக் காண்!

கருத்து

உன் தந்தையின் காடு இது; ஆதலின், விரைவில் இதனை விட்டு நீங்க வேண்டும்.

சொற்பொருள்

1. புலி பொர - புலியோடு போரிட்டதால்; புலால் - புலால் நாற்றம் வீசும்; செங்கோட்டு - சிவந்த கொம்பினைக் கொண்ட.
2. ஒலிபல் முத்தம் - ஒலிக்கின்ற பல முத்துகள்; ஆர்ப்ப - ஒலிக்க.
3. வன்சுவல் - வலிய மேட்டுநிலப்பகுதி; பராரை - பருத்த அடிமரம்; முருக்கி - முரித்துச் சாய்த்து.
4. மடப்பிடி - இளைய பெண்யானை; தழீஇய - தழுவிக்கொண்டு; தடக்கை - பெரிய துதிக்கை; வேழம் - ஆண்யானை.
5. தேன்செய் - தேனைச் சேகரித்துக்கொண்டிருந்த தேனீக்கள்; பெருங்கிளை - பெரிய கிளைகளிலிருந்து; இரிய - ஓடும்படியாக; வேங்கை - வேங்கை மரத்தின்.
6. பொன் புரை கவளம் - பொன் போன்று தோன்றக்கூடிய வேங்கைப்பூவும் தழையும் கூடிய உணவுக் கவளம்; புறந்தருபு - பாதுகாப்பதற்காக; ஊட்டும் - உண்பிக்கும்.
7. விடர் - மலைப்பிளவு; கவைஇ - அணைத்து; காண்வர - தோன்றுவதை.
8. கண்டிசின் - காண்பாயாக; குறுமகள் - இளமகள்.
9. அறுமீன் பயந்த - கார்த்திகை மீன்களோடு கூடிய; அறம் செய் திங்கள் - அறம் செய்தற்கமைந்த முழுத்திங்கள் விளங்கும் நாளில்.
10. செல்சுடர் - விசும்பிலே செல்லுகின்ற ஒளி வாய்ந்த; நெடுங்கொடி போல - நீண்ட விளக்குகளின் வரிசைபோல.
11. கோங்கம் - கோங்க மரம்.

தலைவன் கூற்று

நற்றிணை 362 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போகாநின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்கிறான். இடை வழியில் தலைவியைத் தேற்றும் வகையில் அவன் அவளை அஞ்சாதிருக்கு மாறு கூறியது.

வினைஅமை பாவையின் இயலி, நுந்தை
மனைவரை இறந்து வந்தனை; ஆயின்,
தலைநாட்கு எதிரிய தண்பத எழிலி
அணிமிகு கானத்து அகன்புறம் பரந்த
கடுஞ்செய் மூதாய் கண்டும், கொண்டும்,
நீவிளை யாடுக சிறிதே; யானே,
மழகளிறு உரிஞ்சிய பராரை வேங்கை
மணல்இடு மருங்கின் இரும்புறம் பொருந்தி,
அமர்வரின் அஞ்சேன், பெயர்க்குவென்;
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே!

தெளிவுரை

மாமை நிறம் வாய்ந்தவளே! உன் தந்தையின் வீட்டெல்லை யினைக் கடந்து தொழிற்பாடமையச் செய்யப்பெற்ற ஒரு பாவை நடப்பதுபோல என்னொடு வருகிறாய். குளிர்ச்சியைக் கொண்ட மேகம் மழை பெய்தலினாலே, இவ்வழியே காட்டின் அகன்ற இடமெங்கும் சிவந்த நிறம் கொண்ட தம்பலப்பூச்சிகள் வேகமாய் ஊர்ந்து திரிகின்றன. அவற்றை நோக்கியும் பிடித்தும் சிறிது நேரம் இங்கு விளையாடியிரு. நான், இளைய யானைகள் உராய்ந்த பருத்த அடிமரத்தைக் கொண்ட அதோ, அங்குள்ள வேங்கை மரத்திற்கு அருகே குவிந்துள்ள மணல்மேட்டிற்குப் பின்புறம் மறைந்து நிற்பேன். எதிரி எவரேனும் வரின் அஞ்சாது போரிட்டு அவர்களை ஓடச்செய்வேன். உன் சுற்றத்தார்

(உன்னைத் தேடி வருவாராயின்) அம்மரத்திற்குப் பின்னாலே மறைந்துகொள்வேன். (அவர்களோடு போர் புரியேன்.)

கருத்து

உன் சுற்றத்தார் என்னைத் தேடி வருவாராயின் மணல்மேட்டிற்குப் பின்னே மறைந்துகொள்வேன். அஞ்சாதே.

விளக்கம்

உன் தந்தையின் காட்டெல்லையில் இருக்கிறோம்! இங்குச் சற்று நேரம் தம்பலப்பூச்சிகளைப் பிடித்து விளையாடிக் கொண்டிரு. நான் அந்த வேங்கை மரத்தருகேயுள்ள மணல் மேட்டிற்குப் பின்புறம் இருப்பேன்; எதிரி எவரேனும் வரின் போரிட்டோட்டுவேன்; உன் சுற்றத்தார் வரின் மேட்டிற்குப் பின்னால் மறைந்துகொள்வேன். (உன் சுற்றத்தாரைத் துன் புறுத்துவேன் என்று கருதாதே.)

குறிப்பு

இளங்களிறு பட்டையை உரித்த பின்னரும் தன் நிலை குலையாது நின்று செழித்திருக்கும் வேங்கை மரம்போல, எத்துயர் வரினும் தானும் குன்றாது அவளைக் காத்து நிற்கும் உரிமையாளன் என்பதைத் தலைவன் குறிப்பால் உணர்த்துகிறான்.

சொற்பொருள்

1. வினை அமை - வேலைத் திறம் அமைந்த; பாவை - பொம்மை; இயலி - நடந்து.
2. மனைவரை - (உன்) வீட்டு எல்லை; இறந்து - கடந்து.
3. தலைநாள் - கார்ப்பருவத்தின் முதல் நாள்; எதிரிய - பெய்த; தண்பத - குளிர்ந்த தன்மை; எழிலி - மேகம்.
4. அகன்புறம் - அகன்ற பக்கம்; பரந்த - பரந்து கிடக்கும்.
5. கடு - விரைந்து செல்லும்; செய்ம்மூதாய் - சிவந்த நிறம் கொண்ட தம்பலப் பூச்சி; கொண்டும் - பிடித்தும்.
7. மழகளிறு - இளங்களிறு; உரிஞ்சிய - உராய்ந்த; பராரை - பருத்த அடிமரத்தைக் கொண்ட; வேங்கை - வேங்கை மரம்.
8. மணல் இடு - மணல் குவிந்துள்ள; மருங்கு - இடம்; இரும்புறம் - பெரிய பின்புறம்; பொருந்தி - இருந்து.

9. அமர்வரின் - (எதிரிகள் சூழ்ந்து) போர் செய்ய வந்தால்; பெயர்க்குவென் - (போரிட்டு) ஓடச்செய்வேன்.
10. நுமர் வரின் - உன் உறவினர் தேடி வந்தால்; மறைகுவென் - மறைந்து கொள்வேன்; மாஅயோளே - மாமை நிறம் கொண்ட தலைவியே!

தலைவன் கூற்று

நற்றிணை 76 **அம்மூவனார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகளுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியை உடன் அழைத்துச் செல்லும் தலைவன் வழியிடையே தலைவியிடம் சொல்லியது.

(உன் அடிகள் நோவாதிருக்கும் பொருட்டு ஆலமரத்தின் நிழலிலே இளைப்பாறி எங்கெங்கே தங்க விரும்பினும் அங்கங்கே தங்கி இளைப்பாறி வருந்தாது வருக என்கிறான்.)

வருமழை கரந்த வால்நிற விசும்பின்
நுண்துளி மாறிய உலவை அம்காட்டு
ஆல நீழல் அசைவு நீக்கி
அஞ்சுவழி அஞ்சாது அசைவழி அசைஇ,
வருந்தாது ஏகுமதி வால்இழைக் குறுமகள்!
இம்மென் பேர்அலர் நும்ஊர்ப் புன்னை
வீமலர் உதிர்ந்த தேன்நாறு புலவின்
கானல் ஆர்மணல் மரீஇ,
கல்உறச் சிவந்தநின் மெல்அடி உயற்கே!

தெளிவுரை

நம் களவுறவை அறிந்து உம்மூர் 'இம்' எனும் ஒலியுடன் பெரிய பழிச்சொற்களைக் கூறிக்கொண்டிருக்கிறது. (அவை

பயனற்றவை ஆகிடும் வண்ணம் உடன்போக்கில் செல்கிறோம்.) இங்கு, கடற்கரைச்சோலையில் புன்னையின் பூக்கள் வீழ்ந்து மணம் வீசுகின்றன; வண்டுகள் தேனுண்டு ஒலிக்கின்றன; பூக்கள் பல மலர்ந்துள்ளன. வேனில் வெப்பத்தில் இச்சோலையின் மிகுந்த மணற்பரப்பில் இதுகாறும் நடந்து வந்தமையால் நின் மெல்லிய அடிகள் கன்றிப்போயுள்ளன. மழைப்பருவம் மாறியதால், வெளுப்பாயுள்ள மேகங்களில் நீர்த்துளி சிறிது மில்லாது வறண்டுள்ள வெப்பம் வீசும் பாலைநில வழியே இனி நாம் நடக்க வேண்டும். உன் ஊர் எல்லையைத் தாண்டி வந்து விட்டதால் உன் உறவினர் வந்து வளைப்பர் எனும் அச்சமின்றி, ஆங்காங்கே தோன்றும் ஆலமரங்களின் நிழலில் தங்கி இளைப்பாறி, எங்கெங்குத் தங்க வேண்டுமென்று விரும்பு கிறாயோ அங்கெல்லாம் தங்கி, வருத்தம் எதுவும் இல்லாமல், வளைகள் ஒலிக்கக் கைகளை வீசி நடந்து வருக!

கருத்து

ஆலமர நிழலில் தங்கி இளைப்பாறி அச்சமின்றி நடந்து வா.

விளக்கம்

இளையோய்! இதுகாறும் புன்னைகள் நிறைந்த உம்மூர்க் கானற்சோலையில் நுண்மணலில் நடந்து போந்த நீ, இனி வன்மை பொருந்திய கரம்பு நிலத்தில் நடக்க வேண்டும். வேனில் வெம்மையால் சிவந்த உன் மெல்லிய அடிகள் கன்றி வருந்தாம லிருக்க ஆல மர நிழலில் ஏற்ற இடத்தில் தங்கிக் களைப்பாறி, உறவினர் முதலாயினோர் போந்து வளைப்பர் எனும் அச்சமின்றி, கைவளை ஒலிக்க இனிது செல்வோம்!

சொற்பொருள்

1. வருமழை - மழை தரும் மேகம்; கரந்த - மறைந்த; வால்நிற - வெண்மை நிற; விசும்பு - வானம்.
2. நுண்துளி மாறிய - நுண்ணிய மழைத்துளியும் இல்லாது மாறிய; உலவை - வெப்பம் வீசும் காற்று.
3. ஆல - ஆலமரம்: நீழல் - நிழல்; அசைவு - இளைப்பு, வருத்தம்.
4. அஞ்சு வழி - அஞ்ச வேண்டிய இடங்களில்; அசை வழி - மெதுவாய்ச் செல்ல வேண்டிய இடங்களில்.

5. ஏகுமதி - நடந்து செல்; வால் இழை - ஒளி பொருந்திய அணிகலன்களை (அணிந்த); குறுமகள் - இளமகள்.
6. இம்மென் பேர்அலர் - 'இம்' எனும் ஒலியுடன் பேசி வரும் பெரிய பழிச்சொல்.
7. வீ மலர் - காம்பு இற்று விழுந்த மலர்; தேன் நாறு புலவு - தேன் மணம் வீசுகின்ற.
8. ஆர்மணல் - மிகுந்த மணற்பரப்பு; மரீஇ - நடந்து.
9. கல் உற - கற்களில் பதிந்த; மெல் அடி - மென்மையான அடி; உயற்கு - வருந்தாதிருக்கும் பொருட்டு.

தலைவன் கூற்று

திருக்குறள் 1110 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

உடன்போக்கில் தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பெற்றவர், அவளைத் தர இசையாதபோது தலைவன் தலைவியைத் தன்னூர்க்கு அழைத்துச் செல்லும்போது தலைவி தனக்களிக்கும் இன்பப் பெருக்கினைத் தன்னுள்ளே கூறிக் கொள்வது.

அறிதோ(று) அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

தெளிவுரை

அரிய நூற்பொருளைக் கற்று அறிய அறியப் புதுப் புதுப் பொருள் நயங்கள் தோன்றுவனபோலச் செவ்விய அணிகலன் களை அணிந்துள்ள இப்பெண் எனைக் கூடுந்தோறும் கூடுந்தோறும் புதிது புதிதாய்க் காதலின்பம் காண்கிறேன்.

கருத்து

நுகர நுகரக் காதலின்பம் புதிது புதிதாய்த் தோன்றும்.

விளக்கம்

அறிவு பெறப் பெற முன்பு அறிந்தனவற்றைவிடப் புதுப் புதுப் பொருள் தோன்றும். அதுபோல இப்பெண்ணிடம் இன்பம் நுகர நுகர, முன்பு நுகர்ந்த இன்பத்தினும் புதுப் புது இன்பம் தோன்றிக் கொண்டே இருக்கிறது.

குறிப்பு

அறிவின் எல்லையைக் காண முடியாததுபோல, இப்பெண் தரும் இன்பத்தின் எல்லையையும் காணமுடியாது.

சொற்பொருள்

1. அறிதோறு - (நூல் பொருளைக் கற்று) அறிய அறிய; அறியாமை - (முந்தைய) அறியாமை (அகன்று); கண்டற்றால் - (புதிய புதிய பொருள்களைக்) கண்டறிவதுபோல.
2. சேயிழை மாட்டு - செவ்விய அணிகலன்களை அணிந்துள்ள இப்பெண்ணிடத்தே; காமம் - (கூடுந்தோறும் கூடுந்தோறும் புதிது புதிதாய்க்) காதல் (இன்பம் காண்கிறேன்.)

தலைவன் கூற்று

நற்றிணை 384 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

உடன்போகா நின்றான் மலிந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை உடனழைத்துச் செல்லும் தலைவன், அவள் மெல்லடிகள் கூர்மையான கற்களின்மீது படுவதால் அவள் வருத்தமடையாமலிருக்க, வேங்கை மலர்கள் உதிர்ந்து கிடக்கும் வழியில் அழைத்துச் சென்றனன். அவள் சோர்வடையாதிருக்கத் தன்னுள் பேசிக்கொள்வதுபோலத் தலைவன் சொல்லியது.

வெண்புறப் புறவின் செங்கால் சேவல்
களரி ஓங்கிய கவைமுள் கள்ளி
முளரிஅம் குடம்பையின் ஈன்றுஇளைப் பட்ட

வயவுநடைப் பேடை உணீஇய மன்னர்
முனைகவர் முதுபாழ் உகுநெற் பெறூஉம்
அரண்இல் சேய்நாட்டு அதர்இடை மலர்ந்த
நல்நாள் வேங்கைப் பொன்மருள் புதுப்பூப்
பரந்தன நடக்க,யாம் கண்டனம் மாதோ;
காண்இனி வாழிஎன் நெஞ்சே! நாண்விட்டு
அருந்துயர் உழந்த காலை
மருந்துஎனப் படூஉம் மடவோ ளையே.

தெளிவுரை

என் நெஞ்சமே! நீ வாழ்க! இந்த இளையாளை அடையாது நான் வருத்தமுற்றிருந்த காலத்தில், இவள், தன் பெண்மைப் பண்பான நாணத்தைக் கைவிட்டு நான் உற்ற காதல்நோய்க்கு மருந்து என வந்து என் துன்பத்தைப் போக்கியவள். இவளை இப்போது களர் நிலத்தில் ஓங்கி வளர்ந்துள்ள கவைத்த முள் களைக் கொண்ட கள்ளிமரக் காட்டில் அழைத்துச் செல்கிறேன். அக்கள்ளிமர உச்சியில் முள்களிடையே சுள்ளிகளை அடுக்கிக் கட்டப்பட்ட கூட்டில் குஞ்சு பொரித்த வெண்புறா பசியால் வாடியிருக்கும். அப்பெண்புறா உண்ணும் பொருட்டுச் சிவந்த கால்களைக் கொண்ட ஆண்புறா, படையொடு வந்த பகையரசர் போர்க்களத்தில் எல்லாவற்றையும் கவர்ந்துகொண்ட பின்பு மனிதர் யாருமின்றி முதிர்ந்த பாழ் நிலத்தில் சிதறிக் கிடக்கும் நெல்மணிகளைப் பொறுக்கிவந்து கொடுக்கும். இத்தகைய பாதுகாப்பற்ற காட்டுவழியே நெடுந்தொலைவிலுள்ள நாட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். வழியில் காலையிலே மலர்ந்து உதிர்ந்த வேங்கை மரத்தின் பொன்போன்ற பூக்கள் பரவிக் கிடக்கின்றன. அம்மலர்கள்மீது மெத்தென்று அவள் நடந்து செல்வதைக் கண்டு நான் மகிழ்கிறேன். என் நெஞ்சமே! நீயும் இதனைக் காண்க!

கருத்து

தலைவி என்னொடு போந்து எனக்கு இன்பமூட்டுகிறாள்.

விளக்கம்

களவுக்காலத்தில் காதல் நோயால் துன்புற்ற எனக்குத் தலைவி தன் மனம் என்னும் மருந்தைத் தந்து என் துன்பத்தைப் போக்கினாள். அவள் இன்று இச்சுரத்திடைப் போந்து இன்பமூட்டுகிறாள் எனத் தலைவன் தன் உவகையைப் புலப்படுத்துகிறான்.

சொற்பொருள்

1. வெண்புறம் - வெண்மையான புறம்; செங்கால் - சிவந்த கால்.
2. களரி - களர் நிலம்; ஓங்கிய - வளர்ந்துள்ள; கவைமுள் - கவையுள்ள முள்.
3. முளரி - சுள்ளிகளை (அடுக்கி அமைக்கப்பட்ட); அம்குடம்பையின் - அழகிய கூட்டில்; ஈன்று - குஞ்சு பொரித்து; இளைப்பட்ட - (பசியால்) வாடியிருக்கும்.
4. வயவு நடை - வருந்திய தளர்ந்த நடை; உணீஇய - உண்பதற்காக.
5. முனை - போர் முனை; முதுபாழ் - மக்கள் நெடுங்காலத்திற்கு முன்பே நீங்கிப் போகப் பாழ்பட்டுக் கிடக்கும் வயற்புறம்; உகுநெல் - உதிர்ந்து கிடக்கும் நெல்மணிகள்.
6. அரண்இல் - பாதுகாப்பு இல்லாத; சேய் நாடு - தொலைவிலுள்ள நாடு.
7. நல்நாள் - காலை நேரம்; பொன்மருள் - பொன் போன்ற.
8. பரந்தன - பரவிக் கிடக்கும் (இடத்தில்); நடக்க - தலைவி நடந்து வர.
9. நாண் - நாணம்; விட்டு - கைவிட்டு.
10. உழந்த - வருந்திய; காலை - பொழுது.
11. மடவோள் - இளமையானவள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 361 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போகிய தலைமகன், இடைச்சுரத்துக்கண் விளையாட்டு வகையால் பூத்தொடுக்கின்ற தலைமகளைக் கண்டு புகழ, அவள் அதற்கு நாணிக் கண்புதைத்தவழி சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தலைவியை அழைத்துச் சென்றான், தலைவன்; வழியில் தலைவி மாலைதொடுத்து விளையாடுகிறாள்; பூத்தொடுக்கும் தலைவியைத் தலைவன் புகழ்கிறான்; தலைவி நாணிக் கண்களைப் பொத்திக்கொள்கிறாள்; அப்போது தலைவன் சொல்லியது.

உயர்கரைக் கான்யாற்று அவிர்மணல் அகன்துறை
வேனில் பாதிரி விரிமலர்க் குவைஇத்
தொடலை தைஇய மடவரல் மகளே!
கண்ணினும் கதவ,நின் முலையே!
முலையினும் கதவநின் தடமென் தோளே!

தெளிவுரை

உயர்ந்த கரைகளைக் கொண்ட காட்டாற்றின் ஒளிமிக்க மணல் பரவிக் கிடக்கும் துறையில், இளவேனிற்பருவத்தில் உதிர்ந்து கிடக்கும் பாதிரியின் விரிந்த மலர்களைக் குவித்து, மாலை தொடுத்துக்கொண்டிருக்கும் இளமை வாய்ந்த தலைவியே! மையுண்ட உன் கண்கள் என்னை அம்புபோலத் தாக்குகின்றன என்று சொன்னதும் அவற்றைப் பொத்திக் கொண்டாய். (ஆனால்) அக்கண்களினும் சினம் மிக்கவை யாய் உள்ளன, உன் முலைகள்; அம்முலைகளைக்காட்டிலும் வேகமாய்த் தாக்கக்கூடியவையாய் உள்ளன, உன் பெரிய தோள்கள். (இவற்றின் தாக்குதலிலிருந்து நான் எவ்வாறு தப்பிப் பிழைப்பது?)

கருத்து

இளந்தலைவியே! அம்பு தாக்குவதுபோலவே உன் கண்கள் என்னைத் தாக்குகின்றன; உன் மார்பகங்களும் தோளும் இன்னும் வேகமாய் என்னைத் தாக்குகின்றனவே!

விளக்கம்

பூத்தொடுக்கும் தலைவியைத் தலைவன் புகழ்கிறான்; அவள் காதல் பார்வையோடு அவனை நோக்குகிறாள்; 'உன் கண் அம்புகள் என்னைத் துளைக்கின்றனவே' என அவன் கூற, அவள்

நாணத்தால் கண்களைப் பொத்திக்கொள்கிறாள். கண்களைப் பொத்திக்கொண்டால் போதுமா? 'உன் மார்பகங்கள் உன் கண்களைவிட வேகமாய்த் தாக்குகின்றனவே' என்றான்; அவள் மேலும் நாணமுற்று அவன் மார்பிலே தன்னைப் புதைத்துத் தழுவிக்கொள்கிறாள். 'முலையினும் இடையூறு செய்கின்றனவே உன் மென்மையான தோள்கள்' என்று கூறி அவனும் அவளைத் தழுவிக்கொள்கிறான்; அருமையான காதல் ஓவியம்!

சொற்பொருள்

1. கான் யாறு - காட்டாறு; அவிர் மணல் - பரவிய மணல்; அகன் துறை - அகலமான துறை.
2. வேனில் பாதிரி - வேனிற்காலத்தில் பூக்கும் பாதிரி மலர்; குவைஇ - குவித்து.
3. தொடலை - மாலை; தைஇய - தொடுக்கும்; மடவரல் - இளமை பொருந்திய.
4. கதவ - கோபம் மிக்கன.
5. தடமென் தோள் - பெரிய மெல்லிய தோள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 363 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் செல்கின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகளை நலம் பாராட்டியது.

கூற்று விளக்கம்

தலைவியோடு உடன்போக்கில் செல்லும் தலைவன், இடைவழியில் தலைவியின் குணநலன்களைப் பாராட்டிப் பேசியது.

சிலைவில் பகழிச் செந்துவர் ஆடைக்
கொலைவில் எயினர் நங்கை!நின் முலைய
சுணங்குஎன நினைதி நீயே;
அணங்குஎன நினையும்,என் அணங்குறு நெஞ்சே.

தெளிவுரை

சிலை மரத்தால் செய்யப்பட்ட வில்லிடைத் தொடுக்கும் அம்பினையும், செந்நிறத் துவராடையையும், கொல்லும் வில்லையும் கொண்ட வேடுவர்கள் தங்கையே! (என் தலைவியே!) உன் முலையில் உள்ள தேமலை நீ சுணங்கு எனக் கருதுகிறாய்; ஆனால், என் நெஞ்சமோ அது என்னைத் தீண்டி வருத்தும் அணங்கு (தெய்வம்) எனக் கருதுகிறது.

கருத்து

நீ அழகுத் தேமல் என்கிறாய்; நான் அதனை வருத்தும் தெய்வம் என்கிறேன்.

குறிப்பு

உன் தமையன்மார் சிலையால் வருத்துகின்றனர்; நீயோ முலையால் வருத்துகின்றனை.

சொற்பொருள்

1. சிலை வில் - சிலை மரத்தால் செய்யப்பட்ட வில்; பகழி - அம்பு; செந்துவர் ஆடை - சிவந்த துவராடை.
2. கொலை வில் - கொல்லும் தொழிலை விளைவிக்கும் வில்; எயினர் - வேட்டுவர்.
3. சுணங்கு - தேமல்; நினைதி - கருதுகிறாய்.
4. அணங்கு - வருத்தும் தெய்வம்; அணங்குறு நெஞ்சம் - வருந்துகின்ற என் மனம்.

தலைவன் கூற்று

அகநானூறு 257 **உறையூர் மருத்துவன் தாமோதரனார்**

***திணை* : பாலை**

கூற்று

உடன்போகாநின்ற தலைமகட்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனொடு உடன்போக்கில் சென்றாள். அப்போது அவள் நடந்துவருவதைப் பார்த்துத் தலைவன் மகிழ்ந்து பாராட்டியது.

வேனில் பாதிரிக் கூனி மாமலர்
நறைவாய் வாடல் நாறும் நாள்,சுரம்,
அரிஆர் சிலம்பின் சீறடி சிவப்ப,
எம்மொடு ஓர்ஆறு படீஇயர், யாழநின்
பொம்மல் ஓதி பொதுள வாரி,
அரும்புஅற மலர்ந்த ஆய்பூ மராஅத்துச்
சுரும்புசூழ் அலரி தைஇ, வேய்ந்தநின்
தேம்பாய் கூந்தல் குறும்பல மொசிக்கும்
வண்டுகடிந்து ஓம்பல் தேற்றாய் அணிகொள
நுண்கோல் எல்வளை தெளிர்க்கும் முன்கை
மெல்இறைப் பணைத்தோள் விளங்க வீசி,
வல்லுவை மன்னால் நடையே – கள்வர்
பகைமிகு கவலைச் செல்நெறி காண்மார்,
மிசைமரம் சேர்த்திய கவைமுறி யாஅத்து,
நார்அரை மருங்கின் நீர்வரப் பொளித்து,
களிறு சுவைத்திட்ட கோதுடைத் ததரல்,
கல்லா உமணர்க்குத் தீமூட்டு ஆகும்,
துன்புறு தகுந ஆங்கண், புன்கோட்டு
அரில்இவர் புற்றத்து அல்குஇரை நசைஇ,
வெள்அரா மிளிர வாங்கும்
பிள்ளை எண்கின் மலைவயி னானே.

தெளிவுரை

இக்காட்டில் என்னோடு நடக்கும் இளைய நங்கையே! இங்கு வழிப்பறி செய்யும் கொள்ளையர் உள்ளனர்; வழிகளும் பிரிந்து கிடக்கும்; வழிச்செல்வோர் தாம் செல்லும் வழி இது எனக் கண்டறிய யா மரத்தின்மீது ஏணி சார்த்தி, ஏறி நின்று பார்ப்பர். எங்கும் நீர் கிடைக்காமையால் ஆண்யானை யா மரத்தின் நாரினைக் கொண்ட அடிப்பாகத்தைக் குத்தி, பட்டையை உரித்து, அதில் ஊறும் சிறிதளவு தண்ணீரை உறிஞ்சிக்கொண்டு பட்டைகளை அங்கேயே போட்டுவிட்டுச் செல்லும். வெயிலில் காய்ந்த அப்பட்டைகள் (அவ்வழியில் செல்லும்) கல்வியறி வில்லாத உப்பு வாணிகர்க்குத் தீ மூட்டப் பயன்படும்.

இத்தகைய துன்பம் தரும் காட்டுவழியில் இரவு நேரத்தில் கரடிக்குட்டிகள் தம் இரைக்காக, சிறு தூறுகள் படர்ந்து கிடக்கும் புற்றினுள் கைவிட்டு, அங்கிருக்கும் பாம்புகளும் பிறழும்படியாகத் தோண்டும். இத்தகைய பாலை வழியில் நடந்துகொண்டிருக்கிறோம்.

இஃது இளவேனிற்காலம். பாதிரி மலர்களின் பூக்கள் உதிர்ந்து வாடிக் கிடக்கின்றன. திரட்சியுற்ற உன் கூந்தலை நெருங்க வாரிவிட்டு நன்கு மலர்ந்துள்ள வெண்கடம்ப மலர்களைச் சூடியுள்ளாய்; அப்பூக்களில் படியும் வண்டுகளை ஒட்டாது, நுண்ணிய திரண்ட வளையல்களை அணிந்த முன் கையை வீசி, மூங்கில்போலும் தோள்கள் அசைய நடந்து வரும் வல்லமை பெற்றுள்ளாய்! (இஃது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.)

கருத்து

"தலைவியே! வேனிற்காலப் பகற்பொழுதில், காட்டுவழியில் உன் சிறிய அடிகள் சிவக்க, முன் கையை வீசித் தோள்கள் அசைய நடந்துவர வல்லமை கொண்டவளாய் இருக்கிறாய்" என்று தலைவன் மகிழ்ந்து பாராட்டுகிறான்.

உள்ளுறை

கரடியின் குட்டியேயானாலும் அதற்கும் பாம்பைப் புரட்டித் தான் விரும்பிய இரையை எடுத்துத் தின்னும் துணிவும் வல்லமையும் இயல்பாகவே உண்டாயிற்று என்னும் தொடர் மூலம், வழியில் ஏதங்களைக் கடக்கும் ஆற்றலும் துணிவும், மெல்லியளாகிய தலைவிக்கும் பெண்மையின் இயல்பான காதல் உறவால் ஏற்பட்டது என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுதல் காண்க.

சொற்பொருள்

1. வேனில் - வேனிற்காலம்; பாதிரி- ஒருவகை மரம்; கூனி - வளைந்த; மாமலர் - பெரிய (அழகிய) மலர்.
2. நறைவாய் - தேன் பொருந்திய; வாடல் - வாடற்பூக்கள்; நாறும் - மணக்கும்.
3. அரி ஆர் - சிலம்புப் பரல்கள் பொருந்திய; சீறடி - சிறிய அடி.

4. ஓர் ஆறு - ஒன்றுபட்ட நிலையில்; படீஇயர் - பொருந்தி; யாழ - முன்னிலை அசைச்சொல்.
5. பொம்மல் - பொலிவு பெற்ற; ஓதி - கூந்தல்; பொதுள வாரி - நெருக்கமாய் வாரி.
6. ஆய்பூ - அழகிய பூ; மராஅம் - வெண்கடம்பு.
7. சுரும்பு சூழ் - வண்டுகள் மொய்க்கும்; அலரி - மலர்கள்; தைஇ - தொடுத்து; வேய்ந்த - சூடிய.
8. தேம்பாய் கூந்தல் - வண்டுகள் மொய்க்கும் கூந்தல்; குறும்பல மொசிக்கும் - குறியனவாய்ப் பலவாய் மொய்க்கும் வண்டுகளை.
9. ஓம்பல் - பாதுகாத்தல்; தேற்றாய் - அறியாய்.
10. நுண்கோல் - நுண்ணிய திரண்ட; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; தெளிர்க்கும் - ஒலிக்கும்.
11. மெல்இறை - மெல்லிய முன்கை; பணைத்தோள் - மூங்கில் போன்ற தோள்.
12. வல்லுவை - நடக்க மிகுந்த வல்லமை வாய்ந்தவள் ஆகின்றாய்; கள்வர் - ஆறலை கள்வர்.
13. பகைமிகு கவலை - பகைமிக்க கவர்த்த வழிகளில்; செல்நெறி - செல்லுதற்குரிய (நெறி இதுவென); காண்மார் - காணும்பொருட்டு.
14. மிசைமரம் - உயரே ஏறுதற்குரிய மரம், ஏணி; கவை முறி - கவட்டைக் கொம்பு; யாஅத்து - யா மரத்தில்.
15. நார்அரை மருங்கின் - நாரினைக் கொண்ட யாமரத்தில்; நீர்வர - நீர் வரும்படியாய்; பொளித்து - குத்தி.
16. களிறு - ஆண்யானை; சுவைத்திட்ட - நீரினை உண்டுவிட்டுப் போட்ட; கோது உடை - சக்கையாகிய; ததரல் - சுள்ளி, சிதைந்த மரப்பட்டை.
17. உமணர் - உப்பு வாணிகர்; தீ மூட்டாகும் - தீ மூட்டுதற்குத் துரும்பு ஆகும்.
18. துன்புறு தகுந ஆங்கண் - துன்பம் உறத் தகுவன ஆகிய அவ்விடங்களில்; புன்கோட்டு - புல்லிய கொம்புகளைக் கொண்ட.
19. அரில்இவர் - சிறு தூறுகள் படர்ந்த; புற்றத்து - புற்றில்; அல்குஇரை - தங்கியிருக்கும் இரை; நசைஇ - விரும்பி.
20. வெள்அரா - வெள்ளிய பாம்பு; மிளிர - பிறழும்படி; வாங்கும் - கையால் கௌவும்.
21. பிள்ளை எண்கு - குட்டிக்கரடி; மலைவயின் - மலையிடம்.

தலைவன் கூற்று

அகநானூறு 99 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

உடன் போகிய தலைமகளைத் தலைமகன் தெருட்டிச் சொல்லியது. (தெருட்டுதல் - மனந்தெளியச் செய்தல்.)

கூற்று விளக்கம்

தலைவியை அவள் சுற்றத்தார் அறியாவண்ணம் உடன்போக்கில் காட்டு வழியில் அழைத்துச் செல்லுகின்ற தலைவன், தலைவிக்கு வழிநடை வருத்தம் தெரியாதிருக்கும் பொருட்டுக் காட்டுவழிக் காட்சிகள் பலவற்றைக் காட்டி மகிழ்ச்சியூட்டியது.

வாள்வரி வயமான் கோள்உகிர் அன்ன,
செம்முகை அவிழ்ந்த முள்முதிர் முருக்கின்,
சிதர்ஆர் செம்மல் தாஅய், மதர்எழில்
மாண்இழை மகளிர் பூணுடை முலையின்
முகைபிணி அவிழ்ந்த கோங்கமொடு அசைஇ,நனை
அதிரல் பரந்த அம்தண் பாதிரி
உதிர்வீ அம்சினை தாஅய், எதிர்வீ
மராஅ மலரொடு விராஅய், பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே, கானம்; நயவரும் அம்ம;
கண்டிசின் வாழியோ – குறுமகள்! நுந்தை
அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பின்,
பிடிமிடை களிற்றின் தோன்றும்
குறுநெடுந் துணைய குன்றமும் உடைத்தே!

தெளிவுரை

வாள் போன்ற வரிகளைக் கொண்ட புலியின் கொல்லவல்ல கூரிய நகத்தினைப் போல முள் நிறைந்த முருக்க மரத்தின் சிவந்த மொட்டுகள் இதழ் விரிந்தன. அவற்றில் வண்டுகளால் மொய்க்கப்பட்ட வாடிய பூக்கள் கீழே உதிர்ந்து கிடக்கின்றன.

மதர்த்த அழகினையும் மாட்சிமைப்பட்ட அணிகளையு முடைய மகளிரது பூண் அணிந்த முலை போன்றுள்ள மொட்டு அலர்ந்த கோங்கின் பூக்களோடு புனலிப் பூக்களும் கூடிக் கிடக்கின்றன.

பரந்து கிளைத்த அழகிய குளிர்ச்சி பொருந்திய பாதிரியின் கிளைகளினின்றும் உதிர்ந்த பூக்களோடு சேர்ந்து வேறுபட்ட பல மலர்கள் வெண்கடப்ப மலர்களோடு விரவிக் கிடக்கின்றன.

இவை யாவும் கலந்து, தெய்வத்தைப் பூசிக்கும் கோவிலில் கலந்து கிடக்கும் பூக்களைப் போல, இக்காடும் அழகுமிகக் கொண்டுள்ளது. இதனைக் காண்!

உன் தந்தை பகைவரோடு போர் புரியும் போர்க்களத்தில் எதிரிகள்மீது பாய்ந்ததால் பூண் சிதைந்த கொம்பினைக் கொண்டனவும், பிடிகள் சூழப்பெற்றனவுமாகிய களிறுகளைப் போலத் தோன்றும் சிறியனவும் பெரியனவுமான குன்று களையும் இக்காடு கொண்டிருக்கிறது. அதனையும் காண்!

(என வழியில் பல்வேறு காட்சிகளைக் காட்டி, வழிநடை வருத்தம் தோன்றாதவாறு தலைவியைத் தலைவன் காட்டு வழியில் அழைத்துச் செல்கின்றான்.)

கருத்து

வழியில் உள்ள மலர்களையும் குன்றுகளையும் தலைவிக்குக் காட்டி, வழிநடை வருத்தம் தோன்றாதவாறு அவளைத் தலைவன் அழைத்துச் செல்கிறான்.

விளக்கம்

“வழியில் முருக்க மரத்தின் சிவந்த மொட்டுகள் உதிர்ந்து கிடக்கின்றன. கோங்கின் பூக்களோடு புனலிப்பூக்கள் கலந்து கிடக்கின்றன. பாதிரியின் பூக்களும் வெண்கடப்ப மலர்களும் விரவிக் கிடக்கின்றன. இவ்வாறு பூக்கள் பரவிக் கிடப்பதால் காடு அழகு பெற்றுள்ளது. பெண்யானைகள் சூழ்ந்த ஆண் யானைகளைப் போலச் சிறியனவும் பெரியனவுமான குன்றுகள் தோற்றமளிக்கின்றன. இவற்றையெல்லாம் காண்” எனக் கூறி தலைவிக்கு வழிநடை வருத்தம் தோன்றாதவாறு தலைவன் அழைத்துச் செல்கின்றான்.

சொற்பொருள்

1. வாள் வரி - வாள் போன்ற வரிகள்; வயமான் - புலி; கோள் - குருதியைக் கொண்டுள்ள; உகிர் - நகம்.
2. செம்முகை - சிவந்த மொட்டு; அவிழ்ந்த - இதழ் விரியப்பெற்ற; முருக்கு - ஒருவகை முள் மரம்.
3. சிதர் ஆர் - வண்டுகள் சூழ்ந்த; செம்மல் - வாடிய; தாஅய் - பரந்து; மதர் எழில் - கதிர்த்த அழகு.
5. முகை - மொட்டு; பிணி - கட்டு; கோங்கம் - கோங்க மரம்; அசைஇ - கிடக்க.
6. நனை அதிரல் - அரும்புகளைக் கொண்ட புனலிக்கொடி.
7. உதிரல் - உதிர்ந்த பூக்கள்; தாஅய் - பரந்து; எதிர்வீ - ஒன்றோடொன்று மாறுபட்ட மலர்கள்.
8. மராஅ - வெண்கடம்பு; விராஅய் - விரவி; பராஅம் - பரவி வழிபடும்.
9. அணங்கு - தெய்வம்.
10. நயவரும் - விரும்பத்தக்கதாயுள்ளது.
11. கண்டிசின் - காண்பாயாக; குறுமகள் - இளைய மகள்.
12. அடுகளம் - போர்க்களம்; தொடிசிதை - பூண் சிதைந்த; மருப்பு - யானைத்தந்தம்.
13. பிடி - பெண்யானை; மிடை - சூழப்பெற்ற.
14. குறு நெடும் துணைய - சிறியனவும் பெரியனவும் ஆகிய.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 385 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

வரைவு மறுத்துழி உடன்போய தலைமகள் இடைச்சுரத்துக் கண்டாரை 'யான் போகின்றபடியை யாய்க்கு நீர் கூற வேண்டும்' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பெற்றோர் தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்துதர மறுத்தனர். தலைவன் தலைவியை உடன்கொண்டு சென்றுவிட்டான். எதிரே வழியில் வந்தவர்களைப் பார்த்துத் தலைவி தான் தலைவனோடு சென்று கொண்டிருப்பதைத் தன் தாயிடம் கூறுமாறு கேட்டுக்கொள்கிறாள்.

'கடும்கண் காளையொடு நெடுந்தேர் ஏறிக்
கோள்வல் வேங்கை மலைபிறக்கு ஒழிய,
வேறுபல் அருஞ்சுரம் இறந்தனள் அவள்'எனக்
கூறுமின் வாழியோ! ஆறுசெல் மாக்கள்!
நல்தோள் நயந்து பாராட்டி,
எற்கெடுத்து இருந்த அறன்இல் யாய்க்கே.

தெளிவுரை

"வழியில் செல்லுகின்ற மக்களே! என் அழகிய தோள்களை விரும்பிப் பாராட்டிய என் காதலனை நான் அடைய இயலாத வாறு பல தடைகளை ஏற்படுத்தினாள், என் தாய். அதனால் இன்று என்னை இழந்து தன் வீட்டில் தங்கியிருக்கும் அறநெறி இன்னதென அறியாத அத்தாயிடம், 'உன் மகள் அஞ்சாமை பொருந்திய தன் காதலனோடு பெரிய தேரில் ஏறி, கொல்லுகின்ற வலிமைமிக்க வேங்கைப்புலிகள் திரிகின்ற மலைகள் பிற்பட்டுச் செல்லுமாறும் அடுத்தடுத்து அமைந்த கொடுமையான காட்டு வழிகள் பலவும் கடந்திடுமாறும் சென்றுவிட்டாள்' என்று சொல்லுங்கள்! நீவிர் வாழ்க!"

கருத்து

"மக்களே! காடுகளையும் மலைகளையும் கடந்து உன் மகள் சென்றுவிட்டாள்" என என் தாயிடம் கூறுங்கள்.

குறிப்பு

தலைவனுக்குத் தன்னைத் திருமணம் செய்ய மறுத்தும், வீட்டுக்காவலில் வைத்தும் துன்பப்படுத்தியதால் தலைவி தன் தாயை 'அறனில் யாய்' என்றாள்.

சொற்பொருள்

1. கடும்கண் காளை - அஞ்சாமை பொருந்திய தலைவன்.
2. கோள் வல் - இரையைக் கொள்ளுவதில் வல்லமை வாய்ந்த; வேங்கை - வேங்கைப்புலி; பிறக்கு ஒழிய - பிற்பட்டுச் செல்லுமாறு.
3. அருஞ்சுரம் - கொடிய பாலைவழி; இறந்தனள் - கடந்துவிட்டனள்; அவள் - உன் மகள்.
4. கூறுமின் - கூறுங்கள்; ஆறுசெல் - வழியில் செல்லுகின்றன.

5. நல்தோள் - நல்லழகு கொண்ட தோள்; நயந்து - விரும்பி.
6. எற்கெடுத்து - என்னை இழந்து; இருந்த - (வீட்டில்) இருக்கின்ற; யாய் - (என்) தாய்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 395 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்கொண்டு மீள்கின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது. (மீள்கின்ற - தன் ஊருக்குத் திரும்புகின்ற.)

கூற்று விளக்கம்

தலைவியை உடனழைத்துக்கொண்டு தன் ஊருக்குத் திரும்பும் தலைவன் தன் ஊர் நெருங்கியதைத் தலைவிக்குக் காட்டி அன்புடன் சொல்லியது.

முளிவயிர்ப் பிறந்த, வளிவளர் கூர்எரிச்
சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கும்
இன்னா அருஞ்சுரம் தீர்ந்தனம்; மென்மெல
ஏகுமதி வாழியோ, குறுமகள்! போதுகலந்து
கறங்குஇசை அருவி வீழும்,
பிறங்கிரும் சோலை,நம் மலைகெழு நாட்டே.

தெளிவுரை

இளமையானவளே! காய்ந்த மூங்கில்கள் உராய்வதால் தோன்றிய காட்டுத் தீ, காற்றால் மேலும் வளர்ந்து, சுடர்விட்டு நெடுங்கொடிபோலப் படர்ந்து சென்று, மலை வெடிப்பு களுக்குள் புகுந்து முழங்கும். அத்தகைய வெப்பம் மிகுந்த கடத்தற்கரிய காட்டினைக் கடந்துவிட்டோம். இனி, பூக்களைச் சேர்த்துக்கொண்டு ஆரவாரித்து விழும் அருவி கொண்ட நம் நாட்டு மலைகளில் உள்ள பெரிய சோலைகளிடையே மெதுவாய் நடந்து செல்வோம்.

கருத்து

விரைந்து நடந்து அரிய காட்டினைக் கடந்துவிட்டோம்; இனிச் சோலைகள் வழியே மெதுவாய் நடப்போம்.

சொற்பொருள்

1. முளி வயிர் - காய்ந்த மூங்கில்; வளி வளர் - காற்றினால் வளர்கின்ற; கூர் எரி - மிகப்பெரிய தீ.
2. நெடுங்கொடி - தீ வரிசை; விடர்முகை - வெடிப்புள்ள மலைப்பிளவு.
3. தீர்ந்தனம் - கடந்துவிட்டோம்.
4. ஏகுமதி - செல்க; போது கலந்து - பூக்களோடு சேர்ந்து.
5. கறங்கு இசை - ஒலிக்கின்ற ஒலி.
6. பிறங்குஇரும் சோலை - விளங்குகின்ற பெரிய சோலை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 396 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்கொண்டு மீள்கின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை உடனழைத்துக்கொண்டு தன் ஊருக்குச் செல்லும் தலைவன் தன் ஊர் நெருங்கியதைத் தலைவிக்குக் காட்டி அன்புடன் சொல்லியது.

புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர் கொய்துநின்
கதுப்புஅயல் அணியும் அளவை, பைபயச்
சுரத்திடை அயர்ச்சியை ஆறுக மடந்தை!
கல்கெழு சிறப்பின் நம்ஊர்
எல்விருந்து ஆகிப் புகுகம், நாமே.

தெளிவுரை

தலைவியே! புலியின் உடம்பிலுள்ள புள்ளிகளைப் போன்ற வேங்கை மரத்தின் பொன்னிறப் பூங்கொத்துகளைக் கொய்து அவற்றின் பூக்களை நான் உன் கூந்தலில் அணிவிக்கும் வகையில்

மெல்ல மெல்ல நடந்து, காட்டுவழியில் நடந்ததால் ஏற்பட்ட களைப்பைப் போக்கிக்கொள்; மலைகள் சூழ்ந்த நம் ஊருக்குப் பகல் விருந்தினராய்ச் செல்வோம்!

கருத்து

மெல்ல மெல்ல நட! இன்று பகல் உணவுக்கு நம் ஊருக்குச் சென்று விடலாம்.

சொற்பொருள்

1. புலிப்பொறி - புலியின் உடற்புள்ளிகள்; வேங்கை - வேங்கை மரம்; பொன் இணர் - பொன் போன்ற பூங்கொத்து.
2. கதுப்பு அயல் - கூந்தல் மீது; அணியும் அளவை - அணிவிக்கும் படியாக; பைபய - மெல்ல மெல்ல.
3. சுரம் - காட்டுவழி; அயர்ச்சி - களைப்பு; ஆறுக - போக்கிக்கொள்.
4. கல்கெழு - மலைகள் பொருந்திய.
5. எல் விருந்து - பகல் விருந்து; புகுகம் - புகுவோம்.

தலைவன் கூற்று

நற்றிணை 264 **ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போகாநின்ற தலைமகன் தலைமகளை வற்புறீஇயது.
(வற்புறீஇயது - விரைந்து நடக்குமாறு வற்புறுத்தியது.)

கூற்று விளக்கம்

தலைவியை உடன் அழைத்துச் செல்லும் தலைவன், தன் ஊர் நெருங்கி விட்டதைச் சொல்லித் தலைவியை விரைந்து நடக்குமாறு கூறியது.

பாம்புஅளைச் செறிய முழங்கி, வலன்ஏர்பு,
வான்தளி பொழிந்த காண்புஇன் காலை,
அணிகிளர் கலாவம் ஐதுவிரித்து இயலும்
மணிபுரை எருத்தின் மஞ்ஞை போல,நின்
வீபெய் கூந்தல் வீசுவளி உளர
ஏகுதி மடந்தை; எல்லின்று பொழுதே;

வேய்பயில் இறும்பில் கோவலர் யாத்த
ஆபூண் தெள்மணி இயம்பும்
உதுக்காண் தோன்றும் எம்சிறுநல் ஊரே.

தெளிவுரை

"தலைவியே! ஒளி குன்றிப் பொழுது மறையத் தொடங்குகிறது. மூங்கிற்காடுகளில் மேய்ந்திருந்த பசுக்கூட்டம் ஆயர்கள் அவற்றின் கழுத்தில் கட்டியுள்ள மணிகள் ஒலிக்கும்படியாக வீடு திரும்புகின்றன. அதோ பார்! என் சிறிய நல்ல ஊரும் தோன்றுகிறது. பாம்புகள் அச்சமுற்றுப் புற்று வளையுள் பதுங்குமாறு இடித்து, வலமாய்ச் சுழித்தெழுந்து மேகம் பொழிந்ததால் காண்பதற்கினிய காட்சி எங்கும் விளங்குகிறது. இவ்வேளையில் அழகு பொலியும் தோகையை மெதுவாய் விரித்து அசைந்தாடும் நீலமணி போன்ற கழுத்தினைக் கொண்ட மயிலைப் போல, மலர் சூடியிருக்கும் உன் கூந்தல் காற்றில் அசைந்தாட விரைந்து என்னுடன் நட!" என்று தலைவன் தலைவியிடம் கூறினான்.

கருத்து

மாலை நேரம் வந்துற்றது; அதோ என் சிறிய ஊரும் தோன்றுகிறது; மயிற்சாயலைக் கொண்ட நீ விரைந்து நட; இரவுக்குமுன் ஊர் போய்ச் சேர்வோம்.

சொற்பொருள்

1. அளைச்செறிய - புற்றாகிய வளையுள் பதுங்குமாறு; முழங்கி - இடித்து; வலன் ஏர்பு - வலமாய் மேலெழுந்து.
2. தளி - மழை; காண்பு இன் காலை - காட்சிக்கு இனிதான பொழுது.
3. அணிகிளர் - அழகு சுடர்விடுகின்ற; கலாவம் - மயில்தோகை; ஐது - பைய, மெல்ல; இயலும் - நடக்கும்.
4. மணிபுரை - நீலமணியைப் போன்ற; எருத்து - கழுத்து; மஞ்ஞை - மயில்.
5. வீ பெய் - மலர் சூடிய; வீசு வளி - வீசுகின்ற காற்றால்; உளர - அசைந்தாட.
6. ஏகு - நட; எல்இன்று பொழுது - சூரியன் மறைந்த வேளை.
7. வேய் பயில் - மூங்கில் நிறைந்த; இறும்பு - சிறிய மலை, குறுங்காடு; கோவலர் - இடையர்; யாத்த - கட்டிய.

8. ஆ பூண் - பசுக்கள் பூண்டுள்ள; தெள் மணி - தெளிந்த ஓசையைக் கொண்ட மணி; இயம்பும் - ஒலிக்கும்.
9. உதுக்காண் - அதோ பார்; சிறுநல் ஊர் - சிறிய நல்ல ஊர்.

செவிலித்தாய் கூற்று

நற்றிணை 198 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

பின் சென்ற செவிலி இடைச்சுரத்துக் கண்டார்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்ட மகளைத் தேடிச் சென்ற செவிலி, எதிரே தலைவனும் தலைவியுமாகிய வேற்றவர் இருவரைக் கண்டு, தன் உள்ளத் துயரம் மேலெழ அவர்களிடம் சொல்லியது.

சேயின் வரூஉம் மதவலி! யாஉயர்ந்து
ஓமை நீடிய கான்இடை அத்தம்,
முன்னாள் உம்பர்க் கழிந்த என்மகள்
கண்பட, நீர்ஆழ்ந் தன்றே; தந்தை
தன்ஊர் இடவயின் தொழுவேன்; நுண்பல்
கோடுஏந்து அல்குல் அரும்பிய திதலை,
வாஅர்ந்து இலங்குவால் எயிற்றுப் பொலிந்ததார்ச்
சில்வளைப் பல்கூந் தலளே அவளே;
மைஅணல் எருத்தின் முன்பின் தடக்கை
வல்வில் அம்பின் எய்யா வண்மகிழ்த்
தந்தை தன்ஊர் இதுவே;
ஈன்றேன் யானே; பொலிகநும் பெயரே!

தெளிவுரை

சேய்மையிலிருந்து வருகின்ற பெருவலிமைமிக்க ஆண்மகனே! யாமரங்கள் உயர்ந்தும் ஓமை மரங்கள் நீண்டும் காணப்படுகின்ற இக்காட்டுவழியில் நேற்று நெடுந்தூரம் சென்றுவிட்டனள், என் மகள். அவளைப் போலவே (உன்னுடனிருக்கும்) இவள் எனக்குத்

தோன்றுவதால் என் கண்களில் நீர் பெருகுகின்றது. அவளின்றிப் பொலிவிழந்துள்ள இவ்வூரிலிருந்து உம்மைத் தொழுகின்றேன்; கண்டீராயின் உரைப்பீர்!

பக்கம் உயர்ந்த அல்குலையும், மெல்லிதாய்ப் பரவியுள்ள தேமலையும், ஒழுங்குடன் அமைந்துள்ள கூரிய பற்களையும், பூக்களால் பொலிவுற்ற மாலையினையும், சிலவாகிய வளை களையும், பலவாகிய கூந்தலையும் கொண்டவள், என் மகள்.

கரிய தாடியைக் கொண்ட கழுத்தினையும், வலிமைமிக்க பெரிய கைகளையும், வலிய வில்லோடு சேர்ந்த அம்பினையும் கொண்ட அவள் தந்தையின் வளப்பம் மிகுந்த ஊர் இதுவே. நான் அம்மகளை ஈன்ற தாய். எனக்கு உரைப்பதால் உங்கள் புகழ் சிறக்கட்டும்.

கருத்து

வழியில் என் மகளைக் கண்டிருப்பின் உரைப்பீர்!

விளக்கம்

அரிய காட்டுவழியில் சேய்மையிலிருந்து வரும் தலைவனே! உடன் இருக்கும் மகளே! நீ என் மகள் போலவே தோன்று கின்றாய்! அழகுமிக்க என் மகளின் வலிமைமிக்க தந்தை ஊர் இது. இங்கிருந்து உங்களைத் தொழுது கேட்கின்றேன்! அவர்களைக் கண்டிருப்பின் உரைப்பீர்! உரைப்பதால் உங்கள் புகழ் சிறப்படையட்டும்.

சொற்பொருள்

1. சேயின் - தொலைவிடத்திலிருந்து; மதவலி - பெருவலிமை; யா - யாமரம்.
2. ஓமை - மரம்; அத்தம் - வழி.
3. முன்னாள் - நேற்று; உம்பர் - நெடுந்தொலைவு; கழிந்த - சென்று விட்ட.
4. (என் மகள்) கண்பட - இவள் என் மகள்போல என் கண்ணெதிரே படுதலால்; நீர் ஆழ்ந்தன்றே -(என் கண்கள்) நீர் நிரம்பப் பெருகின.
5. இடவயின் - இடத்தில்.
6. கோடு ஏந்து - பக்கம் உயரிய; திதலை - தேமல்.

7. வார்ந்து - பரவி; இலங்குதல் - விளங்குதல்; வால் எயிறு - வெண்மையான பற்கள்; பொலிந்த தார் - பொலிவு பெற்ற மாலை.
9. மை அணல் - கருந்தாடி; எருத்து - கழுத்து; முன்பின் - வலிமை வாய்ந்த; தடக்கை - பெரிய கை.
10. வல்வில் - வலிமையான வில்; எய்யா வண்மகிழ் - அளந்தறிய இயலாத வலிமையும் கள்ளுணவும் (கொண்டவன்).
11. பொலிக - சிறக்க.

செவிலித்தாய் கூற்று

ஐங்குறுநூறு 389 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பின் சென்ற செவிலித்தாய் வினவப்பட்டோர், 'கண்டோம்' என்புழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற தலைவியைச் செவிலி தேடிச் சென்றாள்; எதிர்ப் பட்டோரிடம், 'என் மகளைக் கண்டீர்களா?' என்று கேட்டாள். 'கண்டோம்' என்று கூறியவர்களிடம் செவிலி சொல்லியது.

செய்வினைப் பொலிந்த செறிகழல் நோன்தாள்
மைஅணல் காளையொடு பைய இயலி,
பாவை அன்னஎன் ஆய்தொடி மடந்தை
சென்றனள்! என்றிர், ஐய!
ஒன்றின வோ,அவள் அஞ்சிலம்பு அடியே!

தெளிவுரை

ஐயன்மீர்! கண்ணின் கருமணி போன்றவள், என் மகள். தேர்ந் தெடுத்த வளையல்களை அணிந்த அவள், வேலைப்பாடமைந்த அழகிய செறிவான கழலினையும், வலிமையான அடியினையும், கருத்த தாடியினையும் கொண்ட காளையோடு மெல்ல மெல்ல நடந்து செல்கின்றாள் என்கிறீர்களே! அழகிய சிலம்பணிந்த அவள் பாதங்கள் வெயில் வெதுப்பும் பாலை நிலத்தில் படிந் தனவோ? (கூறுங்கள்.)

கருத்து

'மகளைக் கண்டோம்' என்று கூறியவரிடம், 'மென்மையான பாதங்களைக் கொண்ட மகள் வெப்பமிக்க பாலை நிலத்தில் அடி வைத்து நடந்தனளோ' என்று செவிலி பதற்றத்துடன் கேட்கிறாள்.

சொற்பொருள்

1. செய்வினைப் பொலிந்த - வேலைப்பாடுகளால் அழகு பெற்ற; செறிகழல் - செறிவான கழலினை (அணிந்த); நோன்தாள் - வலிமை யான அடி.
2. மை அணல் - கருத்த தாடி; பைய இயலி - மெதுவாய் நடந்து.
3. ஆய் தொடி - ஆராய்ந்தெடுத்த வளையலை அணிந்த.
5. ஒன்றினவோ - படிந்தனவோ; அம் சிலம்பு - அழகிய சிலம்பு.

கண்டோர் கூற்று

ஐங்குறுநூறு 390 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பின் சென்ற செவிலித்தாய் பலரையும் வினாவ, கண்டோர் தாம் கண்டவாறு அவட்குக் கூறியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற மகளைத் தேடிச் சென்ற செவிலித்தாய், எதிர்ப்பட்ட பலரையும், 'என் மகளைக் கண்டீர்களா?' என்று கேட்டவண்ண மிருந்தாள். அம்மகளைக் கண்டவர் தாம் கண்ட முறையைச் செவிலியிடம் சொல்லியது.

நல்லோர் ஆங்கண் பரந்துகை தொழுது,
பல்ஊழ் மருகி வினவு வோயே!
திண்தோள் வல்வில் காளையொடு
கண்டனெம் மன்ற சுரத்திடை, யாமே.

தெளிவுரை

"*நல்லவர்களை அங்குமிங்குமாய்த் தேடித் திரிந்து, கை தொழுது, பலமுறையும் மருண்டு, ('என் மகளைக் கண்டீர்களா?'*

என) வினவுகின்ற செவிலியே! திண்ணிய தோளில் வலிய வில்லைக் கொண்ட காளை ஒருவனுடன் நின் மகள் பாலை நில வழியில் சென்றதை நாங்கள் கண்டோம்" என்றனர், சிலர்.

கருத்து

தாயே, உன் மகளைக் கண்டோம்; கவலை தீர்க!

குறிப்பு

மகளைத் தேடிச் சென்ற செவிலித்தாய் எதிர்வருவார் பலரையும், 'என் மகளைக் கண்டீரோ?' என்று வினவுகின்றாள். அம்மகளைக் கண்டவரான சிலர் தாம் கண்டதாய்க் கூறினர்.

சொற்பொருள்

1. நல்லோர் - நல்லவர்களை; ஆங்கண் - அங்கும் இங்கும்; பரந்து - தேடித் திரிந்து.
2. பல் ஊழ் - பல முறையும்; மருகி - அறிவு சுழன்று; வினவுவோயே - கேட்பவளே (செவிலியே!)
3. திண்தோள் - திண்ணிய தோள்; வல்வில் - வலிய வில்.
4. கண்டனம் யாமே - நாங்கள் கண்டோம்; சுரத்திடை - பாலை நில வழியில்.

கண்டோர் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 71 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

சுரத்திடைச் சென்ற செவிலிக்குத் தலைமகனையும் தலைமகளையும் கண்டார் சொல்லிய வார்த்தையைக் கேட்டாராகச் சிலர் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற மகளைத் தேடிச் செவிலி சுரத்தில் சென்றாள். வழியில் தலைவனையும் தலைவியையும் சிலர் கண்டதை அவர்கள் தம்மிடம் கூறியதாய்ச் செவிலியை எதிர்ப்பட்டவர் அவளிடம் சொல்லியது.

அம்சுடர்நீள் வாள்முகத்(து) ஆயிழையும் மாறுஇலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண்(டு) – அஞ்சி
ஒருசுடரும் இன்றி உலகுபாழ் ஆக
இருசுடரும் போந்தனஎன் றார்.

தெளிவுரை

செவிலித்தாயை எதிர்ப்பட்ட சிலர், "அழகிய திங்கள் போன்ற ஒளிமிக்க முகத்துடன் ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்த தலைவியும், ஒப்பில்லாத ஒளியையும் நீண்ட வேலையும் கொண்ட தலைவனும் இப்பாலை வழியில் செல்லக் கண்டு, 'இரு சுடர்களும் இங்கு வந்துவிட்டனவே! உலகம் ஒளி யின்றிப் பாழாகுமே' என எண்ணினோம் என்று, 'சுடர்களொத்த இருவர் இச்சுரத்திலே போயினர்' என்று அவர்களைப் பார்த்தவர் எம்மிடம் சொல்லக் கேட்டோம்" எனக் கூறினர்.

கருத்து

'இருசுடரும் ஒன்றுசேர்ந்து அச்சுரத்தே சென்றது போன்று அவர்கள் சென்றதைக் கண்டோம்' என்று கண்டவர் கூறினர்.

சொற்பொருள்

1. அம்சுடர் நீள் வாள் முகம் - அழகிய திங்கள் போன்ற மிகுந்த ஒளியினைக் கொண்ட முகம்; ஆயிழையும் - ஆய்ந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்தவளும்; மாறுஇலா - எதிர் இல்லாத.
2, வெஞ்சுடர் - வெய்ய ஒளி; போதர - இச்சுரத்தில் செல்ல.
3. ஒரு சுடரும் இன்றி - (வானில்) இரு சுடர்களுள் ஒன்றும் இல்லாமல் (இருசுடர் - சூரியன், சந்திரன்).
4. போந்தன - இங்கு (நிலவுலகிற்கு) வந்துவிட்டன.

கண்டோர் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 72 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

சுரத்திடைச் சென்ற செவிலியைத் தலைமகளைக் கண்டார் சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தலைவனுடன் சென்ற தலைவியைப் பார்த்த சிலர், மகளைத் தேடி வந்த செவிலியிடம் தாம் அவளைக் கண்டதைக் கூறியது.

முகந்தா மரை;முறுவல் ஆம்பல்;கண் நீலம்;
இகந்தார் விரல்காந்தள்; என்றென்(று) – உகந்தியைந்த
மாழைமா வண்டிற்காம் நீழல் வருந்தாதே
ஏழைதான் செல்லும் இனிது.

தெளிவுரை

“இவள் முகம், தாமரைப்பூ; முறுவலைக் கொண்ட வாய், ஆம்பல்; கண்கள், குவளைப்பூ; ஒன்றையொன்று ஒத்திராத விரல்களோ காந்தள்பூ என உறுப்புகளைப் பூக்கள் என்று கருதிக் காதலித்துத் தலைவியுடன் நெருங்கிக் கூட்டமாய் வந்த வண்டுகள் உண்டாக்கிய நிழல் வழியே உன் மகள் வருத்தமின்றித் தலைவனுடன் இனிது போயினாள்; ஆதலின், நீ வருந்த வேண்டா” என்று தலைவியைத் தலைவனுடன் கண்டவர் செவிலிக்குக் கூறினர்.

கருத்து

உன் மகளைச் சுற்றி வந்த வண்டுக்கூட்டத்தினால் உண்டாகிய நிழலில் அவள் இனிதே போயினாள்; வருந்தற்க.

சொற்பொருள்

1. முறுவல் - புன்சிரிப்பு; நீலம் - நீலோற்பலப்பூ.
2. இகந்தார் - ஒன்றையொன்று ஒத்து அமையாத; உகந்து - (அவ்வுறுப்புகளை) விரும்பி; இயைந்த - (தலைவியோடு) நெருங்கிச் சென்ற.

3. மாழை - கூட்டமாகிய; மா - சிறந்த; வண்டிற்காம் - வண்டுகள் உண்டாக்கிய.
4. ஏழை - (பெண்) உன் மகள்.

கண்டார் கூற்று

ஐங்குறுநூறு 388 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தேடிச் சென்ற செவிலிக்கு இடைச்சுரத்துக் கண்டார், அவளைக் கண்ட திறம் கூறியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற தலைவியைத் தேடிச் செவிலி செல்கிறாள். இடைச்சுரத்தில் தலைவியைக் கண்டவர், தாம் அவளைக் கண்ட நிலையைச் செவிலியிடம் கூறியது.

நெருப்புஅவிர் கனலி உருப்புச்சினம் தணியக்
கருங்கால் யாஅத்து வரிநிழல் இரீஇ,
சிறுவரை இறப்பின் காண்குவை செறிதொடிப்
பொன்ஏர் மேனி மடந்தையொடு
வெண்வேல் விடலை முன்னிய சுரனே.

தெளிவுரை

அம்மையே! நெருங்கிய தொடியும், பொன் போன்ற அழகிய மேனியும் கொண்ட மடந்தை ஒருத்தி (தலைவி), வெல்லும் வேலுடைய காளை ஒருவனுடன் சுரத்தில் சென்றுகொண்டிருக் கிறாள். நெருப்புப்போல் பொசுக்கும் ஞாயிற்றின் வெப்பம் தணியும்வரை கரிய அடிமரத்தைக் கொண்ட (இந்த) யா மரத்தின் புள்ளி போன்ற நிழலில் தங்கி, (எதிரே தெரியும்) சிறு மலைகளைக் கடந்து சென்றால் அவள் சென்ற சுரத்தினை நீ காணலாம்.

கருத்து

இச்சிறுமலைகளைக் கடந்து சென்றால் அவள் சென்ற சுரத்தினைக் காணலாம்.

விளக்கம்

தலைவியைத் தேடி நடந்து மெலிந்து வரும் செவிலியைக் கண்டவர், அவள் நிலை கண்டு வருத்தமுற்றனர். அவள் மகளைத் தாங்கள் கண்டதைக் கூறினர். வெயிலின் வெப்பத்தைச் செவிலி தாங்க இயலாது ஆதலின், அருகேயிருந்த யாமரத்தின் நிழலில் தங்கி, வெயில் தணிந்ததும் செல்லுமாறு கூறினர். எதிரே தோன்றும் சிறு மலைகளைக் கடந்து சென்றால் அவள் மகள் சென்ற வழியைக் காணலாம் என்றும் கூறினர்.

குறிப்பு

வழியைக் காணலாம் என்பதால் அவளைக் காண இயலாது என்பதைக் குறிப்பால் உணர்த்தினர். "அவள் தன் துணைவனுடன் இந்நேரம் நெடுந் தொலைவு சென்றிருப்பாள் என்பதால் நீ சென்றாலும் அவளைக் காண இயலாது. அவள் அறநெறிப்படியே சென்றுள்ளாள். ஆதலால், அவளை மனதார வாழ்த்தி நீ திரும்புவதே நல்லது" என்று தலைவியைக் கண்டோர் செவிலியிடம் குறிப்பாய் உணர்த்தினர் என்று கொள்ளலாம்.

சொற்பொருள்

1. நெருப்பு அவிர் - நெருப்புப் போன்ற கதிர்களைப் பரப்பிச் சுடும்; கனலி - ஞாயிறு; உருப்பு - வெம்மை; சினம் - கொடுமை; தணிய - குறைய.
2. யாஅத்து - யாமரத்தின்; வரி நிழல் - கோடு கோடாய் உள்ள நிழல்; இரீஇ - தங்கி, இருந்து.
3. சிறுவரை - சிறிய மலை; இறப்பின் - கடந்தால்; காண்குவை - காண்பாய்.
4. பொன்வர் - பொன்னை ஒத்த, பொன் போன்ற (அழகு வாய்ந்த); மேனி - உடல்; மடந்தை - பெண் (தலைவி).
5. வென்வேல் - வெற்றி வேல்; விடலை - காளை, இளைஞன்; முன்னிய - கருதிய.

கண்டோர் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 89 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

சுரத்திடைச் சென்ற செவிலிக்குத் தலைமகனையும் தலைமகளையும் கண்டமை எதிர்ப்பட்டார் சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற தலைவன் தலைவியரை நேரில் பார்த்தோர், தலைவியைத் தேடிவரும் செவிலியிடம் சொல்லி ஆற்றுவித்தது.

நண்ணிநீர் சென்மின்; நமர்அவர் ஆவரேல்
எண்ணிய எண்ணம் எளிதுஅரோ – எண்ணிய
வெஞ்சுடர் அன்னானை யான்கண்டேன் கண்டாளாம்
தண்சுடர் அன்னாளைத் தான்.

தெளிவுரை

"அம்மையே! நீவிர் தேடிவரும் கதிரவனைப் போன்ற ஒளிமிக்க தலைவன் எதிரே செல்வதை நான் பார்த்தேன். (என்னுடன் வரும் என் மனைவி) குளிர்ந்த நிலவையொத்த பெண்ணரசியைத் தன் எதிரே பார்த்தாளாம்! விரைந்து செல்லுங்கள். அவ்விருவரும் நம்மவர்களாயின் அவர்களைக் காண வேண்டும் என்ற உம் கருத்து எளிதில் நிறைவேறும்" என்று செவிலித்தாயிடம் எதிரில் வந்த கணவன் மனைவியருள் கணவன் உரைத்தனன்.

கருத்து

காதலர் இருவரும் இவ்வழியில்தான் சென்றுள்ளனர்; விரைந்து சென்றால் அவர்களைக் காணலாம்.

குறிப்பு

உடன்போக்கில் சென்ற தன் மகளைச் செவிலி தேடிச் சென்றாள். எதிரே கணவன் மனைவியராய் இருவர் வந்தனர். அவர்களிடம், 'உங்களைப் போன்று என் மகளும் அவள் துணைவனும் சென்றதைக் கண்டீரா?' என்று

செவிலி கேட்டாள். எதிரே வந்தவர்களுள் கணவன் தன்னையொத்த ஓர் ஆணைப் பார்த்ததாகவும், அவன் மனைவி அவளொத்த ஒரு பெண்ணைப் பார்த்ததாய்ச் சொன்னாள் என்றும் கூறினான்.

ஆடவன், அயல் பெண்ணைப் பார்க்கக்கூடாது; பெண், அயல் ஆடவனைப் பார்க்கக்கூடாது என்னும் நாகரிகம் இப்பாடலில் பொதிந்துள்ளது.

சொற்பொருள்

1. நண்ணி - விரைந்து; சென்மின் - செல்லுங்கள்; நமர் ஆவரேல் - நம்மவர்களாயின்.
3. வெஞ்சுடர் - வெம்மையான கதிர்களைக் கொண்ட சூரியன்.
4. தண்சுடர் - குளிர்ந்த கதிர்களைக் கொண்ட நிலவு.

செவிலித்தாய் கூற்று

குறுந்தொகை 44 **வெள்ளிவீதியார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது. (கையறுதல் - பெருந்துன்பமடைதல்.)

கூற்று விளக்கம்

தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்ற பின்னர் அவளைத் தேடிச் சென்ற செவிலித்தாய் இடைவழியில் மிகவும் வருத்தமெய்திச் சொல்லியது.

காலே பரிதப் பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே;
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற,இவ் உலகத்துப் பிறரே.

தெளிவுரை

நடந்து நடந்து அடி எடுத்து வைக்க இயலாமல் என் கால்கள் ஒய்ந்து தடுமாறுகின்றன; எதிர் வருவாரைப் பார்த்துப் பார்த்து

என் கண்களும் ஒளி மழுங்கிவிட்டன; என் மகளும் அவள் தலைவனும் அல்லாத பிறர், அகன்ற வானில் தோன்றும் மீன்களைக் காட்டிலும் பலராய்த் தென்படுகின்றனர். (என் மகளையும் அவள் காதலனையும் காண இயலவில்லை.)

கருத்து

எதிரில் காணப்படுவோர் வான மீன்களினும் பலராயுள்ளனர்; ஆயினும், காணவேண்டியவர்கள் என் கண்ணிற்படவில்லை.

சொற்பொருள்

1. பரி தப்பினவே - விரைந்து நடக்க இயலாமல் சோர்வடைந்தன.
2. வாள் - ஒளி.
3. அகல் இரு - அகன்ற பெரிய; விசும்பு - வானம்; மீனினும் - மீன்களைவிட.
4. மன்ற - நிச்சயமாய்; பிறரே - நான் கண்ட மற்றவர்.

செவிலித்தாய் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 65 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

சுரத்திடைச் சென்ற செவிலித்தாய் குரவொடு புலம்பியது. (குரவு - குரா மரம்.)

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற மகளைத் தேடிச் சென்ற செவிலி குரா மரத்தைப் பார்த்து வருந்திக் கூறியது.

தான்தாயாக் கோங்கம் தளர்ந்து முலைகொடுப்ப
ஈன்றாய்நீ பாவை இருங்குரவே! – ஈன்றாள்
மொழிகாட்டாய் ஆயினும் முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டாய் ஈதென்று வந்து.

தெளிவுரை

"பெரிய குரா மரமே! கோங்க மரம் தாய் போன்று உள்ளம் இரங்கிக் கொங்கை போன்ற பூக்களை மலரச்செய்கின்றது. அப் பூக்கொங்கைகளிலிருந்து பாலருந்த நீ பொம்மை போன்ற காய்களைப் பெற்றுள்ளாய். (பெண்குழந்தைகளைப் பெற் றுள்ளாய்.) செல்லும் வழியில் என் மகள் உன்னிடம் சொல்லிய பொருளை எனக்கு எடுத்துக்கூற உன்னால் இயலவில்லை. என்றாலும் கூர்மையான பற்களைக் கொண்ட என் மகள் தலைவன் பின் போன வழி இதுதான் என்று முன்வந்து எனக்குக் காட்ட மாட்டாயா?" எனச் செவிலி, குரா மரத்தொடு சொல்லிப் புலம்பினாள்.

கருத்து

குரா மரமே! என் மகள் உன்னிடம் கூறியதை நீ சொல்லவில்லை என்றாலும் அவள் சென்ற வழியையாவது காட்டமாட்டாயா?

(மொழி சொல்லாய் ஆயினும் வழி காட்டு.)

சொற்பொருள்

1. தாயா - தாயாக; கோங்கம் - கோங்க மரம்; தளர்ந்து - தாழ்ந்து (மன நெகிழ்வுற்று); முலை கொடுப்ப - முலை போன்ற மலர்களைப் பூக்க (அம்முலைகளில் பாலருந்த).
2. ஈன்றாய் நீ பாவை - நீ பொம்மை போன்ற காய்கள் காய்க்கப்பெற்றாய்; இருங்குரவே - பெரிய குரா மரமே; ஈன்றாள் - நான் பெற்ற மகள்.
3. மொழி காட்டாய் - உன்னிடம் சொல்லிய சொற்களின் பொருளைக் கூறமாட்டாய்; முள் எயிற்றாள் - கூரிய பற்களைக் கொண்ட என் மகள்.
4. ஈதென்று - (போன வழி) இதுதான் என்று.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 7 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்திடைப் பின் சென்று நவ்விப் பிணாக் கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற மகளைத் தேடிச் சென்ற செவிலி, வழியில் எதிர்ப்பட்ட பெண்மானைக் கண்டு கூறியது.

'முலைமுகம் செய்தன; முள்எயிறு இலங்கின;
தலைமுடி சான்ற; தண்தழை உடையை;
அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்;
மூப்புடை முதுபதி தாக்குஅணங்கு உடைய;
காப்பும் பூண்டிசின்; கடையும் போகலை;
பேதை அல்லை– மேதைஅம் குறுமகள்!
பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை, புறத்து'என,
ஒண்சுடர் நல்இல் அருங்கடி நீவி,
தன்சிதைவு அறிதல் அஞ்சி – இன்சிலை
ஏறுடை இனத்த – நாறுஉயிர் நவ்வி!
வலைகாண் பிணையின் போகி, ஈங்குஓர்
தொலைவுஇல் வெள்வேல் விடலையொடு, என்மகள்
இச்சுரம் படர்தந் தோளே, ஆயிடை,
அத்தக் கள்வர் ஆதொழு அறுத்தென,
பிற்படு பூசலின் வழிவழி ஓடி,
மெய்த்தலைப் படுதல் செல்லேன், இத்தலை,
நின்னொடு வினவல் கேளாய்! பொன்னொடு
புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி,
ஒலிக்குழைச் செயலை உடைமாண் அல்குல்,
ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉம்
கல்கெழு சிறுகுடிக் கானவன் மகளே.

தெளிவுரை

இனிய முழக்கம் கொண்ட ஆண்மானோடு வெப்பம் தாங்காது பெருமூச்சு விட்டு வரும் இளைய பெண்மானே!

(நான் என் மகளை நோக்கி,) "அறிவினைக் கொண்ட இளைய மகளே! நின் முலைகள் பிறர்க்குத் தெரியுமளவுக்கு வளர்ந்துள்ளன! விழுந்து முளைத்த பற்கள் கூர்மையுடன் ஒளி கொண்டன; தலைமுடி முடியும் அளவிற்குக் கூடிவிட்டது; தழையாடை உடுக்கும் அளவிற்குப் பருவம் அடைந்துவிட்டனை; ஆதலால், சுழன்று திரியும் உன் ஆயத்தாருடன் சுற்றித் திரியாதே! தொன்மை வாய்ந்த நம் ஊரில் தீண்டி வருத்தும் தெய்வங்கள் உள்ளன. நீ காவலிலும் வைக்கப்பட்டுள்ளாய். இனி நம் வாயிற் படிக்கும் நீ செல்லக்கூடாது. நீ பேதைப் பருவத்தினள் அல்லள்; வீட்டை விட்டுப் புறம்போகாப் பெதும்பைப் பருவத்தை அடைந்துவிட்டனை!" என்று கூறினேன்.

அம்மகள் பொன்னால் செய்த புலிப்பல்லோடு கோத்த தனி மணித்தாலியினை அணிந்தவள்; தழைத்த அசோகந்தளிரினால் ஆன தழையாடை அழகுறத் திகழும் அல்குலினை உடையவள். பலாவின் சிறந்த சுளைகளைத் தின்ற குரங்குகள் அவற்றின் கொட்டைகளை எங்கும் உதிர்த்துப் போடும் மலைகள் சூழ்ந்த சிறுகுடிக்குத் தலைவனான கானவன் மகளும் ஆவாள்.

தான் செய்த குற்றத்தினை நான் அறிந்தமைக்கு அஞ்சி, மிக்க ஒளி பொருந்திய எங்கள் நல்ல வீட்டின் அரிய காவலைக் கடந்து, வலையினைக் கண்ட பெண்மான் அதனின்றும் தப்பி விரைந்தோடுவதுபோல, வீட்டினின்றும் விரைந்தோடிச் சென்று, வெற்றி கொள்ளும் வெண்மையான வேலினையுடைய ஆடவன் ஒருவனோடு இச்சுரவழியே சென்றுவிட்டனள்.

அருஞ்சுரக் கள்வர்கள் பசுக்களைத் தொழுவினின்று கொண்டுசென்ற அப்பொழுதே அவர்கள் பின்னே பசுக்களைத் தேடிச் செல்லும் வீரர்கள்போல, அவள் உடன்போக்கினை அறிந்த உடனேயே பின்தொடர்ந்து ஓடியும் அவர்களைக் காண இயலவில்லை.

மானே, நீ கண்டாயோ? அப்படிக் கண்டிருந்தால் அவ்விரு வரும் சென்ற வழியை எனக்குச் சொல்!

கருத்து

மானே! மகள் சென்ற வழியைச் சொல்.

விளக்கம்

“மானே! என் பெண் மலைநாட்டுத் தலைவன் மகள். அவளிடம் நான், ‘நீ பேதை அல்லை; பருவம் எய்திவிட்டாய்; காவலிலும் வைக்கப்பட்டுள்ளாய்; இனி வீட்டுவாயிற்படியை விட்டு வெளியே செல்லாதே’ என்று சொன்னேன். தான் செய்த குற்றத்தினை நான் அறிந்தமைக்கு அஞ்சி, நான் சொன்னதைக் கேளாது, ஆடவன் ஒருவனோடு இக்காட்டுவழியில் சென்று விட்டாள். அவள் சென்ற இடத்தை அறியமுடியவில்லை. நீ கண்டிருந்தால் சொல்” என மானிடம் கேட்கிறாள், தாய்.

சொற்பொருள்

1. முகம் செய்தன - அரும்பின; முள்எயிறு - கூரிய பற்கள்; இலங்கின - ஒளி கொண்டன.
2. சான்ற - முடிப்பதற்கு ஏற்றனவாயின.
3. அலமரல் - சுழன்று திரியும்; ஆயம் - தோழியர் கூட்டம்; படாஅல் - செல்லாதே.
4. அணங்கு - தாக்கி வருத்தும் தெய்வம்.
5. காப்பும் பூண்டிசின் - காவலும் பெற்றனை; கடையும் - வாயிற் படிக்கும்; போகலை - செல்லாதே.
6. மேதைஅம் குறுமகள் - அறிவினைக் கொண்ட இளமகள்.
7. ஒதுங்கினை புறத்து - வெளியே சென்றால்.
8. அருங்கடி - அரிய காவல்; நீவி - கடந்து.
9. தன் சிதைவு - தன் குற்றத்தை; அறிதல் அஞ்சி - நான் அறிந்தமைக்கு அஞ்சி; இன்சிலை - இனிய முழக்கம் கொண்ட.
10. நாறு உயிர் நவ்வி - பெருமூச்சு விடும் இளைய மானே!
11. வலைகாண் - வலையினை முன்னர்க் காணும்; பிணை - பெண்மான்; போகி - ஓடி.
12. தொலைவுஇல் - தோற்றல் இல்லாத; வெள்வேல் - வெள்ளிய வேலினையுடைய; விடலை - தலைவன்.

13. படர் தந்தோள் - சென்றனள்; ஆயிடை - அப்பொழுதே.
14. அத்தக் கள்வர் - வழிப்பறி கள்வர்; ஆதொழு அறுத்தென - ஆக்களைத் தொழுவினின்றும் கொண்டகன்றனர்.
15. பிற்படு பூசலின் - அவர்கள் பின் ஓடிச் செய்யும் போரினைப்போல; வழிவழி ஓடி - (என் மகள் சென்ற வழியெல்லாம்) பின்னாலே ஓடி.
16. மெய்த்தலைப்படுதல் - அவள் மேனியை அணுகுதல்; செய்யேன் - பெற்றிலேன்.
18. புலம்புமணி - தனித்த மணியைக் கொண்ட.
19. ஒலிக்குழை - தழைத்த அசோகத் தளிராலாகிய; செயலை - ஆடை, தழையாடை.
20. மேய்கலை - உண்ணும் ஆண்குரங்குகளால்; உதிர்த்த - உதிர்க்கப்பட்ட.
21. துய்த்தலை - தலையில் ஆர்க்கினைக் கொண்ட; வெண்காழ் - வெள்ளிய பலா வித்துகள்; பெறூஉம் - கொள்ளக் கிடக்கும்.
22. கல்கெழு - கற்கள் பொருந்திய; சிறுகுடி - சிறுகுடியையுடைய.

அந்தணர் கூற்று

ஐங்குறுநூறு 387 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பின் சென்ற செவிலியால் வினாவப்பட்ட அந்தணர் அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

மகளைத் தேடிச் சென்ற செவிலி, தன்னை எதிர்ப்பட்ட அந்தணர்களிடம் கேட்க, அவர்கள் அவளுக்குச் சொல்லியது.

'அறம்புரி அருமறை நவின்ற நாவின்
திறம்புரி கொள்கை அந்தணிர்! தொழுவல்'என்று
ஒண்டொடி வினவும் பேதைஅம் பெண்டே!

கண்டனெம் அம்ம, சுரத்திடை அவளை
இன்துணை இனிதுபா ராட்டக்
குன்றுஉயர் பிறங்கல் மலைஇறந் தோளே.

தெளிவுரை

" 'அறநெறியைப் புலப்படுத்தும் அரிய வேதங்களை ஓதுகின்ற நாவினையும் அவ்வறத்தைக் கடைப்பிடித்தொழுகும் கொள்கை யினையும் கொண்ட அந்தணர்களே! உம்மைத் தொழுகின்றேன்' என்று எம்மை வணங்கி, 'ஒளி பொருந்திய வளையணிந்த என் மகளைக் கண்டீர்களா?' என்று கேட்கும் அறியாமை மிக்க அம்மையே! நாங்கள் அவளைக் காட்டுவழியில் கண்டோம்! அவள், இனிய துணையாய் உடன்வரும் தன் காதலன் மகிழ்ந்து நலம் பாராட்டி வர, குன்றுகள் செறிந்த உயர்ந்த மலைகளைக் கடந்து சென்றுவிட்டாள்!" (நீ தொடர்ந்து செல்வதில் பயனேதுமில்லை எனச் செவிலியிடம் கூறினர்.)

கருத்து

செவிலியே! உன் மகளைக் கண்டோம். அவள் மலைகளைக் கடந்து சென்றுவிட்டாள்; ஆகவே, நீ ஊர் திரும்பு.

சொற்பொருள்

1. அறம்புரி - நல்லறத்தை விரும்பி; அருமறை - உணர்தற்கரிய வேதம்; நவின்ற - ஓதுகின்ற.
2. திறம்புரி கொள்கை - ஓதியதை உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகும் கொள்கை; தொழுவல் - வணங்குகின்றேன்.
3. ஒண்டொடி - ஒளி பொருந்திய வளையல்; பேதைஅம் பெண்டே - அறியாமை மிக்க பெண்ணே.
4. கண்டனெம் - கண்டோம்.
5. இன்துணை - இனிய துணைவன்.
6. குன்றுயர் பிறங்கல் மலை இறந்தோள் - சின்னஞ்சிறு குன்றுகளைக் கடந்து, அதோ தோன்றுகின்ற மலையினையும் கடந்து சென்று விட்டனள்.

அந்தணர் கூற்று

கலித்தொகை 9 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

உடன்போய தலைமகளுக்குப் பின் சென்ற செவிலி, இடைச்சுரத்து முக்கோல் பகவரைக் கண்டு, 'இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோ' என வினவியாட்கு, 'அவரைக் கண்டு, அஃது அறம் எனவே கருதிப் போந்தேம்; நீரும் அவர் திறத்து எவ்வம்பட வேண்டா' என எடுத்துக்காட்டி அவர் தெருட்டியது. (முக்கோல்பகவர் - அந்தணர்; எவ்வம் - துன்பம்; தெருட்டுதல் - தெளிவடையச் செய்தல்.)

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்றுவிட்ட மகளையும் அவள் தலைவனையும் செவிலி தேடிச் சென்றனள். வழியிடையே முக்கோற்பகவரைக் கண்டு, 'உடன்போக்கில் சென்ற இத்தகையவரைக் கண்டீர்களா?' என வினவினாள். அவர்கள், 'வழியிலே கண்டோம்; அவர்கள் சென்றது அறம் என்று கருதினோம்; நீரும் அவர்கள் பொருட்டுத் துன்பப்பட வேண்டா' என எடுத்துச்சொல்லித் தெளிவடையச் செய்தது.

தரவு

'எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்,
உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்,
நெறிப்படச் சுவல்அசைஇ, வேறுஓரா நெஞ்சத்துக்
குறிப்புஏவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணிர் –
வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர்! இவ்இடை,
என்மகள் ஒருத்தியும், பிறள்மகன் ஒருவனும்,
தம்முளே புணர்ந்த தாம்அறி புணர்ச்சியர்;
அன்னார் இருவரைக் காணிரோ?– பெரும!'
'காணேம் அல்லேம்; கண்டனம்' கடத்திடை;
ஆண்எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய
மாண்இழை மடவரல் தாயிர்நீர் போறிர்.

தாழிசை

பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,

மலையுளே பிறப்பினும், மலைக்குஅவைதாம் என்செய்யும்?
நினையுங்கால், நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே.

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை,
நீருளே பிறப்பினும், நீர்க்குஅவைதாம் என்செய்யும்?
தேருங்கால், நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே.

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை,
யாழுளே பிறப்பினும், யாழ்க்குஅவைதாம் என்செய்யும்?
சூழுங்கால், நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே.
என ஆங்கு—

சுரிதகம்

இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்;
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;
அறம்தலை பிரியா ஆறும்மற்று அதுவே.

தெளிவுரை

"எறிக்கும் வெயிலைத் தாங்கக் குடையைப் பிடித்துக்கொண்டு தோளிலே உறிக்கமண்டலம் அசைய முக்கோலைத் தாங்கி இந்த வெம்மையான வெயிலில் வரும் அந்தணர்களே! மெய்ப் பொருளன்றிப் பிற நினையாதவர்களே! ஐம்பொறியும் உமக்கு ஏவல் செய்தலை இயல்பாய்ப் பெற்றுப் பேரொழுக்கம் கொண்டுள்ளீர்! வெவ்விய காட்டுவழியே வந்துகொண்டிருக்கும் உம்மை ஒன்று கேட்பேன்!

"என் மகள் ஒருத்தியும் இன்னொருத்தியின் மகன் ஒருவனும் பிறர் அறியாமல் தம்முளே காதலில் கூடியவராய் இவ்வழியிலே செல்ல நீவிர் கண்டீரா?" எனச் செவிலி அந்தணரைக் கேட் கிறாள்.

அவர்கள், "நாங்கள் காணாமல் இல்லை; இக்காட்டுவழியில் கண்டோம். ஆண்மையின் அழகெலாம் சேர்ந்து உருவான இளைஞனுடன் அரிதான இப்பாலை வழியிலே, மாட்சிமை மிக்க அணி புனைந்து செல்லும் மடந்தையின் தாய் நீங்கள் போலும்! தாயே, நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்!

"மணப்பொருள் பலவும் கூட்டிய நறுஞ்சந்தனம், தன் உடலில் பூசிக்கொள்பவர்க்குப் பயன் அளிக்குமே அல்லாமல், அது மலையிலே பிறந்தாலும் மலைக்கு என்ன பயனைக் கொடுக்க இயலும்? நினைத்துப் பார்த்தால் உம் மகளும் உமக்கு அத்தன்மையளே!

"சிறப்புப் பொருந்திய வெண்ணிற முத்துகள், அவற்றைக் கோத்து அணிபவர்க்கு இன்பமளிக்குமே அல்லாமல், அவை கடலிலே தோன்றினாலும் அக்கடலுக்குப் பயன் தருவது இல்லையே! ஆராய்ந்து பார்த்தால் உம் மகளும் உமக்கு அத்தன்மையளே!

"ஏழிசையாய்ப் பிறக்கும் யாழிசை, நரம்பினை மீட்டுபவர்க்குத்தான் இன்பமளிக்கும்; அல்லாமல் அது பிறந்த யாழுக்கு எவ்வித இன்பமும் அளிப்பதில்லை. சிந்தித்துப் பார்த்தால் உம் மகளும் உமக்கு அத்தன்மையளே!

(அந்தணர்கள் இவ்வாறு எடுத்துக்காட்டி) "அதுபோல உம் மகளும் உரிய பருவமடையும்போது உமக்குப் பயன்படாள்.

"தலைசிறந்த கற்பினைக் கொண்டவள், உம் மகள்; அவளுக்கு எத்துன்பமும் செய்யாதீர்! சிறந்தவனான தன் காதலனுடன் சென்று விட்டாள். அவள் கொண்ட முடிவே சிறந்த இல்லற நெறியாகும்! அவளுக்காக வருந்தாது அமைதியடையுங்கள்" என்றனர்.

கருத்து

(அவள் சென்றதற்கு வருந்த வேண்டா.) தான் விரும்பியவனைத் தொடர்ந்து சென்று வாழ்வதே அறம்; அதுவே கற்பு.

சொற்பொருள்

1. எறித்தரு - எறித்தலைச் செய்கின்ற.
2. உறித்தாழ்ந்த - உறியில் தொங்கும்; கரகம் - கமண்டலம்; உரை சான்ற - புகழ் பெற்ற; முக்கோல் - முனிவர் ஏந்தும் முத்தலைக்கோல்.
3. நெறிப்பட - முறையாய்; சுவல் - தோள்; வேறு ஓரா நெஞ்சம் - மெய்ப்பொருளன்றிப் பிற நினையாத நெஞ்சம்.
4. குறிப்பு ஏவல் செயல் மாலை - ஐம்பொறிகளும் தமக்கு ஏவல் செய்தலை இயல்பாய்ப் பெற்ற; கொளை - கொள்கை; நடை - ஒழுக்கம்.

5. வெவ்விடை - கொடிய பாலை நிலம் போலும் இடங்கள்; செலல் மாலை ஒழுக்கம் - செல்லுதலை இயல்பாய் கொண்ட ஒழுக்கம்; இவ்விடை - இவ்வழியே.
7. புணர்ந்த - ஒன்றாய்க் கூடிய; தாம் அறி புணர்ச்சியர் - தாம் மட்டுமே அறியக் களவிலே கூடி மகிழ்ந்தவர்.
8. காணிரோ? - கண்டீர்களோ?
9. காணேம் அல்லேம் - காணாமல் இருக்கவில்லை (கண்டோம்); கடம் - பாலை நில வழி.
10. ஆண் எழில் - ஆண்களுள் அழகன்; அண்ணல் - தலைவன்; அருஞ்சுரம் - கடத்தற்கரிய பாலை நிலம்; முன்னிய - கடக்க வேண்டுமென்று கருதி வந்த.
11. மாண் இழை - சிறந்த அணிகலன்களை அணிந்த; மடவரல் - இளம் பெண்; தாயிர் - தாய்; போறிர் - போலும்.
12. பலஉறு - மணப்பொருள் பலவும் கூட்டிய; சாந்தம் - சந்தனம்; படுப்பவர்க்கு - பூசிக்கொள்பவர்க்கு.
14. ஆங்கு அனையளே - அத்தன்மையளே.
15. சீர்கெழு - சிறப்புப் பொருந்திய; முத்தம் - முத்து.
16. நீருளே - கடலினுள்ளே.
17. தேருங்கால் - ஆராயுங்கால்.
18. ஏழ்புணர் இன்னிசை - ஏழு நரம்புகளிலே தவழ்ந்து வரும் இனிய இசை; முரல்பவர் - இசைத்து நுகர்பவர்.
20. சூழுங்கால் - ஆராயுங்கால்.
22. இறந்த கற்பினாள் - தலைசிறந்த கற்பினைக் கொண்டவள்; எவ்வம் - துன்பம்; படரன்மின் - செய்யாதீர்.
23. சிறந்தானை - சிறந்தவனான தன் காதலனை; வழிபடீஇ - பின்பற்றி.
24. அறம்தலை பிரியா - அறநெறி தவறாத; ஆறும் - ஒழுக்கமும்; அதுவே - அவள் மேற்கொண்டுள்ள இச்செயலே ஆம்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 189 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலி சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் மகள் அவள் விரும்பிய காதலனுடன் உடன்போக்கில் சென்று விட்டதறிந்த செவிலித்தாய் மிகவும் வருந்தி, 'அவளை இந்த ஊரே இழந்து விட்டதே' எனப் புலம்பிக் கூறியது.

பசும்பழப் பலவின் கானம் வெம்பி,
விசும்புகண் அழிய வேனில் நீடி,
கயம்கண் அற்ற கல்ஓங்கு வைப்பின்
நாறுஉயிர் மடப்பிடி தழீஇ, வேறுநாட்டு
விழவுப்படர் மள்ளரின் முழவுஎடுத்து உயரி,
களிறுஅதர்ப் படுத்த கல்உயர் கவாஅன்
வெவ்வரை அத்தம் சுட்டி, பையென,
வயலைஅம் பிணையல் வார்ந்த கவாஅன்
திதலை அல்குல் குறுமகள் அவனொடு
சென்றுபிறள் ஆகிய அளவை, என்றும்
படர்மலி எவ்வமொடு மாதிரம் துழைஇ,
மனைமருண்டு இருந்த என்னினும், நனைமகிழ்
நன்ன ராளர் கூடுகொள் இன்இயம்
தேர்ஊர் தெருவில் ததும்பும்
ஊர்இழந் தன்று,தன் வீழ்வுஉறு பொருளே.

தெளிவுரை

பசிய பழங்கள் தொங்கும் பலா மரங்கள் நிறைந்த காடு வாடவும், வானம் வறளவும், வேனிற்கால வெம்மை மிகுந்து கொண்டே இருந்தது. குளங்கள் நீரற்றுப்போயின. ஓர் ஊரில் விழா முடிந்ததும் பாணர்கள் தங்கள் வாச்சியங்களை எடுத்துக் கொண்டு வேற்று நாட்டுக்குச் செல்வதுபோல மலைகளில் உள்ள ஆண்யானைகள், பெருமூச்சுவிட்டு இள வயதினவான

பெண்யானைகளுடன் தண்ணீருக்காக வேறு இடங்களுக்குச் செல்வதற்குக் காரணமான மலைகள் உயர்ந்து விளங்கும் பாலை நிலமாகும், அது. அவ்வழியில், வயலைக்கொடியாலாகிய தழை யுடையையும் தேமல் படர்ந்த இடைப்பகுதியையும் கொண்ட என் மகள் தன் காதலனுடன் செல்லத் துணிந்துவிட்டாள். அவள் தன் காதலனோடு உடன்போக்குச் சென்று எங்களுக்கு அயலவள் ஆகிவிட்டாள். ஆயினும், அவள் நினைவால் உண்டான துன்ப மிகுதியால் அவளைத் திசையெல்லாம் தேடி, (எங்கும் காணாது) திரும்பி வந்து வீட்டில் மயங்கிக் கிடக் கின்றேன்.

கள்ளுண்டு மகிழ்ந்த நல்ல பாணர்கள் ஒருசேர வாசிக்கும் வாச்சியங்கள் தேரோடும் வீதியெலாம் இடைவிடாது ஒலிக் கின்றன. அத்தகைய இவ்வூர் மக்கள் என்னைக் காட்டிலும் தமக்கு விருப்பமான ஒன்றைத் தொலைத்துவிட்டு ஏங்கும் நிலையில் இருக்கின்றனர்.

கருத்து

என் மகள் இங்கிருந்து சென்றுவிட்டதால், நான் படும் துயரினும் ஊரார் படும் துயரம் மிகுந்ததாய் இருக்கிறது.

விளக்கம்

என் மகள், தான் விரும்பிய ஒருவனுடன் சென்று எங்களுக்கு அயல் ஒருத்தி ஆகிவிட்டாள். அவளைத் திசையெல்லாம் தேடிக் காண இயலாது திரும்பிவிட்டேன். அவளைப் பிரிந்து மயங்கி யிருக்கும் என்னைவிட இவ்வூரார், தாம் மிகவும் விரும்பிய பொருளை இழந்துவிட்டதுபோல மிகுந்த துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர்.

சொற்பொருள்

1. பசும் பழம் - பசிய பழங்கள் (தொங்கும்); பலவின் - பலா மரங்கள் நிறைந்த; வெம்பி - வறண்டு.
2. விசும்பு கண்அழிய - மேகம் வானத்தில் இல்லாது போக.
3. கயம் கண்அற்ற - குளங்கள் நீரற்று வறண்டுவிட; வைப்பு - இடங்கள்.

4. நாறு உயிர் - பெருமூச்சுத் தோன்ற; மடப்பிடி - இளைய யானை; வேறு நாட்டு - ஓர் ஊரில் விழா முடிந்ததும் வேறு நாடுகளில் (நடைபெறும்).
5. விழவுப் படர் - விழாவினை நினைத்து (செல்லும்); மள்ளரின் - பாணர்களைப் போல; முழவு எடுத்து உயரி - முழவுகளை எடுத்து உயர்த்திக்கொண்டு.
6. அதர்ப்படுத்த - வழிப்படுத்திச் சென்ற; கவாஅன் - பக்க மலை.
7. வெவ்வரை - வெம்மையான மலை; அத்தம் - வழி.
8. வயலை - வயலைக்கொடி (யால் ஆகிய); அம்பிணையல் - அழகிய தழையுடை; வார்ந்த - தொங்குகின்ற; கவாஅன் - தொடை.
9. திதலை - தேமல்; குறுமகள் - இளைய மகள்; அவனொடு - தன் காதலனுடன்.
10. பிறள் ஆகிய அளவை - எங்கட்குப் பிறள் ஒருத்தியாய் ஆய்விட்டபோது.
11. படர் - படர்ந்து; மலி - மிகுந்த; எவ்வம் - துன்பம்; மாதிரம் - திசை; துழைஇ - தேடி.
12. மனை மருண்டு இருந்த - மனையிலே இருந்து மயங்கியிருந்த; நனை மகிழ் - கள்ளின் களிப்பினைக் கொண்ட.
13. நன்னராளர் - நல்ல பாணர்கள்; கூடுகொள் - ஒன்றுகூடி ஒலிக்கும்; இன்இயம் - இனிய வாச்சியங்கள்.
14. தேர்ஊர் - தேர் ஓடுகின்ற; ததும்பும் - ஒலிக்கும்.
15. தன்வீழ்வு உறு பொருளே - தனது விருப்பமிக்கதொரு பொருளை.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 49 **வண்ணப்புறக் கந்தரத்தனார்**

திணை : பாலை

கூற்று

உடன்போகிய தலைமகளை நினைந்து செவிலித்தாய் மனையின்கண் மயங்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை உடன்போக்கில் அவள் உறவினர் அறியாவண்ணம் அழைத்துச் சென்றான். அதனை அறிந்த செவிலித்தாய் தலைவியை நினைந்து அன்பால் மனம் உருகிக் கூறியது.

'கிளியும், பந்தும், கழங்கும், வெய்யோள்
அளியும், அன்பும், சாயலும், இயல்பும்,
முன்நாள் போலாள், இறீஇயர், என்உயிர்',என,
கொடுந்தொடைக் குழவியொடு வயின்மரத்து யாத்த
கடுங்கண் கறவையின் சிறுபுறம் நோக்கி,
குறுகு வந்து குவவுநுதல் நீவி,
மெல்லெனத் தழீஇயினே னாக, என்மகள்
நன்னர் ஆகத்து இடைமுலை வியர்ப்ப,
பல்கால் முயங்கினள் மன்னே! அன்னோ!
விறல்மிகு நெடுந்தகை பலபா ராட்டி,
வறன்நிழல் அசைஇ, வான்புலந்து வருந்திய
மடமான் அசாஇனம் திரங்குமரல் சுவைக்கும்
காடுஉடன் கழிதல் அறியின் – தந்தை
அல்குபதம் மிகுத்த கடியுடை வியல்நகர்,
செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போல,
கோதை ஆயமொடு ஓரை தழீஇ,
தோடுஅமை அரிச்சிலம்பு ஒலிப்ப,அவள்
ஆடுவழி ஆடுவழி, அகலேன் மன்னே!

தெளிவுரை

கிளியையும் பந்தையும் கழங்கையும் விரும்பியிருக்கும் என் மகளின் அருளும் அன்பும் சாயலும் இயல்பும் முன்புபோல இல்லாதிருந்தபோது, அவள் செயலை அறிந்துகொள்ளா திருந்துவிட்ட என் உயிர் நீங்கட்டும்.

வளைந்த தொடையினைக் கொண்ட இளங்கன்றுடன் மரத்தில் கட்டப்பட்டு அடிக்கடி தன் கன்றைப் பார்த்திருக்கும் பசுவைப் போல, விருப்புடன் மகள் முதுகைப் பார்த்தேன். அருகே சென்று வளைந்த அவள் நெற்றியைத் தடவி, மெல்ல அவளைத் தழுவியும் கொண்டேன். என் மகளும் தன் மார்பகத்து முலைகளிடையே வியர்வை உண்டாகுமாறு என்னைப் பல முறையும் நன்கு தழுவிக்கொண்டாள். (அப்போது அவள் குறிப்பு இன்னதென அறிய இயலாதவளாயினேன்.)

(மழை பெய்யாமையால்) மேகத்தை வெறுத்து, வருந்தித் தளர்ந்த இளைய மான்கூட்டம், வற்றிய மரல் செடியை உண்ணுகின்ற காடு அது. அக்காட்டின் வழியே, வலிமை மிக்க தலைவன் அவளைப் பலபடப் பாராட்டி, உலர்ந்த நிழலிலே தங்கி உடன் அழைத்துச் சென்றுவிட்டான். இதனை நான் முன்பே அறியாதவளாயினேன்.

அறிந்திருப்பின், உணவு நிறைந்ததும் மிக்க காவலுடையதுமான அவள் தந்தையின் பெரிய வீட்டில், அவள் செல்லும் இடந்தோறும் உடம்பின் நிழலைப் போலப் பின்தொடர்ந்து சென்றிருப்பேன்; மாலையணிந்த தோழியர் குழாத்தொடு, தொகுதியாய் அமைந்த பரல்களைக் கொண்ட சிலம்பு ஒலிக்குமாறு அவள் விளையாடிய இடந்தோறும் அகலாது இருந்திருப்பேன். (இனி என் செய்வேன்?)

கருத்து

மகள் எண்ணத்தை முன்பே அறிந்திருந்தேனாயின் அவளைப் போக விடாமல் தடுத்திருப்பேன்.

விளக்கம்

என் மகள், தன் இயல்பில் முன்புபோல இல்லை. நான் ஒருமுறை அவள் நுதலை நீவித் தழுவிக்கொண்டேன்; அவளோ தன் மார்பு வியர்க்க என்னைப் பலமுறையும் தழுவிக் கொண்டாள். அதன் பொருளை அப்போது அறியாதவளாயினேன். இப்போது அவளோ வலிமைமிக்க தலைவனுடன் காட்டுவழியே சென்றுவிட்டாள். அவள் எண்ணத்தை முன்னரே அறிந்திருப்பின் அவளை நிழலைப் போலத் தொடர்ந்து வெளியேற விடாமல் தடுத்திருப்பேன். அறியாதிருந்துவிட்டேன்.

சொற்பொருள்

1. கழங்கு - கழற்சிக்காய்; வெய்யோள் - விரும்பத்தக்கவள்.
2. அளி - அருள்; சாயல் - மென்மை; இயல்பு - செயல்.
3. இறீஇயர் - கழியட்டும், நீங்கட்டும்.
4. கொடுந்தொடை - வளைந்த தொடை; குழவி - கன்று; வயின் மரம் - மரம் வயின் - மரத்திடத்தே; யாத்த - கட்டப்பெற்ற.
5. கறவை - பசு; கடுங்கண் - விரைந்து பார்க்கின்ற; சிறுபுறம் - முதுகு.

6. குறுகு வந்து - அருகே வந்து; குவவு நுதல் - வளைந்த நெற்றி.
7. தழீஇயினேன் - தழுவினேன்.
8. நன்னர் - நன்கு; ஆகம் - மார்பு.
9. பல்கால் - பல முறை; முயங்கினள் - தழுவினாள்.
10. விறல் - வலிமை; நெடுந்தகை - பெருந்தகையாகிய தலைவன்.
11. வறன் நிழல் - உலர்ந்த நிழல்; அசைஇ - தங்கி; வான்புலந்து - மேகத்தை வெறுத்து.
12. மடமான் - இளைய மான்; அசாஇனம் - தளர்வுற்ற கூட்டம்; திரங்கு மரல் - வற்றிய மரல் செடி; சுவைக்கும் - சுவைத்துப் பார்க்கும்.
13. காடு உடன்கழிதல் - காட்டுவழியில் உடன்போக்குச் செல்லுதல்.
14. அல்குபதம் - இட்டு வைத்த உணவு; கடியுடை - காவல் மிகுந்த; வியல்நகர் - அகன்ற வீடு.
15. மெய்ந்நிழல் - உடம்பின் நிழல்.
16. கோதை - பூமாலை (தலைமாலை)யைக் கொண்ட; ஓரை - மகளிர் விளையாட்டு; தழீஇ - மேற்கொண்டு.
17. தோடு அமை - தொகுதி வாய்ந்த; அரிச்சிலம்பு - பரல்களைக் கொண்ட காற்சிலம்பு.
18. ஆடுவழி - விளையாடும் இடந்தோறும்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 63 **கருவூர்க் கண்ணம்புல்லனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் புணர்ந்துடன் செல்லச் செவிலி தன் மகளுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டதை அறிந்த செவிலி, தலைவிக்குத் தோழியாகிய தன் மகளுடன் உரையாடியது.

கேளாய்; வாழியோ! மகளை!நின் தோழி,
திருநகர் வரைப்பகம் புலம்ப அவனொடு
பெருமலை இறந்தது நோவேன்; நோவல்—
கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி,

முடங்குதாள் உதைத்த பொலங்கெழு பூழி
பெரும்புலர் விடியல் விரிந்து,வெயில் எறிப்ப,
கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல்
சிறுபுன் பெடையொடு குடையும் ஆங்கண்,
அஞ்சுவரத் தகுந கானம் நீந்திக்
கன்றுகா ணாது,புன் கண்ண, செவிசாய்த்து,
மன்றுநிறை பைதல் கூர, பலஉடன்
கறவை தந்த கடுங்கால் மறவர்
கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ,
முதுவாய்ப் பெண்டின் செதுகால் குரம்பை,
மடமயில் அன்னஎன் நடைமெலி பேதை
தோள்துணை யாகத் துயிற்றத் துஞ்சாள்,
'வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கண்
சேக்கோள் அறையும் தண்ணுமை
கேட்குநள் கொல்'எனக் கலுழும்என் நெஞ்சே.

தெளிவுரை

மகளே! வாழ்க! நான் சொல்வதைக் கேள்.

உன் தோழி, அழகிய இவ்வீடு தனிமையுறும்படி தன் தலைவனுடன் பெரிய மலைகளைக் கடந்து சென்றுவிட்டாள். அதற்காக நான் வருந்தவில்லை. (பின் எதற்காக வருந்துகிறேன் அறிவாயா?)

அவள் செல்லும் வழியில் இருள் நீங்கிப் புலர்கின்ற விடியற் காலத்தில், அஞ்சா யானை தன் கையினைத் தரையில் சேர்த்து, அந்த இடத்தைத் தன் வளைந்த காலால் உதைத்துப் பொன் போலும் துகள்கள் எழுகின்ற புழுதியை உண்டாக்கும். கரிய மாலை போன்ற கழுத்தினைக் கொண்ட சிவந்த குறும்பூழ்ச் சேவல், தன் சிறிய பெடையுடன் அப்புழுதியைக் கிளறிக் குடையும். அத்தகைய அச்சந்தரும் காட்டினைக் கடந்து அவள் தன் தலைவனுடன் சென்றுள்ளாள்.

தத்தம் கன்றுகளைக் காணப்பெறாது பொலிவிழந்த கண் களுடன் செவிகளைச் சாய்த்துப் பசுக்கள் துன்பமுறுகின்றன. அத்தகைய பசுக்கள் செறிய மந்தையாகப் பலவற்றையும் ஒருங்கே

கொண்டுவந்து மன்றினுள் அடைத்த மறவர்களது ஆரவாரம் மிகுந்த சிற்றூரில் இரவில் இருவரும் தங்குவர்.

முதுமை வாய்ந்த பெண்டிர் வாழும் குடிசையில், இளைய மயிலை ஒத்த நடையினைக்கொண்ட என் பேதை மகள், தலைவன் தன் தோளில் அணைத்துத் துயிலச்செய்யவும் துயில மாட்டாள். வேட்டையாடும் கள்வர், ஏறுகளைக் கைப்பற்று வதற்காக, பறைகளை அடித்து உண்டாக்கும் ஒலி முழக்கத்தைக் கேட்டு அஞ்சி அழுவாள். இவற்றை நினைத்து அழுகின்ற என் நெஞ்சினைக் குறித்தே நான் வருந்துகின்றேன்.

கருத்து

மகள் சென்றதற்காக அழவில்லை; வழியில் நடைபெறும் செயல்களைக் கண்டு அவள் அஞ்சுவாளே என்பதற்கே வருந்துகிறேன்.

விளக்கம்

மகள் சென்றுவிட்டாளே என்பதற்காக நான் வருந்தவில்லை. செல்லும் வழியில், இரவில், ஒரு குடிசையில் தன் துணைவன் தன்னைத் தோளிலே அணைத்துத் தூங்கவைக்கவும் தூங்காது, ஏறுகளைக் கைப்பற்றுவதற்காகக் கள்வர் முழக்கும் பறை ஒலியைக் கேட்டு அஞ்சி அழுவாளே என்பதற்காகவே நான் வருந்துகிறேன்.

சொற்பொருள்

1. மகளை - மகளே!
2. திருநகர் - அழகிய வீடு; வரைப்பகம் - இடமெல்லாம்; புலம்ப - தனிமையுற.
3. இறந்தது - சென்றதற்காக; நோவேன் - வருந்தவில்லை.
4. கடுங்கண் - அஞ்சாமை வாய்ந்த; நெடுங்கை - நீண்ட துதிக்கை; சேர்த்தி - அணைத்து.
5. முடங்குதாள் - வளைந்த காலால்; உதைத்த - உதைத்து உண்டாக்கிய; பொலம்கெழு பூழி - பொன் போலும் துகள் நிறைந்த புழுதி.
6. பெரும் புலர் விடியல் - பெரிய இருள் புலர்கின்ற விடியற்காலத்தில்; எறிப்ப - எரிக்க.

7. கருந்தார் மிடற்ற - கரிய மாலை போன்ற கழுத்தினைக் கொண்ட; செம்பூழ்ச் சேவல் - சிவந்த குறும்பூழ்ச் சேவல்.
8. குடையும் - குடைகின்ற; ஆங்கண் - அவ்விடத்தில்.
9. அஞ்சுவரத் தகுந - அச்சமுறத் தகுவதாகிய; நீந்தி - கடந்து.
10. புன்கண்ண - பொலிவற்ற கண்ணினவாய்.
11. மன்றுநிறை - மன்றினுள்ளே நெருக்கமாய் நிறைந்ததால்; பைதல் கூர - துன்பம் மிக.
12. மறவர் - வெட்சி மறவரது.
13. எல்லியின் - இரவில்; அசைஇ - தங்கி.
14. முதுவாய்ப் பெண்டின் - முதுமையுற்ற பெண்ணின்; செதுகால் குரம்பை - பட்டுப்போன காலினைக் கொண்ட குடில்.
15. நடைமெலி - நடை சோர்ந்த; பேதை - என் மகள்.
17. வேட்டக் கள்வர் - வேட்டையாடும் கள்வர்; விசியுறு - வாரினை இழுத்துக் கட்டிய.
18. சேக்கோள் - ஏறுகளைக் கவரும்போது; அறையும் - அடிக்கும்.
19. கலுழும் - வருந்தும்.

நற்றாய் கூற்று

அகநானூறு 203 **கபிலர்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

உறவினர் அறியாமல் தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள். அவளை இழந்த தாய் வருந்திக் கூறியது.

'உவக்குநள் ஆயினும், உடலுநள் ஆயினும்,
யாய்அறிந்து உணர்க' என்னார், தீவாய்
அலர்வினை மேவல் அம்பல் பெண்டிர்,
'இன்னள் இனையள்நின் மகள்'எனப், பல்நாள்
எனக்குவந்து உரைப்பவும், தனக்குஉரைப்பு அறியேன்
'நாணுவள் இவள்'என, நனிகரந்து உறையும்
யான்இவ் வறுமனை ஒழிய, தானே,
'அன்னை அறியின், இவண்உறை வாழ்க்கை,

எனக்குஎளிது ஆகல் இல்'எனக் கழற்கால்
மின்ஒளிர் நெடுவேல் இளையோன் முன்னுற,
பல்மலை அருஞ்சுரம் போகிய தனக்கு,யான்
அன்னேன் அன்மை நன்வா யாக,
மான்அதர் மயங்கிய மலைமுதல் சிறுநெறி
வெய்துஇடை யுறாஅது எய்தி முன்னர்ப்
புல்லென் மாமலைப் புலம்புகொள் சீறூர்,
செல்விருந்து ஆற்றித் துச்சில் இருத்த,
நுனைகுழைத்து அலமரும் நொச்சி
மனைகெழு பெண்டுயான் ஆகுக மன்னே!

தெளிவுரை

பிறரைப் பழி சொல்வதையே தொழிலாய்க் கொண்ட புறங்கூறும் மகளிர், மகிழ்ந்தாலும் மாறுபட்டுச் சினந்தாலும், 'மகள் ஒழுக்கத்தைத் தாயே அறிந்துகொள்ளட்டும்' என்று இராது, 'உன் மகள் இப்படிப்பட்டவள்; இன்னது செய்தாள்' என்று பல நாளும் என்னிடம் வந்து கூறினர். நான் அதனைக் கேட்டுக் கொண்டேனே தவிர, என் மகள் நாணுவாள் என்று கருதி அவளிடம் இதுபற்றி ஒரு சொல்கூடக் கூறாது மறைத்தேன். அதன் விளைவு, இன்று அவள் இல்லாது வெறுமையுற்றுள்ள இவ்வீட்டில் வருந்தியிருக்கிறேன்.

என் மகள், அன்னை அறிந்தால் தான் காதலனோடு வாழும் களவு வாழ்க்கை அரிதாகிவிடும் என்று எண்ணினாள் போலும்! அதனால் காலில் கழலும், கையில் ஒளி பொருந்திய வேலும் உடைய இளைஞன் ஒருவன் முன்னே வழிகாட்டிச் செல்ல, பல மலைகளைக் கொண்ட கடத்தற்கரிய காட்டுவழியில் சென்று விட்டாள்.

நான், அவள் காதல் வாழ்க்கையை விரும்பாதவள் அல்லள் என்னும் உண்மையினை அவள் அறிய வேண்டும். அதற்காக, விலங்குகள் நடமாடும் வழிகள் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கும் மலையடிவாரத்துச் சிறுவழியில், இடையில் இடையூறுகள் ஏற்படாது அவர்களுக்கு முன்பே நான் அங்குப் போய்ச் சேரவேண்டும். பொலிவில்லாது தனித்து இருக்கும் மலையைச் சார்ந்துள்ள சிற்றூரில் அவர்களை விருந்தினராய்

வரவேற்று உண்பித்துத் தங்குமிடமும் தந்து உதவ வேண்டும். அதற்காக, நுனிகள் தளிர்த்துக் காற்றில் அசைந்தாடும் நொச்சி மரம் சூழ்ந்த ஒரு மனைக்குரிய பெண்ணாக நான் ஆகவேண்டும்.

கருத்து

நான் அவள் காதலுக்குத் தடையானவள் அல்லள் என்பதை அவளுக்கு எவ்வாறு உணர்த்துவேன்?

விளக்கம்

அம்பல் கூறும் பெண்டிர் என் மகளைப் பற்றிக் கூறிய பழிச் சொற்களை அவள் அறிந்தால் நாணுவாள் என அவளிடம் சொல்லாது மறைத்தேன். அவளோ என்னைத் தனியே விட்டுக் காளை ஒருவனுடன் காட்டுவழியில் சென்றுவிட்டாள். நான் அவள் காதலுக்குத் தடையானவள் அல்லள் என்பதை அவள் உணர வேண்டும். அவர்கள் செல்லும் வழியில் அவர்களுக்கு முன்னரே சென்று, அங்கு ஒரு வீட்டுப்பெண்ணாய் இருந்து, அவர்களை வரவேற்று, உண்ணச்செய்து, தங்குமிடமும் தந்துதவ வேண்டும். இப்படியும் எனக்கு ஒரு வாய்ப்புக் கிட்டுமா? (கிட்டாதே.)

சொற்பொருள்

1. உவக்குநள் - உவப்பு அடைவாள்; உடலுநள் - மாறுபடுவாள்.
2. என்னார் - என்று கருதார்; தீவாய் - கொடிய வாயால்.
3. அலர்வினை மேவல் - பழிச்சொல் கூறும் செயலையே மேற்கொண்டுள்ள; அம்பல் பெண்டிர் - புறம் கூறும் பெண்கள்.
4. இன்னள் - இன்ன தன்மையள்.
5. தனக்கு - என் மகளுக்கு.
6. நனிகரந்து - மிகவும் மறைத்து; உறையும் - ஒழுகினேன்.
7. வறுமனை - வறிய (மகளில்லாத) மனையில்; ஒழிய - தனித்திருக்க.
8. இவண் உறை வாழ்க்கை - இங்குக் களவு நெறியில் கூடியுறையும் வாழ்க்கை.
9. கழற்கால் - வீரக்கழல் அணிந்த கால்.
10. மின்ஒளிர் - மின்னல்போல ஒளிவிடும்; முன்னுற - முன்னே செல்ல.
12. அன்னேன் அன்மை - அத்தன்மையினள் அல்லேன்; நன்வாயாக - உண்மையெனத் தோன்றுமாறு.

13. மான் - விலங்கு; மயங்கிய - பின்னிக் கிடக்கும்; மலைமுதல் - மலை அடியில்.
14. வெய்து இடையுறாஅது - இடையே தீங்கு உண்டாகாதவாறு; எய்தி முன்னர் - முன்னரே சென்று சேர்ந்து.
15. புல் என் - பொலிவற்று இருக்கும்; புலம்புகொள் - தனிமை கொண்ட.
16. ஆற்றி - உண்பித்து; துச்சில் இருத்த - தங்குமிடத்தில் இருக்கச்செய்ய.
17. நுனை குழைத்து - முனைகள் தளிர்க்கப்பெற்று; அலமரும் - அசைந்திடும்.
18. பெண்டு - பெண்.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 379 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போகியவழித் தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட நற்றாய், 'அதனை முன்னே அறிவித்து, நாம் மணம் புணர்த்த ஒழுகாது போயினள்' என நொந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி உடன்போக்கில் சென்றுவிட்டாள். அப்போது நற்றாயிடம் தோழி, களவை வெளிப்படுத்தி அறத்தொடு நின்றாள். "அச்செய்தியை முன்னரே தெரிவித்து, தலைவியைத் தலைவனுக்கு நாமே திருமணம் செய்துவைக்க உதவாமல் தோழி தவறிவிட்டாள்" என்று அவளை நொந்து நற்றாய் சொல்லியது.

தன்அமர் ஆயமொடு நன்மண நுகர்ச்சியில்
இனிதுஆம் கொல்லோ தனக்கே பனிவரை
இனக்களிறு வழங்குஞ் சோலை
வயக்குறு வெள்வேல் அவற்புணர்ந்து செலவே.

தெளிவுரை

யானைக் கூட்டம் திரியும் குளிர்ச்சி பொருந்திய சோலை வழியே, ஒளி மிக்க வேலேந்திய தன் காதலனோடு சேர்ந்து செல்லுவது, தான் விரும்பும் தோழியர் சூழ்ந்திருக்க நாம் செய்து வைக்கும் திருமணத்தால் பெறும் இன்பத்தைக் காட்டிலும் தலைவிக்கு இனியதாய்விட்டது போலும்!

கருத்து

நாம் நடத்துவிக்கும் திருமண இன்பத்தைவிட, தன்னை விரும்பியவனுடன் சேர்ந்து செல்லுதல் அவளுக்கு இனியதாயிற்றோ?

சொற்பொருள்

1. தன்அமர் - தன்னால் விரும்பப்பட்ட; ஆயம் - தோழியர் கூட்டம்; நன் மணம் - பெற்றோர் செய்து வைக்கும் திருமணம்; நுகர்ச்சி - அனுபவித்தல்.
2. கொல்லோ? - ஐய வினா; தனக்கு - நம் மகளுக்கு; பனிவரை - குளிர்ச்சி பொருந்திய மலை.
3. இனக்களிறு - யானைக்கூட்டம்; வழங்கும் - திரியும்.
4. வயக்குறு - விளக்கம் மிக்க; வெள்வேல் - பளபளப்பான வேல்; அவன் - தலைவன்; புணர்ந்து - கூடி; செலவு - செல்லுதல்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 263 **கருவூர்க் கண்ணம்பாளனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை அவள் வீட்டார் அறியாமல் தலைவன் அழைத்துச் சென்றான், அதனை உணர்ந்த செவிலித்தாய் ஆற்றாமையால் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

தயங்குதிரைப் பெருங்கடல், உலகுதொழத் தோன்றி,
வயங்குகதிர் விரிந்த, உருகெழு மண்டிலம்
கயம்கண் வறப்பப் பாஅய், நல்நிலம்
பயன்கெடத் திருகிய பைதுஅறு காலை,
வேறுபல் கவலைய வெருவரு வியன்காட்டு,
ஆறுசெல் வம்பலர் வருதிறம் காண்மார்,
வில்வல் ஆடவர் மேல்ஆள் ஒற்றி,
நீடுநிலை யாஅத்துக் கோடுகொள் அருஞ்சுரம்
கொண்டனன் கழிந்த வன்கண் காளைக்கு,
அவள்துணிவு அறிந்தனென் ஆயின், அன்னோ!
ஒளிறுவேல் கோதை ஓம்பிக் காக்கும்
வஞ்சி அன்னஎன் வளநகர் விளங்க,
இனிதினிற் புணர்க்குவென் மன்னோ – துனிஇன்று
திருநுதல் பொலிந்தஎன் பேதை
வருமுலை முற்றத்து ஏமுறு துயிலே!

தெளிவுரை

கதிர்கள் விரியப்பெற்று அச்சம் தரும் ஞாயிறு, உலக மக்கள் யாவரும் தன்னைத் தொழுது போற்றுமாறு, அசையும் அலை களைக் கொண்ட பெரிய கடலில் தோன்றியது; அது குளங்களில் நீர் வற்றிப் போகுமாறும், நல்ல வயல்களின் வளமெல்லாம் கெட்டொழியுமாறும் மிகுந்த வெப்பத்தைப் பரப்பியது.

பசுமை நீங்கிய அத்தகைய வேனிற்காலத்தில் ஆண்மகன் ஒருவன் என் மகளைப் பல்வேறாய்ப் பிரியும் வழிகளைக் கொண்ட, அச்சம் தருகின்ற காட்டுவழியில் அழைத்துச் சென் றுள்ளான். அக்காட்டில் வழிப்பறி கொள்ளையர், தொலைவில் வரும் புதிய பயணிகளைக் காணுவதற்காக உயரமான யா மரத்தின் உயர்ந்த கிளையில் அமர்ந்திருப்பர். (இத்தகைய கொடுமையான வழியில் என் மகள் சென்றுள்ளாள்.)

என் மகள் அந்த ஆண்மகனிடம் கொண்ட அன்பின் உறுதி எனக்கு முன்னமே தெரிந்திருக்குமாயின், ஒளி வீசும் வேலை யுடைய சேர மன்னன் பாதுகாக்கும் வஞ்சி நகரைப் போன்ற

வளம் பொருந்திய என் மனையிலேயே சிறப்புமிக, வெறுப்பு ஏதுமில்லாமல் அழகிய பொலிவு பெற்றுள்ள நெற்றியைக் கொண்ட என் மகளின் வளர்ந்துவரும் முலைப்பரப்பில் அவள் தலைவன் இன்புற்றுத் துயிலுமாறு இனிமையாய்க் கூட்டி வைத்திருப்பேனே! என் மகளுக்குத் திருமணம் செய்து களித்திருப்பேன். அந்தோ, இப்போது அஃது இயலாததாயிற்றே! நான் என் செய்வேன்?

கருத்து

முன்னரே தெரிந்திருந்தால் நானே கூட்டி வைத்திருப்பேனே!

விளக்கம்

ஞாயிறு சுட்டெரிக்கும் பசுமையற்ற வேனிற்காலத்தில் என் மகளைக் காட்டுவழியே அழைத்துச் சென்ற காளையிடம் அவளுக்கு இவ்வளவு காதற்பிடிப்பு உண்டென்பதை நான் முன்னரே அறிந்திருப்பேனாயின், என் மனையிலேயே அவர்களை இணைத்து வைத்திருப்பேனே! அஃது இப்போது இயலாததாயிற்றே!

சொற்பொருள்

1. தயங்குதிரை - அசையும் அலை.
2. வயங்கு கதிர் - விளங்கும் கதிர்கள்; உருகெழு மண்டிலம் - அச்சம் பொருந்திய ஞாயிற்று மண்டிலம்.
3. கயம் கண் வறப்ப - குளங்கள் தம்மிடத்துள்ள நீர் வற்றிப்போகுமாறு.
4. பயன் கெட - வளம் கெடுமாறு; திருகிய - கெட்டொழிய; பைது அறு காலை - பசுமையற்ற வேனிற்காலத்தே.
5. வேறு பல் கவலைய - பல்வேறாய்ப் பிரியும் வழிகளைக் கொண்ட; வெருவரு - அச்சம் தருகின்ற; வியன்காடு - பெரிய காடு.
6. வம்பலர் - புதியவர்; காண்மார் - காணும்பொருட்டு.
7. மேல்ஆள் ஒற்றி - மேலிடத்தே மறைந்து.
8. நீடுநிலை - நீண்டு நிலைபெற்ற; யாஅத்து - யா மரத்தினது; கோடு கொள் - கிளைகளில் அமர்ந்திருப்பர்.
9. கொண்டனன் கழிந்த - (என் மகளை) உடன் கொண்டு போன; வன்கண் - திண்ணியனாகிய.
10. துணிவு - அன்பின் உறுதி; அறிந்தனென் - அறிந்திருப்பேன்.
11. கோதை - சேர மன்னன்; ஓம்பிக் காக்கும் - பாதுகாக்கும்.

12. வஞ்சி - வஞ்சி நகரம் (சேரர் தலைநகர்); வளநகர் - வளம் பொருந்திய வீடு; விளங்க - சிறப்புற்று விளங்க.
13. இனிதினின் - இனிமையுற; புணர்க்குவென் - கூட்டி வைத் திருப்பேன்; துனி இன்று - வெறுப்பின்றி.
14. என் பேதை - என் மகள்.
15. முலைமுற்றத்து - முலைப்பரப்பில்; ஏம் - இன்பம் (ஏமுறு - ஏம் + உறு).

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 371 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் புணர்ந்துடன் போகிய வழி நற்றாய், 'உடன்போக்கு அறநெறி' என்று மகிழ்ந்து கூறி, அங்ஙனம் கூட்டிய நல்வினையைத் தன் நெஞ்சிற்கு விளக்கிப் புலம்பியது.

கூற்று விளக்கம்

தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள். ஈன்ற தாய், 'உடன்போக்கு அறநெறி' என்று மகிழ்ந்து கூறி, அங்ஙனம் சேர்த்து வைத்த நல்வினையைத் தன் நெஞ்சிற்கு விளக்கிப் புலம்பியது.

மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும்
உயர்நெடும் குன்றம் படுமழை தலைஇச்
சுரம்நனி இனிய ஆகுக தில்ல;
அறநெறி இதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதல் குறுமகள் போகிய சுரனே!

தெளிவுரை

பிறைபோலும் நெற்றியைக் கொண்ட இளமைத் தன்மை கொண்ட என் மகள், 'உடன்போக்கு அறநெறியே' என ஐயம் திரிபற உணர்ந்து, தலைவனோடு பாலை நில வழியே சென் றுள்ளாள். மறவர்கள் கொட்டும் பறைமுழக்கிற்கு ஏற்ப மயில்கள் ஆடும் உயர்ந்த மலைகளில் படியும் மேகங்கள் மழை பொழிய, அவள் சென்றுள்ள வழி மிகவும் இனிமையுடையதாகட்டும்.

கருத்து

மகளின் உடன்போக்கு அறந்தலைப்பட்டதே. அவள் செல்லும் பாலை நில வழியில் மழை பொழிந்து, நிலம் குளிர்ந்து அவள் நடந்து செல்ல இனியதாகட்டும்.

குறிப்பு

மள்ளர் கொட்டிற்கு ஏற்ப மயில் ஆடும் என்பதால், தலைவன் கருத்தை ஏற்று அதன்படி நடக்கும் கற்புடையவள் தலைவி என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. மள்ளர் - காட்டில் வாழும் மறவர்; கொட்டின் - பறையை முழக்கினால்; மஞ்ஞை - மயில்; ஆலும் - ஆடும்.
2. படுமழை - படியும் மேகம்; தலைஇ - மழை பொழிந்து.
3. சுரம் - பாலை நிலம்; நனி - மிகவும்; தில்ல - அசைச்சொல்.
4. இது - இவ்வுடன்போக்கு; தெளிந்த - ஐயம் திரிபற உணர்ந்த.
5. சுரன் - காட்டுவழி.

செவிலித்தாய் கூற்று

குறுந்தொகை 378 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலி தெய்வத்திற்குப் பராயது. (பரவுதல் - வேண்டுதல்)

கூற்று விளக்கம்

தன் மகள் தலைவனோடு சென்றதை அறிந்த செவிலி, 'என் மகள் செல்லும் வழி அவளுக்கு இன்பம் நல்கும்படி அருள்க' எனத் தெய்வத்தை வேண்டியது.

ஞாயிறு காணாத மாண்நிழற் படீஇ,
மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்,
தண்மழை தலைய ஆகுக – நம்நீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே!

தெளிவுரை

"நம்மைப் பிரிந்து, சுடர் வீசும் முனைகொண்ட நெடிய வேலையுடைய தன் தலைவனோடு இளமைத்தன்மையளாய நம் மகள் காட்டுவழியே சென்றுவிட்டாள். அவள் சென்ற அம் மலைச் சிறுவழி சூரிய வெப்பம் படாது அடர்ந்த நிழல் பொருந்தியதாயும், மணல் மிகவும் மெத்தெனப் பரவப்பெற்ற தாயும், குளிர்ந்த மழை பெய்வதாயும் அமைய வேண்டும்" எனச் செவிலித்தாய் தெய்வத்தினிடம் வேண்டிக்கொள்கிறாள்.

கருத்து

என் மகள் துன்புறாது இனிதே செல்ல அவள் செல்லும் வழி, நிழல் மிகுந்து மழை பொழிந்து, குளிர்ச்சியுடையதாய் அமைய வேண்டுமெனச் செவிலித்தாய் தெய்வத்தை வேண்டிக்கொள்கிறாள்.

சொற்பொருள்

1. காணாத - (வெப்பம்) படாத; மாண்நிழல் - அடர்ந்த நிழல்; படீஇ - பொருந்தி.
2. தாஅய் - பரவியதாய்.
3. தண்மழை - குளிர்ச்சி பொருந்திய மழை; தலைய ஆகுக - பெய்வது ஆகுக; நீத்து - பிரிந்து.
4. சுடர்வாய் - ஒளி வீசும் முனை; நெடுவேல் - நீண்ட வேல்; காளை - தலைவன்.
5. மடமா அரிவை - இளமையும் மாமை நிறத்தையும் கொண்ட தலைவி; போகிய - சென்ற; சுரம் - காட்டுவழி.

நற்றாய் கூற்று

அகநானூறு 15 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

வளர்த்த தாயையும், உடனுறைந்த தோழியரையும், வளர்ந்த வீட்டையும் மறந்து தலைவனுடன் உடன்போக்கில் சென்ற மகளுக்காக அவளைப் பெற்றெடுத்த தாய் வருந்திக் கூறியது.

எம்வெங் காமம் இயைவது ஆயின்,
மெய்ம்மலி பெரும்பூண், செம்மல் கோசர்
கொம்மைஅம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாகல் ஆர்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாட்டு அன்ன,
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்,
அறிந்த மாக்கட்கு ஆகுக தில்ல –
தோழி மாரும் யானும் புலம்ப,
சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி அன்ன கடியுடை வியல்நகர்ச்
செறிந்த காப்புஇகந்து, அவனொடு போகி,
அத்த இருப்பை ஆர்கழல் புதுப்பூத்
துய்த்த வாய, துகள்நிலம் பரக்க,
கொன்றை அம்சினைக் குழல்பழம் கொழுதி,
வன்கை எண்கின் வயநிரை பரக்கும்–
இன்துணைப் படர்ந்த கொள்கையொடு ஒராங்கு
குன்ற வேயின் திரண்டஎன்
மென்தோள் அஞ்ஞை சென்ற ஆறே!

தெளிவுரை

"மூங்கில்போலும் அழகிய திரண்ட தோள்களைக் கொண்ட என் மகள், யானும் தோழியரும் தனிமையில் வருந்த, முகபடாம்

அணிந்த யானையினையும், ஒளி செய்யும் பூணினையும் உடைய நன்னனின் பாழி என்னும் நகரைப் போன்று கட்டுக்காவல்மிக்க தந்தையின் பெரிய மனையினைத் துறந்து தலைவனுடன் புறப்பட்டுச் சென்றுவிட்டாள்.

(அவள் சென்ற காட்டுவழியோ) காம்பு கழன்று உதிர்ந்த இருப்பையின் புதிய பூக்களைத் தின்ற வாயுடன், நிலம் புழுதி பரக்க விரைந்தோடி, கொன்றையின் பழத்தைக் கோதும் வலிய கையினைக் கொண்ட கரடிக்கூட்டம் திரிகின்ற இடமாகும்.

"துளு நாட்டவரான கோசர் வாய்மையே பேசுபவர்; பேரணி கலன்களை அணிந்தவர்; தலைமைப்பண்பு வாய்ந்தவர்; பாகற் காயைத் தின்னுவனவும், பறை போன்ற வட்டமான தோகைக் கண்களைக் கொண்டனவுமாகிய மயில்கள் மிகுந்துள்ள துளு நாட்டில் 'வாழும்' மக்கள், பொருளின்றி வாழ்வோரைப் பேணிக் காக்கும் பண்பு வாய்ந்தவர். அச்சம் பொருந்திய வழியில் செல்லும் என் மகளுக்குத் துளு நாட்டு மக்களைப்போல் ஆங்காங்கே உள்ள ஊர் மக்கள் அறிந்து உதவ வேண்டும் என்பதே என் விருப்பம்" என நற்றாய் சொல்லுகிறாள்.

கருத்து

என் மகளுக்கு ஆங்காங்கே உள்ள ஊர் மக்கள் உதவட்டும்.

விளக்கம்

என் மகள், நானும் தோழியரும் தனிமையில் வருந்த, நன்னனின் பாழி நகர்போலும் காவல் மிகுந்த எம் வளமனையை அகன்று சென்றாள். அவள் சென்ற வழியோ, இருப்பைப் பூக்களை உண்ட வாயுடன், நிலம் புழுதி பரக்கச் சென்று, கொன்றைப் பழங்களைக் கோதும் கரடிகள் நிறைந்தது. மயில்கள் மிகுந்த சோலைகளைக் கொண்ட துளு நாட்டில் வாழ்பவர், கோசர்கள். அவர்கள் பொருளின்றி வருபவரைப் பேணிக் காக்கும் பண்பு கொண்டவர்கள். அம்மக்களைப் போல் அச்சம் பொருந்திய வழியில் செல்லும் என் மகளுக்கு ஆங்காங்கே உள்ள ஊர்மக்கள் உதவட்டும். இது கைகூட வேண்டுமென்பதே எம் விருப்பம்.

இறைச்சி

கரடி இருப்பையின் புதுப் பூவை உண்ட செருக்கோடு அதிலே நிறைவுற்றுக் கொன்றைப் பழத்தைக் கோதிச் சென்றது என்னும் தொடர்மூலம் தலைவி தலைவனுடன் கூடிய இன்பத்திலே நிறைவு பெற்றவளாய்ச் செருக்குமிகக் கொண்டு, கூடியாடிய தோழியரையும், பெற்று வளர்த்த தாயையும் புறக்கணித்துப் போயினள் என்னும் பொருள் பெறப்படுகிறது.

குறிப்பு

கோசர் : இவர் ஒருவகை வீரர்; துளு நாட்டினர்; மோகூர்ப் பழையன் அறங்கூறவையத்தில் இருந்தனர்; உண்மையே பேசும் உள்ளத்தினர்; புகழினைக் கொண்ட செல்வச் செருக்குள்ளவர்.

துளு நாடு புதியவர்களைக் காக்கும் பண்பு வாய்ந்தது.

நன்னன் : இவன் 'ஏழில்' என்னும் மலைக்குத் தலைவன். இவனுடைய 'பாழி' நகரம் அரிய காவலைக் கொண்டது. பழமைமிக்க வேளிர்கள் பொன்னைப் பாழிச்சிலம்பில் வைத்துப் பாதுகாத்து வந்தனர்.

சொற்பொருள்

1. எம் வெங்காமம் - மிகுந்த எம் விருப்பம்; இயைவதாயின் - கைகூடுவதென்றால்.
2. மெய்ம்மலி - உண்மை நிறைந்த; பெரும்பூண் - பெரிய அணிகளையுடைய; செம்மல் கோசர் - தலைமை கொண்ட கோசர்.
3. கொம்மை அம் பசுங்காய் - திரண்ட அழகிய பசுமையான காய்; குடுமி - தலை.
4. பாகல் - பாகற்காய்; ஆர்கை - உண்ணுதல்; பறைக் கண் - பறை போன்ற கண்களைக் கொண்ட; பீலி - தோகை.
5. தோகை - மயில்; காவின் - சோலைகளைக் கொண்ட; துளு நாட்டன்ன - துளு நாட்டினைப் போல.
6. வறுங்கை - வறுமை வாய்ந்த கை; வம்பலர் - புதியவர்; தாங்கும் - பாதுகாக்கும்; பண்பின் - பண்பினை வாய்ந்த.
7. செறிந்த சேரி - நெருங்கிய ஊர்கள்; செம்மல் - தலைமைத் தன்மைமிக்க; மூதூர் - பழமையான ஊர்.
8. அறிந்த மாக்கட்கு ஆகுக - முகமறிந்த மக்களை உடையதாகுக.

10. சூழி - முகபடாஅம் (அணிந்த); சுடர்ப்பூண் - ஒளி வீசும் அணி கலன்களை (அணிந்த); நன்னன் - நன்னன் என்பவனுடைய.
11. பாழி அன்ன - பாழி என்னும் நகரம் போல; கடியுடை - பாதுகாப்பு வாய்ந்த; வியல்நகர் - அகன்ற நகர்.
12. செறிந்த காப்பு - மிகுதியான பாதுகாப்பு; இகந்து - கடந்து, நீங்கி; அவனொடு - தலைவனொடு.
13. அத்தம் - வழியில்; இருப்பை - இருப்பை மரம்; ஆர்கழல் - பொருத்து வாய் கழன்ற.
14. துய்த்த - தின்ற; வாய - வாயைக் கொண்டதாய்; நிலம் துகள் பரக்க - நிலத்தில் புழுதி பரக்க.
15. அம்சினை - அழகிய கிளைகளிலுள்ள; குழல்பழம் - குழல்போலும் பழத்தை; கொழுதி - கோதி.
16. வன்கை - வலிய கை; எண்கு - கரடி; வயநிரை - மிகுதியான கூட்டம்; பரக்கும் - பரவியிருக்கும்.
17. இன்துணை - இனிய துணையாகிய தலைவன்; ஓராங்கு - ஒருசேர.
18. குன்ற வேயின் - குன்றத்து மூங்கில்போல.
19 மென்தோள் - மென்மையான தோள்களைக் கொண்ட; அஞ்ஞை - என் அன்னை (அஞ்ஞை - அன்னை என்பது பொருள் ஆயினும் மகளைத் தாய், 'என் அன்னை' என அன்பு பொங்கக் கூறுகிறாள்).

நற்றாய் கூற்று

அகநானூறு 195 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய நற்றாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் காதலர்க்கு இடையூறு ஏற்பட்டது. அதனால் தலைவி தலைவனுடன் சென்றுவிட்டாள். மகளைப் பிரிந்த நற்றாய் கூறியது.

'அருஞ்சுரம் இறந்தஎன் பெருந்தோள் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வரும்'என, தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி,

மனைமணல் அடுத்து, மாலை நாற்றி,
உவந்து,இனிது அயரும் என்ப; யானும்,
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
ஈன்ற நட்பிற்கு அருளான் ஆயினும்,
இன்நகை முறுவல் ஏழையைப் பல்நாள்,
கூந்தல் வாரி நுசுப்புஇவர்ந்து ஓம்பிய
நலம்புனை உதவியும் உடையன் மன்னே;
அஃதுஅறி கிற்பினோ நன்றுமன் தில்ல;
அறுவை தோயும் ஒருபெருங் குடுமி,
சிறுபை நாற்றிய பல்தலைக் கொடுங்கோல்,
ஆகுவது அறியும் முதுவாய் வேல,
கூறுக மாதோநின் கழங்கின் திட்பம்
மாறா வருபனி கழலும் கங்குலில்
ஆனாது துயரும்எம் கண்இனிது படீஇயர்,
எம்மனை முந்துறத் தருமோ?
தன்மனை உய்க்குமோ? யாதுஅவன் குறிப்பே?

தெளிவுரை

"கடத்தற்கரிய வழியினைக் கடந்து சென்றுள்ள பெருந் தோளினைக் கொண்ட என் இளம் பருவ மகள், திருந்திய வேலை ஏந்திய தன் காதலனோடு வருவாள் என்று, அவன் தாய் தன் பெரிய வீட்டு மதிலில் செம்மண் பூசி, மனை முற்றத்தே மணலைப் பரப்பி, பல இடங்களிலும் பூ மாலைகளைத் தொங்கவிட்டுத் தன் வீட்டினை அழகுபடுத்துகிறாள் என்று கூறுகின்றனர்.

2மான்போலும் பார்வையினைக் கொண்ட இளையளான என் மகளை நான் ஈன்றெடுத்ததற்காக அத்தலைவன் நன்றி பாராட் டாவிடினும், இனிய முறுவலைக் கொண்ட அவளைப் பல நாளும் இடுப்பிலே சுமந்து, கூந்தலை வாரிவிட்டு அவள் பெண்மை நலத்தைப் பேணிக் காக்கும் உதவியைச் செய்துள் ளதையேனும் அவன் நினைத்துப் பார்த்தால் நல்லது.

"குடுமியில் தலைப்பாகையைச் சுற்றி, வளைந்த கோலிலே சிறிய பை ஒன்றனைத் தொங்கவிட்டவனாய், எதிர்காலத்தில் நிகழ இருப்பதனை அறிந்து கூறும் பேரறிவு பெற்ற வேலனே!

"இரவெல்லாம் இடையறாது அழுது துன்பப்படும் என் கண்கள் இனி இனிது உறக்கம் கொள்ளுமாறு என் மகளை அவன் முதலில் எம் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வருவானா? அல்லது அவன் வீட்டிற்கு அழைத்துச் செல்வானா? அவன் எண்ணம் யாது? இவற்றுள் ஒன்றை உன் கழங்கினால் குறி பார்த்துக் கூறு!"

கருத்து

உடன்போக்கில் சென்ற மகளை, அவன், முதலில் என் வீட்டுக்கு அழைத்து வருவானா அல்லது தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வானா?

விளக்கம்

தன் மகன் என் மகளுடன் வருவாள் என அவன் தாய் தன் வீட்டை அழகு செய்வதாய்க் கூறுகின்றனர். என் மகளை நான் பெற்றதற்காக அருளாவிடினும் அவளைப் பேணிப் பெண்மை நலம் காத்தவள் என்பதையாவது அவன் அறிந்தால் நல்லது! வருவது கண்டு உரைக்கும் வேலனே! அவன் என் மகளை முதலில் என் வீட்டிற்கு அழைத்து வருவானா அல்லது தன் வீட்டிற்குக் கொண்டு செல்வானா? உன் கழங்குகளை உருட்டிப் பார்த்துச் சரியாய்ச் சொல்.

சொற்பொருள்

1. இறந்த - கடந்த.
2. விடலை - தலைவன்; தாயே - தலைவன் தாய்.
3. புனை மாண் - வேலைப்பாடமைந்த; இஞ்சி - புறச்சுவர்; பூவல் - செம்மண்; ஊட்டி - பூசி.
4. அடுத்து - பரப்பி; நாற்றி - தொங்கவிட்டு.
5. அயரும் - கோலம் செய்யும்.
6. மான்பிணை நோக்கு - பெண் மான் போலும் பார்வை; மட நல்லாள் - இளமை வாய்ந்த நல்லவள்.
7. ஈன்ற - பெற்றெடுத்த.
8. ஏழையை - பெண்ணை, தலைவியை.
9. நுசுப்பு இவர்ந்து - இடுப்பிலே சுமந்து; ஓம்பிய - பாதுகாத்த.
10. நலம் புனை - நன்மை புரியும்.
11. அறிகிற்பினோ - அறிந்தால்.

12. அறுவை - ஆடை; தோயும் - சுற்றி; ஒரு பெருங்குடுமி - ஒரு பெரிய தலைக்குடுமி.
13. சிறு பை நாற்றிய - சிறு பை தொங்கவிடப்பெற்ற; பல்தலை - பல தலையையுடைய; கொடுங்கோல் - வளைந்த கோல்.
14. ஆகுவது அறியும் - எதிர்காலத்தில் நிகழ இருப்பதனை அறிந்து கூறும்; முதுவாய் - பேரறிவு வாய்ந்த.
15. கழங்கு - கழற்சிக்காய்; திட்பம் - உறுதி.
16. மாறா - இடையறாது; வருபனி - வரும் நீருடன்; கழலும் - அழும்; கங்குலில் - இரவில்.
17. ஆனாது - அமையாது; துயரும் - துயருறும்; இனிது - நன்றே; படீஇயர் - துயிலும்பொருட்டு.
18. முந்துற - முற்பட; தருமோ? - கொண்டுவருவானா?
19. தன்மனை - தன் மனைக்கு; உய்க்குமோ - கொண்டுசெல்வானோ? அவன் குறிப்பு - அவன் உள்ளக்குறிப்பு, எண்ணம்.

நற்றாய் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 90 — **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

'தன்னும் அவனும்' என்பதனுள், 'நன்மை தீமை' என்பதனால் நற்றாய் படிமத்தாளை வினாயது.

கூற்று விளக்கம்

மகள் உடன்போக்கில் சென்றுவிட்டாள். அவளைப் பெற்றெடுத்த தாய், தன் மகளை அழைத்துச் சென்றவன் அவளைத் தன் வீட்டுக்கே கொண்டு வருவானா என, எதிர்கால நிகழ்வை உரைக்கும் தேவராட்டியை அழைத்துக் கேட்டது.

வேறாக நின்னை வினவுவேன்; தெய்வத்தால்
கூறாயோ கூறும் குணத்தினனாய் – வேறாக
என்மனைக்(கு) ஏறக் கொணருமோ எல்வளையைத்
தன்மனைக்கே உய்க்குமோ தான்.

தெளிவுரை

“தேவராட்டியே! நிமித்தம் சொல்வோர் பலருள்ளும் உன்னைச் சிறந்தவளாய்க் கருதி நான் ஒன்று கேட்பேன். அதனை உன் தெய்வத்தன்மை பொருந்திய கழங்கினால் பார்த்துச் சொல்! நல்லோர் புகழ்ந்து பேசும் நற்குணத்தினைக் கொண்டவளாய், ஒளிபொருந்திய வளையணிந்த என் மகளை உடன் கொண்டு போனவன், என் மனை சிறப்புப் பெறும்வண்ணம் திருமணம் செய்துகொள்ள என் மகளை என் மனைக்கே கொண்டு வருவானா? அல்லது தன் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப் பானா?” என நற்றாய் தேவராட்டியிடம் வினாவினாள்.

கருத்து

தேவராட்டியே! என் மகள் திருமணம் என் வீட்டில் நடக்குமா அல்லது அவள் காதலன் வீட்டில் நடக்குமா எனக் கழங்கினால் கண்டுரை.

குறிப்பு

‘தன்னும் அவனும்’ என்று தொடங்குகிற தொல்காப்பிய நூற்பாவுள் (அகம். 36), ‘தனக்கும் தலைவன் தலைவியர்க்கும் வரக் கடவ நன்மை தீமைகளை நன்றாய் ஆராய்வள்’ என்ற கருத்தின்படி இங்கு நற்றாய் படிமத்தாளாகிய தேவராட்டியிடம் வினவலாயினாள். (கழங்கு - குறி பார்க்கப் பயன்படும் கழற்சிக்காய்).

சொற்பொருள்

1. வேறாக - (நிமித்தம் சொல்வோர் பலருள்ளும் உன்னை) வேறாய்க் கொண்டு; நின்னை - உன்னை; வினவுவேன் - கேட்பேன்; தெய்வத் தால் - உன் தெய்வத் தன்மை மிக்க கழங்கினால்.
2. கூறாயோ - கூற மாட்டாயோ; கூறும் குணத்தினனாய் - உலகத்தார் புகழ்ந்து சொல்லும் நற்குணத்தினைக் கொண்டவனாய்.
3. என் மனைக்கு - என் வீட்டுக்கு; ஏற - (மணவிழாச் சிறப்பு) சேரும் வண்ணம்; கொணருமோ - கொண்டுவருவானா? (அல்லது); எல் வளையை - ஒளிமிக்க வளையலணிந்த என் மகளை!
4. தன் மனைக்கே - தன் வீட்டுக்கே; உய்க்குமோ? - கொண்டுபோய்ச் சேர்ப்பானோ?

(எல் வளையை என் மனைக்குக் கொணருமோ, தன் மனைக்கு உய்க்குமோ, கூறாய்)

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 391 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போகிய தலைமகள் மீளற்பொருட்டுத் தாய், காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்தது. (பராய்க்கடன் - வேண்டிக்கொண்டு தான் செய்யும் நேர்த்திக்கடன் இன்னது எனச் சொல்லுதல்).

கூற்று விளக்கம்

தான் அறியாவண்ணம் தலைவனுடன் சென்ற தலைவி மீள வேண்டும் என்று தாய், காகத்திடம் வேண்டிக்கொண்டு, தன் நேர்த்திக்கடன் இன்னதென்று கூறியது.

மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை!
அன்புடை மரபின்நின் கிளையோடு ஆரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ;
வெஞ்சின விறல்வேல் காளையொடு
அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே.

தெளிவுரை

தூய சிறகுகளைக் கொண்ட சிறிய கரிய காக்கையே! நீயும், அன்போடு கூடி உண்ணும் மரபுடைய உன் கூட்டமும் சேர்ந்து, வயிறார உண்ணும்படியாக, புதிய இறைச்சியைக் கலந்து ஆக்கிய புலால் உணவைப் பொன்னால் செய்த கலத்தில் தருவேன். அழகான கூந்தலைக் கொண்ட என் மகள், அவளை அழைத்துச் சென்ற வெற்றி வேலேந்திய தலைவனோடு விரைந்து திரும்பி வருமாறு கரைந்தருள்வாய்!

கருத்து

காக்கையே! அவனோடே அவளும் வருமாறு கரைக; நீயும் உன் கூட்டமும் உண்ண நிணச்சோற்றினை அளிப்பேன்.

குறிப்பு

காக்கை கரைந்தால் விருந்து வரும் என்பது நம்பிக்கை.

சொற்பொருள்

1. மறுவில் - மாசு மறுவற்ற, தூய்மையான; தூவி - சிறகு.
2. அன்புடை மரபு - (காக்கை) அன்போடு கூடி உண்ணும் மரபு; கிளை - கூட்டம், உறவு; ஆர - வயிறார.
3. பச்சூன் - புதிய இறைச்சி; பைந்நிண வல்சி - புலால் கலந்த பலி உணவு.
4. பொலம் புனை - பொன்னால் செய்யப்பெற்ற.
5. வெஞ்சின விறல்வேல் - வெவ்விய வெகுளியையும் வெற்றி வாய்ந்த வேலையும் கொண்ட.
6. அஞ்சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலைக் கொண்ட (என் மகள்); கரைந்தீம் - கரைந்தருள்க.

நற்றாய் கூற்று

அகநானூறு 35 **அம்மூவனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய நற்றாய் தெய்வத்திற்குப் பராஅயது.

கூற்று விளக்கம்

தலைவி ஒருத்தி உடன்போக்கில் சென்றுவிட்டாள். அவளைப் பெற்றெடுத்த தாய் மிகவும் வருந்தினாள்; ஆயினும், அறியாத்தேயத்தில் அவளை அழைத்துச் செல்லும் தலைவன், கடத்தற்கரிய காட்டுவழியில் அவள் வருந்தாதவாறு அழைத்துச் செல்ல வேண்டுமெனத் தன் மனத் துள்ளேயே தெய்வத்தை வணங்கி வேண்டியது.

ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளாள்,
வான்தோய் இஞ்சி நல்நகர் புலம்ப –
தனிமணி இரட்டும் தாளுடைக் கடிகை,
நுழைநுதி நெடுவேல், குறும்படை, மழவர்
முனைஆத் தந்து, முரம்பின் வீழ்த்த
வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்,
நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,

தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்குஅருங் கவலைய புலவுநாறு அருஞ்சுரம்
துணிந்து,பிறள் ஆயினள், ஆயினும் அணிந்துஅணிந்து,
ஆர்வ நெஞ்சமொடு ஆய்நலன் அளைஇத்தன்
மார்புதுணை யாகத் துயிற்றுக தில்ல
துஞ்சா முழவின் கோவல் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கால் முன்துறை,
பெண்ணைஅம் பேரியாற்று நுண்அறல் கடுக்கும்
நெறிஇருங் கதுப்பின்என் பேதைக்கு,
அறியாத் தேஎத்து ஆற்றிய துணையே!

தெளிவுரை

பெற்று வளர்த்த என்னையும் நினையாது, விண்ணளாவிய மதிலைக் கொண்ட எம் வீடு தனிமை அடையுமாறு என் மகள் காட்டுவழியில் தன் தலைவனுடன் சென்றுவிட்டாள். ஒப்பற்ற மணி மாறி மாறி ஒலிக்கின்ற கடையாணியைக் கொண்ட நீண்ட காம்பினையும் கூர்த்த முனையினையும் கொண்ட வேற்படையை ஏந்தியவராய்த் தம் பசுக்களைக் கவர்ந்து செல்லும் வெட்சி வீரர்களை வளைத்து அவரோடு போரிட்டு ஆனிரையை மீட்டனர், கரந்தை வீரர்கள். போரில் வெட்சி மறவரால் வீழ்த்தப்பட்ட கரந்தை வீரர் உடல்மீது கற்குவியல் இட்டு மூடப்பட்டது. இறந்தவர்களின் வீரத்தைப் போற்றும் வகையில் மணல்குன்றின்மேல் நடுகல் நட்டு வழிபாடு செய்ய முனைந்தனர்; அக்கல்லில் மயில்தோகைகளைச் சூட்டினர்; துடியை முழக்கினர்; நெல்லால் ஆகிய கள்ளோடு செம்மறியாட்டுக் குட்டியையும் பலி கொடுத்தனர். நடந்து செல்லுதற்கும் இயலாத, கவர்த்த வழிகளைக் கொண்ட புலால் நாற்றம் வீசும் அப்பாலைநில வழியிலே என் மகள் எம்மை மறந்து யாரோ ஒருத்திபோலச் செல்லத் துணிந்தாள்.

திருமுடிக்காரி என்பான், முழவு இடையறாது ஒலிக்கும் திருக்கோவலூருக்கு மன்னன்; நெடிய தேரினை உடையவன்; அவனுக்குரிய 'கொடுங்கால்' என்னும் ஊரில் ஓடும் 'பெண்ணை' என்னும் பேராற்றின் முன்றுறையிலுள்ள நுண்ணிய கரு மணலைப் போன்ற நெளிந்த கரிய கூந்தலைக் கொண்ட என்

மகளை, அவளை அறிந்தவர் எவருமில்லாத காட்டிலே அவள் துணைவன் அழைத்துச் சென்றுவிட்டான்.

(அழைத்துச் சென்ற அவன்) அன்பு மிகுந்த உள்ளத்துடன், அவளைப் பலகாலும் அழகுபடுத்தி, அழகிய அவள் நலனைத் துய்த்துத் துய்த்துத் தன் மார்பே துணையாய் அவளைத் துயில் விப்பானாக!

கருத்து

தெய்வமே! என் மகளை அழைத்துச்செல்லும் தலைவன் அவளை அன்புடன் பாதுகாக்க வேண்டும்.

விளக்கம்

என் மகள் என்னையும் நினையாது, இந்தப் பெரிய வீடு தனிமையடையுமாறு தன் தலைவனுடன் நடுகற்கள் உள்ள பாலை நில வழியில் சென்றுவிட்டாள். அழைத்துச் சென்றவன் அவளை அன்புடன் பாதுகாப்பானாக.

குறிப்பு

நடுகல் : களத்தில் இறந்துபட்ட வீரனின் உடம்பைப் புதைத்துவிடத்து அவன் பெயரும் பீடும் எழுதிக் கல் நடுதல் மரபு. அதனை நடுகல் என்பர். அவனை நினைவுகூரும் வகையில் பிற இடத்தில் நடுவதும் நடுகல்லே ஆகும்.

கல்லை நடுகையில் படையல், மலர், மது முதலியன படைப்பர். கல்லில் மயில்தோகையைச் சூட்டி, மாலையையும் தொங்கவிடுவர். பல வாச்சியங்கள் முழங்க விழாச் செய்தலும் மரபு.

கோவற்கோமான் : கோவல் - கோவலூர், திருக்கோவலூர். இது பெண்ணையாற்றங்கரையில் உள்ள நகரம்; இதனையாண்ட திருமுடிக்காரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; முள்ளூர்க்குத் தலைவன். சேரப் பேரரசர்க்குத் துணை நின்று, வல்வில் ஓரியைக் கொன்று, கொல்லி மலையைச் சேரர்க்கு உரிமையாக்கியவன்.

சொற்பொருள்

1. ஈன்று புறந்தந்த - பெற்றுப் பாதுகாத்த; உள்ளாள் - நினையாள்.
2. இஞ்சி - மதில்; நல்நகர் - நல்ல வீடு; புலம்ப - தனிமைப்படும்படி.

3. தனிமணி - ஒப்பற்ற மணி; இரட்டும் - ஒலிக்கும்; கடிகை - குத்துக் கோல், வேல்.
4. நுழை நுதி - கூர்மையான முனை; குறும்படை - கோட்டை; மழவர் - வீரர் (வெட்சியார்).
5. முனை - போர்முனை; ஆ - பசு; தந்து - மீட்டு; முரம்பின் - பரற் கற்கள் நிறைந்த மேட்டு நிலத்தில்; வீழ்த்த - வீழ்த்தினர்.
6. வில்ஏர் வாழ்க்கை - வில்லையே ஏராய்க்கொண்டு வாழ்க்கை நடத்தும்; விழுத் தொடை மறவர் - சிறந்த அம்பினையுடைய கரந்தை வீரர்கள்.
7. வல் ஆண் - தங்கள் வலிய ஆண்மையால் (இட்ட); பதுக்கைக் கடவுள் - சிறு திட்டையிலுள்ள தெய்வம்; பேண்மார் - வழிபடுவார்.
8. நடுகல் - நடுகல்லுக்கு; பீலி - மயில்தோகை; துடிப்படுத்து - உடுக்கையை அடித்து.
9. தோப்பிக் கள் - நெல்லாலாக்கிய கள்; துரூஉ - செம்மறி யாட்டுக்குட்டி.
10. போக்கரும் - செல்லுதற்கரிய; கவலை - கவர்த்த வழி; புலவு நாறு - புலால் நாற்றம் வீசும்; அருஞ்சுரம் - அரிய பாலை வழி.
11. துணிந்து - செல்லத் துணிந்து; பிறள் ஆயினள் - எம்மை மறந்து யாரோ ஒருத்தி போல ஆயினாள்; அணிந்து அணிந்து - (அவளைத்) தழுவித் தழுவி.
12. ஆர்வ நெஞ்சமொடு - அன்புமிக்க உள்ளத்தோடு; ஆய் நலன் - (அவளது) அழகிய நலனை; அளைஇ - துய்த்து.
13. துயிற்றுக - துயிலவைப்பானாக.
14. துஞ்சா முழவின் - முழவொலி நீங்கா; கோவல் கோமான் - திருக்கோவலூர்த் தலைவன்.
15. நெடுந்தேர் - நெடிய தேர்; காரி - திருமுடிக்காரி என்பவனின்; கொடுங்கால் முன்துறை - 'கொடுங்கால்' என்னும் ஊரின் முன் துறையில் உள்ள.
16. பெண்ணை அம் பேரியாற்று - அழகிய பெண்ணை என்ற பெரிய ஆற்றின்; நுண்அறல் - நுண்ணிய அறல் மண்; கடுக்கும் - போன்ற.
17. நெறி இருங்கதுப்பு - நெளிந்த கரிய கூந்தல்; என் பேதைக்கு - என் மகளுக்கு.
18. அறியாத் தேஎத்து - அவளை அறிவார் யாருமில்லாத நாட்டில்; ஆற்றிய - இட்டுச் செல்லுகின்ற; துணையே - துணைவனாகிய தலைவன்.

நற்றாய் கூற்று

நற்றிணை 305 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

நற்றாய் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

மகள் காதலனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டதனால் பெருந் துயரடைந்த நற்றாய் தோழியிடம், ‘நம் மகள் வெம்மையான வழியில் செல்வதால், அஞ்ச வேண்டாததற்கு அஞ்சி, மனம் புண்பட்டு, வழியிடையே தலைவன்மீது வருத்தம் கொள்வாளோ?’ என்று கூறி வருந்தியது.

வரிஅணி பந்தும், வாடிய வயலையும்,
மயில்அடி அன்ன மாக்குரல் நொச்சியும்,
கடியுடை வியல்நகர் காண்வரத் தோன்ற,
தமியே கண்டதண் டலையும் தெறுவர,
நோய்ஆ கின்றேம் மகளை!நின் தோழி,
எரிசினம் தணிந்த இலைஇல் அம்சினை
வரிப்புறப் புறவின் புலம்புகொள் தெள்விளி,
உருப்புஅவிர் அமையத்து, அமர்ப்பனள் நோக்கி,
இலங்குஇலை வெண்வேல் விடலையை
விலங்குமலை ஆர்இடை நலியும்கொல் எனவே.

தெளிவுரை

“*மகளே! உன் தலைவி விளையாடிய வரிந்து கட்டப்பட்ட அழகிய பந்து, வாடிக் கிடக்கும் வயலைக்கொடி, மயிலின் காலடி போன்ற இலையையும் கரிய பூங்கொத்தையும் கொண்ட நொச்சி மரம் ஆகியவை, காவல் பொருந்திய நம் அகன்ற மாளிகையின் எதிரே நான் (அவளில்லாமல்) தனித்துக் காணும்படி தோன்று கின்றன. மேலும், அவளில்லாது தனித்திருக்கும் சோலையும் என்னை வருத்துகின்றது. (இவையேயன்றி) அவள் செல்லும் வழியில் ஞாயிற்றின் எரிக்கும் தன்மை சற்றுத் தணிந்த மாலைப் பொழுதில், முதுகில் கோடுகளைக் கொண்ட புறாக்கள் இலை*

களற்று நிற்கும் அழகிய மரக்கிளையில் அமர்ந்தபடியே அச்சம் தரக்கூடிய முறையில் தெளிவான ஓசையை எழுப்பும். அதைக் கேட்டு, என் மகள் ஆற்றாது, சினந்த பார்வையுடன், வெற்றி வேலை ஏந்தியபடி தன்னுடன் வரும் தலைவனை உறுத்துப் பார்த்து, மலை குறுக்கிட்ட அரிய வழியில் (வினாக்கள் பல தொடுத்துத்) துன்புறுத்துவாளோ என்றும் அஞ்சுகிறேன்!" என நற்றாய், தலைவியின் தோழியிடம் கூறினாள்.

கருத்து

மகளுக்குத் தோழியே! வழியில் எம் மகள் அஞ்ச வேண்டாததற்கு அஞ்சி, வருந்தி, தலைவனை அயர்வுறச் செய்யாதிருக்க வேண்டும்.

விளக்கம்

மகளுக்குத் தோழியே! வரிப்பந்தும் வாடிய வயலையும், பூங் கொத்துக் கொண்ட நொச்சியும் என் கண் எதிரே தோன்று கின்றன. இவற்றோடு அவளில்லாது தனித்திருக்கும் சோலையும் அவள் பிரிவால் என்னை மிகவும் துன்புறுத்துகின்றது. மேலும், அவள் செல்லும் வழியில் வேனில் வெம்மையால் இலைகளின்றி உலர்ந்து நிற்கும் மரக்கிளைகளில் புறாவினம் தனித்திருந்து செய்யும் தெளிந்த ஓசையினைக் கேட்டு, வெருட்சியுற்றுப் பற்பல வினாக்களைத் தொடுத்துக் காதலனது அன்புள்ளத்தை அயர்ச்சியுறச் செய்வாளோ என்று நினைந்தும் வருந்துகிறேன். (தன்னை விரும்பி அழைத்துச் சென்றவனுக்குத் தன் மகள் துன்பம் எதுவும் தரக்கூடாது என்று தாய் நினைக்கிறாள்.)

சொற்பொருள்

1. வரி அணி பந்து - வரிந்து கட்டப்பட்ட பந்து; வயலை - வயலைக்கொடி.
2. மாக்குரல் - கரிய பூங்கொத்து; நொச்சி - நொச்சி மரம்.
3. கடியுடை - காவலுள்ள; வியல்நகர் - அகன்ற மாளிகை; காண்வர - கண் எதிரே காணும்படியாக.
4. தமியே - தனியே; தண்டலை - சோலை; தெறுவர - வருத்துதலினால்.
5. நோய் ஆகின்றே - துன்பமுண்டாகின்றது; மகளை - மகளே!

6. எரிசினம் - ஞாயிற்றின் எரிக்கும் சினம்; தணிந்த - குறைந்த (மாலைப் பொழுதில்); இலை இல் - இலைகள் உதிர்ந்த; அம் சினை - அழகிய கிளை.
7. வரிப்புறம் - கோடுகளைக் கொண்ட முதுகு (கொண்ட); புறவின் - புறாவினது; புலம்புகொள் - தனிமைத் துன்பம் தோன்றும்படி; தெள்விளி - தெளிவான ஓசையை (எழுப்பும்).
8. உருப்பு அவிர் அமையம் - வெப்பம் வீசும் பொழுது; அமர்ப்பனள் - போர் செய்யப் புகுந்தவள் (போன்ற சினத்துடன்).
9. இலங்கு இலை - இலை வடிவில் தோன்றுகின்ற; வென்வேல் - வெற்றி தரும் வேல்; விடலையை - தலைவனிடம்.
10. விலங்கு மலை ஆர்இடை - மலை குறுக்கிட்டுக் கிடக்கும் வழியில்; நலியும் கொல் - துன்புறுத்துவளோ?; எனவே - என்று.

நற்றாய் கூற்று

அகநானூறு 55 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

புணர்ந்துடன் போன தலைமகட்கு இரங்கிய தாய் தெருட்டும் அயலி லாட்டியர்க்கு உரைத்தது. (தெருட்டுதல் - தேற்றுதல்.)

கூற்று விளக்கம்

தலைவனுடன் உடன்போக்கில் சென்ற தலைவியை நினைந்து வருந்து கிறாள், தாய். அவளை அவள் அருகே நின்ற அயல்மனைப்பெண்டிர் தேற்றுகின்றனர். அவர்களைப் பார்த்துத் தாய் கூறியது.

காய்ந்துசெலற் கனலி கல்பகத் தெறுதலின்,
நீந்து குருகுஉருகும் என்றூழ் நீள்இடை,
உளிமுக வெம்பரல் அடிவருத் துறாலின்,
விளிமுறை அறியா வேய்கரி கானம்,
வயக்களிற்று அன்ன காளையொடு என்மகள்
கழிந்ததற்கு அழிந்தன்றோ இலனே! ஒழிந்துயான்
ஊதுஉலைக் குருகின் உள்உயிர்த்து, அசைஇ,
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேன், கனவ ஒண்படைக்

கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக்கு இருந்தென,
இன்னா இன்உரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்,
பெரும்பிறிது ஆகி யாங்கு, பிரிந்துஇவண்
காதல் வேண்டி, என் துறந்து
போதல் செல்லாஎன் உயிரொடு புலந்தே.

தெளிவுரை

மிகுந்த வெப்பத்துடன் வானில் இயங்கும் கதிரவன் மலையும் பிளக்குமாறு காயும். பறவைகளும் கடந்து செல்ல இயலாது வெப்பத்தால் வருத்துகின்ற பாலை வழியில் உளி போன்ற முனை கொண்ட கூர்மையான கற்கள் காலைத் துன்புறுத்தும். அவற்றைப் பொருட்படுத்தாது, மூங்கில்கள் கரிந்து நிற்கும் காட்டில், ஆண்யானை போன்ற ஆடவன் ஒருவனுடன் என் மகள் உடன்போக்கில் பிரிந்து போனதற்காக நான் வருந்த வில்லை.

அவளைப் பிரிந்ததால் நான் கொல்லன் உலைக்களத்துத் துருத்திபோலப் பெருமூச்சு விட்டு, தீயிலே வேவது போன்ற நெஞ்சுடன், கண்ணுறங்காமல் வாய் வெருவிப் புலம்பியிருக் கிறேன்.

ஒளி தங்கிய படையினைக் கொண்ட சோழன் கரிகால் வளவனோடு பெருஞ்சேரலாதன் என்னும் சேர மன்னன் வெண்ணிப்பறந்தலை என்னுமிடத்தில் போர் செய்தான். சேரலாதன், தன் மார்பிலே பட்ட வேல் ஊடுருவிச் சென்றதால் முதுகில் ஏற்பட்ட காயத்தைப் புறப்புண்பட்டதாய்க் கருதி, வெட்கப்பட்டு, போர்க்களத்திலேயே வாளொடு வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தனன்; இன்னாமையும் இனிமையும் கொண்ட அவன் உரையினைக் கேட்ட சான்றோர் அவனோடு துறக்கம் செல்வதற்காக வடக்கிருந்து உயிர் நீத்தனர். ஆனால் நானோ, என் மகள் பிரிந்து சென்றதை அறிந்தும் உயிர் துறவாமல் இவ்வுலக ஆசையை விரும்பி என்னை விட்டு

இன்னும் போகாதிருக்கிற என் உயிரை நினைந்தே வருந்தியிருக்கின்றேன்!

கருத்து

என் மகள் சென்றுவிட்டாள் என்பதற்காக வருந்தவில்லை; சென்றதை அறிந்த பின்னும் உயிர் வாழ்கிறேனே என்பதற்காகவே வருந்துகிறேன்.

விளக்கம்

“என் மகள் உடன்போக்கில் சென்றதற்காக வருந்தவில்லை. வெண்ணிப்பறந்தலை என்னுமிடத்தில் கரிகால் வளவனோடு போர் செய்த சேரமான் பெருஞ்சேரலாதன், தன் மார்பிலே பட்ட பகைவனின் வேல் ஊடுருவி முதுகிலே வெளிவர, அது புறமுதுகு காட்டியதால் ஏற்பட்ட புண் ஆகும் என்று கருதி, நாணி வடக்கிருந்து உயிர் துறக்க முற்பட்டபோது சான்றோர் பலரும் அவனுடன் வடக்கிருந்து உயிர் நீத்ததுபோல, என் மகள் சென்றதை அறிந்தும் என் உயிர் போகாதிருக்கிறதே என்பதற்காகவே வருந்துகிறேன்” எனத் தாய் கூறுகிறாள்.

குறிப்பு

இன்னா இன்னுரை : உண்ணாதிருந்து உயிர் விடுகின்றான் என்றது இன்னா உரை; புறப்புண் படுவது பழி என்று கருதி உயிர் விடுகின்றான் என்றது இனிமையான உரை.

சொற்பொருள்

1. காய்ந்து செலல் - வெப்ப மிகுதியோடு செல்லும்; கனலி - ஞாயிறு; கல் பக - கற்கள் பிளக்கும்படியாய்; தெறுதலின் - காய்ந்திடலால்.
2. நீந்து குருகு - கடந்து செல்லும் பறவைகள்; என்றூழ் - கோடை வெயில்; நீள் இடை - நீண்ட வழி.
3. உளிமுக - உளி போன்ற முனையைக் கொண்ட; வெம்பரல் - வெப்பம் மிக்க பரற்கற்கள்; வருத்துறாலின் - வருத்துதலால்.
4. விளி முறை அறியா - இறக்குமிடம் இன்னதென்று அறிய இயலாத; வேய்கரி - மூங்கில் கரிந்தொழியும்.
5. வயக்களிறு - வலிமை மிக்க ஆண்யானை.
6. அழிந்தன்றோ இலன் - வருந்தினேன் அல்லன்; ஒழிந்து - அவளை நீங்கி.

7. ஊது உலைக் குருகின் - உலைக்கண் ஊதும் துருத்திபோல; உயிர்த்து - பெருமூச்சு விட்டு; அசைஇ - வருந்தி.
8. வெய்ய - வெப்பமான.
9. கண்படை பெறேன் - தூங்காதவளாய்; கனவ - வாய் வெருவி இருக்கிறேன்.
10. கரிகால் வளவன் - கரிகாலன் என்னும் சோழ மன்னன்; வெண்ணிப் பறந்தலை - வெண்ணிப் போர்க்களத்தில்.
11. பொருது - போரிட்டு; புண் நாணிய - மார்பில் புகுந்த வேல் முதுகு வழியாய்ச் செல்ல, அது புறமுதுகு காட்டியதால் ஏற்பட்ட புண் ஆகும் என்று கருதி நாணமுற்று; சேரலாதன் - சேரலாதன் என்னும் சேர மன்னன்.
12. அழிகள மருங்கின் - பொருது அழிந்த களத்திற்குப் புறத்தே; வாள் வடக்கு இருந்தென - வாளோடு வடக்கிருந்ததுபோல.
14. அரும்பெறல் உலகத்து - பெறுதற்கரிய துறக்கத்தில் (சுவர்க்கத்தில்); செலீஇயர் - செல்வதற்காக.
15. பெரும்பிறிது ஆகியாங்கு - உயிர்விட்டது போல.
16. இவண்காதல் வேண்டி - இவ்வுலகத்து ஆசையை விரும்பி.
17. போதல் செல்லா - போதலைச் செய்யாது; புலந்தே - நொந்தேன்.

நற்றாய் கூற்று

நற்றிணை 279 **கயமனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றது அறவழிப்பட்டதேயாயினும், திடுமெனப் பிரிந்ததனால் நற்றாய் வேதனைப்பட்டுக் கூறியது.

வேம்பின் ஒண்பழம் முணைஇ இருப்பைத்
தேம்பால் செற்ற தீம்பழம் நசைஇ,
வைகுபனி உழந்த வாவல் சினைதொறும்,
நெய்தோய் திரியின் தண்சிதர் உறைப்ப,
நாள்சுரம் உழந்த வாள்கேழ் ஏற்றையொடு

பொருத யானைப் புண்தாள் ஏய்ப்ப,
பசிப்பிடி உதைத்த ஓமைச் செவ்அரை
வெயில்காய் அமையத்து இமைக்கும் அத்தத்து,
அதர்உழந்து அசையின கொல்லோ ததர்கொடிச்
சிலம்பு கழீஇய செல்வம்
பிறருழைக் கழிந்தஎன் ஆயிழை அடியே.

தெளிவுரை

வேம்பின் ஒள்ளிய பழத்தை உண்டு வெறுத்து, இருப்பையின் இனிய பூக்களையும், மிகவும் இனிய பழங்களையும் விரும்பி, நீங்காத பனி செறிந்த இரவிலே திரிந்த வெளவால், மரங்களில் கிளைதோறும் நுழைந்து சென்றது. அதனால் நெய்யில் தோய்த் தெடுத்த திரியின் அடியில் சொட்டும் எண்ணெய்த்துளிபோலக் குளிர்ச்சி பொருந்திய பனித்துளிகள் அதன்மேல் சிதறின.

அத்தகு விடியற்காலையில், பசி கொண்ட பிடியானையின் காலால் உதைக்கப்பட்டுப் பட்டை நீங்கிய ஓமை மரத்தின் அடிப் பகுதி, ஒளி பொருந்திய நிறத்தைக் கொண்ட ஆண்புலியுடன் போரிட்ட யானையின் புண்பட்ட காலினைப்போல விளங்கும்; செம்மையும் வெண்மையும் கலந்த அந்த அடிமரப்பகுதி காலையில் ஞாயிறு வீசும் வெயில் நிறம்போன்று ஒளிவிடும். அத்தகைய காட்டுவழியில் அவள் சென்றுவிட்டாள்.

நெருங்கிய கொடிபோல, தொழிற்பாடமைந்த, சிலம்பு கழிக்கும் திருமணச் சடங்காகிய சிறப்பினை நான் காண இயலாதவாறு பிறர் கண்டு இன்புறுமாறு சென்றுவிட்டனள், என் மகள்! ஆய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்துள்ள அவள் அடிகள் காட்டுவழியில் பகலில் நடக்க எவ்வளவு துன்பமுற்றனவோ!

கருத்து

என் மகளின் சிலம்புகழி நோன்பினை நான் காண இயலாதவாறு, பிறர் காணுமாறு செய்துவிட்டனளே!

விளக்கம்

வேம்பின் பழத்தை உண்டு வெறுத்த வெளவால், இலுப்பை யின் பழத்தை உண்ணக் கிளைதோறும் செல்லுவதால்,

அதன்மீது பனித்துளிகள் சிதறும். அந்த இரவு நேரத்தில் என் மகள் வீட்டை விட்டு வெளியேறிவிட்டாள். ஆண்புலியுடன் யானை போரிடுவதும், யானை உதைத்துப் பட்டை உரிந்த சிவந்த அடிப்பகுதியைக் கொண்ட ஓமை மரங்கள் நிறைந்ததுமான காட்டுவழியில் பகலில் நடக்க அவள் கால்கள் எவ்வளவு துன்பமுற்றனவோ?

குறிப்பு

மணம் புரிவதற்கு முன்பு, மணமகள் காலில் அணிந்திருந்த சிலம்பை நீக்குவதற்குப் பெற்றோர் வீட்டில் ஒரு சடங்கு நிகழ்த்தப்பெறும். அது ‘சிலம்புகழி நோன்பு’ எனப்படும்.

சொற்பொருள்

1. வேம்பின் - வேப்ப மரத்தின்; ஒண்பழம் - ஒளி நிறைந்த பழம்; முணைஇ - வெறுத்து; இருப்பை - இலுப்பை மரம்.
2. தேம்பால் - தேன் போன்ற பால்; செற்ற - வற்றிய; தீம்பழம் - இனிய பழம்; நசைஇ - விரும்பி.
3. வைகுபனி - இடைவிடாது பெய்யும் பனி; உழந்த - திரிந்த; வாவல் - வௌவால்; சினைதொறும் - கிளைதோறும்.
4. நெய்தோய் - நெய்யில் தோய்த்தெடுக்கப்பட்ட; தண் சிதர் - குளிர்ந்த சிறு துளிகள்; உறைப்ப - சொட்ட.
5. நாள்சுரம் - விடியற்காலையில் காட்டில்; வாள்கேழ் - ஒளி பொருந்திய நிறம்; ஏற்றை - ஆண்புலி.
6. பொருத - போரிட்ட; புண்தாள் - புண்பட்ட கால்; ஏய்ப்ப - போல.
7. பசிப்பிடி - பசியால் வருந்திய பெண்யானை; ஓமை - ஓமை மரத்தின்; செவ்அரை - சிவந்த அடிமரம்.
8. அமையம் - பொழுது; இமைக்கும் - ஒளிவிடும்; அத்தம் - வழி.
9. அதர் உழந்து - வழி நடந்து; அசையின - வருந்தின; ததர் கொடிச் சிலம்பு - நெருங்கிய கொடி போன்ற வேலைப்பாடமைந்த சிலம்பு.
10. சிலம்பு கழீஇய செல்வம் - மணமாகா முன் பெற்றோர் மகளுக்கு அணிவித்த சிலம்பினை நீக்கி, மணமகன் அளிக்கும் சிலம்பினை அணியும் சடங்கு.
11. பிறர் உழை - பிறர் கண்டு இன்புறுமாறு; கழிந்த - (எம்மைப்) பிரிந்து சென்றுவிட்ட; ஆயிழை - ஆய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்துள்ள (என் மகள்); அடி - கால் அடி.

நற்றாய் கூற்று

அகநானூறு 315 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, தான் காதலித்த தலைவனுடன் உடன்போக்கில் சென்று விட்டனள்; மகளைப் பிரிந்த தாய் வருந்தித் தன் நெஞ்சத்திடம் கூறியது.

'கூழையும் குறுநெறிக் கொண்டன, முலையும்
சூழி மென்முகம் செப்புடன் எதிரின;
பெண்துணை சான்றனள் இவள்'எனப் பல்மாண்
கண்துணை யாக நோக்கி, நெருநையும்,
அயிர்த்தன்று மன்னே நெஞ்சம்; பெயர்த்தும்
அறியா மையின் செறியேன், யானே;
பெரும்பெயர் வழுதி கூடல் அன்னதன்
அருங்கடி வியல்நகர்ச் சிலம்பும் கழியாள்,
சேணுறச் சென்று, வறுஞ்சுனைக்கு ஒல்கி,
புறவுக்குயின்று உண்ட புன்காய் நெல்லிக்
கோடை உதிர்த்த குவிகண் பசுங்காய்,
அறுநூல் பளிங்கின் துளைக்காசு கடுப்ப,
வறுநிலத்து உதிரும் அத்தம், கதுமென,
கூர்வேல் விடலை பொய்ப்பப் போகிச்
சேக்குவள் கொல்லோ தானே — தேக்கின்
அகல்இலைக் கவித்த புதல்போல் குரம்பை,
ஊன்புழுக்கு அயரும் முன்றில்,
கான்கெழு வாழ்நர் சிறுகுடி யானே.

தெளிவுரை

என் மகளின் கூந்தல் குறுகிய நெளிகளைக் கொண்டது; முலைகளும் உச்சியில் மெல்லிய கண் (காம்பு) கொண்டு சிமிழினுடன் மாறுபட்டன. இவள் பெண்மையை அடைந்து விட்டாள் என்று என் கண்களால் அவளைப் பலமுறை

நோக்கினேன்; ஆனால், நேற்றுத்தான் நான் மிகவும் ஐயங்கொண்டேன். அதன் பின்னும் என் அறியாமையால் அவளை இற்செறியாது விட்டுவிட்டேன்.

பெரும் புகழும் பெயரும் கொண்ட பாண்டியனின் வளம் பொருந்திய மதுரையைப் போன்று அரிய காவல் பொருந்தியது, எம் இல்லம்; அவ்வில்லத்தில் சிலம்புகழி நோன்பு செய்யப் பெறாமல் நீண்ட தொலைவு சென்றவள், நீர் இல்லாத சுனையில் நீர் கிட்டாமல் தளர்ச்சியுற்றிருப்பாள். புறாக்கள் கொத்தித் தின்ற சிறிய காய்களைக் கொண்ட நெல்லி மரத்தில், மேல்காற்று வீசியதால் உதிர்ந்த பசிய காய்கள், நூல் அறுபட்டமையால் கோவையினின்றும் உதிர்கின்ற துளைகளைக் கொண்ட பளிங்குக் காசுகள்போல் கிடக்கும் காட்டுவழி அது. அத்தகைய அவ்வழியில் கூரிய வேலையுடைய தலைவன், பொய் கூறி அவளை அழைத்துச் சென்றிருக்கிறான். அவளும் அவனுடன் விரைந்து சென்றுவிட்டாள்.

வழியில், புதர் போன்று விளங்குகின்ற குடிசைக்கு முன் புறத்தில், தேக்குமரத்தின் அகன்ற இலையில் குவித்து வைக்கப் பட்டுள்ள வதக்கிய ஊன் உணவை உண்ணும் காட்டுவாழ்க்கை யினைக் கொண்டவரின் சீறூரில் அவள் தங்கியிருப்பாளோ?

கருத்து

சிலம்புகழி நோன்பினை என் மனையில் சிறப்புறச் செய்ய இயலாத தாயிற்றே!

விளக்கம்

என் மகள் பெண் தன்மை அடைந்துவிட்டாள் என்பதை அறிந்து நேற்றே என் நெஞ்சம் ஐயுற்றது. என் அறியாமையால் இற்செறித்துப் பாதுகாக்காமல் விட்டுவிட்டேன். அவள் தன் பெருமனையில் சிலம்புகழி நோன்பினைச் செய்து கொள்ளாமல், தன் தலைவன் சொன்னவற்றை நம்பி அவனுடன் சென்று, வழியில் காட்டுவாழ்க்கையைக் கொண்டவரின் சீறூரில் தங்கி யிருப்பாளோ?

சொற்பொருள்

1. கூழை - கூந்தல்; குறுநெறி - குறுகிய நெளிவுகளை.
2. சூழி - உச்சி; மென்முகம் - மெல்லிய கண் (காம்பு) கொண்டு; செப்பு - சிமிழ்; எதிரின - மாறுபட்டன.
3. துணை சான்றனள் - தன்மையைப் பெற்றனள்; பல்மாண் - பலமுறை.
4. நெருநையும் - நேற்றே.
5. அயிர்த்தன்று - ஐயம் கொண்டேன்.
6 செறியேன் - இற்செறியாது விட்டுவிட்டேன்.
7. பெரும் பெயர் - பெரும் புகழ்; வழுதி - பாண்டிய மன்னன்; கூடல் - மதுரை மாநகரம்.
8 அருங்கடி - மிக்க பாதுகாப்புள்ள; வியல் நகர் - அகன்ற வீடு; சிலம்பும் கழியாள் - திருமணத்திற்கு முன் சிலம்பைக் கழற்றும் சடங்கினையும் செய்யாதவளாய்.
9. சேண் - நீண்ட தொலைவு; வறுஞ்சுனை - நீரற்ற சுனை; ஒல்கி - தளர்ந்து.
10. புறவு - புறா; குயின்று - துளைத்து; குவிகண் - குவிந்த கண்களைக் கொண்ட.
12. அறுநூல் - நூல் அற்று உதிர்ந்த; பளிங்கின் துளைக்காசு - துளையினைக் கொண்ட பளிங்குக் காசு; கடுப்ப - ஒப்ப.
13. அத்தம் - வழி; கதுமென - விரைவாய்.
14. விடலை - ஆண்மகன்; பொய்ப்ப - பொய் கூறி (அழைத்துச் செல்ல).
15. சேக்குவள் - தங்குவள்; தேக்கின் - தேக்கு மரத்தின்.
16. கவித்த - குவிக்கப்பெற்ற; புதல் - புதர்; குரம்பை - குடிசை.
17. ஊன்புழுக்கு - வதக்கிய ஊன் உணவு; அயரும் - உண்ணும்.
18. கான்கெழு வாழ்நர் - காட்டில் பொருந்திய வாழ்க்கையைக் கொண்டவர், காட்டில் வாழ்பவர்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 369 **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன், உடன் அழைத்துச் சென்றுவிட்டான்; மகளை இழந்த செவிலித்தாய் மிகவும் வருந்தித் தான் பெற்ற மகளிடம் (தலைவிக்குத் தோழியிடம்) சொல்லியது.

கண்டிசின் – மகளே!– கெழீஇ இயைவெனை;
ஒண்தொடி செறித்த முன்கை ஊழ்கொள்பு,
மங்கையர் பலபா ராட்டச் செந்தார்க்
கிள்ளையும் தீம்பால் உண்ணா; மயில்இயல்
சேயிழை மகளிர் ஆயமும் அயரா;
தாழியும் மலர்பல அணியா; கேழ்கொள
காழ்புனைந்து இயற்றிய வனப்புஅமை நோன்கவர்ப்
பாவையும் பலிஎனப் பெறாஅ; நோய்பொர,
இவைகண்டு இனைவதன் தலையும் நினைவிலேன்,
கொடியோள் முன்னியது உணரேன், 'தொடியோய்,
இன்றுநின் ஒலிகுரல் மண்ணல்,' என்றதற்கு
என்புலந்து அழிந்தன ளாகி, தன்தகக்
கடலம் தானைக் கைவண் சோழர்
கெடல்அரு நல்இசை உறந்தை அன்ன,
நிதியுடை நல்நகர்ப் புதுவது புனைந்து,
தமர்மணன் அயரவும் ஒல்லாள், கவர்முதல்
ஓமை நீடிய உலவை நீள்இடை,
மணிஅணி பலகை, மாக்காழ் நெடுவேல்,
துணிவுடை உள்ளமொடு துதைந்த முன்பின்
அறியாத் தேஎத்து அருஞ்சுரம் மடுத்த
சிறியோற்கு ஒத்தஎன் பெருமடத் தகுவி,
சிறப்பும் சீரும் இன்றி, சீறூர்
நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
ஓர்ஆ யாத்த ஒருதூண் முன்றில்

25 ஏதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ,
மேயினள் கொல்?என நோவல் யானே.

தெளிவுரை

மகளே! அவளுடன் (உன் தலைவியுடன்) இதுகாறும் ஒன்றி உடனிருந்த என் நிலையினைப் பார்.

சூழ நின்ற பெண்கள் ஒளி பொருந்திய வளையல்கள் நிறைந்த தம் முன்கையில், சிவந்த கோடுகளைக் கொண்ட கிளிகளை ஏந்தியவண்ணம், தலைவியைப் போன்றே அவற்றைப் பலபடப் பாராட்டினர்; என்றாலும், தம் தோழியாம் என் மகளின் பிரிவாற்றாது அக்கிளிகளும் பாலினை உண்ணவில்லை; மயில் போன்ற சாயலுடன் சிவந்த அணிகளை அணிந்த தோழியர் கூட்டமும் ஆடிப் பாடி மகிழ்ந்து விளையாடவில்லை. தலைவியால் தாழியில் வளர்க்கப்பட்ட பூச்செடிகளும் மலர்ந்து அழகு செய்யவில்லை. அழகிய வலிமையான சுவரில் நிறம் தீட்டப்பெற்ற, முத்துவடம் புனைந்து உண்டாக்கப்பட்ட தெய்வப்பாவைகளும் தமக்குரிய பலி எதனையும் ஏற்கவில்லை.

இவற்றைக் கண்டு நான் துன்பப்பட்டு வருந்துவதோடு முன்னதாக நடந்த சில செயல்களை எண்ணிப் பார்க்கத் தவறி விட்டேன். கொடி போன்றவளாகிய அவள் எண்ணியதை உணராமலும் போனேன்.

'வளையல் அணிந்த மகளே! இன்று உன் தழைத்த கூந்தலை நீராட்டிப் பின்னி முடிச்சிடு' என்று நான் சொன்னதைக் கேட்டு என்னை வெறுத்து நெஞ்சழிந்து நின்றாள். (அப்போதும் நான் நடக்கவிருப்பதை அறியத் தவறினேன்.)

கடல் போன்ற படையினையும், வள்ளல் தன்மையையும் கொண்ட சோழர்களது நிலைத்த புகழினைக் கொண்ட உறையூரைப் போன்று செல்வச்செழிப்புடைய வீட்டில், அச் செல்வ நிலைக்கேற்ப ஒப்பனைகள் செய்து, உறவினர்கள் கூடி, மணம் செய்விக்க விரும்பியும் அவள் மனம் ஒப்பவில்லை.

கவர்த்த அடிப்பகுதியைக் கொண்ட ஓமை மரங்கள் ஓங்கி வளர்ந்த காட்டுவழியில், மணிகள் பதிக்கப்பட்ட

கேடயத்தினையும், சிறந்த காம்பினைக் கொண்ட நெடிய வேலினையும், துணிந்த உள்ளத்தோடு மிகுந்த உடல் வலிமையையும் கொண்ட காதலன், அறியாத் தேயத்திலுள்ள அரிய பாலைநில வழியில் அவளை அழைத்துக்கொண்டு போனான். அவ்விளையவனுடன் மனம் பொருந்திச் சென்ற மிக்க இளமையும் தகுதியும் வாய்ந்த என் மகள் யாது செய்தனளோ? (எவ்வாறு துன்பமுற்றனளோ?)

சீரும் சிறப்புமற்ற சிற்றூரில், வறுமை மிக்க பெண்கள் வாழும், புல் வேய்ந்த குடிசையில், ஒற்றைப் பசு கட்டப்பட்டிருக்கும் ஒற்றைத்தூண் கொண்ட முற்றத்தில், தனக்குத் தொடர்பேது மில்லாத அந்த வறிய மனையில், தன் சிலம்பினை நீக்கி அவனை மணம் புரிந்துகொள்ள இசைந்தனளோ? அதனை நினைந்து நான் வருந்துகின்றேன்.

கருத்து

மகள், சிலம்பு கழித்து, மணம் முடித்துக்கொண்டனளோ?

விளக்கம்

பெருமைமிக்க நம் வள மனையில் நம் உறவினர் மணம் செய்விக்க விரும்பியும் அவள் மனம் ஒப்பாது ஒருவனுடன் சென்றுவிட்டாள். சீறூரில் வறுமை மிக்க குடிசையில் சிலம்பு கழித்து அவனை மணம் புரிந்து கொள்ள இசைந்தனளோ?

சொற்பொருள்

1. கண்டிசின் - காண்; கெழீஇ - பொருந்தி; இயைவெனை - ஒன்றுபட்டு, உடனிருந்த.
2. செறித்த - நிறைத்த; ஊழ்கொள்பு - முறையாய்க் கொண்டு.
3. செந்தார் - சிவந்த வரிகளைக் கொண்ட.
4. கிள்ளை - கிளி; தீம்பால் - இனிய பால்; மயில் இயல் - மயிலின் சாயலைக் கொண்ட.
5. சேயிழை - சிவந்த அணிகலன்; அயரா - விளையாடா.
6. தாழியும் - பூஞ்செடியைக் கொண்ட தாழிகளும்; கேழ் - நிறம்.
7. காழ் - முத்துவடம்; நோன்சுவர் - வலிய சுவர்.
8. பாவை - தெய்வப்பாவை; பெறாஅ - பெறாவாயின; நோய் பொர - நோய் மேன்மேலும் வருத்த.

9. நினைவிலேன் - எண்ணமற்றவளானேன்.
10. கொடியோள் - கொடி போன்றவளாகிய என் மகள்; முன்னியது - எண்ணியது; தொடியோய்! - வளையலணிந்த என் மகளே!
11. ஒலி குரல் - தழைத்த கூந்தல்; மண்ணல் - நீராட்டல், புனைதல்.
12. என்புலந்து - என்னிடம் வருத்தம் கொண்டு; அழிந்தனள் - வருந்தினள்; தன்தக - அவள் தன் செல்வ நிலைக்கேற்ற வகையில்.
13. கடலம் தானை - கடல் போன்ற படை; கைவண் - கை வலிமை; சோழர் - சோழ அரசர்.
14. கெடல் அரு - நீங்குதல் இல்லா; நல்இசை - சிறந்த புகழ்; உறந்தை - உறையூர், சோழர் தலைநகர்.
15. நல் நகர் - நல்ல இல்லத்தில்; புதுவது புனைந்து - புதுவதாய் ஒப்பனை செய்து.
16. தமர் - உறவினர்; மணன் - திருமணம்; அயரவும் - செய்விக்கவும்; ஒல்லாள் - மனம் பொருந்தாதவளாகி; கவர் முதல் - கவர்த்த அடிப்பகுதி.
17. ஓமை - ஓமை மரம்; நீடிய - உயர்ந்துள்ள; உலவை - காடு; நீள் இடை - நீண்ட வழி.
18. பலகை - கேடயம்; மாக்காழ் - சிறந்த தண்டு.
19. துதைந்த - மிகுந்த; முன்பின் - வலிமையுடன்.
20. மடுத்த - கொண்டுபோன.
21. சிறியோற்கு - இளையவனுக்கு; பெருமடத் தகுவி - பெரிய மடப்பமும் தகுதியும் கொண்டவள்.
22. சீர் - உயர்வு.
23. நல்கூர் - வறுமையுற்றிருக்கும்; குரம்பை - குடிசை.
24. ஆ - பசு; முன்றில் - முகப்பு.
25. ஏதில் - பொருத்தமற்ற; வறுமனை - வறிய மனை; சிலம்பு கழீஇ - சிலம்பு கழித்து.
26. மேயினள் - பொருந்தினளோ; நோவல் - வருந்துவேன்.

செவிலித்தாய் கூற்று

அகநானூறு 385 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கூற்று விளக்கம்

மகள், தான் காதலித்த இளைஞனுடன் கூடி உடன்போக்கிலே சென்று விட்டாளாக, அவளை நினைந்து ஏக்கமுற்றுப் புலம்பும் செவிலித்தாய் கூறியது.

தன்ஓ ரன்ன ஆயமும், மயில்இயல்
என்ஓ ரன்ன தாயரும், காண,
கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப் படப்பை உறந்தை அன்ன,
பொன்னுடை நெடுநகர், புரையோர் அயர,
நல்மாண் விழவில் தகரம் மண்ணி,
யாம்பல புணர்ப்பச் செல்லாள், காம்பொடு,
நெல்லி நீடிய கல்அறைக் கவாஅன்,
அத்த ஆலத்து அலந்தலை நெடுவீழ்
தித்திக் குறங்கில் திருந்த உரிஞ,
வளையுடை முன்கை அளைஇ, கிளைய,
பயில்இரும் பிணையல் பசுங்காழ்க் கோவை
அகல்அமை அல்குல் பற்றி, கூந்தல்
ஆடுமயில் பீலியின் பொங்க, நன்றும்,
தான்அமர் துணைவன் ஊக்க, ஊங்கி,
உள்ளாது கழிந்த முள்எயிற்றுத் துவர்வாய்ச்
சிறுவன் கண்ணி சிலம்பு கழீஇ,
அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே.

தெளிவுரை

மயில் போன்ற சாயலைக் கொண்ட என் மகளுக்குத் தன்னைப் போன்ற தோழியரும், என்னைப் போன்ற தாயரும் பார்த்து மகிழும்படியாகத் திருமணம் நிகழ்தல் வேண்டும் என்று

நினைத்தோம். வலிய கையினைக் கொண்ட யானையினையும் விரைந்த தேரினையுமுடைய சோழரது காவிரி ஆற்றுக்குப் பக்கத்தே அமைந்துள்ள உறையூரைப் போன்ற செல்வமிக்க எமது பெரிய இல்லத்தில் சான்றோர் மணவிழாவை நடத்தி வைக்க, சிறப்பான அந்த நல்ல மணவிழாவில் அவளுக்கு மயிர்ச்சாந்து பூசி மற்றும் எல்லா வகைச் சிறப்புகளையும் செய்து வைக்கக் கருதினோம். ஆனால், அவ்வாறு நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லாதபடி அவள் தன் தலைவனுடன் சென்று விட்டாள்.

மூங்கிலோடு நெல்லி மரங்கள் உயர்ந்து வளர்ந்துள்ளதும், கற்பாறைகள் பொருந்தியதுமான பக்க மலையில், வழியில் உள்ள ஆலமரத்தின் வாடி அசைகின்ற நெடிய விழுது, தேமல் பொருந்திய தன் தொடையில் நன்கு உராய்ந்திட அவள் நடந்து போயினாள்.

தன்னால் விரும்பப்பட்ட தலைவன், வளை பொருந்திய தன் முன் கையைப் பற்றியும், அழகிய பல வடங்களைக் கொண்ட மேகலை அணியப்பெற்ற அகன்ற அல்குலை அணைத்தும் பெரிதும் ஊக்கப்படுத்திட ஊக்கங்கொண்டு, தன் கூந்தல் ஆடுமயிலின் தோகைபோலக் காற்றில் பொங்கிப் பறக்க, தன் வழிநடை வருத்தத்தையும் எண்ணிப்பாராது சென்றுவிட்டாள்.

முள் போன்ற கூரிய பற்களையும் பவளம் போன்ற வாயினையும் கொண்ட அஞ்சாமை வாய்ந்த அவ்விளையோள், யாரும் அறியப்படா இடத்தில் சிலம்புகளை நீக்கி மணம் செய்துகொள்ளுதல் கொடுமையாகும்.

கருத்து

நாம் முன் அறிந்திராத இடத்தில் சிலம்பு கழித்துத் தலைவிக்கு வதுவை செய்தல் கொடுமை.

விளக்கம்

"என் மகள் திருமணம் தோழியரும் தாயரும் கண்டு மகிழ எம் பெருமனையில், மேலோர் வதுவை செய்விக்க நிகழ்தல் வேண்டும் என்று நினைத்தோம். ஆனால், அவ்வாறு நடைபெறாதவாறு அவள் தன் தலைவனுடன் உடன்போக்கில்

சென்றுவிட்டாள். நாம் முன் அறிந்திராத தேயத்தில் சிலம்பு கழித்து வதுவை செய்திருத்தல் மிகவும் கொடியது" என்று செவிலி புலம்புகிறாள்.

சொற்பொருள்

1. தன்னோர் அன்ன - தன்னை ஒத்த; மயில் இயல் - மயில் போலும் சாயல் கொண்ட என் மகள்.
3. கைவல் - வலிய கை; கடுந்தேர் - விரைந்து செல்லும் தேர்; சோழர் - சோழ மன்னர்.
4. காவிரி - காவிரி ஆறு; படப்பை - தோட்டம்; உறந்தை - உறையூர், சோழர்களின் தலைநகர்.
5. புரையோர்- மேலோர்; அயர - செய்விக்க.
6. நல்மாண் விழவு - நல்ல சிறப்பான மணவிழாவில்; தகரம் - மயிர்ச்சாந்து; மண்ணி - பூசி.
7. யாம் - நாம்; பல புணர்ப்ப - பல சிறப்புகளையும் செய்விக்க; செல்லாள் - மணந்து செல்லாதவளாய்; காம்பு - மூங்கில்.
8. நெல்லி - நெல்லி மரம்; நீடிய - உயர்ந்த; கல்அறை - கற்பாறை; கவாஅன் - பக்கமலை.
9. அத்தம் - வழி; ஆலம் - ஆலமரம்; அலந்தலை - வாடி அசையும்; நெடுவீழ் - நீண்ட விழுது.
10. தித்தி - தேமல்; குறங்கு - தொடை; திருந்த - நெருங்கி; உரிஞ - உராய்ந்திட.
11. அளைஇ - பற்றி; கிளைய - பல கிளையினவாய்.
12. பயில் - நெருங்கிய; இரும் - பெரிய; பிணையல் - மாலை; பசுங்காழ் - அழகிய வடங்கள்; கோவை - மேகலை.
13. அகல்அமை - அகன்று அமைந்துள்ள.
14. பொங்க - பொங்கிப் பரக்க.
15. தான் அமர் - தான் விரும்பிய; ஊக்க - உற்சாகப்படுத்த; ஊங்கி - ஊக்கம் கொண்டு.
16. உள்ளாது - (வழி வருத்தம்) எண்ணாது; கழிந்த - சென்ற; முள்எயிறு - முள் போன்ற கூரிய பல்; துவர் வாய் - பவளம் போன்ற வாய்.
17. சிறு வன்கண்ணி - வன்கண்மை கொண்டவளாகிய இளையோள்.
18. அறியா - (நம்மால்) அறியப்படாத; தேஎம் - தேசம்.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 399 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்கொண்டு போன தலைமகன் தலைமகளைத் தன் இல்லத்துக்குக் கொண்டு புக்குழி அவன் தாய் அவட்குச் சிலம்பு கழி நோன்பு செய்கின்றாள் எனக் கேட்ட நற்றாய் ஆண்டு நின்றும் வந்தாற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தலைவியைத் தலைவன் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றான். தலைவன் தாய் தலைவிக்குச் சிலம்பு கழிக்கும் சடங்கைச் செய்கின்றாள் என்று அங்கிருந்து வந்தவர்கள் சொன்னார்கள். அவர்களிடம் தலைவியின் நற்றாய் சொல்லியது.

'நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்,
எம்மனை வதுவை நன்மணம் கழிக'எனச்
சொல்லின் எவனோ மற்றே – வென்வேல்,
மைஅற விளங்கிய கழலடி,
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே?

தெளிவுரை

"தலைவன், வெல்லும் வேலையும், குற்றமற்ற கழலையும் உடையவன். பிறர் நம்புமாறு பொய் பேசுவதில் வல்லவன். அவனை ஈன்ற தாயிடம், "உங்கள் வீட்டில் தலைவிக்குச் சிலம்புகழி நோன்பினைச் செய்தாலும், அதற்குப் பின் செய்யும் வதுவை மணத்தையாவது எங்கள் வீட்டில் செய்யுங்கள் என்று நீங்கள் சொன்னால் என்ன நேர்ந்துவிடும்?" எனத் திருமணத்தைக் கண்டு வந்தவரிடம் தலைவியின் தாய் கூறினாள்.

கருத்து

சிலம்புகழி நோன்பு தலைவன் வீட்டில் நடந்தபோது, 'எம் (தலைவியின்) மனையில் வதுவை மணத்தை நிகழ்த்துக' என்று சொன்னால் என்ன குற்றம் வரும்?

குறிப்பு

திருமணத்திற்குச் சென்று வந்தாரிடம் நற்றாய் கூறியது இது.

மணம் புரிவதற்கு முன்பு மணமகளது காலில் அணிந்திருந்த சிலம்பை நீக்குதல் பெற்றோர் வீட்டில் ஒரு சடங்காகச் செய்யப்படும். அது 'சிலம்புகழி நோன்பு' எனப்படும்.

சிலம்புகழி நோன்பினைத் தன் இல்லத்தில் நிகழ்த்துவதனை ஒரு செல்வமாகவே கருதுவாள், தாய்.

சங்க காலத்தில் சிலம்பு கழிதலும், வதுவையும் எனத் திருமணம் இரு கூறாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. 'சிலம்பு கழீஇ' முதலில் நடைபெறும். அதனை மகளுக்குப் பெற்றோர் தம் வீட்டில் நிகழ்வதையே மிகவும் விரும்புவர்.

சொற்பொருள்

1. மனை - வீடு; சிலம்பு கழீஇ - திருமணத்திற்கு முன்னால் நடைபெறும் சடங்கு, கன்னிப்பருவத்தில் அணிந்த சிலம்பைக் கழற்றுதல், இச்சடங்கு, பெண்ணைப் பெற்றோர் வீட்டில் நடைபெறும்; இதனைக் கரணம் என்பர்; அயரினும் - நிகழ்த்தினாலும்.
2. வதுவை நன்மணம் - திருமண நிகழ்ச்சி; கழிக - நிகழ்த்தி முடிக்க.
3. எவனோ? - என்ன?; வெண்வேல் - வெற்றி தரும் வேல்.
4. மைஅற - குற்றம் தீர்ந்து; கழலடி - வீரக்கழல் அணிந்த அடி.
5. பொய்வல் - பொய் பேசுவதில் வல்லமை வாய்ந்த; ஈன்ற - பெற்றெடுத்த.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 397 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போய் மீள்கின்ற தலைமகள் தன்னூர்க்குச் செல்கின்றாரைக் கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இல்லத்திற்குச் சென்று, உடன்போக்கு முடிந்து, திரும்பித் தலைவனுடன் தன் தாய் வீட்டிற்கு வரும் வழியில் அங்கு விரைந்து செல்வோரைப் பார்த்துத் தலைவி சொல்லியது.

'கவிழ்மயிர் எருத்தின் செந்நாய் ஏற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரன்அணி வாரா நின்றனள்' என்பது
முன்னுற விரைந்தநீர் உரைமின்;
இன்நகை முறுவல்என் ஆயத் தோர்க்கே.

தெளிவுரை

'கீழ்நோக்கிக் கவிழ்ந்த மயிர் பொருந்திய செந்நாய், குட்டி களைக் கொண்ட பன்றியைக் (இரக்கமுள்ளமையால்) கொல் லாது செல்லும் பாலை வழியைக் கடந்து உங்கள் தோழி வந்து கொண்டிருக்கிறாள்' என்னும் செய்தியை எனக்கு முன்னால் விரைந்து செல்லும் நீங்கள், புன்முறுவல் பூத்திருக்கும் என் தோழியரிடம் சொல்லுங்கள்.

கருத்து

"எனக்கு முன்னே ஊருக்குச் சென்றுகொண்டிருப்பவர்களே! என் தோழி யரிடம், 'உங்கள் தோழி திரும்பி வந்துகொண்டிருக்கிறாள்' என்று கூறுங்கள்.

குறிப்பு

செந்நாய் கடுஞ்சினமும் பெருவலியும் கொண்டது. பல குட்டிகட்குத் தாயான பன்றியைப் பார்த்து, அது தனக்கு இரையேயாயினும், கொல்லாது விட்டுச் சென்றது என்பதால், விலங்குகளும் தாயுள்ளம் கொண்டவை என்பது விளக்கப்படுகிறது.

சொற்பொருள்

1. கவிழ் மயிர் - கீழ் நோக்கி வளர்ந்த முடி; ஏற்றை - ஆண் (நாய்).
2. குருளை - குட்டி; கொள்ளாது - வேட்டையாடாது; கழியும் - நீங்கும்.
3. அணி - அண்மையில்; வாரா நின்றனள் - வருகின்றாள்.
4. முன்னுற விரைந்தநீர் - முன்னால் விரைந்து செல்பவர்களே!; உரைமின் - சொல்லுங்கள்.
5. இன்நகை - இனிய முறுவல்; ஆயத்தோர் - விளையாட்டுத் தோழியர்.

செவிலித்தாய் கூற்று

ஐங்குறுநூறு 400 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போய் வதுவை அயரப்பட்ட தலைமகள், தலைமகனோடு இன்று வரும் எனக் கேட்ட செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுடனே சென்று அவனூரில் அவனை மணந்துகொண்ட தலைவி, தன் கணவனுடன் பிறந்த வீட்டிற்குப் பெற்றோர் வாழ்த்தைப் பெற வர இருப்பதைத் தூதர் வழி, செவிலித்தாய்க்குச் சொல்லியனுப்பினாள். செவிலி அதனை மகிழ்ச்சியுடன் நற்றாய்க்குத் தெரிவிக்கிறாள்.

மள்ளர் அன்ன மரவம் தழீஇ,
மகளிர் அன்ன ஆடுகொடி நுடங்கும்
அரும்பதம் கொண்ட பெரும்பத வேனில்,
'காதல் புணர்ந்தனள் ஆகி ஆய்கழல்
வெஞ்சின விறல்வேல் காளையொடு
இன்றுபுகு தரும்'என வந்தன்று, தூதே.

தெளிவுரை

"வீரரை ஒத்த வெண்கடம்ப மரங்களை, மகளிரை ஒத்த மென்மையான கொடிகள் சுற்றிப் படர்ந்து அசைந்தாடும் வேனிற்பருவத்தில் அழகிய தளிரும், நறிய மலரும், இனிய கனிகளும் எங்கும் குலுங்கும். இத்தகைய இனிய பருவத்தில் நம் அருமை மகள் தலைவனோடு வதுவை மணம் அயர்ந்திருக்கின்றாள். காளை போன்ற தலைவன் வீரக்கழலணிந்த ஆற்றல் மிக்கவன்; கடுஞ்சினத்தவன்; வெற்றி கொடுக்கும் வேல் பிடித்தவன். அவனுடன் நம் மகள் இன்று இங்கு வருவாள் எனத் தூதுவர் சொல்கின்றனர்" எனச் செவிலித்தாய் நற்றாய்க்குக் கூறினாள்.

கருத்து

'உடன்போக்கில் சென்று மணம் முடித்துக்கொண்ட மகள் இன்று தன் கணவனுடன் பிறந்த வீட்டுக்கு வருகிறாள்' எனத் தூதுவர் கூறினர்.

சொற்பொருள்

1. மள்ளர் - வீரர்; மரவம் - வெண்கடம்ப மரம்; தழீஇ - தழுவி.
2. நுடங்கும் - அசைந்தாடும்.
3. அரும்பதம் - அருமையான உண்ணத்தக்க கனிகள்; பெரும்பத வேனில் - இன்ப நுகர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான வேனிற் காலம்.
4. காதல் - வதுவை மணம்.
5. விறல்வேல் - வெற்றி தரும் வேல்.
6. புகு தரும் - புகும், வீடு வந்து சேர்வள்; வந்தன்று - வந்துள்ளது.

அயலோர் கூற்று

ஐங்குறுநூறு 393 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் உடன்போய் மீண்டு வந்துழி, அயலோர் அவள் தாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி உடன்போக்கு முடிந்து வீடு திரும்பி வந்தபோது, அயலோர் தலைவியைப் பெற்ற தாயிடம் கூறியது.

துறந்ததற் கொண்டு துயர்அடச் சாஅய்,
அறம்புலந்து பழிக்கும் அளைகண் ணாட்டி!
எவ்வ நெஞ்சிற்கு ஏமம் ஆக
வந்தன ளோ,நின் மடமகள்;
வெந்திறல் வெள்வேல் விடலைமுந் துறவே.

தெளிவுரை

உன் மகள் உன்னை விட்டுச் சென்றதனால் வருத்தத்தோடு வீற்றிருக்கும் அம்மையே! அதன் காரணமாய், நீ மிகத் துயர மடைந்து மெலிந்தாய்! உடன்போக்கையும், அஃது அறம் என்று சொல்வோரையும் கோபம் கொண்டு பழித்தாய். அழுதலால் நீர்

ததும்பும் கண்களுடன் உள்ளாய். உன் நெஞ்சத்துயருக்கு மருந்தாய் உன் அன்பு மகள், செவ்விய ஆற்றலும் வெற்றிமிகு வேலும் கொண்ட தலைவன் முன்னே வர, பின்தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறாள், காண். (இனித் துயர் நீங்கி மகிழ்க.)

கருத்து

மகள் தலைவனுடன் வந்துகொண்டிருக்கிறாள்; துயர் நீங்குக!

குறிப்பு

தலைவி தன் தலைவனுடன் மீண்டு வருதல் கண்ட அயலோர் விரைந்து வந்து, மகளைப் பிரிந்து வருந்தியிருந்த தாயிடம் உரைத்து ஆற்றுவித்தனர்.

சொற்பொருள்

1. துறந்தது - தாயைப் பிரிந்தது.
2. அறம்புலந்து - உடன்போக்குச் சரியானது என்று சொல்லும் அறிவுரையினைச் சாடி; அளை கண்ணாட்டி - அழுதலாலே கண்ணீர் ததும்பியபடி இருக்கும் கண்களைக் கொண்டவளே!
3. எவ்வ நெஞ்சு - வருந்தும் மனம்; ஏமம் - பாதுகாப்பு.
4. மடமகள் - இளைய மகள்.
5. வெந்திறல் - வெவ்விய ஆற்றல்; வெள்வேல் - வெள்ளிய வேல்; முந்துறவே - முந்தி வந்துகொண்டிருக்க.

நற்றாய் கூற்று

ஐங்குறுநூறு 394 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போய்த் தலைமகள் வந்துழித் தாய் சுற்றத்தார்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உடன்போன என் மகள் திரும்பி வந்துள்ளாள். அவளைக் காணலாம், வாருங்கள்' என நற்றாய், சுற்றத்தாரை அழைத்துச் சொல்லியது.

மாண்புஇல் கொள்கையொடு மயங்குதுயர் செய்த
அன்பில் அறனும் அருளிற்று மன்ற;
வெஞ்சுரம் இறந்த அம்சில் ஓதி,
பெருமட மான்பிணை அலைத்த
5 சிறுநுதல் குறுமகள் காட்டிய வம்மே.

தெளிவுரை

"மாண்பில்லாத கொள்கையோடு நான் மிகவும் மயங்குமாறு துயரத்தினைச் செய்த அன்பில்லாத அறமும் இன்று அன்பிற்கும் மேற்பட்ட அருளைச் செய்துள்ளது. அழகிய கூந்தலையும், சிறிய நெற்றியையும் கொண்டவளாய்த் தன் அழகிய கண்களால் பெண்மானை வென்றவளாகிய என் மகள், வெம்மையான காட்டுவழியைக் கடந்து சென்றாள். அவள் மீண்டு வந்துள் ளதைக் காண்பதற்கு வாருங்கள்!"

கருத்து

'உடன்போக்கில் சென்ற மகள் வந்துகொண்டிருக்கிறாள்; வாருங்கள், அவளைக் காணலாம்.'

குறிப்பு

தலைவிக்குத் தமரானவரிடம் சொல்லாமல் தலைவியைத் தலைவன் தன்னுடன் அழைத்துச் சென்றது, 'அன்பில்லாத அறன்'.

பெண் கேட்டு மறுத்ததால் தலைவன் தலைவியை உடன் அழைத்துச் சென்றது, 'அறன்'.

உடன்போக்கில் சென்ற தலைவி, திரும்பி, பெற்றோரையும் உறவினரையும் காண வந்தது, 'அருள்' காட்டும் செயல்.

சொற்பொருள்

1. மாண்பு இல் கொள்கை - மாண்பு இல்லாத கொள்கை; மாண்பு - பெண்ணுக்கு உரியவர்கள் உரியவனுக்குக் கொடுக்கக் கொள்ளுகின்ற முறை.
2. அன்பில் அறன் - அன்பில்லாத அறன் - தலைவியைத் தலைவன் அவளுக்குத் தமரானவரிடம் சொல்லாமல் கூட்டிச் செல்வது அறம் அன்று.

3. வெஞ்சுரம் - வெம்மையான காடு; இறந்த - கடந்த; அம்சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தல்.
4. பெருமட - மிகுந்த மடப்பமுள்ள; மான்பிணை அலைத்த - பெண்மானை வென்ற.
5. காட்டிய - காட்டுவேன்; வம் - வாருங்கள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 398 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் மீண்டு வந்துழி அவட்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

உடன் போக்கிலிருந்து தலைவி மீண்டபோது தோழி அவளிடம் கூறியது.

'புள்ளும் அறியாப் பல்பழம் பழுனி,
மடமான் அறியாத் தடநீர் நிலைஇ,
சுரம்நனி இனிய ஆகுக' என்று
நினைத்தொறும் கலிழும் என்னினும்
மிகப்பெரிது புலம்பின்று தோழி!நம் ஊரே.

தெளிவுரை

"தலைவி! உன்னை நினைக்குந்தோறும் நீ செல்லும் காட்டுவழி, பறவைகளும் அறியாப் பழமரங்கள் நிரம்பி, இளமான் கூட்டமும் கண்டறியாத பெரிய நீர்நிலைகள் நிரம்பப்பெற்று, செல்வதற்கு இனிமையுடையதாகட்டும்" என்று வாழ்த்தினேன். உன் பிரிவை நினைந்து கண்ணீர் விட்டழுதேன். என்னைக் காட்டிலும் நம்மூர் மிகப் பெரிதாய் அழுதது.

கருத்து

'தலைவியே! நீ செல்லும் வழி அரிய பழங்கள் கொண்டதாயும், இனிய நீர் நிலைகள் கொண்டதாயும் அமையவேண்டுமெனக் கண்களில் நீர் மல்க

விரும்பியிருந்தேன்' எனத் திரும்பிய தலைவியிடம் தோழி தெரிவிக் கிறாள்.

குறிப்பு

பறவைகள் அறியாப் பழங்கள் இல்லை; அப்பறவைகளும் இதுவரையில் சுவைத்தறியாத பழ வகைகள் தலைவி செல்லும் சுரவழியில் நிறைந்திருக்கவேண்டுமென்றும், நீரற்ற பாலை வழியில், மழை பெய்து, மான்களும் இதுவரை கண்டறியா இனிய நீர்நிலைகள் நிரம்பி இருக்க வேண்டும் என்றும் தோழி வேண்டினாள். வழியில் பசித்தபோது உண்ணவும், நீர் வேட்கையுற்றபோது குடிக்கவும் எவ்வித இடையூறுமின்றித் தலைவி செல்ல வேண்டும் எனத் தோழி மனமார விரும்பினாள்.

சொற்பொருள்

1. புள் - பறவை; பல்பழம் - பல வகையான பழங்கள்; பழுனி - நிறைந்து.
2. மடமான் - இளமான்; தடநீர் - அகன்ற நீர் நிலைகள்; நிலைஇ - நிலைபெற்று.
3. நனி இனிய ஆகுக - மிகவும் இனிமை வாய்ந்ததாகட்டும்.
4. கலிழும் - அழும்.
5. புலம்பின்று - வருந்தியது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 280 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

புணர்ந்துடன் போகிய தலைமகன் தலைமகளைக் கரணவகையான் வரைந்தானாக எதிர்சென்ற தோழிக்கு, 'இனி, யாம் இவளை மணந்தமை நுமர்க்கு உணர்த்த வேண்டும்'என்றானாக அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தன்னுடன் கூட்டிச் சென்ற தலைவன் அவளைத் தன்னூரில் முறைப்படி மணந்துகொண்டு அவளோடு திரும்பினான். அவளை உடன்போக்கிய தோழியைக் கண்ட தலைவன், "இப்போது

தலைவியை நான் மணந்துகொண்டேன். இச்செய்தியை உன்னைச் சார்ந்தவர்களுக்கு நீ தெரிவிக்க வேண்டும்" என்றான். அதற்குத் தோழி கூறியது.

கருவிரல் மந்திக் கல்லா இவன்பார்ப்பு
இருவெதிர் ஈர்ங்கழை ஏறி, சிறுகோல்
மதிபுடைப் பதுபோல் தோன்றும் நாட!
வரைந்தனை நீஎனக் கேட்டுயான்
உரைத்தனென் அல்லெனோ அஃதுஎன் யாய்க்கே.

தெளிவுரை

கரிய விரல்களைக் கொண்ட மந்தியின் அறியாமையுள்ள வலிய குட்டி, பெரிய பச்சை மூங்கிலின் வானளாவிய உச்சியில் ஏறித் தொங்கிக்கொண்டிருக்கும்; அக்காட்சி சிறிய கோலைக் கொண்டு வானத்தில் ஊரும் மதியைக் குரங்குக்குட்டி அடிப்பது போலத் தோன்றும் காட்சி கொண்ட மலைநாடனே! நீ தலைவியை முறைப்படி மணந்துகொண்டாய் என்பதை நான் கேள்வியுற்றதும் என் தாய்க்கு அதை முன்னரே தெரிவித்து விட்டேன்.

கருத்து

'நீ என் தலைவியை மணந்ததைக் கேள்வியுற்று அதனை முன்னரே என் தாய்க்குத் தெரிவித்துவிட்டேன்' எனத் தலைவனிடம் தோழி கூறுகிறாள்.

குறிப்பு

குரங்குக்குட்டி மூங்கில்மீது ஏறி மதியை அடிப்பதுபோலத் தோன்றும் நாடு என்றது, மதியைக் குரங்குக்குட்டி அடிப்பதுபோலத் தோன்றுவது ஒரு தோற்றமேயன்றி மதிக்கு எப்பாதிப்பும் இல்லை. அதுபோல், தலைவன் தலைவியை உடன்போக்காய் அழைத்துச் சென்றது தலைவியின் குடிக்கு மறு உண்டாக்கும் செயலாய் முதலில் தோன்றினாலும், பின்பு தலைவன் தலைவியை மணந்து கொண்டான் என்னும் செய்தி பெரும் மகிழ்ச்சிக்குக் காரணமாயிற்று என்பதாம்.

சொற்பொருள்

1. மந்தி - பெண் குரங்கு; கல்லா - தன் தொழிலை நன்கு கற்றிலாத; இவன்பார்ப்பு - வலிய குட்டி.

2. இருவெதிர் - பெரிய மூங்கில்; ஈர்ங்கழை - முற்றாத பச்சையான மூங்கில்.
3. மதி புடைப்பதுபோல் - திங்களைத் தட்டுவதுபோல.
4. வரைந்தனை - திருமணம் செய்துகொண்டதனை.
5. உரைத்தனென் - உணர்த்திவிட்டேன்; சொல்லிவிட்டேன்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 392 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போய் மீண்டுவந்த தலைமகள் வழிவரல் வருத்தம் கண்டு ஆற்றாளாகிய தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் உடன்போக்கில் தன் இல்லம் கொண்டுசென்று மணந்த பின், தலைவியோடு அவள் தாய்வீட்டிற்குத் திரும்பினான். தலைவி வழிநடையால் ஏற்பட்ட வருத்தம் கண்டு, தோழி வருந்தினாள். அது கண்டு தலைவி தோழியிடம் கூறியது.

வேய்வனப்பு இழந்த தோளும், வெயில்தெற
ஆய்கவின் தொலைந்த நுதலும், நோக்கிப்
பரியல் வாழி, தோழி! பரியின்,
எல்லைஇல் இடும்பை தரூஉம் –
நல்வரை நாடனொடு வந்த மாறே.

தெளிவுரை

தோழியே! நல்ல மலைநாடனோடு நான் சென்று திரும்பி யுள்ளேன். பாலை வழியில் வெயில் காய்ந்து வருத்தியதால் மூங்கில் போன்றிருந்த என் தோள்கள் வனப்பிழந்துவிட்டன; என் நெற்றியும் கருகிவிட்டது. அவற்றை நோக்கி நீ வருந்தாதே! நீ வருந்தினால் அஃது எல்லையற்ற துன்பத்திற்கு ஏதுவாகும்.

கருத்து

தலைவனோடு சென்று திரும்பியுள்ள என் தோள்கள் வனப்பிழந்திருப்பதையும் நெற்றி சுருங்கியிருப்பதையும் கண்டு வருந்தாதே!

குறிப்பு

நீ வருந்தினால், தலைவன் இதற்குக் காரணம் தான்தான் என எண்ணி வருந்துவன்; தாய் தந்தையரும் சுற்றத்தாரும் வருத்தம் கொள்வர். வெயிலில் வாடியதால் இவ்வனப்பினை இழக்க நேரிட்டது. இப்போது வீடு திரும்பிவிட்டேன். இனி எவ்வித வருத்தமும் இல்லையாதலால், இழந்த வனப்பை வெகுவிரைவில் எய்திவிடுவேன். அதனால் வருத்தமின்றி மகிழ்வுடன் இரு.

சொற்பொருள்

1. வேய் வனப்பு - மூங்கில் போன்ற அழகு; வெயில் தெற - வெயில் தாக்க.
2. ஆய் கவின் - தெளிவான அழகு; தொலைந்த - கெட்டுப்போன; நுதல் - நெற்றி.
3. பரியல் - வருந்தாதே; பரியின் - வருந்தினால்.
4. எல்லை இல் - எல்லையற்ற; இடும்பை - துன்பம்.
5. நல் வரை நாடன் - நல்ல மலைநாட்டுத் தலைவன்; வந்தமாறே - வந்தமையால்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 312 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போயின தலைமகள் மீண்டு வந்துழி, 'நின் ஐயன்மார் பின்துரந்து வந்தவிடத்து நிகழ்ந்தது என்னை?' என்ற தோழிக்கு, நிகழ்ந்தது கூறித் தலைமகன் மறைதற்கு உதவி செய்த மலையை வாழ்த்தியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனோடு உடன்போயின பின்னர்ச் செய்தியறிந்த அவள் தமையன்மார் அவர்களைத் தேடிச்சென்று மீண்டனர். திருமணத்திற்குப் பின்னர்த் தலைவி மீண்டபோது தோழி தலைவியை நோக்கி, 'நீங்கள் சென்ற பின்னர் உன் தமையன்மார் துரத்தி வந்தனரே, அப்பொழுது என்ன நிகழ்ந்தது?' என்று கேட்டபோது தலைவி அவளிடம் சொல்லியது.

அறம்சா லியரோ! அறம்சா லியரோ!
வறன்உண் டாயினும், அறம்சா லியரோ!
வாள்வனப் புற்ற அருவிக்
கோள்வல் என்,ஐயை மறைத்த குன்றே.

தெளிவுரை

"ஒளியோடு அழகு பொருந்திய அருவிகளைக் கொண்ட குன்று ஒன்று. அஃது அறம் நிறைந்து வாழ்க! துரத்தி வந்த என் உடன்பிறந்தாரிடம் அகப்படாமல் எம்மை மறைத்துக் காப்பாற்றிய அக்குன்று, உலகமே வறட்சியால் வாடினாலும் நீர் வளம் குறையாது அறம் நிறைந்து வாழட்டும்" என்று தலைவி கூறினாள்.

கருத்து

'என் தமையன்மார் தேடி வந்தபோது தலைவன் மறைந்துகொள்ள உதவிய அறமுடைய குன்றமே! நீ வளமெலாம் நிறைந்து வாழி' எனத் தலைவி குன்றத்தை வாழ்த்துகிறாள்.

குறிப்பு

தலைவியைத் தலைவன் உடன்போக்கில் இட்டுச் சென்றான். அவர்களைத் தலைவிக்குத் தமையன்மார் பின்தொடர்ந்து தேடிச் சென்றனர். அவர்கள் கண்ணிற்பட்டால் அவர்கள் தலைவியைத் தலைவனிடமிருந்து பிரித்து அழைத்துச் செல்வர்; அன்றியும், தலைவன் உயிர்க்குக் கேடு நேர்தலும் கூடும். அவ்வாறே பெருவீரனான தலைவனால் அவள் தமையன்மார்க்கு ஏதம் நிகழ்தலும் கூடும். எது நிகழ்ந்தாலும் அது தலைவியின் கற்புக்கு அழிவாதல் ஒருதலை. இந்நிலையில் தலைவன் தலைவியொடு மலை மறைவில் மறைந்துகொண்டான். அவள் தமையன்மாரும் திரும்பிச் சென்றனர். கேடு ஏதும் நிகழாமல் தலைவன்

மறைந்துகொள்ளப் பயன்பட்ட மலையின்மீது தலைவிக்குப் பேரன்பு உண்டாயிற்று. அதனால் நன்றிப்பெருக்கால் அதனை மனங்குளிர வாழ்த்தினாள்.

சொற்பொருள்

1. சாலியர் - நிறைக.
2. வறன் - வற்றிவிடும் கடுங்கோடை.
3. வாள் வணப்பு - ஒளி பொருந்திய அழகு.
4. கோள் வல் என் ஐ - நினைத்த காரியத்தை முடிப்பதில் வல்லவனான என் தலைவன்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 203 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

உடன்போய் மீண்ட தலைமகள், 'நீ சென்ற நாட்டுநீர் இனிய அல்ல. நீ எங்ஙனம் நுகர்ந்தாய்?' எனக் கேட்ட தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் சென்ற தலைவி, திருமணம் நிறைவேறியதும் தாய்வீடு திரும்பினாள். அவளைப் பார்த்து, 'நீ சென்ற நாட்டில் நல்ல குடிநீர் இல்லையே! நீ எங்ஙனம் நீர் அருந்தினாய்?' என்று கேட்ட தோழியிடம் தலைவி கூறியது.

அன்னாய், வாழி!வேண்டு அன்னை!நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய, அவர்நாட்டு
உவலைக் கூவல் கீழ
மான்உண்டு எஞ்சிய கலிழி நீரே.

தெளிவுரை

தோழியே! நான் சொல்வதை விரும்பிக் கேள்! தலைவன் நாட்டில் தாழ்வான பள்ளங்களில் தேங்கி நிற்கும் நீரில் இலைகள் உதிர்ந்து மட்கியிருக்கும். ஆழத்தில் கிடக்கும் அந்நீரும் விலங்குகள் உண்டு கலக்கிய எச்சில் நீர்; அக்கலங்கல்

நீரைக் கையால் அள்ளிக் குடித்தேன். அது நம் தோட்டத்துத் தேன் கூடுகளிலிருந்து எடுத்த தேனை, நம் வீட்டுப்பாலுடன் கலந்து பருகுவதைக் காட்டிலும் இனியதாய் இருந்தது.

கருத்து

தலைவன் இனியனாதலின் அவன் நாட்டுக் கலங்கல் நீரும் இனிதாயிற்று.

சொற்பொருள்

1. அன்னாய் - தோழியே! வேண்டு - விரும்பிக் கேள்; படப்பை - தோட்டம்.
2. தேன் மயங்குபால் - தேன் கலந்த பால்.
3. உவலைக் கூவல் - தாழ்வான பள்ளம்; கீழ - அடியில் உள்ள.
4. எஞ்சிய - மிஞ்சிய; கலிழி நீர் - கலங்கல் நீர்.

தலைவன் கூற்று

அகநானூறு 261 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

புணர்ந்து உடன் போயினகாலை, இடைச்சுரத்துப் பட்டதனை மீண்டு வந்த காலத்துத் தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் இடையூறு மிகுந்தது. அதனால் தலைவியைத் தன்னுடன் அவள் தமர் அறியாமல் தன் ஊருக்கு அழைத்துச் சென்ற தலைவன், மீண்டும் தலைவியின் இல்லம் வந்தான். அப்பொழுது தோழியிடம் தலைவன், தான் தலைவியை அழைத்துச் சென்றபோது இடைவழியில் நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியைக் கூறியது.

கானப் பாதிரிக் கருந்தகட்டு ஒள்வீ
வேனில் அதிரலொடு விரைஇ, காண்வர,
சில்ஐங் கூந்தல் அழுத்தி, மெல்இணர்த்
தேம்பாய் மராஅம் அடைச்சி, வான்கோல்

இலங்குவளை தெளிர்ப்ப வீசி, சிலம்புநகச்
சில்மெல் ஒதுக்கமொடு மென்மெல இயலி,நின்
அணிமாண் சிறுபுறம் காண்கம்; சிறுநனி
ஏகுஎன, ஏகல் நாணி, ஒய்யென
மாகொள் நோக்கமொடு மடம்கொளச் சாஅய்,
நின்றுதலை இறைஞ்சி யோளே; அதுகண்டு,
யாம்முந் துறுதல் செல்லேம், ஆயிடை
அருஞ்சுரத்து அல்கி யேமே– இரும்புலி
களிறுஅட்டுக் குழுமும் ஓசையும், களிபட்டு
வில்லோர் குறும்பில் ததும்பும்,
வல்வாய்க் கடுந்துடிப் பாணியும் கேட்டே.

தெளிவுரை

தோழி! (நானும் தலைவியும் உடன்போக்காகச் சென்ற வழியில்) பெரிய புலி ஒன்று யானை ஒன்றைக் கொன்று முழங்கியது; வில்லினையுடைய மறவர் தம் சிற்றூரில், கள்ளுண்டு மகிழ்ந்ததால் வலிய முகத்தைக்கொண்ட அவர்கள் உடுக்கையை அடித்து ஒலி எழுப்பினர். இவ்வோசைகளைக் கேட்டுத் தலைவி அஞ்சுவாள் என்று கருதி, வேறு வழியில் செல்ல முடிவு செய்து, அந்த வழியைக் காட்டித் தலைவியிடம், "ஐந்தாய் வகுக்கப்பட்டு அணி செய்யப்பட்டுள்ள உன் கூந்தலில், வேனிற்காலத்தில் காட்டில் பூத்துள்ள பாதிரியின் கரிய புற விதழைக்கொண்ட பூவைச் சூடியுள்ளாய். அதனுடன் மல்லிகை மலரையும் செருகியுள்ளாய்; கொத்தாய் உள்ள தேன் சிந்தும் மெல்லிய வெண்கடம்ப மலர்களையும் அணிந்துள்ளாய். திரண்ட ஒளி வாய்ந்த பெரிய கைவளைகள் கலகலவென்று ஒலிக்க, காலில் சிலம்பு அசைந்து இன்னிசை எழுப்ப, நீ மெல்ல மெல்ல நட. உன் முதுகின் மாண்புற்ற அழகைக் கண்டு நான் மகிழ்வேன்" என்றேன். அவள் உடனே நாணம் முகத்தில் கவிய, மான் போன்ற மருண்ட பார்வையோடு சற்று விலகி நின்று தலைகுனிந்தாள். அதுகண்டு நான் அவள் முன்னே செல்லுதலை விடுத்தேன். அங்கேயே சிறிது நேரம் தங்கியிருந்தோம்.

கருத்து

"யானையைக் கொன்று புலி ஆர்ப்பரிக்கும் ஒலியையும், காட்டில் வாழ்வோர் கள்ளுண்டு மகிழ்ந்து எழுப்பிய உடுக்கை ஒலியையும் கேட்டுத் தலைவி அஞ்சுவாள் என்று கருதி, 'இளமகளே! உன் அழகிய முதுகைப் பார்த்து அகமகிழ்வேன்; நீ முன்னே செல்' என்றேன். என் மொழி கேட்டுத் தலைவி நாணமுற்று மானொத்த நோக்குடன் மருண்டு ஒருபுறமாய் விலகி நின்று தலை சாய்த்தாள். அதனைப் பார்த்து நானும் முன்னே செல்வதை விடுத்தேன். அவ்வழியிலே சிறிது நேரம் தங்கியிருந்து பிறகு சென்றோம்" எனத் தலைவன் தோழியிடம் கூறினான்.

சொற்பொருள்

1. கானம் - காடு; பாதிரி - ஒரு மலர்; தகடு - பூவின் புறஇதழ்; ஒள் வீ - ஒளி பொருந்திய மலர்.
2. அதிரல் - காட்டுமல்லிகை; விரைஇ - கலந்து; காண்வர - காணும் படியாய்.
3. ஐங்கூந்தல் - ஐந்தாய்ப் பகுத்து அணி செய்யப்பட்ட கூந்தல்; அழுத்தி - செருகி.
4. மராஅம் - வெண்கடம்பு; அடைச்சி - சூடி; வான் கோல் - பெரிய திரண்ட.
5. தெளிர்ப்ப - ஒலிக்க; வீசி - கையை வீசி; நக - மென்மையாய் ஒலிக்க.
6. ஒதுக்கம் - இயக்கம்; இயலி - நடந்து.
7. அணிமாண் - அழகு மாண்புற்ற; சிறுபுறம் - முதுகு; சிறுநனி - சிறிது தூரம் (முன்னே).
8. ஏகு - நட; ஒய்யென - விரைவாய்.
9. மா - மான்; மடம் - மடப்பம்; சாஅய் - விலகி நின்று.
10. இறைஞ்சி - குனிந்து.
11. முந்துறுதல் - முன்னே செல்லுதல்; செல்லேம் - செல்லாது.
12. அல்கியேம் - தங்கினோம்.
13. அட்டு - கொன்று; குழுமும் - முழங்கும்; களிபட்டு - கள்ளுண்ட மகிழ்ச்சியால்.
14. வில்லோர் - வில்லினை உடையவர்; குறும்பு - சிற்றூர்; ததும்பும் - ஒலிக்கும்.
15. துடி - ஒரு வகைப் பறை (உடுக்கை); பாணி - ஒலி.

ஏறு தழுவுதல்

வலிய காளையினை அடக்கி வயப்படுத்துதல்.

முல்லை நிலத் தலைவன் தான் குறித்த தலைவியை மணந்து கொள்வதற்கு அவள் உறவினர் விடுத்த காளையை அடக்கி அவ்வெற்றிக்குப் பரிசாக அத்தலைவி யைக் கொள்ளுதல்.

ஏறு தழுவுதல்

ஏறு தழுவுதல் என்பது ஒரு வீர விளையாட்டு. ஏறு என்பது பொதுவாய் விலங்கினங்களுள் ஆணைக் குறிக்கும். ஆனால், இங்கு அது காளை மாட்டைக் குறிக்கிறது. இவ்விளையாட்டு முல்லை நிலத்தில் ஆயரினத்த வரிடையே நடைபெற்றதைக் கலித்தொகை விரிவாய்க் கூறுகிறது. ஏறு தழுவி வெற்றி கொண்டவனை ஆய மகளிர் மணப்பதே அக்கால வழக்கமாயிருந்தது.

ஆயர் குடும்பத்தில் பெண்குழந்தை பிறந்ததும் காளைக்கன்று ஒன்றை வளர்க்கத் தொடங்குவர். அப்பெண் பருவம் அடையுங்காலத்தில் அக்கன்றும் வளர்ந்து வலிமை வாய்ந்ததாய்த் திகழும். தனிக்கவனம் செலுத்தி அக்காளையை வளர்த்து வருவராதலின் அது, தன்னை அடக்க இயலாத வீரம் கொண்டதாய் விளங்கும். எவன் ஒருவன் அக்காளையை அடக்குகின்றானோ அவனுக்கே அப்பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதாய்ப் பெண்ணைப் பெற்றோர் அறிவிப்பர்.

குறிப்பிட்ட நாளில் ஆய மாந்தர் ஏறு தழுவும் களத்தில் கூடுவர். பெண்களைப் பெற்றோர், தாம் வளர்த்த காளைகளை அங்குக் கொண்டுவந்து, அவை தங்க வேண்டிய இடத்தில் (தொழுவத்துள்) நிறுத்துவர். காளைகளின் கொம்புகளைச் சீவி நன்றாய்க் கூர்மைப் படுத்துவர். தொழுவத்துள் நறுமணப் புகை எழுப்பப்படும். ஏறு தழுவ வந்த வீரர்களும் அங்குக் குழுமியிருப்பர்.

பெண்கள் தங்களுக்கென அமைக்கப்பட்டுள்ள பரண்கள்மீது ஏறி நின்று, ஏறு தழுவுதலைக் காண்பர்.

பறையொலி எழுந்ததும் ஒவ்வொரு காளையாய் ஓட விடுவர். வீரர்கள் காளையின் கழுத்தில் தொங்கி, மேலேறி, கொம்பை மடக்கியும், திமிலை

இறுக்கியும் காளையின் வலிமையை இழக்கச்செய்வர். சில காளைகள் தங்களை அவ்வாறு செய்யவிடாது வீரர்களைக் கொம்புகளால் குத்தி, கீழே வீழ்த்தி, மிதித்துச் சிதைக்கும். பெண்ணொருத்திக்கு என வளர்க்கப்பட்டு, ஏவப்பட்ட காளையை அப்பெண்ணின்மீது காதல் கொண்டவன் அடக்குவான். அவனுக்குத் தம் பெண்ணை மணமுடித்துத் தர அவள் பெற்றோர் ஒப்புவர்.

ஏறு தழுவுதல் முடிவுற்றதும் ஆயர்களும் ஆயமகளிரும் குரவைக் கூத்தாடித் தம் மன்னனை வாழ்த்தித் தெய்வத்தை வணங்குவர். ஏறு தழுவுதல்பற்றிய இச்செய்திகள் கலித்தொகையில் முல்லைக்கலியில் இடம் பெற்றுள்ளன.

ஏறு தழுவுதல் இன்றும் தமிழகத்தில் அலங்காநல்லூர் போன்ற ஊர்கள் பலவற்றில் நடைபெற்று வருகின்றது. அன்றுபோல் இன்று பெண்களை மணப்பதற்காக ஏறு தழுவுதல் நடைபெறவில்லை. அவ்வழக்கம் மறைந்து விட்டது. இன்று அஃது ஓர் வீர விளையாட்டாய் நடைபெறுகிறது. அவ்விளையாட்டில் பெருங்காயங்கள் ஏற்படலாம்; ஏன், உயிரே போதலும் நிகழும் என்னும் நிலையிருந்தும் இந்த விளையாட்டைப் பழமையைப் போற்றுதல் எனும் கருத்தில் நடத்தி வருகின்றனர்.

காளையை அடக்கியவர்க்கு அன்றுபோல இன்று மகளைத் தருவதில்லை. மாறாய் அவர்களை மாவீரர்கள் என்று பாராட்டி, ஊரார் பெரும் பரிசுகள் தருகின்றனர். ஏறு தழுவுதல், ஏறுகோள் என்னும் பெயராலும் வழங்கப்பட்டு வருகிறது.

ஏறு தழுவுதல் வடமொழியிலுள்ள எண்வகை மணங்களுள் 'ஆசுரம்' என வழங்கப்படுகிறது. 'ஆசுரமாவது கொல்லேறு கோடல், திரிபன்றி எய்தல், வில்லேற்றுதல் முதலிய செய்து மகட்கோடல்' என்பார், நச்சினார்க்கினியார்.

தோழி கூற்று

கலித்தொகை 101 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர், ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே" என்னும் நூற்பாவில் (தொல். பொருள். 21) 'திணைநிலைப்பெயராகிய கிழவரும் கிழத்தியரும் உளர்' என்னும் விதியாற்கொண்ட அத்தலைமகளுக்கு, அவள் தோழி ஆயர் ஏறு தழுவுகின்றமை காட்டி, அவள் அதுகண்டு வருந்தாமல், ஆண்டுப்பெற்ற நன்னிமித்தம் கூறித் தெளிவித்து, அதனை அவ்விதியாற்கொண்ட தலைமகற்கும் கூறி, மீட்டும் அத்தலைமகளுக்கு, தம் சுற்றத்தார் கூறி யிருக்கும் கூற்றினையுங்கூறி, தலைமகனும் இன்னும் ஒரு ஞான்று ஏறு தழுவி நம்மை வரைந்துகொள்வன் என்று ஆற்றுவித்தது.

(ஆயர் வேட்டுவர் .... உளரே (தொல். பொருள் 21) : 'அகப்பாடலில் வரும் திணைமாந்தர் பெயர், ஆயர் என ஆ காத்தலால் வரும் தொழிலால் வரும் பெயரும், வேட்டுவர் என வேட்டையாடுதலால் வரும் பெயரும் ஆண்பாற்பெயர்களாகும். அந்நிலங்களுக்குரிய தலைமக்களும் உளர் என்பது' இத்தொல்காப்பியச் சூத்திரத்தின் பொருள்.)

கூற்று விளக்கம்

தலைவிக்குத் தோழி, ஆயர் ஏறு தழுவினமை காட்டி, அது கண்டு அவள் வருந்தாமல் இருக்க, அங்குத் தான் பெற்ற நன்னிமித்தங்களைக் கூறினள். தம் சுற்றத்தார் கூறிய கூற்றினையும் தெரிவித்து, 'தலைவன் பின்னும் ஒருநாள் வந்து ஏறு தழுவி, உன்னை வரைந்துகொள்வான்' என்று கூறித் தலைவியை ஆற்றுவித்தனள்.

தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற்கு அரும்புஈன்று,
முளிமுதல் பொதுளிய முட்புறப் பிடவமும்;
களிபட்டான் நிலையேபோல் தடவுபு துடுப்புஈன்று
ஞெலிபுஉடன் நிரைத்த ஞெகிழ்இதழ்க் கோடலும்;
மணிபுரை உருவின காயாவும்; பிறவும்
அணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்
மாறுஎதிர் கொண்டதம் மைந்துடன் நிறுமார்

சீறரு முன்பினோன் கணிச்சிபோல் கோடுசீஇ
ஏறுதொழூஉப் புகுத்தனர் இயைபுடன் ஒருங்கு.

அவ்வழி, முழக்கென இடியென முன்சமத்து ஆர்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவருபு ஈண்டி
நறையொடு துகள்எழ, நல்லவர் அணிநிற்பத்,
துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ.

மேற்பாட்டு உலண்டின் நிறன்ஒக்கும் புன்குருக்கண்
நோக்குஅஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டுஇடைக் கொண்டு குலைப்பதன் தோற்றம்காண்,

அம்சீர் அசைஇயல் கூந்தற்கை நீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண்தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்.

சுடர்விரிந் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரிஅம் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் தோற்றங்காண்,

படரணி அந்திப் பசுங்கண் கடவுள்
இடரிய ஏற்றெருமை நெஞ்சுஇடந் திட்டுக்
குடர்கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்.

செவிமறை நேர்மின்னும் நுண்பொறி வெள்ளைக்
கதன்அஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி
நுதிநுனைக் கோட்டால் குலைப்பதன் தோற்றங்காண்,

ஆரிருள் என்னான் அருங்கங்குல் வந்துதன்
தாளின் கடந்துஅட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தோளின் திருகுவான் போன்ம்.

எனவாங்கு,

அணிமாலைக் கேள்வன் தரூஉமார் ஆயர்
மணிமாலை ஊதும் குழல்.

தலைவனிடம்

கடாஅக் களிற்றினும் கண்ணஞ்சா ஏற்றை
விடாஅதுநீ கொள்குவை யாயின், படாஅகை
ஈன்றன ஆயமகள் தோள்.

தலைவியிடம்

பகலிடக் கண்ணியன், பைதல் குழலன்
சுவல்மிசைக் கோல்அசைத்த கையன் அயலது
கொல்லேறு சாட இருந்தார்க்குஎம் பல்லிரும்
கூந்தல் அணைகொடுப்பேம் யாம்.

'கோளாளர் என்னொப்பார் இல்'என நம்ஆனுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்குஒருநாள்
கேளாளன் ஆகாமை இல்லை; அவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்.

ஆங்கு, ஏறும் வருந்தின, ஆயரும் புண்கூர்ந்தார்;
நாறிரும் கூந்தல் பொதுமகளிர் எல்லாரும்
முல்லையம் தண்பொழில் புக்கார் பொதுவரோடு
எல்லாம் புணர்குறிக் கொண்டு.

தெளிவுரை

(ஆயர்குல மாந்தர் ஏறு தழுவும் விழா எடுத்தனர்; வீரர்கள் ஏறு தழுவினர்; ஏறு தழுவும் ஒவ்வொரு வீரனைப் பற்றியும் தோழி தலைவியிடம் கூறுகின்றாள்.)

மழைக்காலம் நிகழ்கின்றது. கார்காலத் தொடக்கத்தே பெய்த முதல்மழையால் புன்செய்த் தோட்டங்களில், புறத்தே முள் கொண்டதும் அந்நாள்வரை உலர்ந்து கிடந்ததும் ஆகிய பிடவஞ்செடிகள், அடிப்பக்கம் தொடங்கி முற்றிலும் தழைத்து மலர்ந்தன. துடுப்புப் போன்ற அரும்புகளை மிகுதியாய்ப் பெற்ற காந்தள் செடிகள் மது அருந்தியவனைப் போல் அசைந்து ஆடி, நெருப்புச் சுடர்களை அடுக்கி வைத்தாற்போல மலர்ந்தன. காயாம் பூக்கள் நீலமணி போன்ற நிறத்துடன் மலர்ந்தன. இவற்றையும் பிற பூக்களையும் தலையில் சூடிய ஆயர்கள் (முல்லைநில மக்கள்) பலர் கூடித் தம் இனத்து இளைஞர் ஏறு

தழுவுதலில் போட்டியிட்டுத் தம் வலிமையை நிலை நிறுத்துவதற்காக, தம்முடைய காளைகளுக்கு யாராலும் வெல்ல இயலாத உருத்திரக்கடவுளின் மழுவினைப் போலக் கொம்புகள் தோன்றுமாறு கூர்மையாய்ச் சீவிக் களத்தில் ஒன்றாய் நிறுத்தினர்.

ஏறு தழுவுதற்குரிய போட்டியில் ஈடுபட ஆயர்குடி இளைஞர் அங்கு இடி முழக்கம் என ஆரவாரித்து, களத்தின் முற்பகுதியில் அடுத்தடுத்து வந்து கூடினர். ஒருபுறம் மணமும் தூசியும் எழுமாறு பெண்கள் வந்து கூடினர். (போட்டி தொடங்கியதும்) இளைஞர்கள் நீர்த்துறை, ஆலமர நிழல், மராமர நிழல் ஆகியவற்றில் உள்ள தெய்வங்களை வணங்கிக் களத்தில் பாய்ந்தனர்.

அப்போது **தோழி**, "தலைவியே! பட்டுப்பூச்சியின் சாம்பல் நிறம் கொண்ட ஒரு காளையின் கூர்மையான பார்வைக்கு அஞ்சாமல் பாய்ந்த பொதுவனை, அது அவன் சாகுமாறு தனது கொம்பால் குத்திக் குலைக்கும் காட்சியைப் பார். அது திரௌபதியின் அழகிய கூந்தலைப் பற்றியிழுத்த துச்சாதனனைப் போர்க்களத்தில், பகைவர் நடுவே நெஞ்சைப் பிளந்து, பழி முடித்த வீமனைப் போலத் தோன்றுகிறது.

"நெற்றியில் சந்திரனைப் போன்ற சுழிகொண்ட கருநிறக் காளை ஒன்று, பொதுவன் ஒருவனின் குடல் வெளிப்படுமாறு குத்திக் குலைக்கும் காட்சியைப் பார். அக்காட்சி, ஊழி முடிவில் உமையொருபாகனாகிய சிவபெருமான், அந்நாள்வரை உயிர்களைக் கவர்ந்துகொண்டிருந்த எருமையை ஊர்தியாய்க் கொண்ட எமனை நெஞ்சு பிளந்து கொன்று, குடலைப் பேய்களுக்கு இட்ட காட்சியைப் போல உள்ளது.

"காதுகளுக்குப் பின்புறம் செம்புள்ளிகள் அமைந்த வெள்ளை நிறக் காளை ஒன்று, தனது சினத்தைக் கண்டு அஞ்சாமல் பாய்ந்த பொதுவனைத் தன் கொம்பின் முனையால் குத்திக் குலைக்கும் காட்சியைப் பார். அஃது அசுவத்தாமன் தன் தந்தை துரோணரைக் கொன்ற சிகண்டியை நள்ளிருளில் சென்று, போரிட்டு வென்று, தலையைத் திருகிக் கொன்றதைப் போல உள்ளது.

"இவ்வாறு ஏறுகள் அஞ்சத்தக்கனவாய் இருப்பினும், மாலை நேரத்தில் ஆயர் ஊதும் இக்குழலோசை, காயாம்பூவாற்செய்த மாலையினை அணியும் இயல்பு கொண்ட தலைவனை நமக்குத் தருவதற்கு நன்னிமித்தமாய் அமைகின்றது" என்று தலைவியிடம் கூறினாள்.

பின் தலைவனைத் **தோழி** நோக்கி, "(பெரும) மதநீர் பொழியும் யானையைவிட அஞ்சாமை கொண்ட காளையை நீ தழுவி அடக்கினால் அந்த வெற்றி உனக்கு இத்தலைவியின் தோளைப் பெற்றுத் தரும்" என்றும் கூறினாள்.

தலைவியிடம் **தோழி**, "பகல் நேரத்தில் மலரும் பூக்களால் தொடுத்த கண்ணியைச் சூடியவன்; வருத்த உணர்வை எழுப்பும் இசையைக் குழலில் ஊதுபவன்; கோலைப் பிடரில் வைத்துக் கொள்பவன் என்னும் இவர்களுள் தழுவுவதற்கு அரிய இக்காளையை அடக்குபவர் எவரோ, அவர்க்கு எம் மகளின் கூந்தலில் துயிலும் இல்வாழ்க்கையை அளிப்போம் என்று நம் சுற்றத்தார் அறிவித்துள்ளனர்.

"நான் முன்னர்க் கூறிய நன்னிமித்தம் அன்றி, தலைவனைக் கண்ட நம் கண்களுள் இடப்புறக் கண் துடித்தது. அதனாலும், 'காளையை அடக்குவதில் எனக்கு இணையாவார் இலர்' என்று, நம் பசுக்கூட்டத்திலே நின்று தன் வலிமையை எடுத்துக் கூறும் அவன் என்றேனும் ஒரு நாள் ஏறு தழுவி, நம்மைப் பெறாமல் போகமாட்டான்" என்றாள்.

"இப்பொழுது காளைகளும் சோர்ந்தன. ஆயரும் அவற்றால் பெரிதும் புண்பட்டனர். மகளிர் அனைவரும் தத்தம் தலைவரோடு கூடிக் களிக்க, முல்லைப்பூக்கள் மலர்ந்து விளங்கும் சோலையில் விளையாடப் புகுந்தனர். யாமும் அங்கு விளையாடச் செல்வோம், வா" என்று கூறித் தோழி, தலைவியை அழைத்துச் செல்லுகிறாள்.

கருத்து

'தலைவன் ஏறு தழுவி எவ்வாறேனும் தலைவியை மணப்பான்' என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

ஆயர்குலத் தலைவி, தன் தோழியுடன் ஏறு தழுவிடும் இடத்திற்குச் செல்கிறாள். வீரர்கள் பிடவம்பூ, செங்காந்தள்பூ, காயாம்பூ ஆகியவற்றை அணிந்துள்ளனர். புதல்வியரை ஈன்ற ஆயர்கள், தாம் வளர்த்த எருதுகளைக் கொண்டுவந்து, கொம்பு களைச் சீவிக் கூர்மையாக்கி, ஏறு தழுவும் இடத்திற்குச் செலுத்தினர். ஏறு தழுவும் இடத்தினைத் தொழுவம் என்பர். ஏறு தழுவுமிடத்தில் நறுமணப்புகை உண்டாக்கினர். ஏறுகளான காளைகளால் எழுந்த தூசு தொழுவமெங்கும் படர்ந்தது. அந்த ஏறுகளைத் தழுவி அடக்குவோரை மணம் செய்துகொள்ள இருக்கும் ஆயர் மகளிரும் தொழுவத்திற்கு ஒரு பக்கம் வரிசையாய்ப் பரண்மீது நிற்கின்றனர். காளைகளை அடக்க விரும்பிய வீரர்கள் தொழுவத்துள் பாய்ந்தனர்.

ஒரு காளை தன்னைத் தழுவிய ஒருவனைச் சாகடித்துக் கொம்பில் குத்தித் தூக்கிக்கொண்டிருக்கிறது; அக்காளை பட்டுப்பூச்சி நிறத்தில் இருக்கிறது. பொதுவன் ஒருவன் (ஆயர் இன வீரன்) காரி ஏற்றைத் தழுவ, அஃது அவனைக் குடல் சரியக் குத்திக் குலைத்துக்கொண்டிருக்கிறது. இதேபோல வெள்ளை நிறக் காளை ஒன்றும் வீரன் ஒருவனைச் சிதைத்துக்கொண் டிருக்கிறது.

தோழி, தன் தலைவி காதல் கொண்ட காதலனிடம் சென்று, "யானையைக் காட்டிலும் அஞ்சாத இயல்பினைக் கொண்ட காளையை நீ அடக்கி வெற்றி பெறவேண்டும்; இப்பொழுது அதற்கான நன்னிமித்தங்களும் காண்கிறேன்" என்றாள். பின்பு, தலைவியை அணுகி, 'தலைவன் காளையைத் தழுவி உன்னை அடைதல் உறுதி' என்று கூறினாள்.

"ஏறு தழுவிய வெற்றிக்களிப்புடன் இருக்கும் வீரர்கள், தம்மை விரும்பி ஏற்கவுள்ள ஆய மகளிருடன் முல்லை படர்ந்த சோலையில் விளையாடச் செல்கின்றனர். நாமும் சோலைக்குச் சென்று விளையாடுவோம், வா" என்று தலைவியிடம் தோழி கூறினாள்.

பூக்கள்

1. *பிடவஞ்செடிகள், மழைக்காலத்தில், முள்ளைப் புறத்தே கொண்டு விளங்கும் அரும்புகளை ஈன்றன.*

2. *காந்தள் பூ, தீக்கடை கோலால் கடைந்து உண்டாக்கப் பட்ட நெருப்பைப்போல ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். பூவின் அரும்பு வளைந்த துடுப்பைப் போன்றது. அது காற்றில் அசைவது கள்ளுண்டு களித்தவன் அசைந் தாடுவதை ஒத்துக் காணப்பட்டது.*

3. *காயாம் பூ நீலமணியைப் போன்ற நிறம் கொண்டது.*

தொன்மக் கருத்துகள்

1. *சிவப்பட்ட ஏறுகளின் கொம்பு, அரிய வலிமை கொண்ட இறைவனான சிவபெருமானின் குந்தாலிப்படை எனப் படும் மழுவினைப்போல விளங்கிற்று.*

2. *பாண்டவர் சூதாடித் தோற்றபோது, திரௌபதியின் கூந்தலைத் துச்சாதனன் பற்றியிழுத்தான். அப்பொழுது வீமன் வஞ்சினம் கூறினான். அவன் கூறியவாறே, பாரதப் போரில் துரியோதனனது தொடையைப் பிளந்தான். அந்த வீமனைப் போன்ற தோற்றம் கொண்டிருந்தது, ஒரு காளை.*

3. *தன்மீது பாய்ந்த வீரனை ஒரு காளை தன் கொம்புகளால் குத்திக் குடல் சரியக் கொன்றது. இக்காட்சி, பார்வதியை ஒரு பாகமாய்க் கொண்டிருக்கும் சிவபெருமான், ஊழிக் காலத்தில், எருமையை வாகனமாய்க் கொண்ட எமனின் நெஞ்சைப் பிளந்து, கூளிப் பேய்க்குப் பலியாய்த் தந்தது போல இருந்தது.*

4. *ஒரு காளை, வீரன் ஒருவனைத் தன் கொம்பினால் குத்திக் கொன்றது. இது, பாரதப்போரில் அசுவத்தாமன் தன் தந்தை துரோணரைக் கொன்ற சிகண்டியை வென்று, அவன் தலையைத் திருகிக் கொன்றதுபோல இருந்தது.*

சொற்பொருள்

1. தளி - மழை; தலைப்பெயல் - முதல் மழை.
2. முளி - உலர்ந்த கிளை; பொதுளிய - நிறைந்த, தழைத்த; பிடவம் - பிடவ மலர்.
3. துடுப்பு ஈன்று - துடுப்புப் போன்ற அரும்பை ஈன்று.
4. ஞெலிபு - கடைந்து; கோடல் - காந்தள்.
5. காயா - காயா மலர்.
6. மலைந்த - சூடிய, அணிந்த.
7. மாறு - (ஏறு தழுவும் போட்டியில்) எதிர்கொள்ளுதல்; மைந்து - வலிமை.
8. முன்பினோன் - சிவபெருமான்; கணிச்சி - மழு; கோடுசீஇ - கொம்பினைச் சீவி.
9. ஏறு - காளை; தொழூஉ - தொழு - ஏறு தழுவும் களம், தொழுவம்.
10. முன் சமம் - ஏறு தழுவுதற்குரிய களத்தின் நடுப்பகுதி.
11. வழக்கு - இயக்கம்; மாறுகொள்ளல் - எதிர் நின்று மடக்குதல்; வருபு வருபு - வந்து வந்து; ஈண்டி - சேர்ந்து.
12. நறை - நறுமணப்புகை; நல்லவர் - அழகிய மகளிர்; துகள் - புழுதி.
13. ஆலம் - ஆல மரம்; மராஅம் - வெண்கடம்பு மரம்.
14. பராஅய் - தொழுது.
15. மேற்பாட்டு - உயர்ந்த கொம்பு; உலண்டு - பட்டுப்பூச்சி.
16. பொதுவன் - ஆயர் குலத்துதித்த வீரன்.
17. குலைத்தல் - அழித்தல்.
18. அசையியல் - அசையும் இயல்புள்ள; கூந்தல் - திரௌபதியின் கூந்தல்; கை நீட்டியான் - கை நீட்டிய துச்சாதனன்.
19. நேரார் - பகைவர்; நடுவண் - நடுவே.
20. வஞ்சினம் - சூளுரை.
21. சுடர் - திங்கள்; சுரி - சுழி; காரி - கரிய நிறமுள்ள காளை.
22. விடர் - மலைப்பிளப்பு (மலைப்பிளப்பில் மலர்ந்த மலரால் தொடுத்த தலைமாலையினை அணிந்தவன்).
24. அந்திப் பசுங்கண் கடவுள் - அந்தி நிறமும் பசுமை நிறமும் கொண்ட கடவுள் - சிவபெருமான் (அந்தி நிறம் - சிவன் நிறம்; பசுமை நிறம் - உமை நிறம்).
25. எருமை - எருமையை ஊர்தியாய்க் கொண்ட எமன்; இடந்திடுதல் - பிளத்தல்.

26. கூளி - பேய்; ஆர்த்துவான் - உண்ணும்படியாய்த் தருவான்.
27. செவிமறை - காதிற்குப் பின்புறம்.
28. கதன் - சினம்.
29. நுதி நுனை - கூரிய முனை.
31. தந்தையைக் கொன்றான் - துரோணனைக் கொன்ற சிகண்டி.
32. திருகுவான் - (தலையைத் திருகிய) அசுவத்தாமன்.
34. அணிமாலை - நீலமணிபோலும் காயாம்பூவால் தொடுத்த மாலை; கேள்வன் - துணைவன்.
36. கடாஅம் - மதம்; கண்ணஞ்சல் - அஞ்சுதல்.
37. படாஅகை - வெற்றிக்கொடி.
39. பகலிடக் கண்ணியன் - பகற்பொழுதிலே அலர்ந்த மலர்களால் தொடுக்கப்பட்ட தலைமாலையைக் கொண்டவன்; பைதல் - துன்பம்.
40. சுவல் - பிடர்.
41-42. பல்லிருங் கூந்தல் - அடர்ந்த கரிய கூந்தல்.
43. கோளாளன் - காளையைக் கொள்பவன்.
44. தாளாண்மை - வீரம்.
45. கேளாளன் - உறவினன், கணவன்.
46. வேளாண்மை செய்தன கண் - இடப்புறக்கண் துடித்தது. (வேளாண்மை - உதவி).
47. புண் கூர்ந்தார் - புண் மிக்கார்.
48. பொது மகளிர் - ஆய மகளிர்.
50. புணர்குறி - சேர்தற்குரிய நிமித்தம்.

சுற்றத்தார் கூற்று

கலித்தொகை 102 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

ஆயன் தலைமகனாய் ஏறு தழுவினமை சுற்றத்தார் கண்டு நின்று கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனாய ஆயன், தலைவியைக் காதலித்து, அவள்பொருட்டு நடந்த விழாவில் ஏற்றினைத் தழுவி வென்றான். இது கண்ட சுற்றத்தார் மகிழ்ந்து கூறியது.

தலைவன் கூற்று

கண்அகல் இருவிசும்பில் கதழ்பெயல் கலந்துஏற்ற
தண்நறும் பிடவமும் தவழ்கொடித் தளவமும்
வண்ணவண் தோன்றியும் வயங்குஇணர்க் கொன்றையும்
அன்னவை பிறவும் பன்மலர் துதையத்
தழையும் கோதையும் இழையும் என்றிவை
தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளையாடும்
மடமொழி ஆயத் தவருள் இவள்யார்? 'உடம்போடு
என்உயிர் புக்கவள் இன்று.'

பாங்கன் கூற்று

ஓஒ இவள், பொருபுகல் நல்ஏறு கொள்பவர் அல்லால்
திருமாமெய் தீண்டலர் என்று கருமமா
எல்லாரும் கேட்ப அறைந்துஅறைந்து எப்பொழுதும்
சொல்லால் தரப்பட் டவள்.

பெற்றோர் கூற்று

சொல்லுக, பாணியேம் என்றார்; அறைகஎன்றார்; பாரித்தார்
மாணிழை ஆறாகச் சாறு.

ஏறு தழுவுதல்

சாற்றுள், பெடையன்னார் கண்பூத்து நோக்கும்வாய் எல்லாம்
மிடைபெறின் ஏராத் தகைத்து.
தகைவகை மிசைமிசைப் பாயியர் ஆர்த்துஉடன்

எதிரெதிர் சென்றார் பலர்.
கொலைமலி சிலைசெறி செயிர்அயர் சினஞ்சிறந்து
உருத்தெழுந்து ஓடின்று மேல்.
எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர் பலர்.
அவருள், மலர்மலி புகல்எழ அலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ
எருத்தோடு இமிலிடைத் தோன்றினன், தோன்றி
வருத்தினான் மன்றஅவ் ஏறு.

ஏறுஎவ்வம் காணா எழுந்தார் எவன்கொலோ
ஏறுடை நல்லார் பகை.

மடவரே நல்லாயர் மக்கள், நெருநல்
அடல்ஏற்று எருத்துஇறுத்தார்க் கண்டுமற்று இன்றும்
உடல்ஏறு கோள்சாற்று வார்.

குரவைக் கூத்து

ஆங்குஇனித்,
தண்ணுமைப் பாணி தளராது எழூஉக;
பண்அமை இன்சீர்க் குரவையுள் தெண்கண்ணித்
திண்தோள் திறல்ஒளி மாயப்போர் மாமேனி
அம்துவர் ஆடைப் பொதுவனோடு ஆய்ந்த
முறுவலாள் மென்தோள்பா ராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்தது உரை.

தெளிவுரை

இளம் மகளிர் பலர் ஓரிடத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர்.

அம்மகளிர், விரிவுகொண்ட விண்ணிலிருந்து பொழிந்த பெருமழையின் காரணமாய் நறுமணம் மிக்க பிடவ மலர்கள், தவழும் கொடிகளில் மலர்ந்த முல்லை மலர்கள், நெருப்புப்

போன்ற நிறம் கொண்ட காந்தள் பூக்கள், கொத்தாய் மலர்ந்த கொன்றை மலர்கள் ஆகிய இம்மலர்களையும் இன்னும் இவை போன்ற மலர்களையும் மிகுதியாய்ச் சேர்த்துத் தழையாடை, கோதையாடை, இழையாடை எனத் தழையும் பூக்களும் கலந்த ஆடை வகைகளை உண்டாக்கி உடுத்தியிருந்தனர்.

தலைவன் அவருள் ஒருத்தியைத் தன் தோழனுக்குக் காட்டி, "மேனி அழகால் என்னை ஈர்த்து என் உயிரினுள் புகுந்து கொண்ட இவள் யார்?" என்று கேட்டான்.

தலைவன் கூறியதைக் கேட்ட **தோழன்**, "ஓஒ! அவளா? 'போர் புரிவதில் விருப்பமுள்ள சிறந்த ஒரு காளையைத் தழுவுவோனை அன்றிப் பிறர், அழகிய இவளது மாநிற மேனியைத் தீண்டுதற்கு உரியவர் அல்லர்' என்று இவள் சுற்றத்தார் பறையறைந்து அனைவரும் அறியுமாறு அறிவிப்புச் செய்துள்ளனர்" என்று கூறினான்.

அது கேட்ட **தலைவன்**, "யான் அந்த ஏற்றினைத் தழுவி இவளைக் கொள்வேன் என்பதை அவள் பெற்றோரிடம் சொல்" என்று கூறினான்.

தலைவன் சொன்னதைக் கேட்ட தலைவியின் **பெற்றோர்**, 'ஏறு தழுவும் விழாவினை நடத்த யாம் காலந்தாழ்த்த மாட்டோம்' என்று கூறியதோடு, 'சிறந்த அணிகலன்களை அணிந்துள்ள இந்தப் பெண்ணின் காரணமாய் ஏறு தழுவும் விழா நடைபெறும்' என்று எங்ஙனும் பறையறையச் செய்தனர்.

ஏறு தழுவுதல்

விழாவில் பெண்புறாக்களை ஒத்த மகளிர் கண் மலர்ந்து நோக்கும் இடமெல்லாம் அவர்கட்குத் தெரியுமாறு பரண்கள் அழகுற அமைக்கப்பட்டன.

வகைவகையாய் நிறுத்தப்பட்டுள்ள அழகிய காளைகளின் மீது பாய்வதற்கு இளைஞர் பலர் ஆரவாரத்துடன் அக் காளைகளின் எதிரே சென்று குழுமினர். அக்காளைகளும், கொன்று குவிக்கும் வில்லைப்போல், அவர்களைக் கொல்ல அதிக அளவு சினத்துடன் அவர்கள்மீது கொடுமையோடு பாய்ந்தன.

எங்கும் தூசிகள் பறந்தன. பாய்ந்த காளைகளின் கொம்பைத் தம் மார்பில் ஏற்பதற்கு இளைஞர்கள் ஆயத்தமாய் நின்றனர்; காளைகளும் அவர்களைக் கீழே தள்ளி, அவர்கள் மார்புகளை நோக்கிக் கொம்புகளைத் தாழ்த்தின. அதைக் கண்டு பலரும் கலக்கம் கொண்டனர்.

பெண் ஒருத்திக்காக ஏவப்பட்ட ஏறு ஒன்றன் கழுத்தை, அப்பெண்மீது காதல் கொண்ட இளைஞன் மிக்க விருப்பத் தோடு தன் தடந்தோள்களால் இறுகத் தழுவி, அதன் மீது ஏறி, திமிலைப் பற்றியிழுத்து வருத்தி, அக்காளையின் வலிமையை அடக்கினான்.

அந்தப் போரில் மிகவும் துன்புற்று நின்றது, காளை. அதன் உரிமையாளர் அத்துன்பத்தைப் பார்க்கப் பொறாது சினத்தோடு எழுந்து நின்றார். காளையை அடக்கியவனிடம் மகிழ்தல் அன்றிப் பகை கொள்வது ஏனோ என்றனர், சிலர்.

கொல்லும் குணங்கொண்ட காளையை நேற்றும் ஒருவன் அடக்கினான். அதைக் கண்டிருந்தும் இன்றும் மீண்டும் காளையோடு இளைஞர் பொருது தழுவலாம் என்று பறையறைந்த ஆயர்கள் அறியாமை கொண்டவர்தாமோ?

குரவைக்கூத்து

ஏறு தழுவுதல் வெற்றியுடன் நடைபெற்றதைச் சிறப்பிக்கும் வகையில் அவ்வூர் மன்றத்தில் பண்ணும் தாளமும் பின்னணி யாய் அமையக் குரவைக்கூத்து நிகழ்கின்றது. அதில் மகளிர், கரிய மேனியும் துவராடையும் கொண்ட திறமைமிக்க பொதுவன், ஏற்றினைத் தழுவிய தோள்வீரத்தையும், அச்செயலால் மகிழ்ந்து விளங்கிய தலைவியின் மெல்லிய தோளையும் பாராட்டிப் பாடி ஆடினர். 'இங்குத் திருமணமுரசின் ஓசை இடைவிடாது ஒலிக்கட்டும்' எனத் தலைவிக்குச் சுற்றத்தார் கூறி மகிழ்ந்தனர்.

கருத்து

வீரமிக்க இளைஞன் ஒருவன், தான் விரும்பிய பெண்ணுக்காக வளர்க்கப்பட்ட ஏற்றினை அடக்கி வென்று, அவளை அடைந்தான்.

விளக்கம்

இளமகளிர் பலர் விளையாடுமிடத்தில், வீரன் ஒருவன், பெண் ஒருத்தியைக் காட்டி 'என் உள்ளம் கொண்ட இவள் யார்?' என்று தன் தோழனிடம் கேட்டான்.

அதைக் கேட்ட தோழன், 'இவள் தோளைத் தழுவவேண்டுமாயின், இவள் பெற்றோர் வளர்த்து வரும் கொடிய போரேற்றை அடக்கி வெற்றி கொள்ள வேண்டும்' என்றான்.

தலைவன், 'நான் அந்த ஏற்றைத் தழுவ முன்வந்துள்ளேன்; இதனை அவள் பெற்றோரிடம் சொல்' என்றான்.

பெற்றோர் ஏறு தழுவும் விழாவுக்கு ஏற்பாடு செய்து, 'எம் ஏற்றினை அடக்குவோர் எவரே ஆயினும் அவற்கு எம் மகளை மணமுடித்துத் தருவோம்' என்றனர்.

ஏற்றினை வெற்றி கொள்ள விரும்பிய வீரர் பலர் கூடினர். சீறிய ஏறு ஓடி வர, வீரர்கள் பலரும் சீறிப் பாய்ந்தனர்; களமெங்கும் தூசி படர்ந்தது; வீரர்கள் தத்தம் மார்பை எருதிற்கு எதிரே காட்டினர். ஏறு தன் கொம்பினைக்கொண்டு குத்தியது.

அந்த ஏறு எந்தப் பெண்ணுக்காக ஏவப்பட்டதோ, அவளை விரும்பிய வீரன், அக்காளையின் திமில்மீது ஏறி அதனை அடக்கினான். தலைவியைப் பெற்றோர் தம் மகளுக்கு ஏற்ற வீரன் மணாளனாய்க் கிடைத்ததில் மகிழ்ச்சி கொண்டனர்.

ஆயர்கள் குரவைக்கூத்து நிகழ்த்தி, வெற்றி கொண்ட வீரனைப் பாராட்டி, 'தலைவிக்கு ஏற்ற தலைவன் இவனே' என்று வாழ்த்தி மகிழ்ந்தனர்.

சொற்பொருள்

1. கண்அகல் - இடம் அகன்ற; கதழ் பெயல் - விரைந்து பெய்யும் மழை; கலந்து - தம்மிடத்தே கலத்தலினாலே; ஏற்ற - (அதனை) ஏற்று நின்ற.

2-3. பிடவம், தளவம் (முல்லை), தோன்றி (காந்தள்), கொன்றை - இவை மலர் வகைகள்; வண்ணவன் - (நெருப்புப் போன்ற) மிகுந்த அழகு கொண்ட.

4. துதைய - நெருங்கும்படி.
5. தழை, கோதை, இழை - இவை தழையும் பூக்களும் கலந்த ஆடை வகைகள்.
6. தைஇனர் - தொடுத்தனர்; திளைஇ - இன்பத்தில் மூழ்கி.
9. பொருபுகல் - பொருதற்கு விரும்பும்.
10. தீண்டலர் - சேரார்.
12. சொல்லால் தரப்பட்டவள் - (பறையறிவிப்புச்) சொல்லாலே அறிவிக்கப்பட்டவள்.
13. பாணியேம் - தாழ்த்திரேம்; பாரித்தார் - செய்தி பரப்பினர்.
14. ஆறாக - காரணமாய்; சாறு - விழா, ஏறு தழுவும் விழா.
15. பெடை - பெண் புறா; நோக்கும்வாய் எல்லாம் - பார்க்குமிடம் எல்லாம்.
16. மிடைபெறின் - பரண்கள் அமைக்கப்பெற்றால் (மிடை - பரண்); ஏராத் தகைத்து - அழகுடையதாயிருக்கும்.
17. தகை - அழகு; வகை - காளைகளின் வகைப்பாடு; பாயினர் - பாய்வதற்காக; ஆர்த்து - ஆரவாரித்து.
19. சிலை - வில்; செயிர் அயர் - குற்றம் புரிதல்.
20. உருத்தெழுந்து - சினம் கொண்டு எழுந்து.
21. துகள் - தூசி.
23. மருப்பு - கொம்பு.
25. மலர்மலி புகல் - மலர்தல் நிறைந்த விருப்பம் (மலரும் விருப்பத்தோடு எதிர்பார்க்குமாறு); புகல் எழ - (அவள்மேல் உள்ள) விருப்பம் தூண்டுதலாய் அமைய; பிணைஇ - தழுவி.
26. இமில் - திமில்.
28. ஏறு எவ்வம் - தம் ஏறு பட்ட துன்பம்.
30. மடவர் - அறிவற்றவர்; நெருநல் - நேற்று.
31. அடல் - கொல்லுதல்; எருத்து - கழுத்து.
32. ஏறுகோள் - ஏறு தழுவுதல்; சாற்றுவார் - அறிவிப்பவர்.
34. தண்ணுமைப் பாணி - பண்ணமைந்த இனிய தாளம் கொண்ட.
35. குரவை - குரவைக்கூத்து.
36. திறல் - வலிமை, வீரம்.
37. அம் துவர் ஆடை - அழகிய செந்நிற (காவி) ஆடை; பொதுவன் - வீரன்.
39. பரத்தல் - மிகுதல்; உரை - புகழ்.

தோழி கூற்று

கலித்தொகை 103 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

ஆயர் ஏறு தழுவி நின்றமையைத் தோழி தலைமகளுக்குத் தனித்தனியே காட்டி, பின்னர் அவர் ஏறு தழுவிவிட்டுக் குரவையாடுகின்றமையும் கூறி, 'ஆண்டு யாமும் சென்று உன்னை ஏறு தழுவிக் கோடற்கு நிற்கின்ற தலைமகன் கேட்டு ஏறு தழுவிக்கொள்ளுமாறு நமக்குச் சுற்றத்தார் கூறிக்கிடக்கின்ற முறைமையைப் பாட்டிலே தோன்றப் பாடிக் குரவையாடி, 'வழுதி வாழ்க' என்று தெய்வம் பராவுதும்; நீயும் அங்ஙனம் பாடுதற்குப் போதுவாயாக' எனக் கூறியது.

கூற்று விளக்கம்

ஆயர், ஏறு தழுவிய பாங்கினைத் தோழி தலைவிக்குத் தனித்தனியே காட்டினாள். ஏறு தழுவிய பின்னர்க் குரவைக்கூத்து நிகழ்கின்றதையும் கூறினாள். தலைவன் விரைந்து ஏறு தழுவி மணந்துகொள்ள வேண்டும் என்று தலைவன் கேட்குமாறு குரவையுள் வேண்டி நிற்கின்றனர். "நாமும் குரவை ஆடி, 'வழுதி வாழ்க' என்று அரசனை வாழ்த்தித் தெய்வத்தையும் வணங்குவோம்; நீயும் வருக" என்று தோழி தலைவியிடம் கூறியது.

மெல்லிணர்க் கொன்றையும் மென்மலர்க் காயாவும்
புல்இலை வெட்சியும் பிடவும் தளவும்
குல்லையும் குருந்தும் கோடலும் பாங்கரும்,
கல்லவும் கடத்தவும் கமழ்கண்ணி மலைந்தனர்,
பல்ஆன் பொதுவர் கதழ்விடை கோள்காண்மார்
முல்லை முகையும் முருந்தும் நிரைத்தன்ன
பல்லர், பெருமழைக் கண்ணர், மடம்சேர்ந்த
சொல்லர், சுடரும் கனங்குழைக் காதினர்
நல்லவர் கொண்டார் மிடை.
அவர்மிடை கொள;
மணிவரை மருங்கின் அருவி போல
அணிவரம்பு அறுத்த வெண்காற் காரியும்,

மீன்பூத்து அவிர்வரும் அந்திவான் விசும்புபோல்
வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையும்,
கொலைவன் சூடிய குழவித் திங்கள்போல்
வளையுபு மலிந்த கோடுஅணி சேயும்
பொருமுரண், முன்பின் புகல்ஏறு பலபெய்து
அரிமாவும் பரிமாவும் களிறும் கராமும்
பெருமலை விடரகத்து ஒருங்குடன் குழீஇப்,
படுமழை ஆடும் வரையகம் போலும்
கொடுநறை சூழ்ந்த தொழூஉ.

தொழுவினுள், புரிபுரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின ஏறு.

ஏற்றின், அரிபரிபு, அறுப்பன, சுற்றி
எரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்கண்
உருவ மாலை போலக்
குருதிக் கோட்டொடு குடர்வ லந்தன.

கோட்டொடு சுற்றிக் குடர்வலந்த ஏற்றின்முன்
ஆடிநின்று அக்குடர் வாங்குவான் பீடுகாண்;
செந்நூற் கழிஒருவன் கைப்பற்ற, அந்நூலை
முந்நூலாக் கொள்வானும் போன்ம்.

இகுளை! இஃதுஒன்று கண்டை! இஃதுஒத்தன்!
கோட்டினத்து ஆயர் மகனன்றே? மீட்டுஓரான்,
போர்புகல் ஏற்றுப் பிணர்எருத்தில் தத்துபு
தார்போல் தழீஇ யவன்.

இகுளை! இஃதுஒன்று கண்டை; இஃதுஒத்தன்,
கோவினத்து ஆயர் மகனன்றே? ஓவான்
மறையேற்றின் மேலிருந்து ஆடித் துறைஅம்பி
ஊர்வான்போல் தோன்று மவன்.

தொழீஇஇ! காற்றுப்போல் வந்த கதழ்விடைக் காரியை
ஊற்றுக் களத்தே அடங்கக்கொண்டு, அட்டு,அதன்
மேல்தோன்றி நின்ற பொதுவன் தகைகண்டை,

ஏற்றுஎருமை நெஞ்சம் வடிம்பின் இடந்திட்டுச்
சீற்றமோடு ஆருயிர் கொண்டஞான்று இன்னன்கொல்?
கூற்றுஎன உட்கிற்றுஎன் நெஞ்சு.

இகுளை! இஃதுஒன்று கண்டை; இஃதுஒத்தன்,
புல்லினத்து ஆயர் மகனன்றே? புள்ளி
வெறுத்த வயவெள்ளேற்று அம்புடைத் திங்கள்
மறுப்போல் பொருந்தி யவன்.

ஓவா வேகமோடு உருத்துத்தன் மேற்சென்ற
சேஎச் செவிமுதற் கொண்டு பெயர்த்துஒற்றும்
காயாம்பூங் கண்ணிப் பொதுவன் தகைகண்டை,
மேவார் விடுத்தந்த கூந்தல் குதிரையை
வாய்பகுத் திட்டுப் புடைத்தஞான்று இன்னன்கொல்?
மாயோன்என்று உட்கிற்றுஎன் நெஞ்சு.

ஆங்கு, இரும்புலித் தொழுதியும் பெருங்களிற் றினமும்
மாறுமாறு உழக்கியாங்கு உழக்கிப் பொதுவரும்
ஏறுகொண்டு ஒருங்குதொழூஉ விட்டனர்; விட்டாங்கே
மயில்எருத்து உறழ்அணி மணிநிலத்துப் பிறழப்
பயில்இதழ் மலருண்கண்
மாதர் மகளிரும் மைந்தரும் மைந்துற்றுத்
தாதெரு மன்றத்து அயர்வர் தழூஉ.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்.

அஞ்சார் கொலையேறு கொள்பவர் அல்லதை
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர்துறந்து
நைவாரா ஆயமகள் தோள்.

வளியா அறியா உயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்கு
எளியவோ ஆயமகள் தோள்?

விலைவேண்டார் எம்இனத்து ஆயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்.
ஆங்கு,

குரவை தழீஇயாம் மரபுளி பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்
மாசில்வான் முந்நீர்ப் பரந்த தொல்நிலம்
ஆளுங் கிழமையொடு புணர்ந்த
எம்கோ வாழியர்இம் மலர்தலை உலகே.

தெளிவுரை

பசுக்கள் பலவற்றிற்கு உரிமை கொண்டவரான ஆயர், மலைச் சாரலிலும் காட்டிலும் மலர்ந்த கொன்றை, காயா, வெட்சி, பிடவம், முல்லை, கஞ்சங்குல்லை, குருந்து, கோடல், பாங்கர் முதலிய பூக்களால் தொடுத்த தலைமாலையைச் சூடி, ஏறு தழுவுதலைக் காண வந்தனர். ஆயர் மகளிர் பலரும் முற்படவே வந்து பரண்களில் அமர்ந்தனர். அம்மகளிர் முல்லை அரும்பை யும், மயிற்பீலியின் அடிப்பகுதியையும் வரிசைப்படுத்தி வைத்தது போன்ற பற்களைக் கொண்டவராயும், குளிர்ந்த பார்வை கொண்டவராயும், மடப்பம் பொருந்திய சொற்களைக் கொண்டவராயும் இருந்தனர்; மகரக்குழைகளையும் அணிந் திருந்தனர்.

ஆயர்கள் தத்தம் ஏறுகளைத் தொழுவத்துள் செலுத்தினர். மலை அருவிபோல் அழகின் எல்லை மீறிய வெண்ணிறக் கால்களைக் கொண்ட காரி நிறக்காளை, ஒளி வீசும் அந்திச் செவ்வானத்தில் விண்மீன்கள் பூத்து விளங்குவன போலச் சிவந்த உடலில் வெண்புள்ளிகளுடன் விளங்கும் செவலைக்காளை, அழித்தற்கடவுளாகிய சிவபெருமான் சூடிய இளம்பிறைபோல வளைந்த கொம்புகளைக்கொண்ட செந்நிறக்காளை ஆகியவை உள்ளிட்ட காளைகள் பலவற்றையும் கொண்டுவந்து தொழு வத்துள் ஒன்றாய் நிறுத்தினர். அவை வலிமையுடன் போரிடும் பகைக்குணம் கொண்டவையாய் நின்றன.

காளைகள் பலவும் புகுந்ததால் தொழுவத்துள் புகைப்படலம் எழுந்தது. அப்போது, அத்தொழுவம் மேகங்கள் தவழும் மலைக் குகை ஒன்றில் சிங்கமும் குதிரையும் யானையும் முதலையும் ஒன்றாய்க் கூடி இயங்குவன போன்று காட்சியளித்தது.

"ஏறுகளைத் தழுவத் தொழுவினுள்ளே விரும்பி விரும்பிக் குதித்த பொதுவர்களை அவ்வேறுகள் தெரிந்து தெரிந்து குத்தி, அவர்கள் குடலை அறுத்துத் தம் கொம்புகளில் சுற்றிக் கொண்டன. இக்காட்சி, ஒளிமிகுந்த மழு ஆயுதம் கொண்ட சிவபெருமான் தன் சடையில் சூடிக்கொண்டுள்ள பிறைச் சந்திரனிடத்துச் செந்நிற மாலை கிடப்பதுபோல இருப்பதைப் பார்" எனத் தோழி தலைவிக்குக் காட்டுகிறாள்.

"தலைவியே! இப்போரில் காளை குத்தி எடுத்துத் தன் கொம்பில் சுற்றிக்கொண்ட தனது குடலை அதன் கொம்பி லிருந்து தன் இரு கைகளாலும் எடுத்து, மீண்டும் தன் வயிற்றில் இடுகின்ற வீரனின் பெருமிதத் தோற்றத்தைப் பார்! இக்காட்சி சிவந்த நூலைக் கொண்ட கழி ஒன்றை ஒருவன் தன் இரு கைகளாலும் பிடித்துக்கொள்ள, அந்த நூலை மற்றொருவன் மூன்று மூன்று புரிகள் கொண்ட நூலாய் எடுத்துக்கொள்வது போல் தோன்றுகிறது.

"தலைவியே! வீரன் ஒருவன் போர்க்குணம் கொண்ட ஏற்றின் கழுத்தில் பாய்ந்து அதனைத் தழுவிக்கொண்டு கிடப்பதைப் பார். அவன் அந்த எருதுக்குச் சூட்டப்பெற்ற மாலை போலத் தோற்றமளிக்கிறான். எருமைக்கூட்டத்தைச் செல்வமாய்க் கொண்ட ஆயர் குடும்பத்தைச் சேர்ந்த அவனது வலிமையைப் பார்! அவனால் அடக்கப்பட்ட காளை மீண்டும் தன் வலிமை யினைப் பெற இடம் கொடாமல் அதனை அவன் விடாமல் இறுகப் பற்றிக்கொண்டிருப்பதையும் பார்.

"தலைவியே! வேறு வீரன் ஒருவனின் வலிமையைப் பார். மச்சத்தைக் கொண்ட ஏற்றின்மேல் ஏறி வெற்றிக்களிப்பால் அதனைச் செலுத்துகின்ற அவன், ஆற்றில் உள்ள நீர்த்துறையில்

தெப்பத்தில் அமர்ந்து அதனைச் செலுத்துபவன் போலத் தோன்றுகின்றான். பசுக்கூட்டத்தைக் கொண்டுள்ள ஆயர் குடியைச் சார்ந்த அவ்விளைஞன் வீரம் இருந்தவாறு என்னே! அவன் பெருவீரன் என்பதால் அந்த ஏற்றை விட்டு அவன் எளிதாய் இறங்கிவிடவில்லை.

"தலைவியே! காற்றுப் போல் விரைந்து ஓடி வரும் சினம் மிக்க காரி நிறக் காளையைப் பார். தான் ஒருவனாய் அதன் வலிமையை அடக்கி வென்று, அக்காளையைவிட மேம்பட்ட பெருமிதத்தோடு நிற்கும்அவன் வீரத்தோற்றத்தையும் பார். எருமையை வாகனமாய்க் கொண்டுள்ள எமனின் நெஞ்சத்தைத் தனது கால்நகத்தினாலேயே பிளந்து அவனைக் கொன்ற சிவபெருமான் இவ்வாறுதான் தோன்றினானோ என்று என் நெஞ்சம் அச்சம் கொள்கிறது.

"தலைவியே! புள்ளிகள் நிறைந்த வெள்ளைக்காளையின் அழகிய மேனியின்மேல் தோன்றும் வீரனைப் பார். சந்திரனில் உள்ள மறுவைப் போல் அகலாது பொருந்தித் தோன்றுகின்ற அவன், ஆட்டுக்குழுவினைக்கொண்ட ஆயர் குடும்பத்து இளைஞன். அவன் வலிமைதான் என்னே!

"தலைவியே! வேகத்தோடு ஓடிவந்து, கோபத்துடன் தன் மேல் பாய்ந்த செவலைக்காளையின் கொம்பின் அடிப்பாகத்தை இறுகப் பற்றிக்கொண்டு, அதனைப் புரட்டி வென்று நிற்கும் காயாம் பூக்கண்ணி அணிந்துள்ள ஆயனின் மறப்பண்பைப் பார். பகைவர்கள் தன்னைக் கொல்லுமாறு விடுத்த பிடரிமயிர் கொண்ட குதிரையை, அதன் வாயைப் பிளந்து வென்றபோது, கண்ணன் இவ்வாறுதான் தோன்றினானோ?"

இவ்வாறு புலிக்கூட்டமும், யானைத்தொகுதியும் ஒன்றோடொன்று எதிர்த்துப் போரிட்டனபோல், ஏறுகளும் வீரர்களும் போரிட்ட அத்தொழுவினை விட்டு ஆயர் அனைவரும் வெளியேறுகின்றனர்.

அவர்கள் அகன்றதும் நீலமலர் போன்ற மை உண்ட கண்களைக் கொண்ட காதல் வாய்ந்த மகளிரும் அவர்தம் கணவரும் தம்மை ஒப்பனை செய்துகொண்டு, எருப்பொடிகள் நிறைந்த தெருவில் அமைந்த பொதுமன்றத்தில் குரவைக் கூத்தாடுவர்.

அக்குரவையில் அவர்கள் பாடிய பாடல்கள்

“கொல்லேற்றின் கொம்புக்கு அஞ்சுகின்றவனை இப்பிறவி யில் மட்டுமன்றி மறுபிறவியிலும் ஆயமகள் தழுவமாட்டாள்.

“ஆயர்குல மங்கையர், வீரமிக்க இளைஞர் ஏறு தழுவி உயிர் துறப்பினும், அதற்காக மனம் வருந்தமாட்டார். கொல்லும் தன்மை கொண்ட ஏற்றுக்கு அஞ்சாமல் அதனைப் பிடிக்கும் வீரர்களுக்கு மட்டுமே ஆய மகளிரின் தோள்கள் தழுவுவதற்கு வாய்க்கும்.

“ ‘காற்றுப்போல் போய்விடுவது உயிர்’ என்பதை உணராது அதனைப் பெரிதாய்க் கருதி அதனைப் பாதுகாக்க விரும்பிய வராய்க் காளையின் கொம்புக்கு அஞ்சும் நெஞ்சைக் கொண் டவர் தழுவுமளவுக்கு ஆய மங்கையர் தோள் எளியதன்று.

“கொல்லும் காளையின் கொம்புகளுக்கு இடையே, தாம் காதல் கொள்ளும் மகளிரின் முலைகளுக்கிடையே புகுவது போலப் பாயும் வீரர்களுக்குத் தம் மகளிரை மணம் செய்து கொடுத்தற்கு ஆயர்கள் விலை ஏதும் வேண்டார்.

“நாமும் குரவை ஆடும் இடத்திற்குச் சென்று, நமது மரபின் படி பாடி, குரவையாடி, ‘கடல் சூழ்ந்த, குற்றமற்ற, சிறந்த இப் பழைய நில உலகத்தை ஆளும் உரிமையுடைய எம் பாண்டிய மன்னன் இந்தப் பெரிய உலகத்தில் பல்லாண்டு வாழ்க’ என வாழ்த்தி, குறையாத சிறந்த புகழைக் கொண்ட தெய்வத்தையும் வணங்குவோம், வா” என்று தோழி தலைவியை அழைக்கின்றாள்.

கருத்து

ஏறு தழுவுதல் முடிந்த பின் ஆயமங்கையர் தம் மரபுப்படி குரவைக் கூத்தாடுவர். 'அஞ்சாது, ஏறு தழுவி வெல்லும் வீரனையே ஆய மகளிர் மணம் கொள்வர்' என்னும் கருத்தமைந்த பாடலைப் பாடி, கூத்தின் இறுதியில் தம் மன்னனை வாழ்த்தித் தெய்வத்தை வணங்குவர்.

விளக்கம்

பல்வேறு வகைப்பட்ட பூக்களைச் சூடி வீரர்கள் ஏறு தழுவும் களத்துக்கு வந்தனர். அக்களத்தில் பரண்கள் அமைக்கப்பட்டிருந்தன; அவற்றின்மீதிருந்து அழகிய மகளிர் ஏறு தழுவுதலைக் கண்டனர்.

ஆயர்கள் ஏறுகளைத் தொழுவத்துள் செலுத்தினர். பல்வேறு நிறம் கொண்ட காளைகள் புழுதிப்படலம் எழக் களத்துள் புகுந்தன. இன்னின்ன வீரர் தழுவப்போகின்றனர் என்பதை அறிந்துகொண்டன போன்று ஏறுகள் ஆய வீரர்களைத் தம் கொம்புகளால் குத்தின.

போரில் எருது ஒன்று, வீரன் ஒருவனைக் குத்தி, வயிற்றிலிருந்து குடலை உருவித் தன் கொம்புகளிடையே சுற்றிக் கொண்டது. அவ்வீரன் அந்த எருதுடன் பொருது, அதன் கொம்பிலிருந்த தன் குடலை எடுத்துத் தன் வயிற்றில் அதனைப் பொருத்திக்கொண்டான்.

ஏற்றின்மீது பாய்ந்த ஒருவன், அதன் கழுத்தைப் பிடித்துத் தொங்கினான். அஃது அந்த ஏற்றுக்குச் சூட்டப்பெற்ற மாலை போலக் காட்சியளித்தது.

ஏற்றின்மீது அமர்ந்து ஒருவன் சண்டையிடுவது, தெப்பத்தின் மீதமர்ந்து அதனைச் செலுத்துவதுபோலத் தோன்றியது.

காளையை அடக்கிய இன்னொருவன் எமனை அடக்கிய சிவபெருமான்போலக் காட்சியளித்தான்.

வெள்ளை எருதின்மேல் உள்ள ஒருவன், நிலவில் தோன்றும் களங்கத்தைப் போலக் காணப்பட்டான்.

குறிப்பு

1. சிவபெருமானின் மழுவாயுதம் ஏந்திய கோலமும், அப்பெருமான் மார்க்கண்டேயனின் உயிரைக் கொள்ள வந்த எமனை இடக்கால் பெருவிரல் நகத்தின் விளிம்பால் தள்ளிக் கொன்ற செய்தியும், கம்சன் ஏவிய குதிரையைக் கண்ணன் அதன் வாயைப் பிளந்து கொன்ற செய்தியும் இப்பாடலில் கூறப்பெறுகின்றன.

2. ஏறு தழுவும் விழாவில் ஆயர் இனத்து மங்கையர் பரண்மீதிருந்து, ஆடவர் நிகழ்த்தும் வீரச்செயல்களைக் கண்டு, அவருள் தம் மனம் விரும்புவோரைக் கணவராய் அடையக் கருதுவர்.

3. ஏறு தழுவும் ஆண்மை இல்லாத ஆடவனை ஆயர் இனத்து மகளிர் விரும்ப மாட்டார்.

4. தன் வயிற்றினின்றும் சரிந்த குடலைத் தாங்கித் தன் வயிற்றினுள் இட்டுக்கொண்டு மீண்டும் ஏறு தழுவினான் ஒருவன் என்பது, அவன் பெருவீரத்தைப் புலப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. மெல் இணர் - மெல்லிய பூங்கொத்து; காயா - காயாம்பூ.
2. புல் இலை - பொலிவற்ற இலை.

1-3. காயா, வெட்சி, பிடவம், தளவம் (முல்லை), (கஞ்சங்)குல்லை, குருந்து, கோடல், பாங்கர் என்பவை முல்லை நில மலர்கள்.

4. கல் - மலைச்சாரல்; கடம் - காடு; மலைந்தனர் - சூடினர்.
5. கதழ் - சினம்; விடைகோள் - ஏறு தழுவுதல்.
6. முருந்து - மயிற்பீலியின் அடிப்பகுதி.
7. பல்லர் - பற்களைக் கொண்டவர்; மடம் - மடப்பம்.
8. கனங்குழை - பொன்னால் செய்த மகரக்குழை.
9. நல்லவர் - அழகிய இளம் பெண்கள்; மிடை - பரண்.
11. மணிவரை - நீலமணி போலும் மலை.
12. அணி வரம்பு அறுத்த - அழகின் எல்லையைக் கடந்த; காரி - கருநிறக் காளை.
13. அவிர்வரும் - ஒளி வீசும்.
14. வான்பொறி - வெள்ளைப் புள்ளி.

15. கொலைவன் - அழித்தற்கடவுளாகிய உருத்திரன் (சிவபெருமான்).
16. வளையுபு - வளைந்த; சேய் - செந்நிற ஏறு.
17. முரண் - பகைக் குணம்; முன்பு - வலிமை.
18. அரிமா - சிங்கம்; பரிமா - குதிரை; களிறு - ஆண்யானை; கராம் - முதலை.
19. விடர் - மலைக்குகை.
20. படுமழை - மேகம்.
21. நறை - நறுமணம்; தொழூஉ - ஏறு தழுவும் களம்.
24. அரி - பகையான ஏறு; பரிபு - விரும்பி.
25. கணிச்சியோன் - மழுப்படை கொண்ட சிவபெருமான்.
26. உருவ மாலை - செந்நிற மாலை.
27. வலந்தன - சுற்றின.
29. ஆடி - வென்று; பீடு - பெருமை.
31. முந்நூலாக் கொள்வான் - மூன்று நூலாய் நூற்கின்றவன்.
32. இகுளை - தோழி; கண்டை - காண்க; ஒத்தன் - ஒருவன்.
33. கோடு + இனம் - கோட்டினம் - எருமைத்திரள் (கோடு - எருமை); ஓராஅன் - (ஏற்றினை அடக்குவதனின்று) நீங்கான்.
34. பிணர் - சொரசொரப்பு; தத்துபு - தொங்கிக்கொண்டிருக்கும்.
35. தழீஇயவன் - தழுவியவன்.
37. கோ - பசு; ஓவான் - (ஏறு தழுவுதலை) ஒழியான்.
38. மறை - மறு; துறை அம்பி - நீர்த்துறைப் படகு.
39. ஊர்வான் - (அமர்ந்து) தள்ளுபவன்.
41. ஊற்றுக்களம் - ஊறு படுதற்குக் காரணமாய (ஏறு தழுவும்) களம்.
43. வடிம்பு - ஓரம், விளிம்பு; இடந்திட்டு - பிளந்து.
45. கூற்று - எமன்; உட்குதல் - அஞ்சுதல்.
47. புல்இனம் - ஆட்டுக்கூட்டம்.
47-48. புள்ளி வெறுத்த - புள்ளிகள் செறிந்த; வயம் - வலிமை.
48. அம்புடை - அழகிய பக்கத்தில்; திங்கள் - நிலவு.
49. மறு - களங்கம்.
50. ஓவா - ஒழியாத; உருத்து - கோபித்து.
51. சே - சிவப்பு நிற எருது; ஒற்றும் - தழுவும்.
53. மேவார் - பகைவர், கம்சன்; கூந்தல் - பிடரி மயிர்.

54. பகுத்திட்டு - பிளந்து; புடைத்த - கொன்ற; ஞான்று - பொழுது.
55. மாயோன் - திருமால் (கண்ணன்).
56. தொழுதி - கூட்டம்.
57. உழக்கியாங்கு - போரிட்டாற்போல.
59. பிறழ - விட்டு நீங்க.
61. மைந்து - வலிமை.
62. தாது எரு மன்றம் - பூந்தாதுகளால் இயன்ற எருவினைக்கொண்ட ஊர்ப் பொதுமன்றம்.
63. கோடு - கொம்பு; மறுமையும் - மறுபிறவியிலும்.
64. புல்லாள் - தழுவமாட்டாள்.
65. கொள்பவர் - அடக்குபவர்.
66. நெஞ்சிலார் - அடக்குவதற்கு (வீரம் இல்லாத) நெஞ்சம் கொண்டவர்.
67. நைதல் - மனம் வருந்துதல்.
68. உயிர் - உயிர் (காற்றுத்தான் என உணர்ந்து).
69. நளி - நடு.
71. விலை - முலைவிலை.
72. வீழ்வார் - விரும்புபவர்.
73. முலையிடைப் போல - முலையிடைப் புகுதல்போல.
75. குரவை தழீஇ - குரவைக்கூத்து ஆடி; மரபுளி - குரவைக்கூத்தில் பாடும் முறைப்படி
76. தேயா - குறையாத; பரவுதும் - வணங்குவாம்.
77. முந்நீர் - கடல்; தொல்நிலம் - பழமையான இந்நிலவுலகம்.
78. கிழமை - உரிமை; புணர்ந்த - அரசாள்கின்ற.
79. எம்கோ - எம் அரசன்; மலர்தலை - இடமகன்ற.

தோழி கூற்று

கலித்தொகை 104 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

"நாடக வழக்கினும்" என்னும் நூற்பாப் 'பாடலுள் அமையாத' என்றதனால் ஏறு தழுவியவாற்றைத் தோழி தலைமகளுக்குக் காட்டிக் கூறி, 'இக்குரவையுள் அவனைப் பாடுகம் வா' என்றாட்கு, 'அவள் உடம்பாட்டினுள் தான் அலரச்சம் நீங்கினமையும், அவன் தன்னை வருத்தினமையும் கூறிப் பாடி, பின்னர்த் தோழி, 'நமர் அவற்கு நின்னைக் கொடைநேர்ந்தார்' எனக் கூறியது.

கூற்று விளக்கம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், பொருளியலில் வரும் 'நாடக வழக்கினும்' என்னும் நூற்பாவில், 'பாடல் சான்ற' என்னும் தொடரில் ஏறு தழுவுதலாகிய நிகழ்ச்சியை நச்சினார்க்கினியர் அடக்கினார். அதன்படி ஆயர் இனத்து ஆடவர் ஏறு தழுவியதைத் தோழி தலைவிக்குக் காட்டி, இன்னார் இன்னார் தழுவியவை இன்ன இன்ன ஏறுகள் என்று குரவை பாடும் மரபு உள்ளமையைச் சுட்டிக் காட்டி, அதைப் போன்ற ஒரு குரவைப் பாட்டில் தலைவனைக் குறித்துப் பாடத் தலைவியை அழைத்தாள்.

(அங்ஙனம் மரபாய்ப் பாடும் குரவைப்பாட்டில் அவன் பண்பை அமைத்தால் ஊரார் அறியார் என்பது அவள் கருத்து.)

தலைவி அதற்கு இசைந்து, 'ஊர்மக்களின் பழிச்சொல்லுக்குத் தான் அஞ்சவில்லை என்றும், தலைவன் தன்னை வருத்தினான் என்றும்' பொருளமைத்துப் பாடும் குரவைப்பாட்டில் கலந்துகொண்டாள். அதன் பிறகு தோழி அவளிடம், 'நம் சுற்றத்தார் உன்னைத் தலைவனுக்கு மணமுடித்துக் கொடுக்க இசைந்தனர்' என்று கூறுகின்றாள்.

மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத்து ஆயர் ஒருங்குதொக்கு எல்லாரும்
வானுற ஓங்கிய வயங்குஒளிர் பனைக்கொடிப்

பால்நிற வண்ணன்போல் பழிதீர்ந்த வெள்ளையும்,
பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித்
திருமறு மார்பன்போல் திறல்சான்ற காரியும்,
மிக்குஒளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்
முக்கண்ணான் உருவேபோல் முரண்மிகு குராலும்
மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்
வேல்வல்லான் நிறனேபோல் வெருவந்த சேயும், ஆங்குஅப்
பொருவரும் பண்பின் அவ்வையும், பிறவும்
உருவப்பல் கொண்மூக் குழீஇயவை போலப்
புரிபு புரிபு புகுத்தனர் தொழூஉ.

அவ்வழி, முள்எயிற்று ஏஎர் இவளைப் பெறும்இதுஓர்
வெள்ளேற்று எருத்துஅடங்கு வான்.

ஒள்ளிழை, வார்உறு கூந்தல் துயில்பெறும் வைமருப்பின்
காரி கதன்அஞ்சான் கொள்பவன்; ஈரரி
வெரூஉப்பிணை மான்நோக்கின் நல்லாள் பெறூஉம்இக்
குரூஉக்கண் கொலையேறு கொள்வான்; வரிக்குழை
வேயுறழ் மென்தோள் துயில்பெறும் வெம்துப்பின்
சேஎய் சினன்அஞ்சான் சார்பவன் என்றாங்கு
அறைவனர் நல்லாரை ஆயர் முறையினால்
நாள்மீன்வாய் சூழ்ந்த மதிபோல் மிடைமிசைப்
பேணி நிறுத்தார் அணி.

அவ்வழிப், பறையெழுந்து இசைப்பப் பல்லவர் ஆர்ப்பக்
குறையா மைந்தர் கோள்எதிர் எடுத்த
நறைவலம் செயவிடா இறுத்தன ஏறு.

அவ்வேற்றின்,

மேல்நிலை மிகல்இகலின் மிடைகழிபு இழிபு மேற்சென்று
வேல்நுதி புரைவிறல் திறன்நுதி மருப்பின் மாறுஅஞ்சான்
பால்நிற வெள்ளை எருத்தத்துப் பாய்ந்தானை
நோனாது குத்தும் இளங்காரித் தோற்றம்காண்;
பால்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும்
நீல்நிற வண்ணனும் போன்ம்.

இரிபுஎழுபு அதிர்புஅதிர்பு இகந்துஉடன் பலர்நீங்க
வரிபரிபு இறுபுஇறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோடுஅழியக் கொண்டானை ஆட்டித் திரிபுஉழக்கும்
வாடுஇல் வெகுளி எழில்ஏறு கண்டை, இஃதுஒன்று
வெருவரு தூமம் எடுப்ப வெகுண்டு
திரிதரும் கொல்களிறும் போன்ம்.

தாள்எழு துணிபிணி இசைதவிர்பு இன்றித் தலைச்சென்று
தோள்வலி துணிபிணி துறந்துஇறந்து எய்தி மெய்சாய்ந்து
கோள்வழுக்கித் தன்முன்னர் விழ்ந்தான்மேற் செல்லாது
மீளும் புகல்ஏற்றுத் தோற்றம்காண்; மண்டுஅமருள்
வாள்அகப் பட்டானை ஒவ்வான் எனப்பெயரும்
மீளி மறவனும் போன்ம்.

ஆங்க, செறுத்துஅறுத்து உழக்கி ஏற்றுஎதிர் நிற்ப
மறுத்து மறுத்து மைந்தர் சாரத்
தடிகுறை இறுபுஇறுபு தாயின கிடப்ப
இடிஉறழ் இசையின் இயம்எழுந்து ஆர்ப்பப்
பாடேற்றுக் கொள்பவர், பாய்ந்துமேல் ஊர்பவர்,
கோடுஇடை நுழைபவர், கோள்சாற்று பவரொடு
புரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வில் ஐவர் அட்ட
பொருகளம் போலும் தொழூஉ.

தொழுவினுள், கொண்டஏறு எல்லாம் புலம்புக, தண்டாச்சீர்
வாங்குஎழில் நல்லாரும் மைந்தரும் மல்லல்ஊர்
ஆங்கண் அயர்வர் தழூஉ.

பாடுகம் வம்மின் பொதுவன் கொலைஏற்றுக்
கோடு குறிசெய்த மார்பு.

நெற்றிச் சிவலை நிறையழித்தான் நீள்மார்பில்
செற்றார்கண் சாயயான் சாராது அமைகல்லேன்
பெற்றத்தார் கவ்வை எடுப்ப அதுபெரிது
உற்றீயாள் ஆயர் மகள்.

தொழீஇஇ, ஒருக்குநாம் ஆடும் குரவையுள் நம்மை
அருக்கினான் போல்நோக்கி அல்லல்நோய் செய்தல்
குரூஉக்கண் கொலையேறு கொண்டேன்யான் என்னும்
தருக்கன்றோ ஆயர் மகன்?

நேரிழாய், கோள்அரிது ஆக நிறுத்த கொலையேற்றுக்
காரி கதன்அஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
ஆர்வுற்று எமர்கொடை நேர்ந்தார் அலரெடுத்த
ஊராரை உச்சி மிதித்து.

ஆங்குத்,

தொல்கதிர்த் திகிரியான் பரவுதும், ஒல்கா
உரும்உறழ் முரசின் தென்னவற்கு
ஒருமொழி கொள்க,இவ் உலகுடன் எனவே.

தெளிவுரை

முன்னொரு காலத்தில் கடல் பொங்கி, அலை எழுந்து தனது நாட்டின் ஒரு பகுதியை அழித்திடவும், அவ்வழிவு கண்டு மனம் தளராமல், பாண்டிய மன்னன் பகைவர் நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று, தன் வலிமையினால் அந்நாடுகளை வென்று அடிப்படுத்தினான்; சோழ, சேர நாடுகளில் முறையே புலி, வில் ஆகிய இலச்சினைகளை நீக்கி, மிக்க புகழ்கொண்ட தனது கயல் இலச்சினையைப் பொறித்து அழியாப் புகழ் பெற்றனன். அப்புகழுக்குக் காரணமாய் அமைந்த பாண்டிய மன்னனது பழங்குடி தோன்றிய காலத்துத் தோன்றியவர் ஆயர் மக்கள். அவ்வாயர் குடியினர் ஒருநாள் ஓரிடத்தில் தத்தம் காளைகளுடன் ஒருசேரத் திரண்டனர்.

பேரொளியும் பெரும் புகழும் கொண்ட பனைக்கொடியை ஏந்திய பலதேவனைப் போல வெண்ணிறம் கொண்ட காளையும், பொன்னால் செய்யப்பட்ட சக்கரப்படையைக் கொண்டவனும், பகைவரை வென்று மேம்பட்டவனும், திருமகளைத் தன் மார்பிலே கொண்டவனுமாகிய திருமாலைப் போன்ற நிறம் படைத்த போர்த்திறம் மிக்க கருநிறக் காளையும், சடை முடியும் பிறை சூடிய நெற்றியும் முக்கண்ணும் கொண்ட

சிவபெருமானது உருவம் போலும் கபிலநிறக் காளையும், மாமர வடிவில் கடல் நடுவில் நின்ற சூரபதுமனைக் கொன்ற முருகப்பெருமானது நிறம் கொண்ட செவலைக்காளையும், இன்னும் இவைபோன்ற காளைகள் பலவும், மேகங்கள் திரண்டு முழங்குவதைப் போல முழங்கின. ஏறு தழுவும் களத்தில் அக் காளைகளுக்குரியவர் அவற்றை விரும்பி விரும்பிப் புகவிட்டனர்.

இன்னின்ன காளையை அடக்குபவன் இன்னின்ன பெண்ணை மணம் புரியும் உரிமை கொண்டவன் என்பதைப் பெண்களைப் பெற்றெடுத்த ஆயர்கள் தெரிவித்தனர். மகளிர் பரண்களின்மீது அமர்ந்து ஏறு தழுவும் காட்சியைக் கண்டனர்.

'இதோ இந்த வெள்ளைக் காளையை அடக்குபவன், கூரிய பல்வரிசையைக் கொண்ட இவ்வழகியைப் பெறுவான்' என்றும்,

'கூரிய கொம்பினைக் கொண்ட இக்கருநிறக் காளையை அஞ்சாமல் அடக்குபவன், ஒளிமிகும் அணிகலன்களும், நீண்ட கூந்தலும் கொண்ட இம்மங்கையின் கூந்தலில் துயிலப் பெறுவான்' என்றும்,

'கொலைத்தன்மை வாய்ந்த இக்கபிலநிறக் காளையை அடக்குபவன், பெண்மான்போல அஞ்சி நோக்கும் வரிபடர்ந்த கண்களைக் கொண்ட இப்பெண்ணைப் பெறுவான்' என்றும்,

'மிக்க வலிமை கொண்ட இச்செவலைக்காளைக்கு அஞ்சாமல் இதனைப் பற்றுபவன் குழையணிந்த காதினைக் கொண்ட இவளது மூங்கில் போன்ற மெல்லிய தோளில் துயிலப் பெறுவான்' என்றும் அறிவித்து, மகளிரைப் பரண்மீது விண்மீன்கள் சூழ்ந்த வெண்மதிபோல வரிசைப்பட நிறுத்தினர்.

அந்நேரத்தில் பறைகள் முழங்கின; பலரும் ஆரவாரித்தனர்; குறையாத வலிமை கொண்ட பொதுவர்கள் ஏறு தழுவ எதிராய்க் காத்து நின்றனர்; தொழுவத்துள் எழுப்பப்பட்ட நறுமணமிக்க புகை வலம் வர, அங்கு நிறுத்தப்பட்டிருந்த காளைகள் சினமிக்கு ஆரவாரத்துடன் அவர்கள் மேலே பாய்ந்தன.

தொழுவத்துள் நிகழும் காட்சிகளைத் தோழி தலைவிக்குக் காட்டி அவற்றைக் காணுமாறு கூறுகிறாள்.

"ஒரு காளையின்மீது தாவி ஏறிய ஒருவன், அதன்மேலிருந்து கீழே இறங்கி மீண்டும் அதன்மீது ஏறினான். வேலை ஒத்த முனையையும் வெற்றித்திறம் வாய்ந்த கொம்பையும் கொண்ட அப்பால்நிறத்து வெள்ளைக்காளையின் கோபத்துக்கு அஞ்சாமல், அதன் கழுத்தைக் குறி வைத்துப் பாய்ந்து தழுவினான்; அருகில் இருந்த இளைய கரிய காளை ஒன்று அவனை இடைவிடாது குத்துவதைப் பார். அது நிலவினைக் கேது என்னும் பாம்பு கௌவிப் பிடிக்க அப்பிடியினின்றும் நிலவினை விடுவிக்கும் கண்ணனைப் போலத் தோன்றுகிற தன்றோ?

"பலரும் அதிர்ச்சியடைந்து அவ்விடத்தை விட்டுக் கலைந்து நீங்கும் வகையில் வீரர்களின் எலும்புகளை முரித்து, குடல்களை அறுத்து, குப்புற விழுமாறு ஏறுகள் குத்துவதைப் பார். ஒரு காளையின் வலிமையை அடக்க வீரன் ஒருவன் அதன் கொம்பைப் பிடித்து வருத்துகிறான். அவன் வெற்றி பெறாதவாறு அக்காளை அவனை அலைத்துக் கீழே தள்ளித் துவைப்பதைப் பார். அக்காளை திரிவது, தனக்கு வெறியேற்ற ஊட்டப்பட்ட புகையை நுகர்ந்த ஒரு கொல்யானை திரிவது போல இருக்கின்றதன்றோ?

"ஏறு தழுவுதற்கு ஆற்றலும் விருப்பமும் இருந்தும், ஏறு தழுவும் முறை அறியாத ஒருவன் களம் புகுந்து கபிலநிறக் காளை ஒன்றனைத் தழுவ முயன்றான். அவ்வேற்றின் கழுத்தைப் பற்றிய பிடிப்பு நெகிழ, அவன் காளையைத் தழுவ இயலாமல் அதன் முன்பு வீழ்ந்து கிடக்கிறான். கபிலநிறம் கொண்ட அக்காளை, அவனை யாதும் செய்யாமல் திரும்புகின்ற காட்சியைப் பார். காளை அவ்வாறு அகன்றது, கடுமையாய் நிகழும் போரில், வாளும் கையுமாய்ப் பிடிபட்ட பகைவீரன் ஒருவனை, 'இவன் எனக்குச் சமமானவன் அல்லன்' என விட்டுச் செல்லும் வீரமிக்க படைத் தலைவன் போன்றிருக்கிறதன்றோ?"

ஏற்றின் கொம்புகளைத் தம் மார்பில் ஏற்றுத் தாங்கிக் கொள்பவர், அதன்மீது பாய்ந்தேறிச் செலுத்துபவர், கொம்புகளி னிடையே நுழைபவர், 'ஏறு கொள்வேன்' எனச் சூளுரைப்போர் முதலிய பலரும் அடுத்தடுத்து வர, அவர்களுடன் ஏறுகள் பொருதும் சினந்தும் அவர்களின் குடலறுத்தும் சிதைத்தும் செம்மாந்து நின்றன. அவற்றைத் தழுவ அடுத்தடுத்து வீர இளைஞர்கள் வந்தனர். அவர்தம் எலும்புகள் முரிந்து, தசை கிழிந்து பரவிக் கிடந்தன. ஏறுகள் இடியென முழங்கின. வாத்தியங்கள் இசைத்தன. இவையெல்லாவற்றாலும் அக்களம் பாண்டவர்க்கும் துரியோதனாதியர்க்குமிடையே நடந்த பாரதப் போர்க்களம் போலக் காட்சியளிக்கிறது.

தொழுவை விட்டகன்ற ஏறுகளெல்லாம் மேயச் சென்றன. குறையாத புகழையும் கண்ணை ஈர்க்கும் அழகினையும் கொண்ட ஆய்ச்சியரும் ஆயரும் குரவைக்கூத்தாட வளம் பொருந்திய ஆயர் சேரிக்குச் சென்றனர்.

தோழி, "குரவையாடும் இடத்திற்கு நாமும் செல்வோம்; கொலையேற்றின் கொம்புகளால் விழுப்புண் கொண்ட நம் தலைவனின் வீரத்தை நாமும் ஆடிப் பாடுவோம்" என்று தலைவியையும் பிற தோழியரையும் அழைத்தாள்.

அதைக் கேட்ட **தலைவி**, தோழியை நோக்கி, "என் தலைவனையும் என்னையும் அலர் தூற்றி இகழ்ச்சி தோன்றப் பார்த்திருந்த ஆய்ச்சியர் முன் குரவைக்கூத்தில் என் தலைவன் மார்பைத் தழுவிக்கொள்வேன். அந்த ஆய்ச்சியர்களின் அலரை இனிப் பெரிதாய் எடுத்துக்கொள்ள மாட்டேன்" என்றாள்.

"தோழீ! நாம் ஒருங்கு சேர்ந்தாடும் குரவைக்கூத்தில் நாம் விரும்பும் ஆயர்மகன் நமக்கு அரியவன் போன்ற ஒரு பார்வை யுடன் நின்று, நமக்கு வருத்தம் செய்வது, 'வீரம் பொருந்திய கொலையேற்றை நான் தழுவினேன்' என்னும் செருக்கினால் அன்றோ?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

அதைக் கேட்ட **தோழி**, "அழகுக்கேற்ற அணிகலன்களைக் கொண்டவளே! பிறரால் கொள்ளுதற்கு அரிதாக நின்ற கருநிறத்துக் கொலையேற்றின் சினத்திற்கு அஞ்சாமல் தழுவிய

பொதுவனுக்கே, அலர் தூற்றிய ஊராரின் தலையில் அடித்தது போல உன்னை மணமுடிக்க இசைந்தனர், நம் வீட்டார்; வருந்தாதே" என்று தலைவியிடம் கூறினாள்.

பின்னர், குரவைக்கூத்தின் முடிவில், 'இடியோடு மாறுபட்டு முழங்கும் முரசு கொண்ட தென்னவனின் ஏவலை இவ் வுலகனைத்தும் கேட்கட்டும்' என்றும், 'ஒளி திகழும் சக்கர மேந்திய பழம்பெருந்தெய்வமாகிய திருமால் அவனைக் காக் கட்டும்' என்றும் பாடி, வாழ்த்தி வணங்கினர்.

கருத்து

தலைவி ஒருத்தி, தான் விரும்பிய தலைவனை மணக்க விரும்பினாள்; ஆனால், அவர்களின் குல வழக்கப்படி, அவள் பெற்றோர் வளர்க்கும் காளையைத் தழுவி அடக்கி வெற்றி கொள்பவனுக்கே அவளை, அவர் பெற்றோர் மணம் செய்து தருவர்.

அவள் ஊரில் ஏறு தழுவும் விழா நடந்தபோது, பெற்றோர்கள் தத்தம் எருதுகளை, விழா நடைபெறும் தொழுவத்துள் செலுத்தினர். வீரர்கள் பலர் ஏறு தழுவ முன்வந்தனர். தலைவியால் விரும்பப்பட்டவன், தலைவியைப் பெற்றோர் விட்ட ஏற்றினைத் தழுவி அடக்கினான். மகளை அவனுக்கே மணமுடிக்கப் பெற்றோர் ஒப்பினர்.

விளக்கம்

ஒரு காலத்தில் கடல்கோளால் பாண்டிய நாட்டின் ஒரு பகுதி கடலுள் மூழ்கியது. பாண்டிய மன்னன் சோழ, சேர நாடுகளைக் கைப்பற்றி, அங்குத் தன் மீன் கொடியைப் பறக்கவிட்டான். அப்பாண்டியர் குடியைச் சார்ந்தவர், ஆயர்மக்கள்.

ஏறு தழுவும் விழாவில் ஆயர்கள் தம் எருதுகளைக் களத்தினுள் செலுத்தினர். அவ்வேறுகளுள் ஒன்று வெள்ளை நிறமானது; அதன் பின்னர், கரிய நிற ஏறும், அதனையடுத்துக் கபிலநிற ஏறு, செந்நிற ஏறு என ஏறுகள் பலவும் வந்தன; தொழு வத்தில் அமைக்கப்பட்ட பரண்மீதிருந்து மகளிர், ஏறு தழுவும் காட்சிகளைக் கண்டனர்.

"வெள்ளை ஏற்றை அடக்குபவன், கூரிய பற்களைக் கொண்டு அழகுடன் விளங்கும் பெண்ணை மணப்பான்; கூரிய கொம்

பினைக் கொண்ட கருநிறக் காளையை அடக்குபவனுக்கு ஒளி பொருந்திய ஆபரணங்களை அணிந்தவள் வாய்ப்பாள்; மான் நோக்கினைக் கொண்டவளைக் குரால்நிற ஏற்றினை வெற்றி கொள்பவன் பெறுவான்; மூங்கில் போன்ற தோள் கொண்டவளைச் செவலைக்காளையை அடக்குபவன் அடைவான்" என்று அவ்வக் காளைக்குரிய ஆயர்கள் அறிவித்தனர்.

இவ்வாறு கூறிய பின், வீரர்கள் தாங்கள் விரும்பும் பெண்ணுக் குரிய காளைகள்மீது பாய்ந்தனர்.

எலும்புகள் முரியுமாறும், குடல் சரியுமாறும் காளை குத்திய பின்பும் வீரன் ஒருவன் அதன் கொம்பைப் பிடித்து வருத்திக் கொண்டிருந்தான். அந்த ஏறு அங்குமிங்குமாய்த் திரிந்து அவனை அலைக்கழித்தது.

ஏறு தழுவும் முறையில் பயிற்சி இல்லாத ஒருவன், காளையைத் தழுவ முற்பட்டு, இயலாமல் கீழே விழுந்தான். அவன் தன்னுடன் சண்டையிடச் சமமற்றவன் என்று அந்த ஏறு அவனை விட்டுச் சென்றது. (புறமுதுகிடுபவனைத் தூய வீரன் தாக்காது விட்டு அகல்வதுபோல அந்த ஏறும் அவனை விட்டகன்றது.)

ஏற்றின் கொம்பைத் தன் மார்பிலே தாங்கினான், ஒருவன்; ஏற்றின் முதுகில் பாய்ந்து, அதன் கொம்புகளிடையே புகுந்தான், ஒருவன்; வீரர்களை ஏறுகள் தாக்கியமையால் வீரர்களின் தசைகள் அங்கங்கே பரவிக் கிடந்தன; காளைகள் ஆரவாரம் செய்தன.

தொழுவினைவிட்டு அகன்ற ஏறுகள் மேய்ச்சல் நிலத்திற்குச் சென்றன. ஆய வீரரும், மகளிரும் ஏற்றின் கொம்புகளால் விழுப்புண் பட்ட மறவர்களின் வீரத்தைப் பாடிக் குரவைக் கூத்தாட ஆய்ச்சேரிக்குச் சென்றனர்.

தோழியை நோக்கித் தலைவி, 'நாம் குரவைக்கூத்தாடுகின்ற போது காதலன் நம்மை உற்று நோக்கி, அவன் நமக்குக் கிடைப்பதற்கு அரியவன்போலப் பார்த்தான். அஃது அவன் செருக்கன்றோ' என்றாள்.

அது கேட்ட தோழி, "தலைவியே, பிறரால் வெற்றி பெற இயலாத காரியை அடக்கியவனுக்கே நீ விரும்பியவாறே மண

முடிக்க நம் பெற்றோர் இசைந்தனர். இந்த முடிவு அலர் தூற்றிய வரின் மண்டையிலே அடி விழுந்ததுபோல அமைந்தது" என்று கூறினாள்.

பின்னர் ஆயர், குரவைக்கூத்தாடினர். கூத்தின் முடிவில், 'பாண்டிய மன்னனின் சொற்படி இவ்வுலகம் நடக்கட்டும், அவனைத் திருமால் காப்பார்' என்று வாழ்த்தி முடித்தனர்.

சொற்பொருள்

1. மலிதிரை - மிகுதியான அலை; வௌவுதல் - கைக்கொள்ளுதல்.
2. மெலிவு - சோர்வு; மேவார் - பகைவர்.
3. புலி - புலிக்கொடி (சோழன்); வில் - விற்கொடி (சேரன்); கெண்டை - மீன் கொடி (பாண்டியன்).
4. வணக்கிய - வெற்றி கொண்ட; தென்னவன் - பாண்டியன்.
5. தொல்லிசை - பழம் புகழ்; நட்ட - நிலை நிறுத்திய.
6. ஒருங்கு தொக்கு - ஒன்றாய்த் திரண்டு.
7. வயங்கு ஒளிர் - ஒளி விளங்கும், பேரொளி.
8. பால்நிற வண்ணன் - பலதேவன்.
9. பொலம் - பொன்; நேமி - சக்கரம்.
10. திருமறுமார்பன் - திருமகளை மார்பிலே கொண்டுள்ள திருமால்; திறல் சான்ற - வலிமை பொருந்திய.
11. மேவரும் - மேவுதலை உடைய.
12. முக்கண்ணான் - சிவபெருமான்; குரால் - கபில நிறம் (கருமை கலந்த பொன்னிறம்).
13. மா - பெரிய; மா - மா மரம்; மடங்காப் போர் - தளர்வடையாத போர்.
14. வேல் வல்லான் - முருகன்; வெருவந்த - அச்சம் தரத்தக்க; சே - செந்நிறம் (செவலை).
16. கொண்மூ - மேகம்.
17. புரிபு புரிபு - விரும்பி விரும்பி; தொழூஉ - ஏறு தழுவும் களம்.
18. எயிறு - பல்.
19. எருத்து - கழுத்து.
20. வை - கூரிய.
21. கதன் - சினம்; ஈரரி - ஈர் அரி - கருவரியும் செவ்வரியும்.
22. வெரூஉ - மருட்சி நோக்கு; பிணைமான் - பெண்மான்.
23. குரூஉ - (செந்)நிறம்; வரிக்குழை - சித்திர வேலைப்பாடமைந்த காதணி.

24. வெம்துப்பு - கொடிய வலிமை.
25. சேய் - செந்நிறக் காளை.
26. நல்லார் - அழகிய மகளிர்.
27. நாள்மீன் - விண்மீன்.
30. கோள் எதிர் - தம்மைத் தழுவிக்கொள்ளற்கு; எதிர் எடுத்த - எதிரேறிச் சென்றன.
31. நறை - நறுமணப்புகை; விடா - விடப்பட்டு.
33. மேல்நிலை - மேம்பட்ட; இகல் - மாறுபாடு; கழிபுஇழிபு - விட்டு இறங்கி.
34. நுதி - நுனி; மாறு அஞ்சான் - மாறுபாட்டிற்கு அஞ்சானாய்.
36. நோனாது - பொறாமல்.
37. அரவு - பாம்பு (கேது); கோள் - கொள்ளுதல்.
38. நீல்நீறவண்ணன் - நீல நிறம் கொண்ட கண்ணன்.
39. இரிபு எழுபு - கலைந்து எழுந்து.
40. வரி - எலும்பு; பரிபு - முரிந்து; குடல் சோர - குடல் சரிய.
41. ஆட்டி - அலைத்து.
42. வாடுஇல் - வாடுதல் இல்லாத.
43. தூமம் - புகை.
45. தாள் - முயற்சி; துணி - துணிதல்.
46. பிணி - (ஏறு) தழுவுதல்; பிணி துறந்து இறத்தல் - தழுவுதலை விட்டுத் தள்ளப்படுதல்; சாய்ந்து - தளர்ந்து.
48. மண்டு அமர் - நெருங்கிய போர்.
49. வாள் அகப்பட்டானை - வாளொடு அகப்பட்டவனை.
50. மீளி - கூற்றுவன்.
52. மறுத்து மறுத்து - அடுத்தடுத்து.
53. தடி - ஊன் துண்டம்; குறை - எலும்பு; தாயின - பரவி.
54. இயம் - வாச்சியம்.
55. பாடு - சாவு.
56. கோள் சாற்றுபவர் - 'ஏறு கொள்ள வல்லேன்' என்று சொல்பவர்.
57. புரிபு - போர் புரிய; நூற்றுவர் - கௌரவர்.
58. ஐவர் - பாண்டவர்.
59. பொருகளம் - போர்க்களம்.
60. புலம் - இடம், நிலம்.
61. வாங்கு எழில் நல்லார் - நோக்கினார் கண்ணை வாங்கிக்கொள்ளும் அழகினைக் கொண்ட ஆய்ச்சியர்.

62. அயர்வர் - குரவைக்கூத்தாடுவர்.
63. வம்மின் - வாருங்கள்.
65. நிறையழித்தான் - வலிமையை அழித்தான்.
66. செற்றார் - பகைத்து (அலர் கூறுவார்).
67. பெற்றத்தார் - எருமைகளைக் கொண்டவர்.
68. உற்றீயாள் - வருந்தாள்.
70. அருக்கினான் - அரியவன் ஆனவன்.
73. கோள் - அடக்குதல்.
76. உச்சி மிதித்து - எண்ணத்தைப் பழுதாக்கி, தலையிலே அடித்து.
79. தொல் கதிர்த் திகிரியான் - பழையதாகிய கதிரைக் கொண்ட (ஒளிமிக்க) சக்கரப் படை கொண்டவன் (திருமால்).
80. ஒரு மொழி - ஆணை.

தோழி கூற்று

கலித்தொகை 105 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

ஏறு தழுவியவாற்றைத் தோழி தலைமகளுக்குக் காட்டிக் கூறி, அவள், ஏறு தழுவிய தலைமகனை விருப்பொடு நோக்கியவாற்றைத் தன்னுள்ளே கூறி, முன்னர்க் களவின்கண் தமர் கோபித்ததனையும், அயலார் பொறாதிருந்த தன்மையினையும் தலைமகளுக்குக் கூற, அவளும், 'அவர் அலர் கூறியது நன்று' என்று கூறி, 'அன்றே என் நெஞ்சு கலந்துவிட்டது; இனி அவர் கொடுப்பதாகக் கூறிய நாளிற் செய்வதுஎன்' என மகிழ்ந்து கூற, அது கேட்ட தோழி, 'யாம் அங்ஙனம் கூடி இனிதிருக்குமாறு காக்கின்ற பாண்டியன் நீடு வாழுமாறு தெய்வத்தைப் பரவுகம் வா' எனக் கூறியது.

கூற்று விளக்கம்

ஏறு தழுவுதலை வெற்றியுடன் முடித்த இளைஞன் ஒருவன் தலைவியால் முன்னரே அன்பு செய்யப்பட்டவன். அதனை அறிந்த தோழி, அத்தலைவன் ஏறு தழுவிய செயலைத் தலைவி விருப்பத்தோடு பார்த்ததைக் கவனித்துக்கொண்டாள். அதுவரை அவளும் தலைவியோடு அவளின் காதலைப்பற்றி அளவளாவியதில்லை.

தோழி, தலைவியை அவள் சுற்றத்தார் முன்பு சினந்துகொண்டதையும், ஊரார் சிலர் தலைவியைப்பற்றி மனம் பொறாமல் அலர் தூற்றியதுபற்றியும் இப்பொழுது தலைவியிடம் கூறினாள். தலைவி, 'அலர் கூறியது சரியே' என்று கூறி, 'ஏற்றினை வெற்றியோடு தழுவிய அத்தலைவனுக்கு என்னை மணம் செய்விப்பதாய் மரபுப்படி நம் உறவினர் கூறுவர். அந்த நாளில் நாம் செய்வது என்ன?' என்று மகிழ்ச்சியோடு கூறினாள். அதனால் குறிப்பாய்த் தலைவியின் மகிழ்ச்சியைத் தெரிந்துகொண்ட தோழி, 'நாம் அவ்விதமாய்த் தலைவனோடு கூடி இனிதிருக்குமாறு பாண்டியன் காப்பான். அவன் நீடு வாழுமாறு தெய்வத்தைப் பரவுவோம்' என்று கூறுகின்றாள்.

அரைசுபடக் கடந்துஅட்டு ஆற்றில் தந்த
முரைசுகெழு முதுகுடி முரண்மிகு செல்வற்குச்
சீர்மிகு சிறப்பினோன் தொல்குடிக்கு உரித்தெனப்
பார்வளர் முத்தமொடு படுகடல் பயந்த
ஆர்கலி உவகையர் ஒருங்குடன் கூடித்
'திதீன்று பொலிக'எனத் தெய்வக் கடிஅயர்மார்
வீவுஇல் குடிப்பின் இருங்குடி ஆயரும்
தாவில் உள்ளமொடு துவன்றி, ஆய்புஉடன்
வள்உருள் நேமியான் வாய்வைத்த வளைபோலத்

தெள்ளிதின் விளங்கும் சுரிநெற்றிக் காரியும்,
ஒருகுழை யவன்மார்பில் ஒண்தார்போல் ஒளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்
பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற்று அணிபோல
இரும்பிணர் எருத்தின் ஏந்துஇமில் குராலும்,
அணங்குஉடை வச்சிரத்தோன் ஆயிரங் கண்ஏய்க்கும்
கணங்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்
வேல்வலான் உடைத்தாழ்ந்த விளங்குவெண் துகில்ஏய்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்கால் சேயும்
கால முன்பின் பிறவும் சால
மடங்கலும் கணிச்சியும் காலனும் கூற்றும்
தொடர்ந்துசெல் அமையத்துத் துவன்றுஉயிர் உணீஇய
உடங்குகொட் பனபோல் புகுத்தனர் தொழூஉ.

அவ்வழி,

கார்எதிர் கலிஒலி கடிஇடி உருமின் இயம்கறங்க
ஊர்புஎழு கிளர்புஉளர் புயல்மங்குலின் நறைபொங்க
நேரிதழ் நிரைநிரை நெறிவெறிக் கோதையர் அணிநிற்பச்
சீர்கெழு சிலைநிலைச் செயிர்இகல் மிகுதியின் சினப்பொதுவர்
தூர்புஎழு துதைபுதை துகள்விசும்பு உறஎய்த
ஆர்புஉடன் பாய்ந்தார் அகத்து.

மருப்பில் கொண்டு, மார்புறத் தழீஇயும்
எருத்திடை அடங்கியும் இமில்இறப் புல்லியும்
தோளிடைப் புகுதந்தும் துதைந்துபா டேற்றும்
நிரைபுமேற் சென்றாரை நீண்மருப் புறச்சாடிக்
கொளஇடம் கொளவிடா நிறுத்தன ஏறு.

கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்திக்
கொள்வார்ப் பெறாஅக் குரூஉச்செகில் காணிகா
செயிரின் குறைநாளால் பின்சென்று சாடி
உயிருண்ணும் கூற்றமும் போன்ம்.

பாடேற் றவரைப் படக்குத்திச் செங்காரிக்
கோடுஎழுந்து ஆடும் கணமணி காணிகா;
நகைசால் அவிழ்பதம் நோக்கி நறவின்
முகைசூழும் தும்பியும் போன்ம்.

இடைப்பாய்ந்து எருத்தத்துக் கொண்டானோடு எய்தி
மிடைப்பாயும் வெள்ளேறு கண்டைகா!
வாள்பொரு வானத்து அரவின்வாய்க் கோள்பட்டுப்
போதரும் பான்மதியும் போன்ம்.

ஆங்க, ஏறும் பொதுவரும் மாறுற்று, மாறா
இருபெரு வேந்தரும் இகலிக்கண் ணுற்ற
பொருகளம் போலும் தொழூஉ.

வெல்புகழ் உயர்நிலைத் தொல்லியல் துதைபுதை துளங்குஇமில்
நல்லேறு கொண்ட பொதுவன் முகம்நோக்கிப்
பாடில ஆயமகள் கண்.

நறுநுதால்! என்கொல்?ஐங் கூந்தல் உளரச்
சிறுமுல்லை நாறிய தற்குக் குறுமறுகி
ஒல்லாது உடன்றுஎமர் செய்தார் அவன்கொண்ட
கொல்லேறு போலும் கதம்.

நெட்டிருங் கூந்தலாய்! கண்டை இஃதோர்சொல்;
கோட்டினத்து ஆயர் மகனொடுயாம் பட்டதற்கு
எங்கண் எமரோ பொறுப்பர்; பொறாதார்
தம்கண் பொடிவது எவன்.

ஒண்ணுதால்!

இன்ன உவகை பிறிதியாது? யாய்என்னைக்
கண்ணுடைக் கோலள் அலைத்தற்கு என்னை
மலரணி கண்ணிப் பொதுவனோடு எண்ணி
அலர்செய்து விட்டதுஇவ் வூர்.
ஒன்றிப் புகரினத்து ஆயமகற்கு ஒள்இழாய்;
இன்றுஎவன் என்னை எமர்கொடுப்பது? அன்றுஅவன்
மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்கால் புக்கதுஎன் நெஞ்சு.

என,

பாடுஇமிழ் பரப்பகத்து அரவணை அசைஇய
ஆடுகொள் நேமியான் பரவுதும், நாடுகொண்டு
இன்னிசை முரசின் பொருப்பன் மன்னி
அமைவரல் அருவி ஆர்க்கும்
இமையத்து உம்பரும் விளங்குக எனவே.

தெளிவுரை

பாண்டிய மன்னன் பகைமன்னர்களை வீழ்த்தி, அறநெறி தவறாது, அவர்களுடைய செல்வங்களைத் தன் நாட்டிற்குக் கொண்டுவந்த பெருமை வாய்ந்தவன். அவன் நாட்டில் விளைபொருள்கள் பெருகின; கடலில் முத்துகள் விளைந்தன. இத்தகைய முதுகுடியில் தோன்றிய மன்னன் புகழுடன் விளங்க வேண்டுமென ஆயர்கள் உளங்கொண்டு தெய்வத்திற்குச் சிறப்பு களைச் செய்து வழிபட்டனர்.

பின்னர், பாண்டிய நாட்டின் பழங்குடியினராய இவ்வாயர் குடியினர் ஓரிடத்தில் கூடி, ஏறு தழுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

கரிய ஏறு ஒன்று நெற்றியிலே வெள்ளைச்சுழியுடன் விளங்கியது. அந்தச் சுழி, சக்கரப்படை கொண்ட திருமாலின் சங்கு போன்றிருந்தது.

வெள்ளை நிற ஏறு ஒன்று தன் மேனியில் சிவந்த மச்சத்தைக் கொண்டிருந்தது. அது பலதேவன் மார்பிலே கிடந்த சிவந்த மாலைபோல ஒளிவிட்டுக் கொண்டிருந்தது.

கபிலநிறக் காளை ஒன்றுக்குச் சொரசொரப்பான கழுத்தைக் கொண்ட திமில் அமைந்திருந்தது. அது, மழுப்படை ஏந்திய சிவபெருமானின் மணிநிறக் கழுத்தைப் போன்று தோன்றியது.

புகர்நிறக் காளை ஒன்று புள்ளிகள் பலவற்றுடன் விளங்கியது. அஃது ஆயிரம் கண்களைக் கொண்ட வச்சிரப்படை ஏந்திய இந்திரன் போன்று தோன்றியது.

செவலைக்காளை ஒன்று முருகன் அணிந்த வெண்ணிற ஆடை போல் வெள்ளை நிறத்துக் கால்களைக் கொண்டிருந்தது. இவையும், இவைபோலும் வலிமை கொண்ட பிற ஏறுகளும் தொழுவத்துள் செலுத்தப்பட்டன.

ஊழி முடிவில் தீயும் மழுப்படையும் காலனும் எமனும் ஒன்று சேர்ந்து சுழன்று வருவனபோலக் காளைகளெல்லாம் தொழு வத்துள் சுழன்று திரிந்தன.

அவ்வேளையில், கார் காலத்தில் ஒலிக்கும் இடிமுழக்கம் போலப் பறைகள் முழங்கின. மேகக்கூட்டம் வானிலே செல்வன போலத் தொழுவத்துள் மணப்புகை பரவியது. புறவிதழ் நீக்கிய மலர்களை நேர் நேராய் வைத்துத் தொடுத்த மணம்மிகு மாலையை அணிந்த ஆய மகளிர் வரிசையாய் வந்து நின்றனர். வீரச்சிறப்புக் கொண்ட ஆயரிளைஞர் சினந்து, ஆரவாரித்து எழுந்ததால் ஏற்பட்ட புழுதிப்படலம் வானளாவ எழுந்து கண்ணை மறைக்கக் களத்தில் பாய்ந்தனர்.

ஏற்றின் கொம்பைப் பிடித்துத் தம் மார்புடன் தழுவிக் கொண்டனர், சிலர்; ஏறுகளின் கழுத்தில் ஏறி அமர்ந்தனர், சிலர்; ஏற்றின் திமில் முரியத் தழுவினர், சிலர்; தமது தோள் நடுவில் ஏற்றின் கழுத்தை அகப்படுத்திப் பிடித்தனர், சிலர். போரிட்ட இளைஞர்களை, ஏறுகளும் முட்டிக் கீழே தள்ளித் தமது கழுத்தைத் தழுவவிடாமல் விலக்கின; விடாமல் சென்று தழுவிய வரையெல்லாம் குத்திக் கொன்றன. அதன்பின்பு அவற்றை நெருங்குவோர் இலர். எந்த வீரராலும் தழுவ இயலாத நிலையில் நின்ற சிவந்த ஓர் ஏறு உயிரை உண்ணும் கூற்றுவனைப் போல நின்றுகொண்டிருந்தது. இக்காட்சிகளைத் தோழி தலைவிக்குக் காட்டினாள்.

"தன்னைத் தழுவியவனைச் சாகுமாறு குத்திய செங்காரிக் காளை அவனைத் தன் கொம்புகளின்மேல் தூக்கி வைத்து ஆடுகின்றது. அப்பொழுது அந்த வீரனின் உடலிலிருந்து வீழும் குருதித்துளிகள் தோய்ந்து அக்காளையின் கழுத்து மணிகள் சிவந்து நறவம்பூக்கள்போலத் தோன்றியதால் வண்டுகள் அவற்றை மொய்க்கின்றன. தலைவியே, இதனைப் பார்!

"தன் கழுத்தில் பாய்ந்து தழுவியவனைக் கீழே தள்ள இயலாமல் அவனோடு பரணை நோக்கிப் பாய்கிறது, அந்த வெள்ளைநிறக் காளை. அது கிரகணத்தின்போது கரும்பாம்பினால் ஒரு பகுதி கௌவப்பட்ட நிலவு, வானத்தில் செல்லுவது போலத் தோன்றுவதையும் தலைவியே நீ பாராய்!

"இவ்வாறு ஏறுகளும் இளைஞரும் தம்முள் மாறுபட்டுப் போரிட, அத்தொழுவம், மன்னர் இருவர் மாறாத பகைமை யோடு எதிர்த்துப் போரிடும் போர்க்களத்தை ஒத்திருப்பதையும் பார்" என்று, ஏறு தழுவும் களத்தின் காட்சியைத் தலைவிக்குத் தோழி காட்டிக் கூறிக்கொண்டிருந்தாள். அதே வேளை அவள் தன் நெஞ்சத்திடம் சொல்வதுபோலத் தலைவிக்குக் கேட்குமாறு கூறுகிறாள்.

"தொல்குடியில் பிறந்தவனும் வெற்றிப்புகழால் உயர்ந்தவனும் தன் கழுத்து முழுவதையும் மறைக்கும் திமிலைக்கொண்ட

காளையை அடக்கித் தழுவி வென்றவனுமாகிய ஒருவன் முகத்தையே இந்த ஆய மகள் கண்கொட்டாமல் நோக்குகின்றாளே! அது ஏன்?" என்கிறாள்.

"நறுமணம் கமழும் நெற்றி கொண்டவளே! முன்பு ஒருநாள் உன் கூந்தலில் வெண்ணெய் மணப்பதற்கு மாறாய் முல்லைப் பூவின் மணம் எழுவது கண்டு நம் வீட்டார், இவள் யாருடனோ தொடர்பு கொண்டுள்ளாள் என ஐயுற்றனர். அதனால் அவர்கள் கொண்ட சினம், இதோ இந்தப் பொதுவன் தழுவிய ஏற்றின் சினம் போன்றன்றோ தோன்றுகிறது. இவன் ஏற்றை அடக்கிய செயல் கண்டு இனிச் சுற்றத்தார் என்ன செய்ய இயலும்?

"மற்றும் ஒன்று. நீண்ட கரிய கூந்தலைக் கொண்டவளே! எருமை இனத்தையுடைய இந்த ஆயர் மகனோடு கூடியதற்கு இனி நம் சுற்றத்தார் பொறுத்துத்தான் ஆகவேண்டும். எனினும், இந்த ஊரார் அதனைப் பொறாமல் சினந்து நிற்கின்றார்களே! இது ஏன்?"

இவ்வாறு தோழி தனக்குள்ளே கூறுவதுபோலக் கூறிய சொற்களைக் கேட்ட தலைவி, தோழியை நோக்கி, "ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்டவளே! அன்னை தன் கண்ணிலேயே பிரம்பை வைத்திருப்பவள்போல் உருத்துப் பார்த்து எனக்கு வருத்தம் உண்டாக்கினாள்; அதனைக் கண்ட இந்த ஊரார் என்னை மலரணிந்த கண்ணியைச் சூடிய பொதுவனோடு சேர்த்துப் பழிச்சொல் கூறினர். அதுவும் ஒருவகையில் நல்லதாயிற்று. தலைவன் ஏறு தழுவி என்னை அடைவதற்கு இந்த அலரும் காரணம் என்று கருதி நாம் மகிழ்வோம்" என்று கூறினாள்.

"ஒளி வீசும் அணிகலன்களை உடையவளே! தன்மேல் பாய்ந்த கரிய காளையின் கொம்புகளுக்கிடையே இன்று அவனது தலை புகுந்தபோது என் நெஞ்சமும் உடன் புகுந்தது. இனி நம் வீட்டார், நாள் குறிப்பிட்டு நல்நிறக் கால்நடைக் கூட்டத்திற்குரிய அந்த ஆயர் மகனுக்கு என்னை மணம் செய்து கொடுப்பது தேவைதானா?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

தலைவியின் சொற்கேட்ட தோழி, "நாம் இல்லறம் நடத்தி இனிதிருக்க, பகைவர் நாடுகளை வென்று வெற்றி முரசினை முழங்கும் நம் மன்னனான பாண்டியன் பல்லாண்டு வாழ்ந்து அவன் புகழ், அருவி விழும் இமயமலைக்கு அப்பாலும் சிறக்க வேண்டும் என்று வாழ்த்துவோம். அதற்குப் பாற்கடலில் பள்ளிகொண்டுள்ளவனும், சக்கரப்படை கொண்டவனுமாய திருமாலை வணங்குவோம், வா" என்று தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவி தோழியோடு ஏறு தழுவுதலைக் கண்டு மகிழ்ந்தாள். களவுக் காலத்தில் தலைவன் தலைவியைச் சந்தித்ததைக் கண்டு தலைவியைப் பெற்றோர் சினம் கொண்டனர். ஏறு தழுவலின்போது தலைவன், தலைவிக்கெனப் பெற்றோர் விட்ட காளையை அடக்கி வென்றான். தலைவி, 'என் பெற்றோர் இனித் தலைவனுக்கு என்னை மணம் செய்து கொடுத்தே தீரவேண்டும்' என்னும் கருத்தைத் தோழியிடம் தெரிவிக்கிறாள்.

விளக்கம்

பழைமைமிக்க பாண்டியர் குடியோடு தோன்றியவர் ஆயர் குலத்தினர். அவர்கள் பாண்டிய மன்னன் புகழ் பரவத் தெய்வங் களைத் தொழுது ஏறு தழுவுதல் விழாவினைத் தொடங்கினர்.

வெள்ளைச்சுழியுடன் கூடிய கரிய ஏறு, ஒன்று; வெள்ளை நிற உடலில் சிவந்த மறு அமைந்த காளை, ஒன்று; சொரசொரப்பான கழுத்தினைக் கொண்ட காரி நிற ஏறு, ஒன்று; வெள்ளைக் கால்களுடன் இருந்த சிவந்த நிற ஏறு ஒன்று ஆகியவையும் அவற்றையொத்த இன்னும் பலவும் தொழுவுள் செலுத்தப் பட்டன.

அவ்வேறுகள் ஊழித் தீப் போலவும், சிவனின் மழுப்படை போலவும், கூற்றுவன்போலவும், எமன் தூதர் போலவும் சுழன்று திரிந்துகொண்டிருந்தன.

அப்போது இடி முழக்கம் போலப் பறைகள் ஒலித்தன; மேகக் கூட்டம் வானில் பரவுவதுபோலப் புகை தொழுவினுள் பரவியது; மாலை அணிந்த மகளிர் வரிசையாய்க் குழுமினர். ஏறு தழுவும் வீரர்கள் தொழுவினுள் புகுந்தபோது ஏற்பட்ட புழுதி வானை முட்டியது.

தொழுவினுள் புகுந்த வீரர்கள், ஏறுகளின் கொம்புகளைப் பிடித்துத் தம் மார்பில் பொருந்தத் தழுவினர். வீரர் சிலர் ஏறுகளின் கழுத்தில் ஏறியமர்ந்தனர்; ஏற்றின் திமில் முரியுமாறு தழுவினர், சிலர். ஓர் ஏற்றின் கழுத்து, வீரனின் தோள்களுக்கு நடுவே சிக்கியது. ஆய வீரர்கள் சிலர் ஏறுகளால் வீழ்த்தப் பட்டனர்.

ஏறுகள் வீரர்களைத் தம் கொம்புகளால் குத்தின; தம் கழுத்துகளைத் தழுவ விடாமல் தடுத்து வீரர்களைத் தாக்கின. மீண்டும் தழுவ வந்த வீரர்களை அவர்கள் சாகுமாறு குத்தின. எந்த வீரராலும் தழுவ இயலாத நிலையில் நின்ற செந்நிற ஏறு, உயிரை உண்ணும் கூற்றுவனைப் போல நின்றுகொண்டிருந்தது. இக்காட்சிகளைத் தோழி தலைவிக்குக் காட்டுகிறாள்.

தொழுவத்துள் ஏறுகளும், அவற்றைத் தழுவ முயலும் வீரர்களும் இருந்த நிலை, மன்னர் இருவர் தம்முள் பகைத்துப் போரிட்டுக் கொண்டிருக்கும் அமர்க்களத்தைப் போன்றிருந்தது.

தலைவி, ஏற்றினைத் தழுவி வெற்றி கொள்ளுகின்ற வீரன் ஒருவனை மட்டுமே நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் அவனோடு உறவு கொண்டிருந்ததால் அவள் அன்னையும் உறவினரும் அவள்மீது சினம்கொண்டிருந்தனர்; ஊரார் பழி தூற்றினர்.

இப்போது அவன் காளையை அடக்கிவிட்டான். இனித் தன்னை அவனுக்கு மணம் செய்து கொடுப்பதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது என்று தலைவி தோழியிடம் கூறி மகிழ்கிறாள்.

தொன்மங்கள்

இப்பாடலில் தொன்மச் செய்திகள் பல உவமைகளாய் எடுத்தாளப்பட்டுள்ளன.

1. *வெள்ளைச் சுழியுடன் உள்ள கரிய ஏறு, சக்கராயுதத்தை உடைய திருமாலின் சங்கு போன்றிருந்தது.*
2. *வெள்ளைக்காளையின் உடலில் செந்நிற மறு அமைந் திருப்பது பலராமனின் மார்பில் உள்ள மாலையைப் போலக் காட்சியளிக்கிறது.*

3. *வெள்ளைநிறக் கால்களைக்கொண்டு சிவந்த மேனியுடன் இருந்த காளை, வெள்ளைநிற ஆடையை உடுத்தியிருந்த முருகனைப் போன்றிருந்தது.*

4. *வெள்ளைநிற ஏற்றின் கழுத்தை ஒருவன் தழுவியிருந்தது, சந்திரன்மீது பாம்பு பாய்ந்து, அதன் ஒரு பகுதியை விழுங்கியதுபோலக் காட்சியளித்தது.*

உவமை

வீரன் ஒருவனைக் காளையொன்று கொம்பினால் குத்தி அவனை மேலே தூக்கியது; அப்போது அவன் உடலில் ஒழுகிய குருதி, காளையின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணிகளை நனைத்தது. அதனால் அம்மணிகள் நறவ மலர்போலத் தோன்றின. (அதனால் வண்டுகள் அவற்றின்மீது மொய்த்தன.)

சொற்பொருள்

1. கடந்து - வென்று; ஆற்றில் தந்த - (தோற்ற அரசர்களிடமிருந்து) முறைப்படி (அறநெறி தவறாது) கொண்டுவந்த.
2. முரண்மிகு - மாறுபாடு மிக்க (பகைவரிடம்).
3. தொல்குடி - பழமையான (பாண்டியர் குடி).
4. பார்வளர் - பாண்டிய நாடு பயந்த விளைவு; முத்தம் - முத்து; படுகடல் - ஒலிக்கும் கடல்; பயந்த - விளைந்த.
5. ஆர்கலி - மிக்க ஆரவாரம் (செருக்கு).
6. கடி அயர் - சிறப்புகளைச் செய்தனர்.
7. வீவு - அழிவு.
8. தாஇல் - குற்றம் இல்லாத; துவன்றி - ஒன்றுகூடி.
9. நேமியான் - (சக்கரப்படையைக் கொண்ட) திருமால்; வளை - சங்கு.
10. சுரி - சுழி; காரி - கரியநிறக் காளை.
11. ஒரு குழையவன் - ஒரு காதில் மட்டும் குழையணிந்த பலதேவன்.
12. பொருஅற - ஒப்பின்றி; செம்மறு - செந்நிற மறு.
13. கணிச்சியோன் - மழுப்படை கொண்ட சிவபெருமான்; மிடறு - கழுத்து.
14. பிணர் - சொரசொரப்பு; இமில் - திமில்; குரால் - கபிலநிறம்.
15. வச்சிரத்தோன் - வச்சிரப்படை கொண்ட இந்திரன்.
16. கணங்கொள் - கூட்டமாயுள்ள.
17. வேல் வலான் - வேல் படை கொண்ட முருகன்; துகில் - ஆடை.

18. வாலிது - வெண்மையாய்; சேயும் - செந்நிறக் காளையும்.
19. முன்பு - வலிமை.
20. மடங்கல் - ஊழித்தீ.
21. துவன்றல் - சாதல்.
22. உடங்கு - நன்றாய்; கொட்பன - சுழல்வன.
24. கலி ஒலி - மிகுந்த ஒலி; கடிஇடி - கடுமையாய் இடித்தல்.
25. உளர்புயல் - அசைகின்ற மேகம்; மங்குல் - புகை நிறம்; நறை - நறுமணப்புகை.
26. நேர்இதழ் - ஒத்த இதழ்; நெறி - நெரித்தல் - ஒடித்தல்; வெறி - மணம்.
27. சிலை நிலை - ஆரவாரிக்கும் நிலை; செயிர் - குற்றம்; இகல் - மாறுபாடு.
28. துதைபுதை - கண் பார்வை மறைவதற்குக் காரணமான; துகள் - புழுதி.
29. ஆர்பு - பேரொலி (ஆரவாரம்).
30. மருப்பு - கொம்பு; தழீஇயும் - தழுவியும்.
31. இமில் - திமில்; இற - சிதைய; புல்லுதல் - தழுவுதல்.
32. துதைந்து - நெருங்கி; பாடேற்றும் - ஆபத்தை எதிர்கொண்டும்.
33. நிரைபு - வரிசையாய்.
34. கொள இடம் கொளவிடா - தழுவிக்கொள்வதற்கு இடம் கொடாது.
35. சாக்குத்தி - சாகும்படி குத்தி.
36. குரூஉச் செகில் - நன்னிறம் கொண்ட தோள் (பிடர்).
37. குறைநாள் - உயிர் குறையும் நாள்.
38. கூற்றம் - எமன்.
39. பாடேற்றவர் - கொம்புகள் மார்பிலே படுதலை ஏற்றவர்.
41. நகை - ஒளி; அவிழ்பதம் - மலரும் செவ்வி; நறவு - நறவம்பூ.
42. முகை - மொட்டு.
43. இடைப்பாய்ந்து - நடுவே பாய்ந்து.
44. மிடை - பரண்.
45. அரவு - பாம்பு (கேது); கோள்பட்டு - கௌவப்பட்டு, விழுங்கப்பட்டு.
46. போதரும் - ஊர்ந்து செல்லும்; பான்மதி - வெள்ளை நிலவு.
47. மாறுற்று - மாறுபடுதலாலே.
48. இகலி - மாறுபாடு.
49. தொழூஉ - ஏறு தழுவும் களம்.
50. துதை புதை - கழுத்து முழுவதையும் மறைக்கின்ற; இமில் - திமில்.

52. பாடில - இமைத்தல் இல்லாதன.
53. ஐங்கூந்தல் - ஐவகையாய்ப் பிரித்து அழகு செய்யப்பெறும் கூந்தல்; உளர்தல் - உலர்த்துதல்.
55. உடன்று - சினந்து.
56. கதம் - சினம்.
58. பட்டதற்கு - கூடியதற்கு.
60. பொடிவது - தீய்ந்து போவது.
63. கண்ணுடைக் கோலள் - கண்ணையே கோலாய்க் கொண்டு.
65. அலர் - பழிச்சொல்.
67. எமர் - எம் உறவினர்.
68. செங்காரி - சிவந்த கரிய ஏறு.
71. பாடுஇமிழ் - அலை எழுந்து விழுதலால் ஏற்படும் இசை; பரப்பகம் - பரந்த இடம், கடல்; அரவணை - பாம்புப்படுக்கை; அசைஇய - படுத்துறங்கும்.
72. நேமியான் - சக்கரப்படை கொண்ட திருமால்.
73. பொருப்பன் - பொதிய மலைக்குரிய பாண்டிய மன்னன்; மன்னி - நிலை பெற்று.
75. உம்பர் - அப்பால்.

கண்டோர் கூற்று

கலித்தொகை 106 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

தத்தம் இனம் தத்தம் புலத்துப் பிரிப்பான் புக்கவர் ஏறு கொண்டவாறு கண்டு ஆய்ச்சியர் தம் காதல் மிகுதியால் தம் காதலரைக் கைபிணைந்து குரவையாடித் தென்னவன் வாழ்க எனக் கானம் பாடியது.

கூற்று விளக்கம்

இத்துறை, முல்லை நிலத்து நிகழ்ச்சிகளைக் காண்போர் கூறும் கூற்றாய் அமைகிறது. பல இடங்களைச் சேர்ந்த ஏறுகள் தம்முள் மோதிக்கொள்ள, இளைஞர் அவற்றை விலக்கிவிட்டு, அவ்வவற்றின் இடங்களுக்குப் போகச் செய்யும் முயற்சியால் ஏறு தழுவினர். ஆயர்குல மகளிர் அதனைக் கண்டு தம் காதலரோடு மிக்க காதலுடன் குரவைக்கூத்தாடி, பாண்டியன் வாழ்கவென வாழ்த்தி அவனது முல்லை நிலத்தைப் பாடினர்.

கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்
இமிழ்இசை மண்டை உறியொடு தூக்கி
ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்,
வழூஉச்சொல் கோவலர் தத்தம் இனநிரை
பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தார்

அவ்வழி,
நீறெடுப்பவை, நிலம்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை மண்டிப்பாய் பவையாய்த்
துளங்குஇமில் நல்லேற் றினம்பல களம்புகும்
மள்ளர் வனப்பொத் தன.

தாக்குபு தம்முள் பெயர்த்துஒற்றி எவ்வாயும்
வைவாய் மருப்பினால் மாறாது குத்தலின்
மெய்வார் குருதிய ஏறெல்லாம் பெய்காலைக்
கொண்டல் நிரைஒத் தன.

அவ்வேற்றை,
பிரிவுகொண்டு இடைப்போக்கி இனத்தோடு புனத்துஏற்றி

இருதிறனா நீக்கும் பொதுவர்
உருகெழு மாநிலம் இயற்றுவான்
விரிதிரை நீக்குவான் வியன்குறிப்பு ஒத்தனர்.

அவரைக், கழல உழக்கி எதிர்சென்று சாடி
அழல்வாய் மருப்பினால் குத்தி உழலை
மரத்தைப்போல் தொட்டன ஏறு.

தொட்டதம், புண்வார் குருதியால் கைபிசைந்து மெய்திமிரித்
தங்கார் பொதுவர் கடலுள் பரதவர்
அம்பிஊர்ந் தாங்குஊர்ந்தார் ஏறு.

ஏறுதம், கோலம்செய் மருப்பினால் தோண்டிய வரிக்குடர்
ஞாலக்கொண்டு எழூஉம் பருந்தின் வாய்வழீஇ
ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட
மாலைபோல் தூங்கும் சினை.

ஆங்கு,
தம்புல ஏறு பரத்தர உய்த்ததம்
அன்புறு காதலர் கைபிணைந்து ஆய்ச்சியர்
இன்புற்று அயர்வர் தழூஉ.

முயங்கிப் பொதிவேம் முயங்கிப் பொதிவேம்
முலைவேதின் ஒற்றி முயங்கிப் பொதிவேம்
கொலையேறு சாடிய புண்ணைஎம் கேளே.

பல்லூழ் தயிர்கடையத் தாஅய புள்ளிமேல்
கொல்லேறு கொண்டான் குருதி மயக்குறப்
புல்லல்எம் தோளிற்கு அணியோஎம் கேளே.

ஆங்கு, போரேற்று அருந்தலை அஞ்சலும் ஆய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலும் இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோஎம் கேளே.

கொல்லேறு கொண்டான் இவள்கேள்வன் என்றுஊரார்
சொல்லும்சொற் கேளா அளைமாறி யாம்வரும்
செல்வம்எம் கேள்வன் தருமோஎம் கேளே.

ஆங்க,
அருந்தலை ஏற்றொடு காதலர்ப் பேணிச்
சுரும்புஇமிர் கானம்நாம் பாடினம் பரவுதும்
ஏற்றவர் புலம்கெடத் திறைகொண்டு
மாற்றாரைக் கடக்களம் மறம்கெழு கோவே.

தெளிவுரை

வழுவிய சொற்களைப் பேசும் ஆயர்கள், உறித்தண்டில் சுருக்கி விரிப்பதாய் அமைந்த தோற்பையில் கழு, சூட்டுக்கோல், தம்முள் உரசும் உண்கலங்கள் ஆகியவற்றை வைத்துத் தோளில் தூக்கிக் கொண்டு புறப்பட்டனர். வற்றலாய்விட்ட நீண்ட கொன்றைக் காயைக்கொண்டு உருவாக்கிய குழலை ஊதியவாறு தத்தம் பசு, எருமைக்கூட்டங்களையும் அவற்றின் ஏற்றினங்களையும் மேய்ப் பதற்காய்க் கார் காலத் தொடக்கத்தில் பெய்த மழையால் நனைந்த (புற்கள் தோன்றிய) அகன்ற நிலத்திடத்தே ஓட்டிச் சென்றனர்.

காளைகள், மழைக்கு முன்பதாய காலத்தில் தம் வலிமை மிகுதியால் காய்ந்த நிலத்தைக் கால்களால் குத்திப் புழுதியை எழுப்பிக்கொண்டிருந்தன. இப்பொழுது மழையால் ஈரமாகிய நிலத்தைக் கொம்புகளால் கிளறுகின்றன. சில ஏறுகள் தம்முள் மாறுகொண்டு கனைத்தன. மற்றும் சில, செருக்கு மிகுந்து ஒன்றன் மேல் ஒன்று பாய்ந்தன. அசைந்தாடும் இமிலைக் கொண்ட இத்தகைய பல ஏறுகளும் போர்க்களத்தில் புகும் வீரர்களை ஒத்தன.

ஒன்றை ஒன்று தாக்கிய ஏறுகள் சற்றுப் பின்வாங்கி நிலத்தைக் காலால் பறித்து, மீண்டும் பாய்ந்து எதிரியை விடாமல் குத்தின. அதனால் உடல் முழுவதிலும் புண்ணாகிக் குருதி பொழிந்தது. ஏறுகளின்மீதுள்ள செங்குருதிவெள்ளம் கார் காலக் காலைப் பொழுதில் ஞாயிறு கதிர் வீசும்போது மழை பொழியும் மேகத் திரளை ஒத்திருந்தது.

ஏறுகள் தம்முள் சண்டையிட்டுக்கொள்வதைத் தடுக்க விரும்பி, வேறு சில ஏறுகளை இடையிலே புக விட்டு அவற்றை

விலக்கி, மேய்கின்ற பசுக்கூட்டங்களோடு சேர்ப்பர். இவ்வாறு இரு கூட்டங்களாய்ப் பிரித்துவிட்ட ஆயர்களின் செயல், ஊழிக் காலத்திற்குப் பிறகு நிலவுலகத்தை மீண்டும் படைக்கப் பிரமன், விரிந்த சிந்தனையோடு, எங்கும் பரந்திருந்த நீர்ப்பரப்பாகிய கடலை, நிலத்தைவிட்டுப் பிரித்த செயலை ஒத்திருந்தது.

அவ்வாறு பிரிக்கும் முயற்சியில் அவர்கள் ஏறுகளுடன் போரிட நேர்ந்தது. அவ்வேறுகள் அவர்களை ஓடும்படி மிதித்தன. ஓடாமல் நின்றவர்களின்மீது பாய்ந்து, அவர்களின் உடல்களில் துளைகள் தோன்றுமாறு கொம்பால் குத்தின. அவ்வாறு துளைக்கப்பட்ட புண்ணிலிருந்து சொரிந்த குருதி வழுக்குவதால் அவர்கள் மணலை அள்ளிக் கையைப் பிசைந்து உடம்பிலும் பூசிக்கொண்டு, சிறிதும் காலம் கடவாமல் கடலுக்குள் பரதவர் செலுத்தும் தெப்பம்போல, ஏறுமேல் பாய்ந்து ஏறிச் செலுத்தினர்.

ஏறுகள் தம் அழகிய கொம்பால் தோண்டி எடுத்த ஆயர்களின் குடர்களைப் பருந்துகள் பற்றிக்கொண்டு மேலே சென்றன; அவற்றின் அலகிலிருந்து தவறி விழுந்த குடர்கள் ஆலமரம், கடம்ப மரம் ஆகியவற்றின் கிளைகளில் விழுந்தன. அவை அம்மரங்களில் உறையும் தெய்வங்களுக்கு அணிவிப்பதற்காக இட்டுவைத்த மாலைகள்போலத் தொங்கின.

மேயும் புலத்திலே பரவலாய் மாடுகளை மேயவிட்ட ஆயர்களின் அன்புமிக்க ஆய்ச்சியர் அவர்களுடன் கைகோத்துக் குரவைக்கூத்தாடி மகிழ்கின்றனர். (அப்போது அவ்வாயமகளிர் ஒருத்தி இன்னொருத்தியிடம் தத்தம் அனுபவங்களைக் கூறிக் கொள்கின்றனர்).

(ஒருத்தி கூறினாள்)

தோழீ! என் காதலன் கொல்லேற்றைத் தழுவியதனால் ஏற்பட்ட புண்கள்மீது என் கொங்கையை ஒற்றித் தழுவுவேன். அதனால் ஏற்படும் வெப்பத்தைக்கொண்டு அப்புண்களை ஆற்றுவேன்.

(மற்றொருத்தி கூறினாள்)

தோழீ! பலமுறையும் தயிர் கடைவதால் அதன் திவலைகள் தெறித்து என் உடலில் தயிர்ப்புள்ளிகள் காணப்படும். அவற்றின் மீது என் தலைவன் தழுவுவதால், அவன் ஏறு தழுவியபோது ஏற்பட்ட குருதி அப்புள்ளிகளுடன் கலந்து ஒரு புதிய பொலிவு ஏற்படும்.

(இன்னொருத்தி கூறினாள்)

என் தோழியீர்! போர்க்காளையின் நெருங்குதற்கரிய தலைக்கு அஞ்சுவோர் ஆய்ச்சியரின் அழகிய தோளைத் தழுவ இயலாது. (அஃதாவது, ஏறு தழுவ அஞ்சுவோர் ஆய்ச்சியரின் அழகிய தோளைத் தழுவ இயலாது).

(வேறொருத்தி கூறினாள்)

எம் தோழியீர்! நான் மோர் விற்கச் செல்லும்போது, ஊரார், 'இவள் கணவன் கொல்லேற்றைத் தழுவினான்' என்று புகழும் புகழ்ச்சியைக் கேட்கும் இன்பத்தை என் காதலன் எனக்குத் தருவானா? (அஃதாவது, ஏறு தழுவிய இளைஞன் எனக்குக் கணவன் ஆவானா?)

"நம்முடைய ஏறுகளையும் காதலரையும் பாதுகாக்கும் வீரவேந்தனாகிய பாண்டியன் பகைநாடுகளின் அரசு அழிய, அங்கிருந்து திறை கொண்டுவந்து பகைவரை அடிப்படுத்தி உயர்வானாக!" என்று வண்டு ஒலிக்கும் முல்லை நிலத்தைப் பாடித் திருமாலைப் பரவுவோம், வாருங்கள்.

கருத்து

ஆயர் குடியினர் தனித்தனியே தம் ஏற்றினங்களை மேய்ச்சல் புலங்களுக்கு ஓட்டிச் செல்கின்றனர். பலரும் ஓட்டி வந்த ஏற்றினக் கூட்டம் ஒன்று சேருமிடத்தில் ஏறுகள் தம்முள் மோதிக்கொள்கின்றன. ஆய இளைஞர் அவற்றைப் பிரித்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்புகின்றனர். அம்முயற்சியில் ஏறு தழுவினர். அதனைக் கண்டு அவர்கள் காதலியர் தம் காதலருடன் மகிழ்ந்து குரவைக்கூத்தாடிப் பாண்டியனை வாழ்த்தினர்.

குறிப்பு

1. பண்டைக்காலத்தில் மரத்தினடியில் தெய்வங்கள் உறைவதாய் மக்கள் நம்பி வழிபட்டனர். ஆலமரமும் கடம்ப மரமும் தெய்வம் உறையும் இடங்களாய் இப்பாடலில் சுட்டப்பெற்றுள்ளன.
2. உடம்பில் புண் ஏற்பட்டால் வேது கொடுக்கும் பழக்கம் இருந்தது என்பது, 'முலை வேதின் ஒற்றி' என்பதனால் புலப்படுகிறது.

சொற்பொருள்

1. கழு - பசுவின் கழுத்திடு தடி; சுடு படை - சூடு இடப் பயன்படும் இருப்புக் கோல்.
2. மண்டை - மண்கலம்.
3. ஒழுகிய - நீண்ட; முரற்சி - இனிய ஓசையர்.
4. வழூஉச் சொல் - இலக்கணக் குற்றமுள்ள சொல்.
5. பொழுது - கார்காலம்; கார் - மழை; வியன் புலம் - அகன்ற நிலம்.
7. நீறு - புழுதி.
8. சிலைப்பவை - முழங்குபவை; மண்டி - நெருங்கி.
9. இமில் - திமில்.
10. மள்ளர் - போர்வீரர்.
11. எவ்வாயும் - எல்லா இடங்களிலும்.
13. மெய்வார் - உடலில் ஒழுகுகின்ற.
13-14. காலைக் கொண்டல் - விடியற்காலத்தே கீழ்த்திசையில் காணப்படும் மேகம்.
14. கொண்டல் - மேகம்.
16. பிரிவு கொண்டு - பிரிவதனைக் கருத்திற்கொண்டு.
17. இரு திறனா - இரு பிரிவாய்.
18. மாநிலம் இயற்றுவான் - பிரமன்.
19. விரிதிரை நீக்குவான் - கடலைப் போக்கும்.
21. உழலை - துளை இடப்பட்ட.
22. தொட்டன - துளைத்தன.
23. வார்தல் - ஒழுகுதல்; திமிரி - பூசி.
24. தங்கார் - சற்றும் காலம் தாழ்த்தாமல்.
25. அம்பி - படகு.
26. வரிக்குடர் - வரிகளைக் கொண்ட குடல்.
27. ஞாலல் - தொங்குதல், வழீஇ - நழுவி.

28. ஆல், கடம்பு - இவை மரங்கள்; விலங்கிட்ட - குறுக்கே இட்ட.
29. தூங்கும் - தொங்கும்.
31. பரத்தர - பரவிச் செல்லும்படி; உய்த்தல் - செலுத்துதல்.
33. அயர்வர் - ஆடுவர்; தழூஉ - குரவைக்கூத்து.
34. பொதிவேம் - மறைப்போம்.
35. வேது - வெம்மை.
36. கேள் - உறவு (தோழி).
37. பல்லூழ் - பலமுறை.
38. மயக்குற - கலக்க.
39. புல்லல் - தழுவுதல்.
40. அருந்தலை - சேருதற்கரிய தலை (கொம்பு).
41. காரிகைத்தோள் - முலை; காமுறுதல் - விரும்புதல்.
42. ஓராங்கு - ஒன்றாய்.
43. கேள்வன் - கணவன்.
44. அளை மாறி - மோர் விற்று.
45. செல்வம் - இன்பம்.
49. ஏற்றவர் புலம் - பகைவர் நிலம் (ஏற்றவர் - பகையை ஏற்றவர்); திறை - கப்பம்.
50. மாற்றாரை - பகைவரை; மறம் கெழு - வீரம் பொருந்திய; கோ - மன்னன்.

தலைவி கூற்று

கலித்தொகை 107 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்பத் தமர் வரைவுடன்பட்டமை அவட்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தனது களவுக்காதலைத் தோழியிடம் வெளிப்படுத்தினாள். அப்பொழுது தோழி, அத்தலைவனுக்கே தலைவியை மணம் முடிக்க வீட்டார் இசைந்தமையை அவளிடம் கூறியது.

தலைவி

எல்லா! இஃதொன்று கூறு. குறும்புஇவர்—
புல்லினத் தார்க்கும் குடஞ்சுட் டவர்க்கும்,'எம்
கொல்லேறு கோடல் குறை'எனக், கோஇனத்தார்
பல்ஏறு பெய்தார் தொழூஉ.
தொழுவத்து,
சில்லை, செவிமறைக் கொண்டவன் சென்னிக் குவிமுல்லைக்
கோட்டங்காழ் கோட்டின் எடுத்துக்கொண்டு, ஆட்டிய
ஏழை இரும்புகர் பொங்க,அப் பூவந்து,என்
கூழையுள் வீழ்ந்தன்று மன்;
அதனைக், கெடுத்தது பெற்றார்போல், கொண்டுயான் முடித்தது
கேட்டனள், என்பவோ யாய்?
இஃதுஒன்று கூறு;

தோழி

கேட்டால், எவன்செய்ய வேண்டுமோ? மற்றிகா
அவன்கண்ணி அன்றோ, அது?

தலைவி

'பெய்போது அறியாத்தன் கூழையுள் ஏதிலான்
கைபுனை கண்ணி முடித்தாள்என்று, யாய்கேட்பின்,
செய்வதுஇல் ஆகுமோ மற்று?

தோழி

எல்லாத் தவறும் அறும்.

தலைவி

ஒஒ!அஃது அறுமாறு?

தோழி

ஆயர் மகனாயின், ஆயமகள் நீயாயின்,
நின்வெய்யன் ஆயின், அவன்வெய்யை நீயாயின்,
அன்னை நோதக்கதோ இல்லைமன்;

தலைவி

நின்நெஞ்சம்,
அன்னைநெஞ் சாகப் பெறின்.

தோழி

அன்னையோ?
ஆயர் மகனையும் காதலை, கைம்மிக
ஞாயையும் அஞ்சுதி ஆயின், அரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து.

தலைவி

மருந்தின்றி யான்உற்ற துயராயின் எல்லா
வருந்துவேன் அல்லனோ, யான்?

தோழி

வருந்தாதி;
மண்ணி,மா சற்றநின் கூழையுள் ஏறுஅவன்
கண்ணிதந் திட்டது எனக்கேட்டுத், திண்ணிதா,
தெய்வமால், காட்டிற்று இவட்கு,என நின்னைஅப்
பொய்யில் பொதுவற்கு அடைசூழ்ந்தார் தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு.

தெளிவுரை

தலைவி : *தோழீ! ஒன்று கேட்பேன், விடை கூறு. பசுக் கூட்டத்தை உடைய நம் சுற்றத்தார், வேலிகளில் மேயும் ஆட்டுக்கூட்டத்தை உடையோர்க்கும், குடம் நிறையப் பால் தரும் பசுக்களை உடைய ஆயர்க்குமாக, ‘எம் கொல்லேற்றை*

இளைஞர் தழுவும் விழா இப்போது நடைபெறும்' என்று அறிவித்து ஏறுகளைக் களத்தில் விட்டனர்.

காளை தழுவும் போர் தொடங்கியது. அப்போது கபில நிறம் கொண்ட பெரிய காளையை அதன் காதின் பக்கமாய், கழுத்தில் அடங்கி மறைந்து ஒருவன் தழுவினான். அவன் தலையில் சூடப் பட்டிருந்த முல்லைப்பூ மாலையிலிருந்து பூ ஒன்று, அந்தக் காளை அவனைத் தன் கொம்பிலே எடுத்துக்கொண்டு அலைத்த போது துள்ளியமையால், என் கூந்தலில் வந்து விழுந்தது. தொலைத்துவிட்ட பொருளை மீண்டும் பெற்றதுபோல நான் அதை எடுத்துக் கூந்தலில் அணிந்துகொண்டேன். அதுபற்றித் தாய் ஏதாவது கேட்டாளா? அதனை எனக்குக் கூறு.

தோழி : அம்மலர் அவனது கண்ணியன்றோ? அதனால் அன்னை கேட்டால் நாம் செய்ய வேண்டியது என்ன உள்ளது? ஒன்றும் செய்ய வேண்டா.

தலைவி : சூடத்தக்க மலர் இஃது என்று அறியாத மகள், தன் கூந்தலில் யாரோ அயலான் ஒருவன் தன் கையால் புனைந்த கண்ணியைச் சூடினாள் என்று தாய் கேள்வியுற்றால் சினம் கொள்வாள். அதற்குத் தீர்வு காண வேண்டுமன்றோ? (என்ன செய்வது?)

தோழி : எல்லாத் தவறும் நீங்கும்.

தலைவி : அது நீங்குவது எவ்வாறு?

தோழி : அவன் ஆயர்மகன். நீ ஆயர்மகள். அதனால் உன்னை அவன் விரும்பினான். நீயும் அவனை விரும்பினாய். ஆக, உன்னை நொந்துகொள்ளத் தவறேதும் நிகழவில்லையே.

தலைவி : நீ கருதுவதுபோல் தாய் கருத வேண்டுமே! தாய் அவ்வாறு கருதுவாளா? (தாயின் உள்ளம் உன் உள்ளத்தைப் போல் இருந்தால் இஃது இயலும்.)

தோழி : அவ்வாறு கூறுகின்றாயா? உனக்கு ஆயர் மகன்மீதும் மிகுந்த காதல்; அன்னையிடமும் மிகுந்த அச்சம். ஆகவே, நீ உற்ற நோய்க்கு மருந்து அரிது.

தலைவி : *தோழியே! நான் உற்ற துன்பத்திற்கு மருந்தில்லையாயின் எனக்கு வருத்தம் ஏற்படாதா?*

தோழி : *வருந்தாதே. அவன் கண்ணியைக் காளை தூய்மையான உன் கூந்தலில் இட்டது என்று கேள்வியுற்று உன் தந்தையும் தமையன்மாரும், இவளுக்குத் தெய்வம் காதலை உண்டாக்கிற்று என்று கருதி, உன்னைப் பொய்ம்மையில்லாத அப்பொதுவனுக்கு மணமுடிக்க முடிவு செய்தனர்.*

கருத்து

தலைவியே! நீ அஞ்ச வேண்டுவதில்லை. நீ விரும்புபவனையே உனக்குத் திருமணம் முடிக்க உன் தாய் தந்தையர் முடிவு செய்துள்ளனர்.

விளக்கம்

ஏறு தழுவும் தொழுவத்தில் ஒருவன் ஒரு காளையை அடக்க, அஃது அவன் அணிந்திருந்த முல்லைக்கண்ணியை அலைத்துத் தூக்கி வீசியது. அக்கண்ணியிலிருந்து ஒரு பூ அவனைக் களவொழுக்கத்தில் காதலித்துக்கொண்டிருக்கும் தலைவியின் தலையிலேயே வந்து விழுந்தது. அதனால் தலைவி, தன் தோழியிடம், இதனைத் தாய் அறிந்தால் என் நிலை என்னாகுமோ என்று அஞ்சினாள். தோழி, தலைவி அஞ்ச வேண்டியதில்லை என்றும், அவனுக்கே அவளைத் திருமணம் முடித்துவைக்க அவள் பெற்றோர் முடிவு செய்துள்ளனர் என்றும் கூறினாள்; தலைவி மகிழ்ந்தாள்.

குறிப்பு

சங்க காலத்தில் களவுக்காதல் சமுதாயத்தால் ஒத்துக்கொள்ளப்பட்டதாயினும், திருமணம் பெற்றோராலும் சுற்றத்தாராலும் முடிவு செய்யப்பட்டது. (பெற்றோர் ஒப்புதல் தரவில்லையெனில் உடன்போக்கு நிகழும்.)

சொற்பொருள்

1. எல்லா - தோழி!; குறும்பு - முல்லை நிலத்து ஊர் (பாலைக்குரிய ஊர்ப்பெயர் இங்கு முல்லையில் அமைந்துள்ளது); இவர் - பரந்திருக்கும்.

2. புல்லினத்தார் - புல்லை மேயும் ஆட்டுக்கூட்டத்தையுடைய ஆயர்; குடஞ்சுட்டு - ஒரு குடம் பால் கறக்கும் பசு என்று சொல்லுபவர்.
3. குறை - செய்ய வேண்டிய செயல் என்னும் அறிவிப்பு; கோ இனத்தார் - பசுக்களையுடைய ஆயர் இனத்தார் (நம் சுற்றத்தார்).
4. பெய்தார் - விட்டனர்; தொழூஉ - தொழுவத்தில்.
6. சில்லை - சினம் மிக்க (காளை); செவிமறை - காதிற்குப் பின்னே மறைந்து; சென்னி - தலை; குவிமுல்லை - முல்லை அரும்பு.
7. கோட்டங்காழ் - வளைந்த (முல்லை) மாலை; கோடு - வளைவு; கண்ணி - தலையிலணியும் மாலை; ஆட்டிய - அலைக்கழித்த.
8. புகர் - கபில நிறம் (கரிய புள்ளிகளைக் கொண்ட காளை); பொங்க - வீச.
9. கூழை - கூந்தல்.
10. கெடுத்தது - தொலைத்த பொருள்.
11. கேட்டனள் என்பவோ? - கேட்டனளோ?
13. எவன் செய்ய வேண்டும்? - என்ன செய்ய வேண்டும்? (செய்ய வேண்டியது ஒன்றுமில்லை என்பது குறிப்பு).
14. அவன் கண்ணி அன்றோ என்பது, அஃது அவன் மாலையிலுள்ள பூ என்பதறிந்து அவனுக்கு உன்னை மணமுடிக்கப் பெற்றோரே முயல்வர் என்பது குறிப்புப் பொருள்.
15. பெய்போது - சூடிக்கொள்ளும் பூ; அறியா - இஃது என்றறியாத; ஏதிலான் - அயலான்.
18. அறும் - நீங்கும்.
19. அறுமாறு? - நீங்குவது எவ்வாறு?
21. வெய்யன் - விருப்பமுள்ளவன்.
22. நோதல் - துன்பப்படுதல்.
25. காதலை - காதலிக்கின்றாய்; கைம்மிக - அளவு கடந்து.
26. ஞாய் - அன்னை.
30. வருந்தாதி - வருந்தாதே.
31. மண்ணுதல் - கழுவுதல், தூய்மை செய்தல்; ஏறு அவன் - காளை போன்ற தலைவன்.
32. திண்ணிதா - உறுதியாய்.

33. தெய்வமால் - திருமாலாகிய தெய்வம்.

34. பொதுவன் - ஆயன், இடையன்; அடைசூழ்ந்தார் - அவனுக்கே மணமுடிக்க முடிவு செய்தனர் (அடை - அவனிடமே ஒப்படைக்க; சூழ்ந்தார் - முடிவு செய்தனர்).

35. ஐயன்மார் - தமையன்மார்.

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
9788183797672

Vol-6
ISBN: 978-81-8379-773-3
9788183797733

விலை ரூ. 7200